

முத்துலட்சுமி ராகவன்
பூமிக்கு வந்த நிலவு...



# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# பூமிக்கு வந்த நிலவு...

## 1



'சோ...' வென்ற சப்தத்துடன் மோட்டாரிலிருந்து தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது.. அது நிரம்பி வழிந்த அகன்ற சிமிண்ட் தொட்டி ஒருவர் நீச்சலடித்துக் குளிக்கும் அளவிற்கு ஆழமானதாகவும்.. அகல நீளமாகவும் அமைந்திருந்தது.. தண்ணீர் ஓடிய வாய்க்காலின் ஓரமாக இருந்த வரப்பில் புல் அடர்ந்து வளர்ந்து கால்களுக்கு இதமான மெத்தை போல புல்பாதை விரித்திருந்தது.. ஓடிவந்த வாய்க்கால் நீரை வயலுக்கு பாய்ச்சிக் கொண்டிருந்தான் தசரதன்...

"என்னப்பா தசரதா.. வயலுக்கு தண்ணி பாய்ச்சரயா...?"

கையில் மண்வெட்டியுடன் நிமிர்ந்து பார்த்த தசரதனுக்கு வரப்பில் நின்று பல் தேய்க்கிறேன் பேர்வழியென்று வேப்பங்குச்சியை மென்று துப்பிக்

கொண்டிருந்த சரவணனைப் பார்க்கும் போது பற்றிக் கொண்டு வந்தது...

சரவணன் பத்தாம் வகுப்பை முடித்து விட்டு பக்கத்து டவுனில் ஜெராக்ஸ் கடையொன்றை வைத்திருந்தான்.. அவனுடைய தகப்பனார் வயலில் வேலை செய்து சம்பாதிப்பதை இவன் தொழில் நடத்துகிறேன் பேர்வழியென்று கரைப்பாய் கரைத்துக் கொண்டிருந்தான்.. யாராவது அவனிடம் அதைப் பற்றிக் கேட்டால்.. படித்து விட்டு பட்டிக்காட்டில் மண்ணைக் கொத்த முடியுமா என்று கேள்வி கேட்பான்...

அப்பேற்பட்ட பெரிய படிப்பைப் படித்த தொழிலதிபனுக்கு விவசாயத்தை நேசிக்கும் தசரதனிடம் எப்போதுமே ஒரு காட்டம் இருக்கும்..

'இவன் இவனோட அப்பனைப் போல கலப்பையை பிடிக்கிறதாலதானே என்னை இந்த ஊர்க்கார பயலுக கேள்வி கேட்கிறானுக...'

அதனால் தசரதனைப் பார்க்கும் போதெல்லாம்.. பத்தாம் வகுப்பு.. படித்த சரவணனே தொழிலதிபனாக இருக்கும்போது.. பட்டப்படிப்பைப் படித்த தசரதன் மண்ணைக்கொத்தக் கூடாது என்று எடுத்துச் சொல்ல முயன்று தோல்வியைத் தழுவுவான்...



ஆனாலும்.. அடாது தசரதன் விரட்டியடித்தாலும் விடாது அவனைக் கரைக்க முயல்வதில் சரவணனுக்கு நிகர் சரவணனேதான்.. அந்த வகையில் அவன் ஒரு கஜினி முகம்மது..!

"உனக்கென்ன கண்ணில கோளாறா..?" தசரதன் இடக்காக கேட்டான்...

"ஏம்ப்பா அப்படிக் கேட்கிற..? பத்து மைலுக்கு அப்பால பாவாடை தாவணி போட்டுக்கிட்டு வர்ற மயிலப் பார்த்துப்புடறவன்ப்பா இந்த சரவணன்..! என்னைப் பார்த்தா கண்ணில கோளாறான்னு கேட்கிற..?"

"ஆமாம்ப்பா.. ஆமாம்.."

"இப்பச் சொல்லு.. இங்கன நின்னுக்கிட்டே உங்க வீட்டுக்கு.. பக்கத்து வீட்டு மொட்டை மாடியில துணி காயப்போட்டுக்கிட்டு இருக்கிற வசுந்தரா என்ன கலர்ல தாவணி போட்டுக்கிட்டு இருக்கிறாங்கறதைச் சொல்லவா..?"

"பல்லை உடைப்பேன்..."

"அது என்ன கழுதைக்கு..? நானென்ன உன் வீட்டு மொட்டை மாடியையா பாக்கப் போறதா சொன்னேன்..?"

"சொல்லிருவியோ..."

"சொல்ல மாட்டேன்னுதானேப்பா நானும் சொல்றேன்.."

"ஏன்.. சொல்லித்தான் பாரேன்..."

"அதையேன்ப்பா சொல்லப் போறேன்..? நீ உன் பக்கத்து வீட்டைப் பார்த்ததாய் சொன்னாலே பல்லை உடைக்கிற ஆளு.. உன் வீட்டைப் பார்த்துப்புட்டு.. சுக்கு நூறாய் நொறுங்கிக் கிடக்க எனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு...?"

"அது..! அந்த பயம் இருக்கட்டும்.. உனக்கு உன் பக்கத்திலே வர்ற கிழவியைக் கண்ணுக்குத் தெரியாது.. பத்து மைலுக்கு அந்தப் பக்கமிருக்கிற குமரியைத் தெரியுதோ..."

"இதெல்லாம் ஒரு குத்தமாப்பா..?"

"பின்னே..? குத்தமில்லையா...?"

"இல்லவே இல்லைப்பா.. இது வயசுக் கோளாறு..."

"அடியேய்.. காலங்கார்த்தாலே கடுப்பைக் கிளப்பின இந்த மம்பட்டியை வைச்சே ஒரு போடு போட்டிருவேன்.."

தசரதன் மண்வெட்டியைத் தூக்கிக் காட்டவும் சரவணன் அரண்டு போனவனாக எதற்கும் இருக்கட்டுமென்று இரண்டடி பின்னால் தள்ளி நின்று கொண்டான்..



"ஆனாலும் உனக்கு.. இம்புட்டுக் கோவம் ஆகாதுப்பா..."

"எல்லாம் ஆகும்.. நீயென்ன வேலைக்கழுதைக்கு கையில மம்பட்டியோட தண்ணி பாய்ச்சிக்கிட்டு இருக்கிறவன்கிட்ட வந்து தண்ணியா பாய்ச்சறேன்னு கேக்கிற...? பாத்தா எப்படித் தெரியுது..?"

"தண்ணி பாய்ச்சிரதைப் போலத்தான் தெரியுது..."

"அப்புறம் என்ன கழுதைக்கு அப்படிக் கேட்ட..?"

"எல்லாம் ஒரு பேச்சுக்கு கேட்கிறதுதான்ப்பா..."

"உன் பேச்சையெல்லாம் உன்னைப் போல அப்பன் சம்பாதிச்ச சொத்தை அழிச்சுக்கிட்டு இருக்கிறவன் கிட்டப் போய் சொல்லு.. எனக்கு ஆயிரத்தஞ்சு வேலைவெட்டி இருக்கு..."

"அட..! கோவப்படாதேப்பா.. பத்தாவது படிச்ச நானே கலப்பையைத் தொடறதில்ல.. நீயோ பட்டப் படிப்பை படிச்சவன்.."

"அதுக்கு..?"

"நீயெல்லாம் கலப்பையை கையில் பிடிக்கலாமாப்பா..?"

"வேணும்னா உன் குரல்வளையைப் பிடிக்கவா..?"

"ஏம்பா.. இது உனக்கே நாயமாய் இருக்கா..?"

"எது..?"

"பேனா பிடிக்கிற கை.. கலப்பையைப் பிடிக்கலாமான்னு கேட்டா.. நீ குரல்வளையைப் பிடிக்க வர்றியே... இது எந்த ஊரு நியாயம்ப்பா..?"

"எனக்கு இதுதாண்டா நியாயம்..."

"அட.. சினிமாப் பட டைட்டிலைப் போலச் சொல்றியே.."

"தினமும் நீ அதைத்தானே செய்யறே.. எதுக்கு விட்ட விடிகாலையில இப்படி மொட்ட ரம்பத்தைப் போடற..?"

"உனக்கு விசயத்தைச் சொல்லலாம்ன்னு தான்.."

"என்ன கழுதையைச் சொல்ல போகிற..?"

"அட... நீ கழுதையை விடுப்பா..."

"ஏன்..? நீ அதை கட்டி மேய்க்கப் போறியா..?"

"அந்தக் கழுதை எனக்கெதுக்குப்பா...?"

"நீதானே அந்தக் கழுதையை விடச் சொன்ன..?"

தசரதன் விடாமல் கிடுக்கிப்பிடி போட்டதில் அந்தச் சரவணன் நொந்தே போனான்...



"ஏம்பா.. இப்படி முன்னாலேயும் போகவிடாம.. பின்னாலேயும் வரவிடாம பேசினா.. ஒரு மனுசன் எப்படிப்பா உன்கூடப் பேச்சு வார்த்தை நடத்துவான்...?"

"உன்னைக் கூப்பிட்டேனா..? சொல்லு.. என்கூட பேச்சு வார்த்தை நடத்துன்னு வெத்தலை பாக்கு வைச்சு உனக்கு நான் அழைப்பு வைச்சேனா..?"

"ம்ஹீம்.. யாருக்குத்தான் நீ வெத்தலை பாக்கு வைச்சு அழைப்பு வைச்சே..? எல்லாம் தானாய் உன்னைத் தேடி வருதே.. நீ மச்சக்கார பய புள்ளப்பா..."

சரவணன் விட்ட அனல் பெருமூச்சில்.. பயிர் கூட வாடி விடும் போலத் தோன்ற..

"ஏய்.. தள்ளி நில்லுப்பா.. பச்சைப் பயிறு வயலிலே வந்து அனல் பெருமூச்சா விடற..? இதுக்கே உன் பல்லைத் தட்டிக் கையில் கொடுக்கனும்..." என்று அதட்டினான் தசரதன்...

"நீ அதிலேயே குறியாய் இரு.. என்னடா மாமன் மகன்.. நம்ம சேக்காளியாச்சேன்னு நினைக்கறியா..?"

"சேக்காளியா..? யாரு..? நீயா..? நீயெல்லாம் எனக்கு சிநேகிதம்ன்னு நான் சொன்னேனா..?"

"நான் சொல்றேனேப்பா..."

"நீயா சொல்லிக்கிட்டா அதுக்கு நான் பிணையா..?"

"போப்பா.. உனக்கு எல்லாமே பகடிதான்..."

"அடப்பாவி..! எதைப் பேசினாலும் உனக்கு உறைக்காதா..? பகடின்னு தட்டி விட்டுட்டுப் போயிக்கிட்டே இருப்பியா..?"

"அதை விடுப்பா.. இப்ப விசயத்துக்கு வா..."

"நானா உன்கிட்ட விசயம் சொல்றேன்னு வந்தேன்..?"

"நான்தான் வந்தேன்ப்பா.. நான்தான் வந்துட்டேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..? ஒரு மனுசன்.. கண்ணால பார்த்ததை சொல்லலாம்ன்னு வந்தா அது ஒரு குத்தமாப்பா..?"

"நீ கண்ணால காண்கிறதையெல்லாம் சொல்லி ரம்பம் போட நான்தான் கிடைச்சேனா..?"

தசரதன் மண் வெட்டியை வாய்க்கால் நீரில் கழுவி விட்டு.. வரப்பில் ஏறி.. மோட்டார் ரூமை நோக்கி நடந்தான்.. வாயில் அரைபட்டு சக்கையாகி விட்ட வேப்பங்குச்சியை தூக்கியெறிந்த சரவணன் அவனைப்பின் தொடர்ந்தான்.. அவனைத் திரும்பிப் பார்த்த தசரதன் புருவங்களை உயர்த்தினான்...

"நீ எங்கேப்பா பின்னாடியே வர்ற..? உன் வீட்டுக்குப் போக மனசில்லையா..?"



"என் வீட்டில என்ன டவுனில இருந்து அப்சரஸா வந்து இறங்கியிருக்கு..?"

"அட..! உனக்கு அப்சரஸ் கூட வேணுமா..?"

"எனக்கு வேணும்னா வந்து சேர்ந்திருமா..? அதுவே உன்னைச் சொல்லு.. நீ பாட்டுக்கு தேமேன்னு மம்பட்டியைத் தூக்கிக்கிட்டு வயலைப் பார்க்க வந்திட்ட.. அங்கே உன் வீட்டில உன்னைப் பார்க்க அப்சரஸ் வந்து இறங்கியிருக்கு.." சொல்லிக் கொண்டே சரவணன் சிமிண்ட் தொட்டியில் இறங்கினான்...

"யாருடா இவன்.. எதையும் விளங்கச் சொல்லித் தொலைக்க மாட்டான்.. ஆமா.. இப்ப எதுக்கு நீ தண்ணித்தொட்டியில இறங்கற..?" தசரதன் அதட்டினான்..

"ஏம்ப்பா.. ஒரு மனுசன் குளிச்சாக் கூட அது உனக்கு குத்தமாப்பா...?"

"இதைப்பாருடா.. நீ குளிக்கக் கூடச் செய்வியா..?"

"ஆடு.. மாடே குளிக்குது.. நான் குளிக்க மாட்டேனா.."

"அதுகளெல்லாம் சுத்தம் தெரிஞ்ச பிறவிக.. நீ அப்படியா..?"

"நான் உன் வழிக்கு வர்றது தப்புத்தான் மச்சான்.. அதுக்காக ஒரு மனுசனை இந்த அளவுக்கு வாரித் தள்ளனுமா..?"

"பின்னே என்னடா.. இத்தனை நேரமும் என்னை தண்ணி பாய்ச்ச விடாம ஓட்டைப் பானைக்குள்ள நண்டை விட்டதைப் போல லொட.. லொடன்னு பேசித் தள்ளினயே.. அந்த நேரத்திலே இந்தக் கருமத்தை செஞ்சு தொலைக்கிறதுக்கென்ன..?"

"இப்ப.. என்ன வந்துச்சு..."

"ம்ம்ம்.. மோட்டாரை நிப்பாட்டற நேரம் வந்துருச்சு.."


சொல்லியபடியே தசரதன் தானும் தண்ணீருக்குள் இறங்க.. இப்போது சரவணன் புருவங்களை உயர்த்தினான்..

"என்ன அப்பு.. புருவத்தை வில்லா வளைக்கிறவன்..? என் மோட்டார் தண்ணியில நீ குளிக்கலாம்.. நான் குளிக்கக் கூடாதா..?"

கேள்வி கேட்டபடி குளிக்க ஆரம்பித்தவனுக்கு என்ன பதிலைச் சொல்லுவது என்று சரவணன் மண்டையை உடைத்துக் கொண்டான்...



# 2



ஈரக்காற்று உடல் தழுவ.. விடியலின் புத்துணர்வை அனுபவித்து ரசித்தபடி வரப்பில் நடக்க ஆரம்பித்தான் தசரதன்... அவன் பின்னால் ஓட்டமும் நடையுமாக வந்த சரவணன்..

"மெல்ல நடடா மச்சான்.." என்று கெஞ்சினான்...

"நான் உனக்கு மாமன் மகன்டா சரவணா..."

"யாரு இல்லைன்னு சொன்னது..?"

"பின்னே.. என்னவோ மாமன் மகளைப் பார்த்துக் கொஞ்சறதைப் போல.. மெல்ல நட.. மெல்ல நட.. மேனி என்னாகும்ன்னு சொல்லி வைக்கறியே..."

"மாமன் மகளைப் பார்த்துச் சொல்ல ஆசைதான்.."

"என்னது..?"

தசரதன் சிவந்த கண்களுடன் திரும்பிப் பார்க்க சரவணன் நடுங்கிப் போனவனாக பின் வாங்கினான்...

"மாமன் மகன்னுதானே சொன்னேன்..? உன் தங்கச்சின்னு சொன்னேனாடா மச்சான்..? இப்படி கொலைவெறிப் பார்வையைப் பார்க்கறியே..."

"அது.. அந்த பயம் இருக்கட்டும்..."

"அது எப்பவும் இருக்கும் மச்சான்..."

"அதைக் குறையாம பார்த்துக்க.. அதுதான் உனக்கு நல்லது.."

தசரதன் எரிச்சலுடன் வாய்க்குள் முணுமுணுத்தபடி நடையில் வேகம் கூட்ட.. சரவணன் அவனுடைய ஆறடி உயரத்தையும்.. அகன்ற மார்பினையும்.. பொறாமையுடன் அளவிட்டான்...

'ஆளைப்பாரு.. அப்படியே வாட்ட சாட்டமா ஆணழகன் அர்ச்சுனனைப் போல இருந்து வைக்கிறான்.. ஊரில இருக்கிற இவனோட முறைப் பொண்ணுகளெல்லாம் இவனைப் பார்த்து சொக்கிப் போறாளுக... அவளுக மட்டும் இவனைப் பாக்கலாமாம்.. நான் மட்டும் இவனோட தங்கச்சியைப் பார்க்கக் கூடாதாம்...'

சரவணன் மனதுக்குள் புலம்ப.. தசரதன் திரும்பி புருவங்களை உயர்த்தினான்...

"என்னடா மச்சான்..?"

சரவணனுக்கு ஒன்றும் புரியவில்லை.. தசரதன் ஊடுருவும் பார்வையொன்றை வீசி வைக்க சரவணனுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது.. எதற்காக அந்த அனல் வீசும் பார்வை அவனை நோக்கிப் பாய்கிறது என்று அறியாதவனாக அவன் மனதிற்குள் அழுது புலம்புவதாக நினைத்துக் கொண்டு சத்தமாக பாடிப் புலம்பினான்..



*"என்ன தவறு செய்தேன்..? - அதுதான்*
*எனக்கும் புரியவில்லை...*
*வந்து பிறந்து விட்டேன் - ஆனால்*
*இவன் மனது தெரியவில்லை..."*

"என்னடா மச்சான்.. மனசுக்குள்ள நடிகர் திலகத்தோட மறு அவதாரம்ங்கிற நினைப்பா..?"

"இல்லடா மச்சான்.."

"அப்புறம் எதுக்கு இந்த பாட்டு..?"

"எதுக்குடா இந்தப் பார்வை..?"

"என்னை என்னோட முறைப் பொண்ணுக சைட் அடிச்சா.. நீ எந்தங்கச்சிகளை சைட் அடிக்க கிளம்பிருவியா..?"

"உனக்கு ஒரே தங்கச்சிதானடா..?"

"சித்தப்பா மகளுக.. பெரியப்பா மகளுகளை என்னன்னு சொல்லுவ..? அத்தை மக.. மாமன் மகன்னா சொல்லுவ..?"

"ஏண்டா மச்சான்.. இது உனக்கே நியாயமா இருக்காடா மச்சான்.. உங்க அப்பாவுக்கு ஊரு பூராவும் பங்காளிக..."

"அதுக்கு..?"

"உன் படைபலம் ஜாஸ்திடா மச்சான்.. ஊருக்குள்ளே இருக்கிற பருவப் பொண்ணுகள்ள முக்கால் வாசிப் பொண்ணுக உனக்கு அக்கா.. தங்கச்சி முறையாகனும்.."

"அந்த முக்கால்வாசிப் பக்கம் திரும்பாதேண்ணேன்.."

"அடப்பாவி மச்சான்.. மீதி கால்வாசி எனக்கு அக்கா.. தங்கச்சி முறையாகனுமேடா..."

"அதுக்கு நான் என்ன பண்ணுவேன்..? இதெல்லாம் ஆண்டவன் போடற கணக்குடா மச்சான்.."

"அப்படிங்கறே..?"

"ஆமாங்கிறேன்..."

"அப்ப.. என்னை கணக்குப் போட நீ விட மாட்ட..?"

"அருவாளைத் தூக்குவேன்.. பரவாயில்லையா..?"

"அது எதுக்கு தேவையில்லாம.. அது பாட்டுக்கு பரணிலே கிடக்கட்டும்.. கழுதையை விட்டுத் தள்ளு.."

"நீ கணக்குப் போட ஆசைப்பட்டியே..."



"அதுக்கு கணக்கு டீச்சர்கிட்ட டியுசன் போனா வந்துட்டுப் போகுது..."

"இதைப் பாருடா.. அது எந்த டீச்சர்..?"

"நம்ம ஊருக்குப் புதுசா வந்திருக்கிற சரிதா டீச்சர்தான்.. பாருடா மச்சான்.. அந்த டீச்சருக்கும்.. உனக்கும் ஒட்டுமில்ல.. உறவுமில்ல.. பரணில தூங்கற வீச்சரிவாள வெளியில எடுக்கிற யோசனையையெல்லாம் மூட்டை கட்டி அந்த அருவா இருக்கிற பரணிலேயே தூக்கிப் போடு..."

"ஹா.. ஹா..."

"சிரிக்காம எனக்கு நல்லதொரு பதிலாச் சொல்லுடா மச்சான்..."

"பிழைச்சுப் போ.."

"அப்பாடி.. இப்பத்தான் நிம்மதியா மூச்சே விட முடியுது.."

"ஆமாம்.. உன் அப்பா உனக்கு பொண்ணு பாக்கனும்னு போன புதன்கிழமை வாகைக்குளத்துக்கு வண்டியைக் கட்டிக்கிட்டுப் போனாரே..."

"ஆமாமாம்..."

"எதுக்குடா இத்தனை ஆமாம்சாமி போடறவன்..?"

"நீ கேட்டியே மச்சான்.."

"அந்தக் கதை என்னாச்சு..?"

"பேச்சு வார்த்தையில இருக்கு.."

"அங்கேயும் பேச்சு வார்த்தை.. இந்த சரிதா டீச்சர்கிட்டேயும் பேச்சு வார்த்தையா..?"

"ரெண்டு பேச்சு வார்த்தையும் வேறவேற மச்சான்.."

"அப்படியா..? எங்கே ஆறு வித்தியாசத்தை சொல்லு பார்க்கலாம்..."

"ஆறு எதுக்குடா மச்சான்... ஒன்னே ஒன்னு... கண்ணேகண்ணுன்னு ஒரு வித்தியாசத்தைச் சொல்றேன்.. கேட்கறியா..?"

"வேண்டாம்ன்னா.. விடவா போற.. சொல்லித் தொலை..."

"அங்கே பேச்சு வார்த்தையை நடத்தறது என் அப்பா.."

"ஓஹோ.."

"இங்கே பேச்சு வார்த்தையை நடத்தறது நான்.."

"அப்படிப்போடு அருவாளை..."



தசரதன் பாராட்டி வைக்க.. சரவணன் மிரண்டு போனான்..

"இப்ப எதுக்குடா மச்சான் அருவாளைக் கட்டி இழுக்கற..?"

"அடப் போடா இவனே...! உன்னைப் பாராட்டறேண்டா..."

"பாராட்டுக்கும் அருவாதானா..? வேண்டாம்டா மச்சான்.. உனக்கு கோடி புண்ணியமா போயிடும்.. விட்டுரு..."

"நீ விடு.. நான் விடறேன்..."

"இந்தாப் பாரு மச்சான்.. இதப் பத்தின டீலை ஏற்கனெவே பேசி முடிச்சிட்டோம்.. நீ பேச்சு மாறாதே..."

"ஏண்டா அலையற..?"

"வேற என்னத்தைடா செய்யறது..? என் தலைவிதிக்கு நான் அலைந்துதான் லட்சணமான பொண்ணைத் தேடனும்.. உன்னைப் போல தானா வந்து மாட்டுமா..?"

"தானா வந்து மாட்டுதா...? எதுடா..?"

"அப்சரஸ்..."

இவனுக்கென்ன வைத்தியமா பிடித்திருக்கிறது என்ற சந்தேகத்துடன் சரவணனை உச்சி முதல் உள்ளங்கால் வரை பார்த்து வைத்தான் தசரதன்...

"எதுக்குடா அப்படிப் பார்க்கற..?"

"நானும் அப்போ பிடிச்சுப் பாக்கறேன்.. என்னமோ அப்சரஸ்.. அப்சரஸ் அப்படின்னு பினாத்தறயே.. என்னடா ஆச்சு..? சித்திரை மாசத்து கத்தரி வெயிலில உன் மண்டை மூளை குழம்பிப் போயிருச்சா..?"

"ஆமாடா.. இந்த விட்ட விடிகாலையில.. குளுகுளுன்னு காத்து வருகிற வயல் வரப்பில எனக்கு மண்டை மூளை குளிராம.. குழம்பிப் போயிருக்கு... போடா.. போ.. உன் வீட்டிலேதான் ஒரு அப்சரஸ் வந்து இறங்கியிருக்கு..."

"பொடி வைச்சுப் பேசாம விசயத்துக்கு வாடா..."

"அதை நான் சொன்னா நல்லாயிருக்காது..."

"அது உனக்கே தெரிஞ்சாச்சரி.. நீ சொல்ற எது தாண்டா நல்லாயிருக்கு..? எல்லாமே நாதாரித்தனமாத்தான் இருக்கு.."

"மத்ததை விடு.. இது அப்படியில்ல.. நீயே நேராப் போயி பாத்துக்க..."



"நீ எங்கே போகிறவன்..?"

"அந்தத் தெரு முக்கில சரிதா டீச்சர் வீடு இருக்கு.."

"இருந்தா..?"

"இந்தப் பச்சைக் காய்கறியை கொடுத்து.. காலை வணக்கம் ஜொள்ளப் போறேன்..."

"பச்சைக் காய்கறியா..?"

அப்போதுதான் சரவணின் கையிலிருந்த ஏதோவொரு துணிக்கடையின் பெயர் போட்ட மஞ்சள் பையைக் கவனித்தான் தசரதன்...

அதுநேரம் வரை எதற்காக சரவணன்.. ஒரு கையை முதுகுக்குப் பின்னாலேயே ஒளித்து வைத்திருந்தான் என்ற விவரம் அவனுக்கு அப்போதுதான் பிடிபட்டது...

"அடப்பாவி.. இது என் தோட்டத்துக் காய்டா..."

"என் மச்சான் தோட்டத்துக் காய்டா மச்சான்..."

"எடு அருவாளா.. ஏண்டா.. நீ சரிதா டீச்சருக்கு காலை வணக்கம் ஜொள்ள பயன் படும்ன்னுதான் என் தோட்டத்தில காய் பயிர் செய்கிறேனா..?"

"என்னடா மச்சான்.. ஒரு நாலுகாயை பறிச்சதுக்கு இந்த கோவம்.. கோவிச்சுக்கற..? ஏண்டா.. எனக்கு அந்த உரிமையில்லையா..?"

"இந்தாப்பாரு.. இதையெல்லாம் உன் வீட்டுக்கு கொண்டு போயி உன் அம்மா கையில கொடு.. நான் ஏன்னு கேக்க மாட்டேன்..."

"ஏண்டா கேக்கப் போற..? அது அப்படியே இந்தக் காய்கள அடுப்பங்கரையில இருக்கிற எந்தங்கச்சி கையில கொடுக்கும்.. அந்த தங்கச்சி காயை எடுப்பா.. அதில உம்முகம் தெரியும்.. இதுதானே உன் ஐடியா..?"

"அடச்சீ.. உன் ஐடியாவைக் கொண்டு போயி குப்பையில போடு.. அது உன்புத்தி.. உன் மூக்குறுஞ்சி தங்கச்சிக்கு நூல் விடனும்னு நான் கனவில கூட நினைக்க மாட்டேன்.."

"டேய்.. தானாடா விட்டாலும் சதை ஆடும்..."

"இதப் பாருடா.. நீ கூட என்னென்னவோ சொல்ற.."

"நான் சொல்லலை.. பெரியவங்க சொல்லியிருக்காங்க..."

"அதையெல்லாம் நீ எதுக்குடா சொல்ற...?"

"ஆயிரம்தான் இருந்தாலும் அவ எந்தங்கச்சி.."

"அதுக்கு..?"

"அது எப்படி.. அவள நீ மூக்குறுஞ்சின்னு சொல்லலாம்...?"



"அடிச்சேன்னா பல்லைக் கழட்டிருவேன்.. படவா.. அவ பின்னே வேற யாரு..? பாக்தாத் பேரழகியா..? அழகு தங்கச்சி கூடப் பொறந்துட்டு பேச வந்திட்டான்..."

"இந்தா பாரு.. என்னை என்ன வேணும்னாலும் சொல்லு..."

"அடேங்கப்பா.. உன்கிட்ட கேட்டுட்டுத்தான் சொல்லனுமாக்கும்...?"

"எந்தங்கச்சியை எதுவும் சொல்லாதே..."

"சொன்னா.. என்னடா பண்ணுவ...?"

"இப்படி ஓடியே போயிருவேன்..."

சரவணன் இரண்டே எட்டில் சரிதாவின் வீட்டை நோக்கி ஓடிவிட.. தசரதன் வாய்விட்டுச் சிரித்தபடி வீட்டைப் பார்த்து நடந்தான்.. வீட்டு வாசலில் வெளிநாட்டுக்கார் நின்றிருந்தது.. அவன் புருவங்கள் உயர்ந்தான்..

'யாராய்.. இருக்கும்...?'

# 3



வாசல் பக்கமாக வந்த பாரிஜாதம் மகனைக் கண்டதும் கண்களில் வியப்பைக் காட்டினாள்..

“ஏண்டா தம்பி.. வீட்டுக்குள்ள வராம வாசல்லேயே நிக்கற..?”

“இது யாரோட காரும்மா..?”

“ம்ம்ம்.. உன் அப்பா எனக்காக இறக்குமதி பண்ணியிருக்கிற வெளிநாட்டுக் காரு...”

பாரிஜாதம் கழுத்தை ஒரு வெட்டு வெட்டி நொடித்து அவள் தசரதனைப் பெற்ற தாய் என்பதை நிரூபித்தாள்...

வீட்டுக்குப் பின்னாலிருந்த மாட்டுத் தொழுவத்திற்குப் போய்.. மாடுகளுக்கு வைக்கோல் போட்டுவிட்டு.. வீட்டைச் சுற்றி வாசல் பக்கமாக வந்த கயிலைநாதன் மனைவியின் பேச்சை ரசித்து பகபகவென்று சிரித்தார்..

“அப்பா தசரதா...”

“ஏம்மா..?”



“உன் அப்பாவோட சிரிப்பைக் கொஞ்சம் நிப்பாட்டச் சொல்லு.. வந்திருக்கிற விருந்தாளிக இதைக் கேட்டுட்டு ஊரைப்பாத்து ஓடிப் போயிர போறாக.. ஆமாம்.. எதுக்கு இந்த சிரிப்பாம்..?”

“உன் அம்மாவுக்குத்தான் நானு ஏற்கனெவே இந்த வண்டியை இறக்குமதி பண்ணிட்டேனேப்பா.. இன்னும் எந்த வண்டி வேணுமாம்..? சொல்லச் சொல்லு.. அதையும் கழுதை இறக்குமதி பண்ணிட்டாப் போகுது.. யாரு நானு..?”

மீசையை முறுக்கியபடி வாசலில் நின்ற மாடுகளைப் பூட்டி ஓட்டும் கூட்டு வண்டியை கயிலைநாதன் காண்பிக்க.. தசரதனுக்கு சிரிப்பு வந்தது...

‘இந்த அம்மா பேசற பேச்சுக்கு அப்பாவாலதான் பதிலைச் சொல்ல முடியும்...’

கணவர் காட்டிய வண்டியை கேலிப்பார்வை பார்த்த பாரிஜாதம் புருவங்களை உயர்த்தியபடி நின்றிருந்த கணவரைப் பார்த்து கேலியாக உதட்டை மடித்துக் கடித்தாள்..

“யாரு நானுன்னு கேக்கறாரே.. இவரு யாராம்டா தசரதா..? வீரபாண்டிய கட்ட பொம்மனா..? இல்ல.. குதிரையில வர்ற தேசிக்குராஜனா..?”

"ஊஹூம்.. கூட்டு வண்டியில வர்ற கயிலைநாதன்டி.."

"இந்த வண்டிய எந்த நாட்டுல இருந்து இறக்குமதி பண்ணினாராம்டா தசரதா..?"

"நம்ம வருச நாட்டில இருந்துதான்.. உண்டா... இல்லையான்னு கேட்டுச் சொல்லுடா தம்பி..."

அந்த வண்டி உண்மையிலேயே வருச நாட்டில் செய்யப்பட்டு.. வாங்கி வந்த வண்டிதான் என்பதால் கடகடவென்று ரசித்துச் சிரித்தான் தசரதன்...

"அப்பாவும்... மகனும்.. சிரிச்சுச் சிரிச்சே.. வந்திருக்கிற விருந்தாளிகள ஓட்டி விட்டுறனும்னு கங்கணம் கட்டிக்கிட்டு இருக்கீங்களோ.."

"அட.. இதுகூட நல்ல யோசனையாய் இருக்கே.."

கயிலைநாதன் ஒருபக்க நெற்றியை ஒற்றைவிரலால் தட்டியதில் பாரிஜாதம் கடுப்பாகி போனவளாக அவளுடைய நெற்றிக் கண்ணைத் திறந்தாள்...

மனைவியின் அனல் பார்வையில் கயிலைநாதன் வாய் மூடிக் கொண்டார்..

"வருச நாடெல்லாம் வெளிநாடுன்னு பீத்திக்கிறவருக்கு புத்தி இப்படித்தான் போகும்..."



"இந்தாப் பாரு.. நீ எந்த நாடுன்னுதான் கேட்ட.. நானும் வருச நாடுன்னு சொன்னேன்..."

"இந்த வாய்தான் உங்களை வாழவைக்குது.. வாசலில நின்னு வாய் வளர்க்காம வீட்டுக்குள்ள வாங்க.."

பாரிஜாதம் வீட்டுக்குள் போய்விட.. யோசனையாக நின்ற கயிலைநாதனைப் பார்த்தான் தசரதன்..

"என்னப்பா யோசிக்கறிங்க.. அம்மா வீட்டுக்குள்ள வாங்கன்னு சொல்லிட்டுப் போகுதே.. செமத்தியா கவனிச்சுப்புடும்ன்னு பயப்படறிங்களா..?"

"அந்த பயமில்லைடா மகனே.. வந்திருக்கிற அண்ணன்காரன் முன்னாலே உன் அம்மா அடக்கித்தான் வாசிப்பா..."

"அண்ணன்காரனா...? யாருப்பா..?"

"வேற யாரு..? பக்கத்து ஊரு பண்ணையாருதான்.."

பாரிஜாதத்தின் பெரியப்பா மகனான நாராயணமூர்த்தி.. பக்கத்து ஊரின் பண்ணையார்தான்.. அவருடைய ஒன்று விட்ட கொள்ளுத்தாத்தாவின் இரண்டு விட்ட தம்பி மகனான தாத்தா ஒருவரின் மூன்று விட்ட பெரியப்பா மகனுக்கு நான்கு விட்ட சகலையான தம்பிதுரைக்கு பாரிஜாதம் மகளாக பிறந்திருந்த ஒரே காரணத்தினால்

அந்தப் பண்ணையார் நாராயணமூர்த்தி பாரிஜாதத்திற்கு அண்ணன் முறையாகித் தொலைத்தார்...

மற்றபடி பாரிஜாதத்தின் பிறந்த ஊர் பல் மைல் தொலைவிற்கு அப்பாலிருந்தது... அவளுடைய பிறந்த வீடும்.. கயிலைநாதனின் வீட்டைப் போல மத்தியதர விவசாயக் குடும்பமாகவே இருந்தது...

இவ்வாறு ஏழுகடல்.. ஏழு மலையைத் தாண்டி ஒரு சொந்தத்தைச் சொல்லிக் கொண்டு அந்தப் பணக்கார பண்ணையார் சிலமுறை கயிலைநாதனின் வீட்டுக்கு வந்து போனதில் கயிலைநாதனுக்கு அவ்வளவாக உடன்பாடில்லை..

என்னவோ.. என் தகுதிக்கெல்லாம் இந்த வீட்டில் நான் கால் வைக்கக் கூடாது.. என்ன செய்வது.. என் தூரத்து உறவான தங்கையை இந்த வீட்டில் மணம் முடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.. அதனால்தான் வந்து போக வேண்டியிருக்கிறது என்ற ரீதியில் அந்த நாராயணமூர்த்தி பேசும் பேச்சுக்கள் அவருக்கு உவப்பானதாக இருப்பதில்லை...

அந்த நாராயணமூர்த்தியை தசரதன் அவ்வளவாக அறிந்ததில்லை.. கயிலைநாதனின் திருமணத்தின் போது ஒருமுறை.. தசரதன் பிறந்திருந்த போது ஒருமுறை...



அவனுக்கும்.. அவன் தங்கை சாரதாவுக்கும் காதுகுத்தும் வைபவம் நடந்தபோது ஒரு முறையென்று.. மூன்றே முறை வந்து போயிருந்த நாராயணமூர்த்தியை அவன் எப்படி அறிவான்..?

பாரிஜாதம் சில சமயங்களில் அவரைப் பற்றிச் சொல்லியிருக்கிறாள்..

"பக்கத்து ஊரில இருக்கிற அரண்மனை யாருதுன்னு தெரியுமா..?"

"யாருதும்மா..?"

அவனும்.. சாரதாவும் சிறுவயதிலிருந்த போது ஆவலாக வினவுவார்கள்.. வளர்ந்த பின்னால்.. கீறல் விழுந்த கிராமபோன் ரிகார்டைப் போல.. வரும் ஒரே மாதிரியான வார்த்தைகளை கேட்டுக்கேட்டு அலுத்துப் போனவர்களாக கேள்வி கேட்காமல் மௌனித்து விடுவார்கள்...

"அது என் பெரிய தாத்தாவோட அரண்மனை... இப்ப கவனிப்பாரில்லாம கிடக்கு.. என் அண்ணனும்.. அண்ணியும் ஊரில இருந்தப்ப ஜேஜேன்னு இருக்கும்.. அவங்க பொட்டியை வைச்சு பொழப்பு நடத்தப் போறேன்னு மெட்ராஸீப் பக்கம் போனாங்க.. வீடே அருள் வாங்கிக் கிடக்கு..."

பாரிஜாதம் 'பொட்டி' என்று விளித்தது.. கம்பூட்டர் பெட்டியைத்தான்.. வர்த்தகத்தில் ஆர்வம் கொண்ட நாராயணமூர்த்தி.. கம்பூட்டரில் கால் பதித்து.. சென்னைக்கு குடி பெயர்ந்துவிட.. அவர்வீடு கவனிப்-பாரில்லாமல் தூசும்.. தும்புமாக ஆகிவிட்டது.. அவருடைய தோப்பு.. துரவு.. வயல் வரப்பு.. குத்தகைக்கு விடப் பட்டு விட்டன...

"ம்ஹீம்.. ஆனைகட்டி வைக்கோற் போரடிச்ச அரண்மனை எங்க அண்ணன் வீட்டு அரண்மனை.. இப்ப ஆளறதுக்கு ஆளில்லாம.. இருண்டு கிடக்கு..."

அந்த சொத்துக்களின் உரிமையாளரான நாராயண மூர்த்திகூட அந்த அளவுக்கு வருத்தப்பட்டிருக்க மாட்டார்.. அவரின் பதினைந்து விட்ட தங்கையான பாரிஜாதம் அந்த அளவுக்கு வருத்தப்பட்டுத் தீர்ப்பாள்...

அந்த நாராயணமூர்த்தி தசரதனின் வீட்டிற்கு வந்திருக்கிறாரா..? எதற்கு..?

"அவரோட அரண்மனையை புதுப்பிச்சுக் கட்டனுமாம்..."

"அரண்மனையா..?"

"அதாம்ப்பா.. அவரோட வீடு ஒன்னு.. பக்கத்து ஊரில இருக்குதில்ல..? அதை புதுப்பிச்சுக் கட்டனுமாம்.. அத



வீடுன்னு சொன்னா உங்கம்மா தட்டெடுத்து சாப்பாட்டைப் போட்டிருவாளா..? அதான்.. அரண்மனைன்னு சொன்னேன்.."

கயிலைநாதனின் விகடப்பேச்சில் தசரதனுக்கு சிரிப்பு வந்தது.. நகைச்சுவை போல இருந்தாலும்.. கயிலைநாதன் சொன்னதில் ஒரளவிற்கு உண்மை இருக்கத்தான் செய்தது..

பாரிஜாதம் எப்போதுமே நாராயணமூர்த்தியின் வீட்டை.. வீடு என்று சொன்னதில்லை.. அரண்மனை என்றுதான் சொல்லுவாள்..

"ஹா... ஹா..."

"நீ சிரிக்கற.. என்னால அது முடியுதா..?"

"அது சரிப்பா.. அதுக்கு எதுக்கு அவர் நம்ம வீட்டுக்கு வந்திருக்காரு..? அவரு வீட்டைச் சரி பண்ணனும்னா அங்கேயில்ல போகனும்...?"

"சத்தமா பேசிராதே.. உன் அம்மா காதில விழுந்து வைக்கப் போகுது.. அப்புறம் உனக்கும்.. எனக்கும் காலித் தட்டைத்தான் கண்ணில காட்டுவா.. ஏற்கனெவே வீட்டில கோழி பிரியாணி.. கோழிவறுவல்ன்னு காலம்பர இருந்து வாசம் வந்துக்கிட்டு இருக்குது..."

"இது வேறயா..?"

"நல்லாக் கேட்ட போ.. வராத அண்ணன் வந்திருக்காரு.. வராத அண்ணன் வந்திருக்காருன்னு சொல்லிச் சொல்லியே.. ஆத்தில இருக்கிற மீனை அடுப்படிக்கு வர வைச்சிட்டா.. பக்கத்து டவுனில இருக்கிற அத்தனைகிலோ பிராய்லர் கோழியையும் வறுவலுக்குள்ள விழுக வைச்சிட்டா..."

"பாருடா.. இந்த விருந்து இன்னைக்கு மட்டும்தான..?"

"யாருக்குத் தெரியும்..?"

"என்னப்பா இப்படிக் கேக்கறிங்க..?"

"வேற எப்படிப்பா கேக்கச் சொல்ற..? அந்த ஊரில வீட்டைச் சரிபண்ற மகராசன்.. அது முடியற வரைக்கும் இந்த ஊரில.. நம்ம வீட்டிலதான் தங்குவாராம்..."

"என்னப்பா.. இது..?"

"என்னைக் கேட்டா..? உன் அம்மாவைப் போய் கேளு..."

"அதை யாரு கேட்கிறது..?"

"நிச்சயமா நான் கேட்க மாட்டேன்.. வராத அண்ணன் வந்திருக்காருன்னு என்னவோ சாமிக்குச் சொல்ற



மந்திரத்தைப் போல ஒப்பிச்சுக்கிட்டு இருக்கிற உன் அம்மா... வீட்டுப் பக்கம் வராம வயலுப் பக்கமே இருங்கன்னு என்னைத் துரத்திருவா.. எனக்கு அது தேவையா..?"

தேவையில்லைதான் என்ற நினைவோடு.. வீட்டுக்குள் கால் வைத்தான் தசரதன்.. சுதந்திரமாக வீட்டுக்குள் போக முடியாமல் அவனுக்கு சங்கடமாக இருந்தது.. இயல்பாக அவன் வீட்டில் நடமாட முடியாதபடி விருந்தினர் வந்திருந்ததில் அவனுக்கு சில தர்ம சங்கடங்கள் இருந்தன...

பேசாமல் மாடிக்குப் போய் விடலாம் என்று மாடிப் படியில் கால் வைத்தவன் திகைத்து நின்றான்..

எதிரே அழகான பெண்ணொருத்தி அலட்சியமான பார்வையுடன் இறங்கி வந்து கொண்டிருந்தாள்...

'இவள்தான் அந்த அப்சரஸா...?'

# 4



ஒல்லியாக.. உயரமாக... கொடி போன்ற உடல் வாகுடன் இருந்த அந்தப் பெண்ணின் அழகை ரசிக்க முடியாமல் அவளின் அலட்சியப் பார்வை தசரதனை தடை செய்தது...

'என் வீட்டுக்குள்ள வந்து நின்னுக்கிட்டு என்னையே என்னமா தெனாவெட்டா பார்த்து வைக்கிறதா.. திமிரு பிடிச்சவ போல...'

தசரதன் கூர்மையாக அவளைப் பார்த்தபடி மாடியேறினான்... அவனின் துளைக்கும் பார்வையில் அவள் நடையில் லேசான தயக்கம் வந்தது.. அதற்குள் மாடியிலிருந்து ஓடிவந்த சாரதா...

"அண்ணா.. வந்திட்டியா..?" என்று கேட்டாள்...

"அதான் வந்துக்கிட்டு இருக்கேனில்ல..? அதுக்கப்புறமும் என்ன கேள்வி வேண்டிக்கிடக்கு..?"

அந்த அப்சரஸின் மீது இருந்த கோபத்தை தங்கையின்மீது காட்டினான்... தசரதன்.. அதை எதிர்பார்த்திராத அந்த அப்சரஸின் விழிகளில் கோபம் தெரிந்தது...



'அடேங்கப்பா.. முழிக்கிறதைப் பாரு.. இவ வந்தா நான் உடனே 'ஈ'ன்னு பல்லைக் காட்டி.. 'ஆ'ன்னு கண்ணை விரிச்சுப் பார்க்கனுமா..? இவ தெனாவெட்டை யெல்லாம் யாருகிட்டக் காட்டறா...'

"ஏண்ணா கோவிச்சுக்கிற..?"

துள்ளிக் கொண்டு வந்த சாரதா முகம் வாடக் கேள்வி கேட்டதும் தசரதனுக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. யார்மீதோ இருந்த கோபத்தை தங்கையின் மீது காட்டி விட்ட கழிசரக்கம் மனதில் வர.. அவன் மென்மையாக சாரதாவைப் பார்த்து சிரித்தான்...

"யாரு கோவிச்சுக்கிட்டது...?"

"நீதான்.."

"நீ கண்டயா..?"

"அப்புறம்.. சுள்ளுன்னு பேசினயே..."

"வெளியே வெயிலு சுள்ளுன்னு அடிச்சா.. சுள்ளுன்னுதானே பேச்சு வரும்..? அதுக்குப் போயி முகத்தை உம்முன்னு வைச்சுக்கலாமா...?"

"அவ்வளவுதானா..?"

சாரதா மலர்ந்து சிரித்தாள்.. சார்தாவுடன் பேசிக் கொண்டிருந்தவன் மறந்தும் அந்த அப்சரஸின் பக்கம் திரும்பிப் பார்க்காததில் அவள் முகம் விழுந்து விட்டது...

"கோவமில்லைன்னு தெரிஞ்சு போச்சில்ல.. இனிமேலாவது வழியை விடறியா..."

சாரதாவிடம் கேட்பதைப் போல அந்த அப்சரஸிடம் மறைமுகமாக அவன் சொன்னதில் அவளின் விழுந்த முகம் இன்னும் கொஞ்சம் அதிகமாக கன்றி விட்டது.. அவள் விலகி இறங்கப் போனபோது சாரதா அவள் கை பிடித்து தடுத்து நிறுத்தி

"அண்ணா.. இவங்க யாருன்னு தெரியுமா..?" என்று தசரதனிடம் கேட்டாள்...

'இவ பெரிய மகாராணி.. இவளைப் பத்தி நான் அவசியம் தெரிஞ்சுக்கனும்...'

மனதுக்குள் வெடுவெடுத்த தசரதன்.. பதில் சொல்லாமல் தோரணையாக பார்த்தபடி நின்றான்... அதைக் கண்ட அப்சரஸ் அதிகமாக வெகுண்டதை அவனால் இனம் கண்டு கொள்ள முடிந்தது...

"என்னண்ணா.. பேசாம நிக்கிற...?"

"வேற என்னத்தை செய்யச் சொல்ற..?"



"இவங்க யாருன்னு கேட்டேனில்ல..."

"ஏன் சாரு.. ஆளைப் பார்த்தவுடனே அடையாளம் சொல்ற அளவுக்கு இவங்க என்ன பெரிய ஆளா...?"

தசரதன் அலட்சியமாக வினவியதில் அவள் கண்களில் ஜொலிப்புடன் அவன் பக்கம் திரும்பி முறைத்தாள்.. அவன் புருவங்களை உயர்த்தி.. பதிலுக்கு முறைத்தான்...

அவர்கள் இருவரும் ஒருவரிடம் ஒருவர் பேசிக் கொள்ளாமலே... ஒருவர் பெயரை ஒருவர் அறிந்து கொள்ளாமலே ஒருவரை ஒருவர் விரோதத்துடன் பார்த்துக் கொண்டார்கள்...

"என்னண்ணா இப்படிச் சொல்லிட்ட.. இவங்க தான் வெந்நிலா..."

"எந்த நிலா...?"

"வெந்நிலா அண்ணா..."

"எது..? ராத்திரியானா ஆகாசத்தில வட்டமா ஒன்னு வருமே.. அதுவா..?"

"போண்ணா.. உனக்கு எல்லாமே கேலிதான்.."

சாரதா சிணுங்கினாள்.. ஆனால் தசரதன் பேசியது கேலிப் பேச்சில்லை என்று வெந்நிலாவிற்கு தெள்ளத் தெளிவாக புரிந்தது...

அவன் அவளை மதிக்காமல் பேசினான்.. அவளால் அவனின் அந்த உதாசீனத்தை தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அதுவரை அவளை எல்லோரும் கொண்டாடிப் பேசுவதைத்தான் அவள் அறிந்திருந்தாள்.. நீ யாராயிருந்தால் எனக்கென்ன என்ற வகையில் ஒருவன் அவளைப் பேச முடியும் என்பதை அப்போதுதான் அவள் அறிகிறாள்...

"கேலியில்லை சாரு.. நிசமாத்தான் சொல்றேன்.. ஆனா ஒன்னு சாரு... நிலான்னு பேரு வைச்சுக்கிட்டதால அந்த ஆகாசத்திலதான் இருப்பேன்னு யாரும் அடம் பிடிக்கக் கூடாது.. பூமியில காலைப் பதிச்சு நடக்கப் பழகிக்கனும்..."

அவன் பேசப்பேச.. வெந்நிலாவின் ரத்த அழுத்தம் எகிறியது.. அதற்கு மேலும் அவளால் பொறுமை காக்க முடியவில்லை...

"உயரத்தில் இருக்கிறவங்க.. உயரத்தில்தான் இருப்பாங்கன்னு உன் அண்ணனுக்கு சொல் சாரதா..."

அவளின் ஆணவமான பேச்சில் தசரத்னின் புருவங்கள் சுருங்கின.. அதற்கு பதில் சொல்லாமல் விடக்கூடாது என்ற கோபம் அவனுக்குள் எழுந்தது...



"பார்த்து இருக்கச் சொல்லு சாரு.. தரையில் இருக்கிறவங்க விழுந்தா அடி படாது.. அதுவே உயரத்தில் இருக்கிறவங்க கீழே விழுந்தா அடி பலமா படும்..."

அவனின் எகத்தாளத்தில் அவளின் ரத்தம் கொதித்தது...

"என்னது...? கீழே விழுவாங்களா..? யார் கீழே விழுவாங்க..? விழுகிறதைப் பத்தியெல்லாம் உயரத்தில் இருக்கிறவங்க நினைக்கக் கூட மாட்டாங்க சாரதா..."

"நினைக்காதது கூட சில சமயம் நடந்துவிடும் சாரு.. அதை இந்தம்மாகிட்டச் சொல்லு.."

"வாட்..? அம்மாவா..? சாரதா.. திஸ் இஸ் டூ மச்..."

"திரி மச்சாவே இருக்கட்டும் சாரு.. டோண்ட் கேர்.."

தசரதன் அவளை அலட்சியமாகப் பார்த்தபடி படியோறி போய் விட.. இந்தப் பட்டிக்காட்டு இளைஞனுக்கு இவ்வளவு திமிரா என்று ஸ்தம்பித்துப் போய் நின்றாள் வெந்நிலா...

'அல்லியூர்..' என்ற கிராமத்தின் பெயரைக் கேட்ட போது அலட்சியமாக தோளைக் குலுக்கியவள் தான் அவள்...

"வாட்.. டாட்..? ஏதோ ஒரு வில்லேஜீக்கு போய் ஒன் வீக் இருக்கனும்னா எப்படி என்னால அது முடியும்..? ஐ ஹேட் இட்..." என்று சொன்னாள்...

"என்னம்மா செய்கிறது..? அது நம்ம சொந்தக்காரங்க இருக்கிற ஊர்.. பக்கத்து வில்லேஜில்தான் நம்ம வீடு இருக்கு.. அதை சரிபண்ண கொஞ்சநாள்.. அங்கே இருந்தால்தான் நல்லது.. உனக்கு மட்டுமா அங்கே போக பிடிக்கலை..? எனக்கும்தான் பிடிக்கலை.. எல்லாம் படிக்காத ஜனங்க.. நம்மைப் பார்த்தா 'ஆ'ன்னு வாயைப் பிளப்பாங்க.. கல்லடி பட்டாலும் கண்ணடி படக்கூடாதுன்னு உங்க அம்மா சொல்லுவா..."

இறந்து போன மனைவியின் நினைவில் நாராயண மூர்த்தியின் கண்கள் பனித்தன.. வெந்நிலாவும் மனம் வலிக்க மௌனமானாள்..

அன்று நாராயண மூர்த்தி சொன்னதை வைத்து படிப்பறிவில்லாத பாமர மக்கள் குடிசைகளில் வாழும் குக்கிராமத்தை எதிர்பார்த்து வந்தவளுக்கு.. அல்லியூரின் செல்வச் செழுமை ஆச்சரியத்தை அளித்தது.. அவர்கள் தங்கவிருந்த நாராயணமூர்த்தியின் பதினைந்து விட்ட தங்கையான பாரிஜாதத்தின் வீடு குடிசையாக இல்லாமல் மாடி வீடாக இருந்தது அந்த ஆச்சரியத்தை அதிகரித்தது..



அவை அத்தனையையும் தூக்கிச் சாப்பிடுவதைப் போல அந்த வீட்டின் மகனான தசரதன் அநாசியமாக ஆங்கிலத்தில் பேசியது மயக்கத்தையே கொடுத்தது...

'இந்தப் பட்டிக்காட்டான் வாயில் இங்கிலீஷா...'

"என்ன அப்படிப் பாக்கறிங்க..? எங்க அண்ணன் எம்.ஏ படிச்சிருக்காராக்கும்.." பெருமையுடன் சொன்னாள் சாரதா...

"ஓஹோ.. நீ என்ன படிக்கிற..?"

எதையாவது கேட்க வேண்டுமே என்பதற்காக கேட்டாள் வெந்நிலா...

"நான் ப்ளஸ்-டூ., பக்கத்து டவுனில்தான் படிக்கிறேன்.. தினமும் சைக்கிள்ல போயிட்டு வருவேன்.. அண்ணன் எனக்கு சைக்கிள் வாங்கிக் கொடுத்திருக்கு..." வெகுளியாக பேசினாள் சாரதா...

"இஸ்.. இட்..?" வெந்நிலாவிற்கு சாரதாவின் அண்ணனைப் பற்றிய புராணத்தை கேட்கப் பிடிக்க வில்லை..

அது சாரதாவிற்கு தெரிந்தால்தானே.. அவள் திறந்த வாயை மூடுவேனா என்று அடம் பிடித்தவளாக தன் புராணத்தை தொடர்ந்தாள்...

“நான் காலேஜில் சேர்ந்ததும் ஸ்கூட்டி வாங்கித் தரேன்னு சொல்லியிருக்கே...”

“ம்ம்ம்...”

“இந்த ஊர் கபடி டீமுக்கு அண்ணன்தான் கேப்டன்..”

‘பெரிய கிரிக்கெட் டீம்.. இவளோட அண்ணன்தான் டோனி.. ஆளுகளைப் பாரு...’

“அண்ணன் கிரௌண்டில் இறங்கினாலே விசில் தூள் பறக்கும்...”

‘பட்டிக்காட்டில் விசிலடிச்சான் குஞ்சுகள்தானே இருப்பாங்க.. காட்..! இதுக மத்தியில் ஒன் வீக்கா...? ப்ளீஸ்.. ஸேவ் மி..’

“எத்தனை மெடல் வாங்கியிருக்கு தெரியுமா...?”

‘ஆமாமாம்.. ஒலிம்பிக்கில ஐயா கலந்து.. ஜெயித்து கோல்டு மெடலா வாங்கி குவிச்சிருக்காரு.. ம்ஹீம்...’

“அல்லியூர்ன்னாலே எங்க அண்ணன் பெயரைத் தான் சொல்லுவாங்க...”

‘இதுவே எட்டுப்பட்டியில ஒரு பட்டி.. இதில இவளோட அண்ணன் பெருமை கொடி கட்டி பறக்குதாம்.. ராமா..!’



வெந்நிலாவிற்கு தலை வலிப்பதைப் போல இருந்தது.. அவளுக்கு தசரதனின் புராணத்தைக் கேட்கப் பிடிக்கவில்லை.. அது தெரியாத சாரதா.. கதாகாலட்சேப பாகவதரைப் போல நிறுத்தாமல் தன் சொற்பொலிவை பொழிந்து கொண்டேயிருந்தாள்..

## 5



தசரதன் உடை மாற்றிக் கொண்டிருந்தான்.. கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.. சட்டையின் பொத்தான்களை மாட்டியபடி கதவைத்திறந்தான்..

“சாப்பிட வாடா...” என்றபடி பாரிஜாதம் அறைக்குள் வந்தாள்...

“அவங்க சாப்பிட்டாச்சா..?” தசரதன் விசாரித்தான்...

“ஊஹீம்.. சேர்ந்து சாப்பிடட்டும்ன்னு உன் அப்பா சொல்லிட்டாரு.. சீக்கிரமா வா.. அவங்க பசிதாங்க மாட்டாங்க...”

தசரதனுக்கு எரிச்சல் வந்தது.. விடிவதற்கு முன்னாலேயே எழுந்து வயலுக்குப் போய் தண்ணீர் பாய்ச்சி

விட்டு வந்தவன் பசி தாங்குவானாம்.. ஒய்யாரமாக வந்து இறங்கியிருக்கும் விருந்தாளிகள் பசிதாங்க மாட்டார்களாம்..

'என்ன காலக் கொடுமைடா இது...'

தசரதனுக்கு அது அவன் வீடா என்பதில் சந்தேகம் வந்தது.. எப்போதும் அவனுடைய தேவைகளைப் பற்றியே நினைக்கும் அவனது தாய்.. வயலில் இருந்து வந்தவனுக்கு ஒரு வாய் காப்பித் தண்ணீரை கண்ணில் காட்டாமல்.. எங்கிருந்தோ வந்து இறங்கியிருக்கும் தூரத்து சொந்தத்திற்கு.. கோழியடித்து குழம்பு வைத்துக் கொண்டிருக்கிறாள்.. இந்த லட்சணத்தில் வந்திருக்கும் உறவினர்களின் பசிக்காக அவன் போய் சாப்பிட வேண்டுமாம்...

'நல்ல கதை...'

தலையை சிலுப்பிக் கொண்டான் தசரதன்.. சற்று முன்னால் பார்த்த அந்த வெண்ணிலாவின் அலட்சியப் பார்வை அவன் நினைவில் எழுந்தது...

'ம்ஹீம்.. அந்த மகராசி முன்னாலே உட்கார்ந்து சாப்பிட்டா.. தொண்டையிலேயே சாப்பாடு நின்னுக்கும்.. தொண்டைக் குழியை விட்டு சாப்பாடு இறங்காது...'



எரிச்சல் மண்டியதில் அவன் பாரிஜாதத்தின் அழைப்பை நிராகரித்தான்..

"முதல்ல வந்திருக்கிறவங்க சாப்பிட்டு முடிக்கட்டும்.. நான் அப்புறமா வர்றேன்.."

"நானும் அதைத்தான் சொன்னேன்.. எங்கே..? உன் அப்பா என் பேச்சை காதில வாங்கினாத்தானே..? உன் அண்ணனுக்கும்.. அண்ணன் மகளுக்கும் போட்டது போக மிச்சம் மீதி இருக்கிறதை எங்களுக்கு போட நினைக்கறியான்னு சண்டைக்கு வந்திட்டாரு.." பாரிஜாதம் பஞ்சாயத்து வைத்தாள்..

'இது வேறயா...'

பசியோடு இருந்த தசரதன் பற்களைக் கடித்தான்.. அந்த நேரத்தில் கயிலைநாதனின் சுதந்திரப் போராட்டத்திற்கான ஆதரவு அவன் மனதில் மிகப்பலமாக எழுந்தது...

"சரியாத்தானே சொல்லியிருக்காரு..."

வெண்ணிலாவின் ஆணவ முகத்தின் நினைவில் அவன் தெரியாத்தனமாக வாய் விட்டுவிட.. பாரிஜாதம் பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டாள்...

"ஆமடா.. வராத என் அண்ணன் வந்ததுக்கு உன் அப்பா வக்கணையா பேசுவாரு.. நீயும் அதுக்கு துணை போவியா...?"

"அதுக்கில்லைம்மா.."

"எதுக்கில்லை..? எனக்கு இந்த வீட்டில மதிப்பு இல்லை... சும்மாவா சொன்னாங்க.. விதை ஒன்னு போட்டா சுரை ஒன்னா முளைக்கும்ன்னு..."

இப்போது எதற்காக அம்மா விதையையும் சுரைக்காயையும் உவமானம் சொல்கிறாள் என்று விளங்காதவனாக.. பசித்த வயிறோடு தலைமுடியைப் பிய்த்துக்கொண்டான் தசரதன்...

"நான் என்ன சொல்ல வர்றேன்னு கேட்டுட்டுப் பேசும்மா..." அவன் மன்றாடினான்...

"என்னத்தைச் சொல்லப் போற..? சுரைக்காய்க்கு உப்பில்லைன்னா சொல்லப் போற..?" பாரிஜாதம் சுரைக்காயை விடுவேனா என்று பிடித்து வைத்துக் கொண்டு மல்லுக் கட்டினாள்...

"ஏம்மா.. என்னைப் பேசவிட மாட்டியா...?"

"பேசுப்பா.. பேசு.. நீயும்.. உன் அப்பாவும் பேசறதைக் கேக்கிறதுக்கு மட்டும்தானே நான் பிறப்பெடுத்திருக்கேன்..?"



"கடவுளே..."

"அவரை ஏண்டா கூப்பிடறே..? ஒரு நாளாவது நான் பேசறதை நீயும்.. உன் அப்பாவும் காதுகுடுத்து கேட்டிருக்கீங்களா..?"

அதைத்தானே இத்தனை நாளும் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லத்தான் நினைத்தான் தசரதன்.. சொல்ல நினைத்த வார்த்தைகளை சொல்லி விட அவனால் முடியுமா.. என்ன..? அதனால் வாயை மூடிக் கொண்டான் ஆனால் பாரிஜாதம் வாயை மூடவில்லை...

"அப்படியே.. அப்பாவுக்கு பிள்ளை தப்பாம பிறந்திருக்கேடா.. அவரு சொல்லுறதைச் சொல்லுற கிளிப் பிள்ளையாடா நீ...?"

"யாரு சொன்னது..?"

"ஏன்..? நான்தான் சொல்லுறேன்.. இதைச் சொல்றதுக்கு.. வெத்தலைப் பொட்டியை கக்கத்தில இடுக்கிக்கிட்டு ஜோசியனா வந்து இறங்குவான்..?"

"அம்மா.. தெரியாத்தனமா வாய் விட்டுட்டேன்.. நீ ஆளை விட்டிரும்மா..."

"யாரு தெரியாம வாயை விட்டது..? நீயா..? அப்படியே அப்பாவோட கல்லுளி மங்கத்தனத்தை உரிச்சு

வைச்சு பிறந்திருக்கிற பிறவி தானடா நீ..? உனக்கா பேசச் சொல்லித்தரனும்..."

"என்னமோ பேசிப்புட்டேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

"டேய் மகனே.. பெத்தவகிட்டயே எகிறிப் பேசறயா..? பேசுடா.. பேசு.. போன மாசத்தில ஊரில இருந்து உறவு கொண்டாடிக்கிட்டு வந்து இறங்கினாளே உன் அத்தைகாரி.. அவ வந்திருந்தப்ப இந்தப் பேச்சு எங்கேடா போயிருந்துச்சு..?"

'ஐயா.. தசரதா.. என் அண்ணன் மகனே..!' என்று வாய் நிறைய பாசத்தோடு அழைத்தபடி வந்த அவனுடைய அத்தையும் கயிலைநாதனின் உடன் பிறந்த அக்காவுமான கமலம் அவன் மனதில் தோன்றினாள்...

'அந்த அத்தையும்.. இந்த ஆணவக்காரியும் ஒன்னா..?'

இதை பாரிஜாதத்திடம் யார் கேட்பது..?

அந்த வீட்டிலிருந்த மற்றவர்கள்தான் பாரிஜாதத்திடம் கேள்வி கேட்கத் தயங்குவார்கள்.. அவள் மற்றவர்களை கேள்வி கேட்டு வறுத்தெடுக்க தயங்கவே மாட்டாள்...



"அத்தேன்னு அவ மடியில தலையை வைச்சுக்கிட்டியே.. அப்ப இந்தப் பேச்சைக் காணோமே.. அதை விடு.. அதுக்கு முத மாசம்.. உன் பெரியப்பான்னு ஒருத்தர் வந்து இறங்கினாரே..."

"அம்மா.. அவரு நம்ம பெரியப்பாதானே..? அப்பாவோட கூடப்பிறந்த அண்ணன்ம்மா..."

"அந்த நொண்ணனை எங்களுக்கும் தெரியும்.. நீ சொல்லித்தான் தெரிஞ்சுக்கனும்கிற அவசியமில்ல..."

"அது சரி..."

"அவரு பட்டணத்தில பிழைக்கப் போனவர்ன்னு உங்க அப்பா சொன்னப்ப பூம்பூம் மாடுபோல தலையைத் ஆட்டினயே..."

"ஏம்மா.. அப்பா சொன்னா தலையை ஆட்ட வேணாமா..? அதோட.. பெரியப்பா ஒன்னும் பஞ்சம் பிழைக்க பட்டினம் போனதா அப்பா சொல்லலையே.. பெரியம்மா பட்டினத்திலே வேலை பாக்கிறாங்க.. அதனால பெரியப்பா அங்கேயே மளிகைக்கடை ஆரம்பிச்சுட்டுப் போயிட்டதா இல்ல சொன்னாரு..? அந்தக் கடைகூட இப்ப பெரிசாகி அந்த ஏரியாவிலேயே பிரபலமான டிபார்ட் மென்டல் ஸ்டோராகிருச்சுன்னும் சொன்னாரே.. அது உனக்கு நினைப்பில் இல்லையா..?"

"இருக்கும்டா.. இருக்கும்.. அவ பெரிய டீச்சரு.. அது உன் மனசில இருக்கும்.. உன் அம்மா வெறும் ஐஞ்சாம் கிளாஸ்தானே.. என் பேச்சு உன் மனசில ஏறுமா..?"

"யம்மோவ்.. எதுக்கும்.. எதுக்கும் இணை கூட்டறே..?"

"அவளுக்கு நான் இணையில்லங்கறியா..?"

பேச்சு எந்தத்திசையில் போனாலும் அந்தத் திசையில் வந்து வழி மறிக்கும் பாரிஜாதத்தின் பேச்சுத் திறமைக்கு முன்னால் சொற்போர் நடத்த முடியாமல் களைத்துப் போனான் தசரதன்..

"இப்ப நான் என்னதான்ம்மா செய்யனும்..?"

"கீழே இறங்கிவாடா.. உன் அத்தை மடியில உக்காந்துக்கிட்டு சாப்பிடுவ.. உன் பெரியப்பாவைக் கொஞ்சிக்கிட்டே சாப்பிடுவ.. என் அண்ணன் கூட உக்காந்து சாப்பிடச் சொன்னா மட்டும் அப்புறமா வரேன்னு சொல்லுவியோ..?"


"தெரியாத்தனமா சொல்லிட்டேன்ம்மா.. நீ முன்னாலே போ.. நான் பின்னாலே வாரேன்..."

"அந்தக் கதையெல்லாம் எவளாச்சும் கட்டப்புள்ள.. குட்ட புள்ள.. கருகமணி போட்ட புள்ள கிட்ட வைச்சுக்க.. எங்கிட்ட வேணாம்.. ஒழுங்கா கூட வந்து சேரு..."

தசரதனை கைபிடியாய் பிடித்துக் கொண்டுதான் படியிறங்கினாள் பாரிஜாதம்...



# 6



தசரதனுக்கு பிரியாணி கசந்தது.. பாரிஜாதத்தின் கைப்பக்குவத்தில் அவன் இலையில் பரப்பப்பட்டிருந்த கோழி வறுவலும்.. மீன் பொரியலும்.. அவனது கணிப்புப் படியே தொண்டையை விட்டு இறங்க மறுத்தது...

அது அவன் பிறந்து வளர்ந்த வீடு.. அந்த வீட்டில் அவனுடைய அம்மா விருந்து சமைத்து பரிமாறிக் கொண்டிருக்கிறாள்.. அந்த விருந்தில் அவர்களுடன் அமர்ந்து சாப்பிட்ட நாராயணமூர்த்தியும்.. அவர் பெற்ற ஆணவக்காரியான வெந்நிலாவும்.. என்னவோ சமபந்தி போஜனத்தில் கலந்து கொண்டதைப் போல முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டதை அவனால் பார்க்க முடியவில்லை...

"அண்ணா... இவன்தான் என் மகன்.. தசரதன்.."

பாரிஜாதம் பெருமையாக அறிமுகம் செய்து வைத்தபோது அந்த நாராயணமூர்த்தி மருந்துக்குக் கூடச் சிரிக்கவில்லை..

சிரிப்பில்லாத கடினமான முகத்துடன் மிக லேசாக அவர் தலையசைத்த போது.. இந்த அறிமுகம் தேவைதானா என்று தசரதனுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

நாராயணமூர்த்தி தசரதனைப் பொருட்படுத்தாததை பாரிஜாதம் பொருட்படுத்துவதாகவே இல்லை.. அவள் மகனின் அருமை.. பெருமைகளை கொட்டிக் கவிழ்த்துக் கொண்டிருந்தாள்...

"எம்.ஏ படிச்சிருக்கான் அண்ணா.. ஆபிசர் வேலைக்கெல்லாம் பரிட்சை எழுதிக்கிட்டு இருக்கான்.. போன மாசம்கூட ஏதோ இன்டர்வாய்தாவுக்கு போயிட்டு வந்தான்..."

பாரிஜாதம் பிளந்து கட்ட.. 'கடவுளே..' என்று மானசீகமாக நெற்றியில் கை வைத்தான் தசரதன்...

'சும்மாவே இந்த நிலாக்காரியை பிடிக்க முடியாது.. இந்த லட்சணத்திலே இந்த அம்மா வேற.. இன்டர்வியூக்கு போயிட்டு வந்ததை.. இன்டர் வாய்தான்னு சொல்லி வைக்குதே...'

லேசாக அவன் பார்வையை உயர்த்தி பார்த்தபோது சாப்பாட்டு மேஜையில் அவனுக்கு எதிரே உட்கார்ந்திருந்த வெந்நிலாவின் உதடுகளில் இகழ்ச்சிப் புன்னகை உதித்திருப்பதை பார்க்க முடிந்தது...



இப்போது நேரடியாகவே அவளை முறைத்தான் தசரதன்...

"அம்மா.. அது இன்டர்வாய்தா இல்லை.. இன்டர்வியு.." என்று தாயைத் திருத்தவும் செய்தான்...

"அப்படியாப்பா..? பாத்தீங்களா அண்ணா.. நான் தான் படிப்பை அரைகுறையாய் விட்டுட்டேன்.. என் புள்ளைக அப்படியில்ல.. மகன் எம்.ஏ படிச்சவனில்ல.. அதனால இங்கிலீஷில பிளந்து கட்டுவான்.."

பாரிஜாதம் மகன் திருத்திய சொற்பிழையிலும்.. கோட்டையை கட்ட முனைந்தாள் அந்த வெந்நிலாவோ கேலிப் புன்னகையுடன்...

"தெரியும்.. தெரியும்.. ஐ டோன்ட் கேர்ன்னு உங்க சன் பீட்டர் விட்டாரில்ல.. அப்பவே தெரியும்.. ஆஹா எவ்வளவு பெரிய ஸ்பீச்..." என்று கிண்டலாகச் சொன்னாள்...

பாரிஜாதத்திற்கு அந்தக் கிண்டல் புரியவில்லையா.. இல்லை அதை அவள் பொருட்படுத்த விரும்பவில்லையா என்று தசரதனால் இனம் காண முடியவில்லை...

அவனும்.. கயிலைநாதனும் ஒற்றைச் சொல்லை கேலியாகச் சொல்லி விட்டால் அதற்கு.. ஒரு கோடி கேலிச்சொற்களைச் சொல்லி போர் முரசு கொட்டும் பாரிஜாதம்..

"அப்படியாம்மா..?" என்று கண்களை விரித்து அப்பாவியாகக் கேட்டாள்...

"ஆமாம் ஆண்ட்டி.. நான் அசந்தே போயிட்டேனில்ல.." அவள் வாய் பொத்தி சிரித்தாள்...

சாப்பிட்டு முடியும் வரை தசரதன் அவளை கீழ் பார்வையிலே முறைத்துக் கொண்டேயிருந்தான்... கை கழுவ அவள் எழுந்து போன போது இயல்பாக பின்னாலே போவதைப் போலப் போனவன்...

"இது கிராமம்.. இங்கே பீட்டர் விட்டா.. அவனைத்தான் பேக்கைப் பார்க்கிறதைப் போலப் பார்ப்பாங்க... ஆமா.. தெரியாமத்தான் கேட்கிறேன்.. உன் மனசில என்ன நினைச்சுக்கிட்டு இருக்கே..?" என்று கேட்டான்.

"வாட்..?"

"வாட்டாவது.. ஓட்டாவது.. உன் மனசில நீ பெரிய இவன்னு நினைப்பா..? உன் வீடு இடிஞ்சு கிடக்கு.. அதை சரிபண்ற வரைக்கும் என் வீட்டில் நீ ஒண்டிக்கிட்டு இருக்கே.. அந்த நினைப்பு உன் மனசில் இருக்கட்டும்.."

"என்னது..?"

"ஆ.. இப்ப தமிழ் வருதுல்ல..? இந்த தமிழ் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே எங்கே போயிருந்துச்சு..? குற்றால அருவியில வெயிலுக்கு ஒரு குளியலைப் போட்டுட்டு வரலாம்ன்னு போயிருந்துச்சா..?"

"நான் யார் தெரியுமா..? என் ரேன்ஜ் என்னன்னு தெரியுமா..? என் தகுதிக்கு உங்க வீட்டில் நான் காலடி வைத்ததே பெரிய விசயம்.. வீடாமில்ல.. இதை விட பெரிய வீடா எங்க பங்களாவில தோட்டத்தைப் பார்த்துக்கிற காத்தவராயனுக்கு கட்டிக் கொடுத்திருக்கிறோம்.. ஏதோ சொந்தக்காரங்கன்னு டாடி சொன்னாரேன்னு உங்க வீட்டில வந்து தங்க ஒப்புக்கிட்டா.. பெரிசா மைசூர் பேலஸ் போல அலட்டிக்கிறிங்க..? அது சரி.. உங்க தகுதிக்கு இது பெரிய வீடுதான்.. எனக்கு அப்படியில்லை.. ஸோ.. மைன்ட் யுவர் வெர்ட்ஸ்..."

கோபத்தில் முகம் ஜிவுஜிவுக்க வெந்நிலா படபடவென்று பொரிந்து தள்ளி விட்டாள்.. ஏற்கனெவே கடுப்பில் இருந்த தசரதனுக்கு சுள்ளென்று கோபம் தலைக்கு ஏறிவிட்டது.. அவள் யார்.. அவன் யார் என்ற நினைவே மறந்துவிட.. அவன் மரியாதையை கைவிட்டவனாக அடிக்குரலில் அவளிடம் சீறினான்...

"என்னடி சொன்ன..?"

அவன் 'டீ' என்று அழைத்ததில் வெந்நிலா அதிர்ந்து விட்டாள்.. அதுவரை அவளிடம் யாரும் மரியாதை

குறைவாக ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை.. 'வாங்க மேடம்..' 'போங்க மேடம்..' என்ற வார்த்தைகளுக்கும்.. வணக்கங்களுக்கும் பழக்கப்பட்டவள் அவள்.. தசரதனின் வாயிலிருந்து அப்படிப்பட்ட வார்த்தைகள் வருமென்று கொஞ்சம்கூட அவள் எதிர்பார்த்திருக்கவில்லை...

"என்னது..?.. 'டீ'.. யா..?"

"ஆமாண்டி.. அப்படித்தாண்டி என்னடி செய்வ..?"

"என் டாடியைக் கூப்பிடறேன்..."

"கூப்பிடு.. அவரிடமே பஞ்சாயத்து வைக்கலாம்.. என் வீட்டைப் பார்த்தா உன் வீட்டுத் தோட்டக்காரனின் வீடுதான் உனக்கு நினைபபில வருதா..? இந்த வீட்டுக்கு வான்னு உன்னை நாங்களா வெத்தலை பாக்கு வைச்சு அழைச்சோம்...?"

"ஸ்டுப்பிட்.. மரியாதை தெரியாத ஸ்கௌன்ட்ரல்.. கண்ட்ரி புரூட்..."

"இதுக்குத்தான் நீ இங்கிலீஷ் படிச்சியா..? பெரிசா ஸ்பீச்சைப் பத்திப் பேசின... இதுதான் உன் ஸ்பீச்சா...? நான் ஸ்பீச் கொடுக்கவா..? எதைப் பத்திக் கொடுக்கட்டும்..? பொலிடிகல்..? சயின்ஸ்..? கல்ச்சர்..? பிஸினெஸ்..? டெல் மீ.. எதைப்பத்தி நான் ஸ்பீச் கொடுக்கனும்..? எதை



வேணும்னாலும் நீ சூஸ் பண்ணு.. அருமையாய் என் ஸ்பீச்சைக் கொடுப்பேன்.. அதை விட்டுட்டு உன்னைப் போல அநாகரிகமாய் திட்டறதுக்கு இங்கிலீஷ் வார்த்தைகளை யூஸ் பண்ண மாட்டேன்..."

"இன்டீஸன்டைப் பத்தி நீ பேசாதே.. ஒரு பெண்ணிடம் எப்படிப் பேசறதுன்னு கூடத் தெரியாத பட்டிக்காட்டான் நீ..."

"பெண்ணா..? இங்கேயா..? எங்கேயிருக்கா..?"

தசரதன் கைகளை மேலே குவித்து தேடுவதைப் போல பாவனை செய்ய.. வெந்நிலாவின் கோபம் அதிகமானது.. அவள் கால்களை தரையில் உதைத்து...

"யு.. யு.. யு.." என்று மூச்சிரைத்தாள்...

"ஐ ஆம் தசரதன்.. உனக்குத் தெரியாதா..? பெண்ணோ.. ஆணோ.. அடுத்தவங்களுக்கு மரியாதை கொடுத்தாத்தான் மரியாதை கிடைக்கும்.. அதை விட்டுட்டு என் ரேன்ஜுக்கு.. நீ கிட்டக்கூட வர முடியாதுன்னு அலட்டினா இப்படித்தான்..."

"உன் கூட நின்னு ஈக்குவலா பேசறதே தப்பு..."

வெந்நிலா கடைசி அம்புகளை எய்து விட்டு.. அவன் பேச வாயைத் திறப்பதற்குள் அங்கிருந்து விரைந்து

விட்டாள்.. கையை கழுவி விட்டு வாசல் பக்கமாக வந்த தசரதனுக்கு தலையை வலித்தது...

'ம்ப்ச்.. வீட்டுக்கு வந்தா எப்பவுமே மனசுக்கு நிம்மதி கிடைக்கும்.. இன்னைக்கு அது கிடைக்கக்கூடாதுன்னு என் தலையில எழுதி வைச்சிருக்கு போல...'

வெறுப்புடன் புல்லட்டின் மீது ஏறி.. இருந்த கடுப்பையெல்லாம் காட்டி ஓங்கி ஒரு உதையை விட்டான்.. அது அலறிக் கொண்டு.. ஒரே உதை போதுமென்று ஓடத் தயாராகி விட்டது...

"டவுனுப் பக்கம் போறயா தசரதா..." கயிலைநாதன் கேட்டார்..

"ஆமாம்ப்பா.. உரமூட்டை தேவைப்படும் போல இருக்கு விலையை விசாரிச்சுட்டு வர்றேன்..."

"இரு.. நானும் வர்றேன்..."

கயிலைநாதன் தசரதனின் பின்னால் ஏறிக் கொண்டார்... புல்லட் டவுனை நோக்கிச் சென்ற சாலையில் புயல்வேகத்தில் பறந்தது.. பயந்து போனவராக கயிலைநாதன் பல்லி போல மகனின் முதுகில் ஒட்டிக் கொண்டார்...

"எதுக்குடா இம்புட்டு வேகம்..? யார் மேல உனக்கு கோவம்...?"



"வேகமா ஓட்டினா கோவம்ன்னு அர்த்தமா..?"

"பின்னே இல்லையா..? எனக்கு உன்னைத் தெரியாதாடா மகனே..? சொல்லு... உன் கோவம் யார் மேல..?"

"நிச்சயமா உங்கமேல இல்லை..."

"அப்பாடி.. நிம்மதியாச்சு.. தைரியமா உன் பின்னாலே உட்காரலாம்.. என்மேல கோவமில்லைன்னா.. வேற யார் மேல கோவம்..? உந்தங்கச்சி மேல நீ கோபப்பட மாட்ட.. அந்த விசயத்தில நீ பாசமலர் வளர்க்கிறவன்.. அடுத்தது யாரு..? உன் அம்மாவா..?"

"அவங்க யாருப்பா...?"

"எவங்கடா...?"

"அதான்.. நம்ம வீட்டில வந்து டேரா அடிச்சிருக்கிறவங்க...?"

"ஓ.. அதான் உனக்கு கோவமா..? தசரதா.. நமக்கு பிடிக்குதோ.. பிடிக்கலையோ.. அவங்க விருந்தாளியா நம்ம வீட்டில வந்து இறங்கிட்டாங்க.. வந்த பின்னாலே நாம முகத்தை தூக்கிக்கிறக் கூடாது.. அது பண்பாடில்ல.. அதனால..."

"அதனால..."

"சகித்துபோக பழகிக்கடா மகனே..."

தசரதனால் சகித்துப் போக முடியவில்லை...

## 7



வெந்நிலாவுக்கு தூக்கம் பிடிக்கவில்லை.. தசரதன் பேசிய பேச்சுக்களில் அவள் கொதித்துப் போயிருந்தாள்.. விவரத்தை பெற்ற தந்தையிடம் கூடச் சொல்ல முடியாமல் தன்மானப் பிரச்னை வந்து தடுத்தது.. கடப்பாறையை விழுங்குவதைப் போல.. அவன் பேசிய பேச்சுக்களை ஜீரணம்பண்ண முயன்று தோற்றுக் கொண்டிருந்தாள்.. போதாக்குறைக்கு அவள் தங்கியிருந்த அந்த மாடியறையை..

"என் அண்ணனின் ரூம்..." என்று சாரதா சொல்லியிருந்தாள்...

"உன் அண்ணனின் ரூமா..? நான் இதில தங்க மாட்டேன்..." வெந்நிலா முகம் சுளித்தாள்..



"வேற எங்கே தங்குவீங்க.. மாடியில இருக்கிறது ரெண்டு ரூம்.. ஒன்னு சின்னது.. ஒன்னு பெரிசு.. சின்னரூமில நான் படிப்பேன்.. பெரிய ரூமில அண்ணன் தங்கிக்கும்.. இப்ப.. சின்ன ரூமை உங்க அப்பாவுக்கு கொடுத்தாச்சு.. பெரிய ரூம் உங்களுக்கு.." சாரதா விவரம் சொன்னாள்..

"உன் அண்ணன் வந்து தொலைச்சா..?" வெறுப்புடன் கேட்டாள் வெந்நிலா...

"கீழே தங்கிக்கச் சொல்லுவோம்..." இலகுவாக வழி சொன்னாள் சாரதா...

அன்று முழுவதும் தசரதன் வீட்டுப் பக்கமே வரவில்லை.. அதை நிம்மதியாக உணர்ந்தாள் வெந்நிலா..

'அவனும்.. அவன் பேச்சும்.. எப்படித்தான் ஒன்வீக்கை கழிக்கப் போகிறேனோ.. காட்..!'

பேசாமல் சென்னைக்கு கிளம்பிப் போய் விடலாமா என்று தான் அவளுக்கு இருந்தது.. ஆனால் நாராயண மூர்த்தி அதை ஒப்புக்கொள்ள மாட்டார்...

அல்லியூருக்கு கிளம்பி வர மறுத்து.. சென்னையிலேயே தங்கி விடுகிறேன் என்று சொன்னவளிடம் பலத்த ஆட்சேபத்தை தெரிவித்தவர் அவர்..

"லுக் நிலா..! எனக்கும் அந்த வில்லேஜில்.. வசதி குறைவான வீட்டில் போய் தங்கியிருப்பதில் விருப்பமில்லை.. பட்.. நோ அதர் வே.. ஷியாம் சுந்தருடன் உனக்கு மேரேஜ் பிக்ஸ் ஆகியிருக்கு.. இந்த மன்த் என்டிலே ஷியாம் பாரினிலிருந்து இன்டியாக்கு ரிடர்ன் ஆகிறான்.. அவன் வந்தவுடன் மேரேஜ்.."

"அதுக்கும்.. இதுக்கும் என்ன சம்பந்தம் டாடி...?"

"லின்க் இருக்கும்மா.. உன் மேரேஜ் முடிந்ததும் நாம குலதெய்வம் கோவிலுக்கு வந்து கும்பிட்டுட்டு போக வேண்டியிருக்கும்.. அப்ப நம்ம பூர்விக வீடு இடிந்து கிடந்தா ஷியாமின் பேமிலியில என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க...?"

"ஓகே.. டாட்.. அதுக்கு நான் எதுக்கு..? நீங்க மட்டும் போய் விட்டு வரலாமே.. நான் சென்னையில இருந்து நம்ம கம்பெனியை கவனிச்சுக்கறேன்..."

"நோ.. நோ.. ஷியாமின் பேமிலி.. கட்டுக் கோப்பானது.. அவங்க சிட்டியில இருந்தாலும்.. சில கொள்கைகளை ஃபாலோ பண்றவங்க.. வயதுப் பெண்ணைத் தனியாய் விட்டுவிட்டு நான் மட்டும் கிராமத்துக்கு போயிட்டேன்னு குற்றம் சொல்லிருவாங்க..."



"ஓ.. டாட்.. அப்ப ஒன்னு செய்யலாம்.. பக்கத்து டவுனில் நல்லதா ஹோட்டல் இருந்தா ரூம் புக் பண்ணிக்கலாம்.. ஒன்வீக்தானே.. நோ பிராப்ளம்..."

"அதுதான் பிராப்ளம்..."

"வாட்..?"

"யெஸ்.. வயதுப் பெண்ணை ஹோட்டலில் தங்க வைக்கலாமான்னு ஷியாமின் பாட்டி கேட்டு வைப்பாங்க.."

"ஓ.. நோ.. இது என்ன டாடி.. நான் உட்காருகிறதுக்கும்.. நடக்கிறதுக்கும் அவங்களுக்கு பதில் சொல்லனுமா..?"

"பதில் சொல்லித்தான் ஆகனும் பேபி.. அது நீ வாழப்போகிற வீடு..."

"என்னவோ போங்க.. எனக்கு இது பிடிக்கலை.. இப்படிப் பட்ட பேமிலியில நான் அட்ஜஸ்ட் பண்ணிப் போகனுமா...?"

"யார் சொன்னது..? மேரேஜ் முடிந்ததும்.. நீ ஷியாமுடன் கனடாவுக்கு பறந்துரப் போற.. அங்கே வந்தா அவனோட பாட்டி கேள்வி கேட்க முடியும்..?"

"அது ஒன்றுதான் என்னை இந்த மேரேஜீக்கு ஓகே சொல்ல வைத்திருக்கு.. மற்றபடி அவங்க பேமிலி என்னைக் கண்ட்ரோல் பண்ண நான் அனுமதிக்க முடியாது.."

வெந்நிலா ஒன்றும் மனம் போன போக்கில் வாழ நினைக்கும் பெண்ணில்லை.. அதே சமயம் அவளுடைய சுதந்திரத்தை மற்றவர் கொடுத்து அதைப் பெற்று வாழ நேர்வதை அவள் விரும்பவில்லை.. எது சரி.. எது தவறு என்பதை அவள்தான் தீர்மானிக்க வேண்டும்.. அதற்கான அறிவும்.. வளர்ப்பும்.. அவளுக்கு இருக்கிறது.. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் மற்றவர்கள் தீர்மானிப்பார்கள் என்றால் அது கொத்தடிமைத்தனம் அல்லவா...?

"ரிலாக்ஸ் நிலா.. மேரேஜ் முடிகிற வரைக்கும் அவங்க சொல்கிறதை மறுக்காம இருப்போமே..."

"ம்ம்.. அப்படின்னா சரிதான்.. பட்.. உங்க வில்லேஜிலேயே நாம தங்கிக்க முடியாதா..? பக்கத்து வில்லேஜில வேற ஒருத்தங்க வீட்டில தங்கனுமா..?"

"எங்க ஊரில.. என் வீட்டை அரண்மனை வீடுன்னு எல்லோரும் சொல்லுவாங்க.. அப்படிப்பட்ட வீட்டை வைத்திருக்கிறவன்.. அந்த வீட்டில் தங்க முடியாம அடுத்தவர்களின் வீட்டில் தங்குவதுன்னா எப்படிம்மா..? அதோட.. அல்லியூரில இருக்கிற பாரிஜாதம் எனக்கு தூரத்து உறவு முறையில தங்கை..."

"தூரத்து சொந்தம்தானே டாடி..?"



"அதுதான் கரெக்டா இருக்கும்.. நெருங்கின சொந்தத்தில இருக்கிறவங்க எல்லாருமே நம்மளப் போல வசதி வாய்ப்பா இருக்கிறவங்கதான்.. இங்கே அப்படியில்லை.. ஊருக்குள்ளே பெயர் சொல்கிற அளவுக்கு பிழைத்தாலும் நம்ம கிட்டக்கூட வரமுடியாது.. இங்கே தங்கினா விழுந்து.. விழுந்து கவனித்துக்குவாங்க..."

"பின்னே..? நம்மைப் போல இருக்கிறவங்க அவங்க வீட்டில் ஒரு கப் காப்பியைக் குடிக்கிறதே பெரிது.. இதில ஒன்வீக் தங்கினா அவங்களுக்கு கால் தரையில் பதியாது தான்... பட் டாடி.. கிளம்பறப்ப நாம தங்கியிருந்ததுக்கான பணத்தை நீங்க கொடுத்துரனும்..."

"நான் அதை யோசித்து வைத்துட்டேன்ம்மா.. இவங்களிடம் பணமா கொடுத்தா வாங்கிக்க மாட்டாங்க.. சுயமரியாதை.. அது.. இதுன்னு பேசுவாங்க..."

"அதை எதுக்கு தேவையில்லாம இவங்க பேசறாங்க..?"

வெந்நிலாவைப் பொருத்தவரை சுயமரியாதை என்பது பணக்காரர்களின் சொத்து.. பணவசதி அதிக மில்லாதவர்களுக்கு அது தேவையில்லாத சுமை என்பாள்..

"அவங்க அப்படித்தான்.. ஊருக்குள்ளே கௌரமான குடும்பம்.. விருந்தாளிகளை வைத்து தாங்க எங்களால

முடியாதான்னு சண்டைக்கு வந்துருவாங்க.. ஸோ.. ஏதாவது நகையை வாங்கிக் கொடுத்துட்டா அது அண்ணன் கொடுத்த சீதனமா நினைத்து பாரிஜாதம் வாங்கிக்கிரும்.."

"எதையாவது செய்துருங்க.. ப்ரீயா தங்க என்னால முடியாது.. ஐ டோன்ட் லைக் இட்..."

"ஓகே பேபி.. அதை நான் பார்த்துக்கிறேன்.."

அதனால்தான் வெந்நிலா அலட்சியப் பார்வையுடன் அந்த வீட்டுக்குள் வளைய வந்தாள்.. அவளைப் பொறுத்தவரை அது ஒரு கிராமிய பாணி வீட்டைப் போல இருக்கும் ஹோட்டல்.. உறவினர் வீடல்ல...

அன்று இரவு சாப்பிடப் போனபோதும் தசரதன் வீடு திரும்பியிருக்கவில்லை.. கயிலைநாதன் மட்டும் வந்திருந்தார்...

"டவுனுக்குப் போயிருந்தோமா.. அங்கே தசரதன் கூடப் படிச்ச கணேசனைப் பார்த்தோம்..." என்றார்..

"கணேசனுக்கென்ன..?"

"அவனுக்கு ஒன்னுமில்லைடி.. அவன் ஊரில்தான் திருவிழாவாம்..."



"அதுக்கும்.. நமக்கும் என்ன சம்பந்தம்..?"

"உனக்கும்.. எனக்கும் சம்பந்தமில்லைதான்.. ஆனா கணேசனுக்கும் நம்ம தசரதனுக்கும் சம்பந்தம் இருக்கே.. கூடப்படிச்ச சேக்காளிக..."

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க...?"

"தசரதன் கணேசனோட ஊருக்கு திருவிழா கொண்டாட போயிட்டான்..."

"இது வேறயா..? இங்கே வீட்டில விருந்தாளிக வந்து இறங்கியிருக்காங்க.. இவன் சேக்காளி வீட்டுக்கு விருந்தாளியாப் போயிருக்கான்.. எங்கிட்டுப் போயி இதைச் சொல்ல...?"

"எங்கிட்டச் சொல்லு..."

"உங்ககிட்டச் சொல்லிட்டாழும்..! விளங்கிரும்..!"

எரிச்சலுடன் சமையலறைக்குள் போனாள் பாரிஜாதம்...

அவளுக்கு வேறு கவலை...

வந்திருக்கும் உறவினர்கள் உயர் மட்டத்தைச் சேர்ந்தவர்கள்.. அவர்களுக்கு.. வழக்கமாக செய்யும் சாதாரண சமையல் வகைகளை செய்து போட முடியாது..

தினமும் வேளாவேளைக்கு விதம்விதமாக சைவ.. அசைவ பதார்த்தங்களைச் செய்து பறிமாற வேண்டிய கட்டாயத்தில் இருப்பவளுக்கு.. அந்தப் பதார்த்தங்களை பெற்ற பிள்ளைக்கு பரிமாறினால்தானே வயிறு நிறையும்..?

அவள் தசரதனைப் பெற்ற தாய்.. கயிலைநாதனுக்கு அந்தக் கவலையெல்லாம் இல்லை.. அவர் தான் தகப்பனாயிற்றே.. அதனால் இலையில் பரிமாறப்பட்ட அசைவ சமையலை வீடுகட்டி அடித்தார்.. தசரதனுக்கும் சேர்த்து சமைத்தது வீணாகி விட்டதே என்று பாரிஜாதம் வருத்தப் படவேண்டிய நிலைமையில் வைக்காமல்.. அவர் மிச்சம் மீதி வைத்தால்தான் சாரதாவிற்கு ஏதாவது கிடைக்கும் என்ற சூழலை உருவாக்கி வைத்தார்...

வெந்நிலாவிற்கு நிம்மதியாக இருந்தது...

'அப்பாடி.. அந்த திமிர்பிடிச்சவனின் முகத்தில் இன்றைக்கு விழிக்க வேண்டிய அவசியமில்லை...'

அன்று மட்டுமில்லாமல் எத்தனை தினங்களுக்கு அந்த அவசியம் இல்லாமல் இருக்கப் போகிறது என்று அறியும் ஆவல் அவளுக்குள் உதித்தது...



“ஏன் சாரதா.. உங்க வில்லேஜில் எல்லாம் திருவிழா பங்சன் முடிய எத்தனை நாளாகும்..?” என்று கேட்கும் போதே...

'இவ ஒன்வீக்காகும்ன்னு சொன்னால் தேவலையே..' என்று அவள் மனம்கிடந்து அடித்துக் கொண்டது..

அவன் முகத்தில் விழிக்காமல் அந்த ஒரு வாரத்தையும் நிம்மதியாகக் கடந்து.. சென்னையைப் பார்த்து ஓடிப் போய் விடலாமே...

## 8



சாரதாவின் காதுக்கு வெந்நிலாவின் மனதின் குரல் எட்டவேயில்லை...

“மூன்று நாளிலே முடிஞ்சுரும்..” என்று இரக்கமில்லாமல் பதில் சொன்னாள்...

அப்பாடி.. மூன்று நாள்கள் அவன் முகத்தில் விழிக்க வேண்டாம் என்று நிம்மதி வருவதற்குப் பதிலாக.. ஐயோ.. மூன்று நாள்கள் கழித்து அவன் முகத்தில் விழிக்க வேண்டுமே என்ற எண்ணம்தான் அவள் மனதில் வந்தது..

'ச்சே..! இந்த அளவுக்கா நான் அவனிடம் பயப்படுகிறேன்..' வெந்நிலா வெறுத்துப் போனாள்...

அவளைக் கண்டாலே அவள் வீட்டில் வேலை செய்கிறவர்களும்.. கம்பெனியில் வேலை செய்கிறவர்களும் பயந்து நடுங்குவார்கள்...

அந்த வெந்நிலா.. ஒரு சாதாரண கிராமத்து இளைஞனைக் கண்டு பயந்து நடுங்குகிறாளா..?

'நெவர்...'

தலையை சிலுப்பி.. மன பயத்தை ஓட்ட முயன்றாள் வெந்நிலா.. எத்தனை முறை அவள் தலையை சிலுப்பினாலும் தலைமுடிதான் கலைந்து அவள் முகத்தில் படிந்ததேயொழிய அவன் நினைவு மனதை விட்டு ஓடுவதாக இல்லை... 'களுக்'கென்ற சிரிப்பொழியைக் கேட்டு வாசல்பக்கமாக பார்த்தாள்..

அங்கே வாயைப் பொத்தி.. சிரிப்பை அடக்க முயன்றபடி சாரதா நின்று கொண்டிருந்தாள்...

'எவ்வளவு தைரியமிருந்தா.. என்னைப் பார்த்துச் சிரிப்பா...?'

வெந்நிலாவின் மனதில் கோபம் மூண்டாலும் அவள் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சாரதாவைப் பார்த்துச் சிரித்தாள்...



அந்த வீட்டில் வெந்நிலாவுடன் பேச்சுத்துணைக்கு இருப்பது சாரதாதான்.. அவளைப் பகைத்துக் கொள்ள வேண்டாம் என்பது வெந்நிலாவின் நினைவு...

நாராயணமூர்த்தி காலையில் அவருடைய கிராமத்தை நோக்கிக் கிளம்பிப் போனால்.. இரவு தான் வீடு திரும்புவார்.. பாரிஜாதம்.. சமையலறையிலேயே குடியிருப்பாள்.. ஊடும்.. பாடும் வீட்டுப் பக்கம் வந்து விட்டு வயலைத் தேடிப் போய்விடும் கயிலைநாதனிடம் அவள் என்னத்தைப் பேசுவது..? மீதியிருக்கும் சாரதாவுடனும் பேசாமல் போய்விட்டால் வெந்நிலாவிற்கு பேச்சே மறந்து போய் விடாதா..?

அதனால் மனதிற்குள் வந்த கோபத்தை 'சூ.. சூ..' வென்று விரட்டியடித்து விட்டு சாந்தசொரூபியாய் முகத்தை வைத்துக் கொண்டு சாரதாவிடம் இயல்பாக பேச முயன்றாள்...

"எதுக்கு சிரிக்கற சாரதா..?"

"நீங்க தலையை ஆட்டி.. உங்க தலைமுடி பறக்கறதைப் பார்த்தா.. அச்சு.. அசல்.. எங்க ஊர் திருவிழாவில சாமியாடறதைப் போலவே இருக்க..."

சாரதா பொங்கிச் சிரித்தபடி கையோடு கொண்டு வந்திருந்த பால் தம்பளரை வெந்நிலாவிடம் நீட்டினாள்..

'இந்தச் சின்னப் பெண்ணுக்கு வருகிற கேலியைப் பாரேன்...'

பல்லைக் கடித்தபடி ஒரே மூச்சில் பாலைக் காலி செய்துவிட்டு காலித் தம்ளரை நீட்டினாள் வெந்நிலா.. தம்ளரை வாங்கிக் கொண்ட சாரதா.. வாசலுக்குப் போன பின்பும் ஒர்முறை வெந்நிலாவை திரும்பிப் பார்த்து 'களுக்' கென்ற சிரிப்பை உதிர்த்து விட்டுத்தான் போனாள்..

தனிமையில் பேசிச் சிரித்தால்தான் தப்பு.. தலையைத் தலையை ஆட்டி யோசித்தால் கூடத் தப்பா என்று நொந்து போனாள் வெந்நிலா.. வந்திருப்பது அல்லியூர் என்பதால் யோசிப்பதைக்கூட இனி யோசித்துத்தான் செய்ய வேண்டும் என்று பலமான யோசனைக்குப் பின்னால் அவள் முடிவுக்கு வந்தாள்...

இரவில் அவள் தூங்கப் போனபோது துணைக்கு வரவா என்று சாரதா கேட்டாள்.. வெந்நிலாவிற்கு எரிச்சல் வந்தது.. அதை மறைத்துக் கொண்டு சிரித்த முகத்துடன் மறுத்தாள்..

"எனக்குத் தனியாய் படுத்தால்தான் தூக்கம் வரும் சாரதா..."

"அப்படிங்களா..? எனக்கெல்லாம் தனியாப் படுத்துத் தூங்கினா பயம்தான் வரும்.."



'நீ.. தத்தி...' மனதிற்குள் திட்டித்தீர்தாள் வெந்நிலா...

'பிரைவஸின்னா கிலோ என்ன விலைன்னு இவங்க கேட்பாங்க போல இருக்கே.. ஹப்பா.. ஒன்வீக் தங்கனும்ங்கிறப்பவே மூச்சு முட்டுதே.. எப்படித்தான் இவங்களாம் வாழ்நாள் பூராவும் இந்த ஊரிலேயே காலத்தைத் தள்ளராங்களோ..' அடுக்களையில் இருந்து வெளியேவந்த பாரிஜாதத்தை அனுதாபத்துடன் பார்த்தாள் வெந்நிலா...

கோடிஸ்வர அண்ணன் மகளின் ஓரவிழிப்பார்வை தன் மேல் பட்டதில் புளகாங்கிதப் பட்டுப் போனாள் பாரிஜாதம்..

'என்னோட அண்ணன் மகளுக்குத்தான் என்மேல எம்புட்டுப் பாசம்...' உள்ளம் நெகிழ்ந்தவள்..

"என்ன கண்ணு.. அப்படிப் பாக்கற..? மாடி ரூமில தனியாப் படுக்க பயமாயிருக்கா..? இந்த அத்தையோட படுத்துத் தூங்கறியா..?" என்று பாச மழையைப் பொழிய ஆரம்பித்தாள்...

'கெட்டது என் தூக்கம்..' பதறிப் போய் விட்டாள் வெந்நிலா..

"வேண்டாம்.. வேண்டாம்.." என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே.. வழக்கமான சிரிப்பை வாய் பொத்திச் சிரித்தாள் சாரதா...

"அம்மா.. பயமே இவங்களைக் கண்டா பயப்படுமாம்மா..."

இந்தச் சிறு பெண்ணுக்குள் இவ்வளவு நையாண்டி எங்கிருந்து வந்தது என்று மனதிற்குள் குமைந்தாள் வெந்நிலா...

'அப்படியே அண்ணனுக்கேத்த தங்கையாய் இருக்காளே...'

அப்போதும் தசரதனின் நினைவுதான் அவளுக்கு வந்து தொலைத்தது.. அவன் அங்கு இல்லை.. ஆனாலும் அவனைப் பற்றிய நினைவுகள் அங்கேயே உலவுகின்றன என்றால் அதற்கு என்ன அர்த்தம்..?

அந்த அளவுக்கு அவன் வெந்நிலாவை பாதித்திருக்கிறான் என்றுதானே அர்த்தம்..?

'என் மனோ தைரியம் எங்கே போனது..?'

யோசித்து.. யோசித்து.. அந்த யோசனையின் முடிவில் தானாக இமை சொக்கித் தூங்கியே போனாள் வெந்நிலா...



தசரதன் இல்லாத மூன்று நாள்களும் நிம்மதியாகக் கழியாமல்.. அவனைப் பற்றிய பேச்சுக்களுடன் கழிந்தன.. ஒன்று.. பாரிஜாதம் மகனைப்பற்றிப் பேசி வைப்பாள்.. இல்லாவிட்டால் சாரதா அண்ணனின் பெருமையை அள்ளித் தெளித்துக் கொண்டிருப்பாள்.. அவர்கள் இருவருக்கும் வாய் வலித்து வாயை மூடினார்கள் என்றால் கயிலைநாதன் வாய் திறந்து விடுவார்...

இப்படி தசரதன் இல்லாத போதும்.. தசரதனைப் பற்றிய பேச்சுக்கள் வெந்நிலாவைச் சூழ்ந்து நின்று வீடு கட்டி அடித்துக் கொண்டிருந்தன...

அங்கிருந்து கிளம்பப் போகும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்தாள் வெந்நிலா...

இன்றைக்கு முதல்நாள்... இரண்டாவது நாள்... மூன்றாவது நாள்.. நான்காவது நாள் என்று அவள் கழிந்து கொண்டிருந்த தினங்களை எண்ணிக் கொண்டிருந்தாள்..

வெற்றிகரமாக நான்கு தினங்கள் கழிந்தன.. ஐந்தாவது நாளின் மாலைப் பொழுதில் தசரதன் அல்லியூருக்குத் திரும்பிவந்தான்.. வந்தவுடனே தாயைத் தேடிப் போனான்.. பாரிஜாதம் அவளுடைய அதிகார பூர்வமான அடுக்களைக்குள் ஆட்சி செய்து கொண்டிருந்தாள்...

"அம்மா.." என்ற மகனின் குரலில் திரும்பியவள்..

"வாப்பா.. உனக்கு நானு உன்னோட அம்மாங்கிறது கூட நினைப்பில இருக்கா..?" என்று கோபக்குரலில் கேட்டாள்...

"என்னாச்சும்மா..?"

"இன்னும் என்ன ஆகனும்..? அப்பாவும்.. மகனும்.. நாங்க ரெண்டு பேரும் ஆம்பளைகன்னு ஆட்டம் போட்டுக்கிட்டு டவுனைச் சுத்திப் பாக்கப் போனா.. பொழுது சாய வீடு திரும்பி வரனுமா.. வேணாமா...?"

"அப்பாதான் வந்தரேம்மா..."

"நீ வந்தியா..?"

"அதான்.. என் சிநேகிதனோட ஊரில திருவிழான்னு சொல்லி விட்டேனில்லம்மா..."

"அப்ப.. நீ வீடு தங்கியிருக்கனும்னா... இந்த ஊருக்குள்ள வருசம் பூராவும் திருவிழா கொண்டாடனும்கற.. அப்படித்தானேப்பா..."

"என்னம்மா நீ.. இதுக்குப் போயி இப்படிக் கோவிச்சுக்கறே.. வீடு பூராவும் விருந்தாளிக வந்திருக்காக.. வயலுக்குப் போயிட்டு வீட்டுக்கு வந்தா.. நிம்மதியா



கை நனைச்சிட்டு.. விச்ராந்தியா தூங்கி எந்திருக்க முடியுதா..?"

தசரதன் பலமான குரலில் சொல்ல.. பாரிஜாதம் பதறிப் போனாள்..

"டேய்.. மெல்லப் பேசுடா..."

"அது எதுக்கு தேவையில்லாம..? இது என் வீடு..."

"யாரு இல்லேன்னு சொன்னது..? வீட்டில விருந்தாளிக வந்திருக்காங்கடா..."

"வந்திருந்தா..?"

"அவங்க காதில விழுந்து வைக்கப் போகுதுடா..."

"விழுந்தா.. விழுகட்டுமே.. எனக்கென்ன பயமா..?"

"நீ யாருக்குத்தான் பயப்படப் போற..? ஏண்டா.. அவனவன் அத்தை மக.. மாமன் மகளைத் தேடிப் போயி பார்த்துப்புட்டு வர்றானுக.. உனக்குத் தானாவே முறைப் பொண்ணு வீட்டில வந்து தங்கியிருக்கு.. நீயென்னடான்னா பக்கத்து ஊரில திருவிழான்னு ஓடிக்கிட்டு இருக்க... வயசுப் பயலாடா.. நீ...?"

பாரிஜாதம் என்னவோ கேலியாகத்தான் இதைச் சொன்னாள்.. அவள் மனதில் ஆகாய ஊஞ்சலில் ஆடிவிடும்

எண்ணமில்லை.. எட்டாத கொம்புத்தேனுக்கு அவள் ஆசைப்படவும் இல்லை.. வளையாத தென்னையை வளைத்து விடவும் அவள் நினைக்கவில்லை..

இப்படிச் சொல்லி.. மகனின் கோபத்தை குறைக்கத்தான் அவள் நினைத்தாள்.. அவள் இப்படி நினைக்க.. தசரதன் வேறு விதமாய் எகிறிக் குதித்தான்..

"முறைப் பொண்ணா..? யாரைச் சொல்ற...?"

அவன் இப்படிக் கேட்கவும் பாரிஜாதம் திகைத்து விட்டாள்...

'அடக்கடவுளே.. இவனுக்கு உறவுமுறை கூட மறந்து போயிருச்சு போல இருக்கே...'

அவளுக்கு என்ன தெரியும்..? தசரதன் அந்த உறவு முறையைச் சொன்னால் கடித்துக் குதறி விடுவான் என்று...

அதையறியாமல் அவள் வாய் விட்டாள்...

"ஏந்தம்பி.. வீட்டுக்கு வந்திருக்கது யாருன்னு நினைச்சே...?"

"ஊம்..? மனுசப் பிறவிங்கன்னுதான் நினைச்சேன்.. இப்ப நீ என்ன சொல்ல வர்ற..? அதுக மனுசப் பிறவிக இல்லைங்கறியா...?"



"டேய்.. டேய்.."

பாரிஜாதம் அவசரமாக சமையலறையின் வாசல் பக்கம் பார்த்தாள்.. அங்கே யாரும் இல்லை...

## 9



பகலில் பக்கம் பார்த்துப் பேசு... இரவில் அதையும் பேசாதே என்று பெரியவங்கள் எதற்காக சொல்லி வைத்தார்கள்..? பாரிஜாதத்தைப் போன்ற பிரகிருதிக்களுக்காகத்தான் சொல்லி வைத்தார்கள்...

சமையலறையின் வாசலைப் பார்த்த பாரிஜாதம் உள்ளேயிருந்து தான் அதைப் பார்வையிட்டிருக்க வேண்டுமா..? நாள் பூராவும் வீட்டுக்கும்.. வாசலுக்குமாக அலைந்து கொண்டிருப்பவள்.. நான்கடி முன்னால் வந்து வாசலில் எட்டிப் பார்த்திருக்க வேண்டாமா..?

அப்படிப் பார்த்திருந்தால் சமையலறை வாசலின் பக்கத்தில் சுவர் மறைவில் வெந்நிலா நின்று கொண்டிருப்பதைப் பார்த்திருப்பாளே...

விதி வலியது..! அவளும் அதைப் பார்க்கவில்லை.. வெந்நிலாவும் அந்த இடத்தை விட்டு நகரவில்லை...

"என்னடா இப்படிப் பேசி வைக்கற..? அவங்க காதில விழுந்தா என்னாகிறது...?"

"ஏம்மா இப்படியே பினாத்தி வைக்கிற..? இது அவங்க வீடா..? நம்ம வீடா..?"

"அடக்கி வாசி தசரதா.. நான் இப்ப என்ன சொல்லிட்டேன்னு இப்படிக் கத்தற..? வந்திருக்கிறது என் அண்ணன்..."

"உங்க கூடப்பொறந்த பொறப்பில்ல..."

"அதுக்காக அண்ணன் முறையில்லன்னு ஆகிருமா..? அவருமக தான் உனக்கு முறைப் பொண்ணு இல்லன்னு ஆகிருமா...?"

இப்படிச் சொன்ன அன்னையை ஆச்சரியமாகப் பார்த்தான் தசரதன்...

"யம்மோவ்.. சொல்றதுக்கும் ஒருமுறை இருக்கனும்.. அந்த ராங்கி ரங்கம்மாவையா என் முறைப்பொண்ணுன்னு சொல்ற...?"

"ஆமா.. பின்ன அது வேற யாரு..? உன் சித்தப்பன் பொண்ணா..?"



"வேணாம்மா.. இந்த விளையாட்டுக்கே நான் வரலை.. யாருக்கு யாரு முறைப்பொண்ணு..? அதையெல்லாம் பகையாளியா நினைச்சு முறைச்சுப் பார்க்கத்தான் தோணும்.. முறைப் பொண்ணா நினைச்சு சைட் அடிக்கத் தோணாது.. முறைப் பொண்ணாம்.. ஹ..ஹ..ஹ..."

"எதுக்குடா இந்தச் சிரிப்பு சிரிக்கிறவன்..? நாளைக்கே அந்தப் பொண்ணு கழுத்தில தாலிகட்டற நிலைமை வந்துருச்சுன்னு வைய்யி.. அப்ப மாட்டேன்னு சொல்லிருவியா...?"

இதையும் இயல்பாகத்தான் பாரிஜாதம் கேட்டாள்.. தசரதனும் மனதில் இருப்பதைத்தான் சொன்னான்... ஆனால்.. அதை மறைந்திருந்து கேட்ட வெந்நிலாவிற்கு மனதில் அடி விழுந்தது...

"சும்மா இரும்மா.. பொழுது சாயற வேளையில நீ பாட்டுக்கு வில்லங்கமா எதையாவது சொல்லி வைக்காதே..."

"ஏண்டா..?"

"நீதானே சொல்லுவ.. அந்தி சாயற வேளையில ஆகாசத்தில தேவாதி தேவர்களெல்லாம் மிதந்து வந்துக்கிட்டு இருப்பாங்கன்னு..."

"அதுக்கென்ன..?"

"நீ சொல்லி.. அதுக்கு அவங்க அப்படியே ஆகட்டும்ன்னு சாபம் விட்டுட்டா என் கதி என்னாகிறது...?"

அந்த வார்த்தைகள் கூரிய அம்புகளாக வெளியில் நின்று கேட்டுக் கொண்டிருந்த வெந்நிலாவின் மனதில் பாய்ந்தன..

'என்னை மேரேஜ் பண்ணிக்கிறது இவனுக்கு சாபமா...?'

இதைவிடக் கொடுமை வேறு ஒன்றும் இருக்க முடியாது என்று அவளுக்குத் தோன்றியது...

அவளின் கடைக்கண் பார்வைக்காக காத்து நிற்கும் கோடிஸ்வர வாலிபர்களின் கூட்டத்தைப் பற்றி இவன் அறிவானா.. என்று மனதிற்குள் அவள் பொறுமினாள்... அவளின் பொறுமலை அறிந்தவளைப் போல பாரிஜாதம் மகனிடம் எடுத்துச் சொன்னாள்...

"ஏண்டா.. என் மகன்ங்கிறதுக்காக நீ எதைச் சொன்னாலும் நான் ஆமாம்சாமி போடுவேன்னு நினைச்சிட்டியா..? அந்தப் பொண்ணு இமயமலை உச்சியிலே இருக்குடா..."



"இருந்துட்டுப் போகட்டும்.. நானா வேணாம்கிறேன்..."

"இப்பேற்பட்ட பொண்ணா கட்டிக்கனும்னு ஆனானப்பட்ட கோடிஸ்வரனுகளே தவமாய் தவம் கிடக்கிறப்ப.. நீ பாட்டுக்கு போகிற போக்கில அதை சாபம்ன்னு சொல்றியே.. உனக்கே இது நியாயமா இருக்காடா...?"

"உனக்கு மட்டும் அந்தப் பொண்ணை என்கூட இணை கூட்டிப் பேசறது நியாயமாய் இருக்கா..? கேளும்மா.. இவளைக் கட்டிக்கிறதுக்குப் பதிலா காவி வேட்டியைக் கட்டிக்கச் சொல்லு.. சந்தோசமா கட்டிக்கிட்டு சந்யாசம் போயிடறேன்..."

"அடப்பாவி.. அழகு பெத்த பொண்ணக் கட்டிக்க உனக்கு கசக்குதா...?"

"அவளே எட்டிக்காய்..! கசக்காம.. இனிப்பாளா..? போம்மா.. போயி வேலையைப் பாரு..."

"ஆனாலும் உனக்கு இம்புட்டு விகடப்பேச்சு ஆகாதுடா மகனே..."

"அம்மா.. இது விகடப் பேச்சில்ல.. நிசமான பேச்சு.. அவ எனக்கு எட்டிக்காய்தான்..."

தசரதன் எரிச்சலுடன் சமையலறையை விட்டு வெளியே வந்தான்.. வந்தவன் வெந்நிலாவைப் பார்த்து விட்டான்.. துளைக்கும் அவளின் பார்வை குற்றம் சாட்ட.. அவனுடைய புருவங்கள் சுருங்கின.. திரும்பிப் பாரிஜாதத்தைப் பார்த்தான்.. அவள் சமையலில் கவனமாக இருந்தாள்.. வெளியே வந்து மறைவாக நின்றவன்...

"இங்கே என்ன பண்ற..? ஒட்டுக் கேட்கறியா..?" என்று கேட்டான்..

"ஒட்டுக் கேட்கிறதா..? அப்படின்னா..?" தோரணையாக கேட்டாள் வெந்நிலா...

"அதானே.. நீ எதுக்காக ஒட்டுக் கேட்கப் போகிற.? அதை மறைஞ்சு நின்னு கேட்டேன்னு சொல்லுவ.. வெள்ளைக்காரன் இப்படித்தான் சொல்லுவானாம்.. ஒளிஞ்சு மறைஞ்சு பேச வேண்டிய அவசியம் எனக்கில்லைம்பானாம்.. அதே திமிருதானே உன் உடம்பிலயும் ஒடுது..."

"ஹலோ.. மரியாதையாய் பேசிப் பழகுங்க..."

"அதை நீ எனக்குச் சொல்கிறயா..? குட் ஜோக்.."

"டீஸன்ஸின்னா கிலோ என்ன விலைன்னு கேட்கிற ஆளுகிட்ட எனக்கென்ன பேச்சு வேண்டிக்கிடக்கு...?"



"அதானே.. உனக்கு நானும்.. என் அம்மாவும் பேசிக்கிற பேச்சுத்தானே வேண்டிக்கிடக்கு.."

"நான் காபி குடிக்க வந்தேன்..."

"ஆமாமாம்.. இது ஹோட்டல் பாரு.. நீ நினைச்ச நேரமெல்லாம் காபி வாங்கி குடிக்கிறதுக்கு..."

எந்தப் பக்கம் போனாலும் அந்தப் பக்கமாக வந்து வழிமறிப்பவனை என்ன செய்தால் தேவலாம் என்ற கொலைவெறிக்கு ஆளானாள் வெந்நிலா...

"உங்களுக்கு ஒரு ஸ்டோரி தெரியுமா...?"

அவனை எந்த வகையிலாவது காயப் படுத்தி விடவேண்டும் என்ற வெறியுடன் மிதப்பாக அவள் கேட்டாள்...

"கதைன்னு சொல்ல மாட்டியா...?"

"சின்ன வயதில் படித்த ஸ்டோரி..."

"அது என்ன கதை..?"

இருவரும் ஒரே வார்த்தையை 'ஸ்டோரி' என்று ஆங்கிலத்திலும்.. 'கதை' என்று தமிழிலும் விடாமல் பிடிவாதத்துடன் உச்சரித்தார்கள்...

"சீச்சி.. இந்தப்பழம் புளிக்கும்ங்கிற ஸ்டோரி..." வெந்நிலாவின் இதழ்களில் இளக்காரப் புன்னகை தவழ்ந்தது...

"ஓ.. நரி.. திராட்சைப்பழம் கிடைக்காது... அது உச்சாணிக் கொம்புல இருக்குது.. எட்டாப்பழம் புளிக்கும்ன்னு கதை சொன்ன கதையா..?" தசரதனின் இதழ்களிலும் இளக்காரப் புன்னகை வந்தது...

"அஃதே..."

"அதாவது..? நீ எட்டாப்பழம்.. நான் நரி...?"

"யெஸ்..."

"நினைப்புத்தான்.. நீயா பழம்..? எனக்கு நீ என்னைக்குமே எட்டிக்காய்தான்.."

தசரதனின் முகத்தில் எல்லையில்லாத வெறுப்பு தெரிந்தது...



# 10



தசரதன் போய் விட்டான்... வெந்நிலா அசையாமல் அந்த இடத்திலேயே செதுக்கி வைத்த சிலையாய் நின்றாள்.. தசரதன் பேசிவிட்டுப் போன பேச்சு அவள் காதுகளில் ஒலித்தது...

"உன்னக் கட்டிக்கனும்னு நான் ஆசைப்படறேனா..? கனவு காணாதே..."

"கனவா..? ஹலோ.. நான் யார் தெரியுமா...?"

"யாரு நீ..? ஒரு பொண்ணுதானே..."

"பெண்ணுன்னா இளப்பமா..?"

"அந்தப் பழக்கம் எனக்கு இல்லை.. நான் என்னோட அம்மாவுக்கு மகன்... தங்கைக்கு அண்ணன் - அவங்க ரெண்டு பேரும் பொண்ணுகதான்.. அவங்கன்னா எனக்கு உயிர்..."

"உங்க வீட்டுப் பெண்களை உயர்வாக நினைக்கலாம்... அதுவே மத்தவங்க வீட்டுப் பெண்ணுன்னா குறைவாப் பேசனுமா..?"

"யாரு குறைவா பேசினது..? ஊருக்குள்ளே போயி கேட்டுப்பாரு.. இந்த தசரதன் எப்படிப்பட்டவன்.. பெண்ணுகளுக்கு எந்த அளவுக்கு மரியாதை கொடுக்கிறவன்னு இந்த ஊர் சொல்லும்..."

"காட்..! இதைக் கேட்க இந்த வில்லேஜுக்குள்ள நான் போகனுமா..?"

"இது.. இது.. இதைத்தான் நான் சொன்னேன்.. உன் உடம்பில ஓடுற திமிர்.. இந்த ஊரு பொண்ணுககிட்ட இல்லை.."

"எப்படியிருக்கும்...? அவங்க என்ன பிறக்கும் போதே என்னைப் போல கோல்டு ஸ்பூனோடதான் பிறந்தாங்களா..?"

"எங்களுக்கு அது தேவையில்லை... உன் பணத்தை நீயே வைச்சுக்க.. எங்களுக்கென்ன வந்தது..? நாங்க பாட்டுக்கு எங்க வேலையை பார்த்துக்கிட்டு இருக்கோம்.. நீயும் உன் வேலையை முடிச்சுட்டு ஒழுங்காய் ஊர் போய் சேரு..."

தசரதன் கடுப்புடன் சொல்லிக் கொண்டிருந்த போது சாரதா அங்கே வந்தாள்...

"என்னன்ணா எப்ப வந்த..?" என்று கேட்டாள்...



"இப்பத்தான்..."

"திருவிழா முடிஞ்சுருச்சா..."

"ம்ஹீம்.. முடிஞ்சிருச்சு.."

"ஏக்கமா சொல்ற.. மூணு நாள் திருவிழாவுக்கு நாலு நாள் இருந்துட்டு வந்திருக்க.. பத்தாதா..?"

"பத்தாதும்மா.. பேசாம ஏழுநாள் இருந்துட்டு வந்திருக்கலாம்..."

வெந்நிலாவை ஜாடையாக பார்த்தபடி தசரதன் சொன்னான்.. அவளுக்கு பற்றிக்கொண்டு வந்தது... அவள் சென்னைக்கு கிளம்பிப் போக ஏழு தினங்கள் ஆகுமென்பதால்.. அந்த ஏழு தினங்களும் வீட்டுப்பக்கம் வராமல் இருந்திருக்கலாம் என்பதைத்தான் அவன் மறைமுகமாக அப்படிச் சொல்கிறான் என்பதை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது...

அவளைத் தவிர்க்கவும் ஒருவன் நினைக்கிறானா..? அவளால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

ஒரு சாதாரண கிராமத்து வாலிபன் அவளைப் புறக்கணிக்கிறானா..?

"போண்ணா.. உன்னைப் புரிஞ்சுக்கவே முடியல.. எங்கே போனாலும் தூங்கறதுக்கு நம்ம வீட்டுக்கு

வந்துருவ.. உனக்கு அடுத்தவங்க வீட்டில தங்கவே பிடிக்காது.. நீ போய் இப்படியெல்லாம் சொன்னா.. நான் நம்பனுமாக்கும்...?"

"நம்ப வேணாமாக்கும்..?"

"கேழ்வரகில நெய் வடியுதுன்னு சொல்லு.. நம்பறேன்.. இத மட்டும் நம்பவே மாட்டேன்..."

"ஹ.. ஹா..."

தசரதன் சிரித்தபடி வெளியே போய் விட்டான்.. அன்று இரவு அவனுக்காக சாப்பாடு கொண்டு போக சரவணன் வந்திருந்தான்...

"என் புள்ள எங்கேய்யா..?" பாரிஜாதம் மகனைத் தேட...

"அவன் ராத்திரி கரண்டுங்கிறதுன்னாலே.. தண்ணி காட்டனும்னு தோட்டத்திலேயே இருக்கான் அத்தை.." என்றான் சரவணன்...

"இதென்னப்பா புதுக் கதையா இருக்கு..? இத்தனை நாளா ராத்திரி கரண்டு வராமலா இருந்துச்சு..? அப்பல்லாம் இவன் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுப் போகல.. இப்ப மட்டும் என்ன வந்துச்சாம்...?"



"என்னைக் கேட்டா.. எனக்கென்ன தெரியும்..?"

பாரிஜாதத்தின் கேள்விக்கு பதில் சொல்லியபடி வெந்நிலாவை 'ஆ'வென்று பார்த்தான் சரவணன்...

'என்னமா அழகா இருக்கா..! இந்திப்பட ஹீரோயின் போல.. வெள்ளை வெளேர்ன்னு வளுவளுன்னு இருக்காளே.. இப்படியொரு சூப்பர் பிகரை வீட்டில வைச்சுக்கிட்டு மச்சான்.. ராத்திரி நேரத்துல வயக்காட்டைச் சுத்திக்கிட்டு அலையறான்.. எங்க வீட்டுக்கு மட்டும் இவ வந்திருந்தான்னா.. நானு வீட்டை விட்டு வெளியில நகர்ந்திருப்பேனா..? அடை கோழிய போல வீட்டிலயே அடைகாத்திருக்க மாட்டேனா...'

அவன் பார்வையை கண்டு கொள்ளும் நிலையில் வெந்நிலா இல்லை.. அவளைத் தவிர்க்கத்தான் தசரதன் வீட்டுக்கு சாப்பிட வரவில்லையென்பது அவளுக்குத் தெள்ளத் தெளிவாக புரிந்தது...

இப்ப மட்டும் என்ன வந்துச்சாம் என்ற பாரிஜாதத்தின் கேள்விக்கு.. நான் வந்திருக்கேனே என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள் வெந்நிலா...

அந்த அளவுக்கு அவன் புறக்கணித்ததில் அவள் மனம் காயப்பட்டது.. பதிலுக்கு அவனை காயப்படுத்த அவளின் உள்ளம் துடித்தது...

"மூணு மணி நேர கரண்டுக்கு.. இவன் ராத்திரி முழுக்க வயக்காட்டிலேயே குடியிருக்கப் போறானா..?" பாரிஜாதம் மகனுக்கான சாப்பாடு அடுக்கைக் கொடுத்தபடி சரவணனிடம் கேட்டாள்...

"யாருக்குத் தெரியும் அத்தை.. நான் பாட்டுக்கு சிவனேன்னு மந்தையில இருந்த பலகாரக் கடையில உக்காந்துக்கிட்டு இருந்தேன்.. இவன் தேடிவந்து சேதி சொல்லிட்டுப் போனான்..."

"இப்ப வயக்காட்டுக்குத்தான போற..?"

"பின்னே..? வரப்பு வரைக்கும் போயிட்டு.. கொண்டு போற சாப்பாட்டை நானே தின்னுட்டு வீட்டுக்கு போயிடுவேன்னு பாக்கறியா...?"

"நீ செஞ்சாலும் செய்வ.. யாரு கண்டா...?"

பாரிஜாதம் கேலியாகச் சொன்னாள்.. வெந்நிலாவின் முன்னால் அவள் அப்படிச் சொன்னதில் சரவணனுக்கு வருத்தம் உண்டானது..

'இந்த அத்தைக்கு கேலி பேச வேற நேரம் கிடைக்கலியா... சென்னைப் பொண்ணு முன்னாலே தான் கேலி பேசணுமா...'



என்னதான் வெந்நிலா உறவு முறையில் அவனுக்கு தங்கையாக இருந்தாலும்.. அவள் முன்னால் கேலிபேசப் படுவதில் அவனுக்கு உடன்பாடில்லை...

"உனக்கு சந்தேகமா இருந்தா நீயும் கூட வந்து பாரு அத்தை..."

"எங்கே வரச் சொல்ற...?"

"வயக்காட்டுக்குத்தான்..."

"ஏன் சரவணா..? உனக்கு எதுக்காக இந்த வன்மம்? வீட்டுக்குள்ளே இருக்கற அத்தைகாரியை ஜாமத்தில வயக்காட்டுக்கு போகச் சொல்றியே.. உன்னயெல்லாம் நம்பி.. எப்படிப்பா நானு பொண்ணு கொடுக்கிறது...?"

அதுவரை பேசாமல் இருந்த சாரதா கோபத்துடன்

"அம்மா.." என்று கத்தி தன் ஆட்சேபத்தை வெளிப்படுத்தினாள்..

'இந்தக் குட்டிக் குரங்குக்கு நான் பொருத்த-மில்லையா..?' சரவணனுக்கு கோபம் வந்து விட்டது...

"என்புள்ள.. இப்ப என்னாத்துக்கு அத்தையை சத்தம் போடற...?" என்று கடுகடுத்தான்...

"ஊம்..! எங்கம்மாவ நான் சத்தம் போடறேன்.. உங்களுக்கென்ன வந்துச்சு..." சாரதா அவன் முகம் பார்க்காமல் சொன்னாள்..

"என்னத்தைச் சொல்லிச்சு..? நான் உன்னைக் கட்டிக்கிற முறைதானே..? அதத்தானே சொல்லிச்சு..."

"யாரு.. யாரைக் கட்டிக்கிறது..? வெவ்வெவ்வே..."

சாரதா அழகு காட்டி விட்டு.. வீட்டுக்குள் ஓடி விட்டாள்.. பாரிஜாதம் அதை ரசித்துச் சிரித்தாள்...

"கேட்டுக்க மருமகனே.. என் மகளுக்கு உன்னைப் பிடிக்கலியாம்..."

இதை சும்மா விட்டுவிடக் கூடாது என்று சரவணனுக்கு தோன்றி விட்டது.. அது என்ன.. அம்மாவும்.. மகளும் சொல்லி வைத்ததைப் போல.. சென்னை அழகியின் முன்னால் அவனை மட்டம் தட்டுகிறார்கள்..?

"பிடிக்கலைன்னு சொல்லிட்டா ஆச்சா அத்தை..? நான் தூக்கிக்கிட்டுப் போயி தாலி கட்ட மாட்டேனா..?"

"கட்டினா போதுமா..? என் மக இருந்து பிழைக்க வேணாமா..? அப்புறம்.. புளிய மரத்து வீட்டுக்காரன் கதைதான்..."



"இதைச் சொல்லியே.. இந்த ஊரு இளவட்ட பயலுகள பயமுறுத்தி வைச்சுக்கிட்டு இருக்கீங்களா..?"

சரவணன் சாப்பாட்டு அடுக்குடன் போய் விட்ட பின்பு வெந்நிலா பாரிஜாதத்திடம் சந்தேகம் கேட்டாள்...

"அது என்ன ஸ்டோரி ஆண்ட்டி..?"

"எதும்மா..?"

"புளியமரத்து வீட்டுக்காரன் ஸ்டோரின்னு சொன்னீங்களே.. அதான்..."

"அதுவாம்மா.. நம்ம தெருவுக்கு நாலு தெரு தள்ளி புளியமரம் இருக்கு.. அதுக்குப் பக்கத்து வீட்டைத்தான் புளிய மரத்து வீடுன்னு சொல்லுவோம்..."

"நைஸ்..."

"அந்த வீட்டுக்காரனுக்கு கல்யாணம் நடந்துச்சு.. கட்டிக்கிட்டு வந்த பொண்ணுக்கு இவன் மேல இஷ்டமில்ல.."

"உம்..."

"இவன் கூட வாழ மாட்டேன்னு சொல்லிட்டு அது பிறந்த வீட்டுக்குப் போயிருச்சு..."

"அப்புறம்...?"

"அப்புறம் என்ன..? இவன் போய் கெஞ்சிப் பார்த்தான்.. மிஞ்சிப் பார்த்தான்.. எதுக்கும் அந்தப் பொண்ணு மசியல.. இரண்டாம் தாரமா பொண்ணு கட்டலாம்ன்னு நினைச்சா.. மூத்தவ வேண்டாம்ன்னு சொன்ன ஆம்பளய நான் கட்டிக்க மாட்டேன்னு இந்த ஊரு பொண்ணுக சொல்லிட்டாங்க..."

"இன்ட்ரெஸ்டிங்..."

"பக்கத்து ஊருக்குப் போனா.. அங்கேயும் இந்தக் கதை பரவித் தொலைச்சிருந்துச்சு..."


"கடைசியில் என்னதான் ஆச்சு...?"

"அவன் தனிமரமா.. கைக்கஞ்சியை ஆக்கிக் குடிச்சுக்கிட்டு இருக்கான்..."

பாரிஜாதம் எழுந்து போய் விட்டாள்.. அன்று இரவு தூங்காமல் வெந்நிலா யோசித்துக் கொண்டேயிருந்தாள்.. அலமாரியைத் திறந்து பார்த்தாள்.. தசரதனின் மடிப்புக் கலையாத சலவை உடுப்புக்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.. ஒன்றை உருவினாள்.. கசக்கித் தூர எறிந்தாள்...



## 11



நடுநிசியைத் தாண்டிய வேளையில் மோட்டாரை அணைத்து விட்டு வரப்பில் நடந்தான் தசரதன்.. உடல் தூக்கத்திற்காக கெஞ்சியது.. இருபக்கமும் அடர்ந்த சோளக்காட்டுக்குள் நுழைந்து அவன் நடந்தபோது அவனுக்கு முன்னால் வெள்ளையாக ஏதோ ஒரு உருவம் செல்வதைப் போன்ற தோற்றம் ஏற்பட்டது.. கூட வந்து கொண்டிருந்த சரவணனிடம் அதைக் காட்டினான்..

"ம்ச்.. மச்.. மச்..."

அதற்குமேல் வார்த்தை வராமல் சரவணன் நடுங்கினான்...

"ஏண்டா.. தும்மல் வந்தா தும்மித் தொலைக்க வேண்டியதுதானே.. அத விட்டுட்டு.. ஏன்.. மச்சு.. மச்சுன்னு மென்னு விழுங்கற..?" தசரதன் அதட்டினான்...

"சத்தமா பேசித் தொலைக்காதேப்பா.." சரவணன் கிசுகிசுத்தான்...

"இந்தாபாரு.. அர்த்த ஜாமத்திலே ரகசியம் பேசின.. பிடறியிலேயே ஒரு போடு போட்டிருவேன்.. இப்ப

எதுக்காகடா முதராத்திரியிலே புதுப்பொண்டாட்டி கிட்ட பேசறதைப் போல ரகசியம் பேசற..?" எரிச்சல் பட்டான் தசரதன்...

"ஏம்பா.. ஏய்ய்..! எதுக்கு.. எதை இணை கூட்டற..? முன்னால போகிற மோகினிப் பேயைப் பார்த்துட்டு நான் சத்தமில்லாம பேசினா.. நீ இதைத்தான் உவமானமா சொல்லுவியா..? நானே சரிதா டீச்சர்கிட்ட இருந்து எந்தப் பதிலும் வந்து தொலைக்கலேன்னு காய்ஞ்சு போய் கிடக்கறேன்... இதில நீ வேற.. முதராத்திரியையும்.. புதுப் பொண்டாட்டியையும் பத்திப் பேசி வைக்கிற..?" இப்போதும் சரவணன் குரலை உயர்த்தாமல் அதே கிசுகிசு குரலிலேயே பேசினான்...

"அடச்சீ... சத்தமா பேசு..."

"மச்சான்.. அரட்டாதேடா.. ஏற்கனெவே நமக்கு முன்னாலே பேய் அரட்டிக்கிட்டு போயிக்கிட்டிருக்கு.. இதுல நீ வேற பேயோட கூட்டுச் சேர்ந்துக்கறியே.. உனக்கே இது நியாயமா இருக்காடா...?"

"என்ன கொடுமைடா இது..! நீ மட்டும் சரிதா டீச்சரோட கூட்டுச் சேர்ந்துக்குவ.. நான் மட்டும் பேய்கூட கூட்டுச் சேர்ந்துக்கனுமா..? இதுக்கே உன்னை வீடு கட்டி அடிக்கனும்டா..."



"நீ வீடுகட்டி அடிப்பியோ.. கூடு கட்டி அடிப்பியோ எத வேணும்னாலும் செஞ்சுக்கடா மச்சான்.. ஆனா என்னை எப்படியாவது என் வீட்டில கொண்டு போயி சேர்த்துப் புடுடா மச்சான்.. உனக்கு கோடி புண்ணியமா போயிரும்.."

"என்னடா மச்சான்.. நீ எவ்வளவு தைரியசாலி பயபுள்ள.. பத்தாவதைக் கூட ஒழுங்காப் படிக்காம சரிதா டீச்சரையே சைட் அடிக்கற பராக்கிரமசாலி.. நீ போய் தொடை நடுங்கலாமா..? இது சரிதா டீச்சருக்கு தெரிஞ்சா என்ன ஆகும்...?"

தசரதன் கேலி பேசிக் கொண்டிருந்த போதே.. முன்னால் போன உருவம் நின்று விட்டது.. சரவணன் அரண்டு போனவனாக தசரதனின் தோளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்...

"மச்.. மச்.. மச்..." திரும்பவும் வார்த்தைகளால் தந்தியடித்தான்...

"ஏண்டா உயிரைக் குறைக்கிற..? தும்மல் வந்தா தும்மித் தொலைக்க வேண்டியதுதானே..." தசரதன் கோபப் பட்டான்...

இப்போது அந்த வெள்ளை உருவம் நகர ஆரம்பித்து விட்டது.. சரவணனுக்கு நின்று போயிருந்த பேச்சும் வந்து விட்டது...

"எனக்கெங்கே மச்சான் தும்மல் வந்துச்சு.. உன்ன மச்சான்னு கூப்பிட நினைச்சு வாயைத் தொறந்தா வார்த்தை வர மாட்டேங்குது.. காத்துதான் வந்து தொலைக்குது..."

"டேய்.. வெறுப்பேத்தாதே.. நீ பெரிய இஞ்சி இடுப்பழகி.. உனக்கு என்னைப் பாத்து வார்த்த வரலை.. போட்டேன்னா பாரு.. இந்த டயலாக்க போயி உன் சரிதா டீச்சருகிட்டச் சொல்லு.. எங்கிட்ட சொல்லாத.. சகிக்கல.."

"என்னத்த மச்சான்.. அந்தப் பொண்ணு உஷாரான பொண்ணா இருக்கு.. பச்சைக் காய்கறிக்கும் மசிய மாட்டேங்குது.. பசு மாட்டு நெய்க்கும் மடங்க மாட்டேங்குது.. ஏரோப்ளேனையே கொண்டு போயி இறக்கினாலும்.. ஏறெடுத்துக்கூடப் பாக்காது போல இருக்கே..."

"இதத்தான் வயக்காட்டில தண்ணி கட்ட விடாம புலம்பித் தொலைச்சே.. இன்னும் அந்தப் புலம்பலை விடலியா..? தெரியாமத்தான் கேக்கறேன்.. நீயெனக்கு துணைக்கு வந்தயா..? இல்ல.. புலம்ப வந்தியா...?"

"மனசை ஆத்திக்க வந்தேன் மச்சான்..."

"நினைச்சேண்டா.. நான் பாட்டுக்கு வயலைப் பாக்கப் போனா.. துணைக்கு வர்றேன்னு நீ தொடுத்துக்கிட்டு



வர்றப்பவே நினைச்சேண்டா.. இப்படித்தான் நீ தலைவலிய வர வைப்பேன்னு.. ஏண்டா..? மனசென்ன காபித்தண்ணியாடா..? ஆத்தி.. ஆத்தி.. குடிக்கிறதுக்கு.."

"ஏன் மச்சான் சொல்ல மாட்ட..? உனக்கென்ன.. சூப்பர் பிகரு உன் வீட்டில வந்து இறங்கியிருக்கு.. காலக் கொடுமையிலயும்.. காலக் கொடுமையா அது எனக்கு தங்கச்சி முறையாய் இருந்து தொலைக்குது.. ம்ஹீம்.. எதிலயும் நீ கொடுத்து வைச்சவன்தாண்டா மச்சான்..."

"எதுலடா கொடுத்து வைச்சேன்..?"

"வேற எதில கொடுத்து வைச்சியோ இல்லியோ இதில நீ கொடுத்து வைச்சவண்டா.. நம்ம ஊருக்குள்ளயே பாரேன்.. எந்தங்கச்சி முறையில இருக்கிற பொண்ணுக எல்லாம்... உன்னைக் கண்டா ஒரு மார்க்கமா ஆயிடுதுக.. அதுவே.. உந்தங்கச்சி முறையில இருக்கிற பொண்ணுகளப் பாரு.. என்னைப் பாத்தா.. வெட்டவா இல்ல.. குத்தவான்னு கொலைவெறிப் பார்வையயில்ல பாத்து வைக்குதுக.. மத்ததுகள விடு.. உந்தங்கச்சி சாரதா இருக்கே..."

"டேய்ய்..."

"கர்ஜிக்காதேடா மச்சான்.. அதுவே பச்சைமண்ணு.."

"நீ அந்தக் கணக்கையெல்லாம் பாத்து தொலைக்க மாட்டியே..."

"உந்தங்கச்சியாச்சே.. அதனால பாப்பேன்.. கதயக்கேளு.. உனக்கு சாப்பாடு வாங்கிட்டு வர உன் வீட்டுக்குப் போனேனா.. உங்கம்மா.. எனக்கு பொண்ணு கொடுக்க மாட்டேன்னு சொல்லுச்சு..."

"சரியாத்தானே சொல்லியிருக்கு..."

"ஏன் மச்சான் நீ வேற உங்கம்மா கூடச் சேர்ந்து கும்மியடிக்கிற...?"

"நீ கதைக்கு வாடா..."

"உந்தங்கச்சிக்கு அதைக் கூடச் சொல்லக் கூடாதாம்... உங்கம்மா கூட சண்டைக்கு போகுது.. ஏன்புள்ள.. நானு உன்னைக் கட்டிக்கிற முறதானன்னு கேட்டா.. யாரு.. யாரைக் கட்டிக்கிறதுன்னு முறைக்குது.."

"சரியாத்தானே சொல்லியிருக்கு.. ஹா.. ஹா..."

"சிரிக்காதேடா மச்சான்.. ஆமாம்.. உன்னை ஒன்னு கேட்கனுமே..."

"கேட்டுத் தொலை..."



"உன் வீட்டிலதான் அப்சரஸ் வந்து இறங்கியிருக்கே.. நீ அதுகூட பேசிப் பழகறதை விட்டுட்டு.. ஐஞ்சு நாளா அடுத்த ஊருல திருவிழா கொண்டாட ஓடிட்டட.. ராத்திரி கரண்டுக்கு உங்க அப்பாவை அனுப்பாம நீ வந்து வயககாட்டில கிடக்கிற.. அந்தப் பொண்ணு ரெண்டு நாளில ஊருக்கு போயிருமாமில்ல..."

"உனக்கு இத யாரு சொன்னது..?"

"ஊரே சொல்லுது.. பக்கத்து ஊரு பண்ணையாரு மக உன் வீட்டில வந்து தங்கியிருக்கான்னா சும்மாவா..?"

இது ஒன்று கிராமத்தில் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டான் தசரதன்...

அங்கே ரகசியங்கள் பேணிக் காக்கப் படுவதில்லை.. யார் வீட்டில் உறவினர் வந்து இறங்கினாலும்.. அடுத்த நொடியிலேயே அந்த விவரம் ஊர் பூராவும் பரவி விடும்...

வந்திருப்பது யார்...? என்ன காரியமா வந்திருக்கிறார்கள்..? எத்தனை நாள்கள் தங்குவார்கள்..? எப்போது ஊருக்கு கிளம்புவார்கள்..? என்ற அனைத்து விவரங்களும்.. அந்த ஊர் மக்களுக்கு தெரிந்துவிடும்...

"அதுககென்னடா செய்யச் சொல்ற..?"

"அது கூட டூயட் பாடறத விட்டுட்டு.. இப்படி.. ஜாமத்தில வயலுப்பக்கம் வந்து பேய்கூட டூயட் பாடறியேடா மச்சான்.. த்ச்சு.. த்ச்சு.. த்ச்சு..."

"ஏண்டா.. நாளைக் கூப்பிடற..?"

"பரிதாபப் பட்டேண்டா..."

"வாயை மூடறியா..? இல்ல.. முன்னாலே போற பேயைக் கூப்பிட்டு விடவா...?"

"மச்.. மச்.. மச்..."

"அஃது..! டேய் சரவணா.. அந்த அப்சரஸ்கூட டூயட் பாடுற கொடுமைக்கு பேய் கூடவே டூயட் பாடிறலாம்டா.. பொண்ணா அது...?"

"என்னடா மச்சான் இப்படிச் சொல்ற..? அது அழகுச் சிலைடா..."

"அவளைப் பத்திப் பேசறதா இருந்தா உனக்கு தும்மல் வராதே.. அழகெல்லாம் முகத்தில இருந்தாப் பத்தாது.. மனசில இருக்கனும்..."

தசரதனின் வார்த்தைகளில் தொனித்த வெறுப்பில் சரவணன் திகைத்தான்.. எதற்காக இவ்வளவு வெறுப்பை அந்தப் பெண்மீது வைத்திருக்கிறான் என்று அவனுக்குப்



புரியவில்லை.. அவனுக்குப் புரியாதது என்ற ஒன்று இருக்கிறது.. அது தசரதனுக்கே அந்த வெறுப்பிற்கான மூலகாரணம் எது என்று புரியவில்லை என்பது...

தசரதன் வாலிபன்.. படித்தவன்... பண்பட்டவன்.. அழகான எதைக் கண்டாலும் ரசிக்கும் இயல்பான மன உணர்வு அவனிடம் இருந்தது.. அவன் வீட்டில் மிக அழகான யுவதியாக வெந்நிலாவை அவன் சந்தித்தான்.. அவளைக் கண்டதும் அவன் விழிகளில் ஒரு மின்னல் தோன்றியது... அந்த மின்னலை.. மிக அலட்சியமான அவளின் பார்வை எதிர் கொண்டபோது வந்த வேகத்திலேயே அந்த மின்னல் மறைந்து போனது...

நீயெல்லாம் எனக்கு இணையா..? என்னைப் பார்க்கக்கூட உனக்குத் தகுதியில்லை என்று அவளின் பார்வை சொல்லாமல் சொன்னபோது அவனின் ஆண்மை துடித்து நிமிர்ந்தது.. 'யாரடி நீ'யென்று அலட்சியப் பார்வை பார்த்தது.. தசரதன் அவளை வெறுக்க ஆரம்பித்தான்...

மனதில் பூ மலரும் தருணம் என்பது அழகானது.. அந்த அழகை தோன்றிய வேகத்திலேயே மறையச் செய்த வெந்நிலாவைக் கண்டாலே தசரதனுக்குள் கோபம் மூண்டது.. அவன் அவளைத் தவிர்க்க நினைத்தான்..

அவள் முன்னால் நின்றால்.. நிற்கக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை..

"என்னடா மச்சான்.. இம்புட்டு வெறுப்பா பேசற..."

பேசியப்படியே முன்னால் பார்த்த சரவணன் திகிலடித்துப் போனான்.. அந்த வெள்ளை உருவம் அசையாமல் நின்று விட்டிருந்தது.. தசரதன் முன்னே நடக்க முயல சரவணன் அலறிக் கொண்டு அவனை தடுத்து நிறுத்தினான்...

## 12



"டேய்.. போகாதேடா..."

"போகாம எப்படிடா இருக்க முடியும்..? சுத்திப் பாரு.. இது சோளக்காடு.. இங்க நின்னு என்ன பண்ண...?"

"அதுக்காக.. பேய் நிக்கிற பக்கம் போகனும்கறியா..?"

"பேயை விலகி வழி விடச் சொல்லலாம்டா வா.."

"என்.. என்.. என்..."



"இப்ப என்ன சொல்ல வந்த..? என்னதுன்னு சொல்லத்தான் வந்த..?"

"மச்.. மச்.. மச்..."

"மச்சான்தான்.. உனக்கு நான் மச்சான்தாண்டா.. அதுக்கு இப்ப என்னாங்கிற...?"

"பே.. பே... பே..."

"பேயா..? அது பாட்டுக்கு அங்க நின்னுக்கிட்டு இருக்கு.. அதுக்கு நீயேண்டா.. ஊமைபோல பினாத்தற..."

"வே.. வே.. வே..."

"அது வேணும்கறியா..? வேணும்னா அதைக் கூப்பிட்டு உன் பக்கத்தில வரச் சொல்லவா...?"

தசரதன் கேட்ட கேள்வியில் தந்தியடித்துக் கொண்டிருந்த சரவணனின் நாக்கு சுழன்றது...

"ஐயையோ..."

அவன் அலறிவிட.. அதைக் கண்டு கொள்ளாமல் தசரதன்.. நடையைத் தொடர்ந்தான்.. தனியே நிற்கவும் முடியாமல்.. தசரதனை தொடர்ந்து செல்லவும் முடியாமல் சரவணன் தசரதனின் தோளைப் பிடித்துக் கொண்டு தொங்கினான்...

வேதாளம் தோளில் தொங்க.. தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனைப் போல... சரவணன் தோளில் தொங்க.. மனம் தளராமல் முன்னேறினான் தசரதன்.. வெள்ளை உருவத்தை நெருங்க.. நெருங்க.. சரவணனுக்கு மூச்சுத் திணறல் அதிகரித்துக் கொண்டே வந்தது... வெள்ளை உருவத்தை நெருங்கியதும் சரவணன் பயத்தில் கண்களை இறுக மூடிக்கொள்ள.. தசரதன்...

"அப்பா..." என்றான்...

"அப்பாவா..? ஏண்டா மச்சான்..? பேயை அப்பான்னு கூப்பிட்டு உறவு கொண்டாடினா மட்டும் அது வழியை விட்டுருமா..? இல்ல.. நம்மளத்தான் விட்டுருமா..?" சரவணன் கண்களைத் திறக்காமல் புலம்பினான்...

"அடச்சீ கண்ணைத் திறந்து பாரு.. இங்க நிக்கிறது என்னோட அப்பா..." தசரதன் அதட்டல் போட்டான்...

அவன் போட்ட போட்டில் கண்திறந்து பார்த்த சரவணன்...

"மாமா.." என்று மகிழ்ந்தான்...

அங்கே.. வெள்ளை வேட்டி.. சட்டையுடன் கயிலைநாதன் நின்று கொண்டிருந்தார்...



"ராத்திரி தூங்கறதுக்கு புள்ள வீடு வந்து சேரலையேன்னு பாரிஜாதம் புலம்பினா.. அதான்.. ஒரு எட்டு வயலுப்பக்கம் வந்து கூப்பிட்டுட்டு போகலாம்ன்னு வந்தேன்.. பாதி வழியிலேயே எதுத்தாப்புல நீங்க ரெண்டு பேரும் வந்துக்கிட்டு இருந்தீக.. சரி.. சேக்காளிப் பயலுக எதையாவது பேசிக்கிட்டு வருவானுக.. பெரிசு கூட இருந்தா அவனுகளுக்கு சங்கடமா இருக்கும்ன்னு முன்னால நடந்தேன்..." கயிலைநாதன் விளக்கம் சொன்னார்..

"நல்லா நடந்தீங்க போங்க..." சரவணன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டான்...

"ஏன் மருமகனே.. இதுக்கே நெஞ்சைப் பிடிக்கறியே.. இவ்வளவு பயந்தாங்குளி மருமகனா நீ..? உன்னை யெல்லாம் நம்பி.. எப்படிப்பு என் பொண்ணக்கட்டிக் குடுக்கிறது..?" கயிலைநாதன கடகடவென்று சிரித்தார்..

"நீங்களுமா மாமா..?" சரவணன் நொந்தே போய் விட்டான்...

மூக்கை உறிஞ்சியபடியே அவனை முறைத்துப் பார்க்கும் சாரதாவின் மீது அவனுக்கு ஒன்றும் மையல் இல்லை.. ஆனால்.. சொல்லிவைத்ததைப் போல..

பாரிஜாதமும்.. கயிலைநாதனும் அவனுக்குப் பெண் தர முடியாதென்று சொல்வதைக் கேட்க அவனுக்கு பொறுக்கவில்லை.. அவனுடைய கண்ணோட்டமெல்லாம்.. அழகான காட்டன் சேலையை மடிப்புக் கலையாமல் நேர்த்தியாக உடுத்தி லேசான ஒப்பனையுடன் வெயில் படாமலிருக்க பிடிக்கும் குடையை சூரியனுக்கு நேராக பிடிக்காமல் பின்னால் ஒளிவட்டம் தெரிவதைப் போல பிடித்துக் கொண்டு பவனி வரும் அரசாங்க சம்பளம் வாங்குகிற வேலைபார்க்கும் பெண்கள் மீது தான் இருந்தது...

அல்லியூரில் அது போன்ற பெண்கள் இல்லை.. பெண்களின் திருமண வயது பதினெட்டு என்று அவர்கள் எழுதப்படாத சட்டமாக அறிவித்திருந்தார்கள்.. வயதுக்கு வந்த பெண்கள் எல்லோரும் பள்ளிக்குச் சென்று பாடம் படிக்காமல்.. சமையலறையில் சமையல் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற வட்டத்தை வீட்டுப் பெண்கள் கொண்டு வந்திருந்தார்கள்.. அவர்கள் பெற்ற பெண்கள் வாழ்க்கைப் பட்டுப் போகிற இடத்தில் உன் தாயார் உனக்கு வீட்டு வேலை செய்யச் சொல்லிக் கொடுத்து வளர்க்கவில்லையா என்று கேட்டு விடக்கூடாதென்பதே அவர்களின் வாழ்க்கை லட்சியமாக இருந்தது...



அப்படிப்பட்ட அல்லியூரில் இந்த நியதிகளை உடைத்து பருவம் வந்த பின்பும் பள்ளிக்குச் சென்று வந்த ஒரே சிறுமி சாரதா மட்டும்தான்...

'என்மக பெரிய படிப்பு படிக்கனும்...'

கயிலைநாதனும் பாரிஜாதமும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்தார்கள்...

சரவணனைவிட ஒரு வகுப்பு கூடுதலாக படிக்க ஆரம்பித்திருந்த சாரதாவின் மீது அவ்வபோது கடைக்கண் பார்வையை சரவணன் வீசுவான்தான்.. அவனும் தான் என்ன செய்வான்..? அந்த ஊரில் அதிகமாக படித்த.. படிக்கும் பெண் சாரதா மட்டும்தான்.. அதனால் அவள் மூக்கை உறிஞ்சுவதைப் பற்றிக் கவலைப்படாமல் லேசு பாசாக பார்த்து வைப்பான்.. அதற்கே.. அவள் தசரதனிடம் போட்டுக் கொடுத்து விடுவாள்.. கொதித்துப் போன பாசமலராக தசரதன் சரவணனை செமத்தியாக கவனித்து விடுவான்.. அதற்குப் பயந்து அவளிருக்கும் திசை பக்கமே சரவணனால் திரும்ப முடியாமல் போய் விட்டது.. அதோடு.. அத்தி பூத்ததைப் போல அந்த ஊர் அரசாங்க துவக்கப் பள்ளியில் வேலை செய்ய வெளியூரிலிருந்து சரிதா டீச்சர் வந்து விட்டாள்..

சரிதா டீச்சர் அப்படியொன்றும் அழகாக இருக்கவில்லைதான்.. ஆனால் சரவணன் கனவு கண்ட அரசாங்க சம்பளம் வாங்கும் பெண்ணாக இருந்தாள்.. அழகான காட்டன் சேலையை மடிப்புக் கலையாமல் உடுத்தியிருந்தாள்.. அதி முக்கியமாக.. வண்ணக் குடையொன்றை தலைக்கு பின்னால் ஒளி வட்டம் சுழல்வதைப் போல பிடித்துக் கொண்டு ஒயிலாக அல்லியூர் தெருக்களில் வலம் வந்தாள்...

சரவணன் தேன் குடித்த நரியானான்.. அல்லியூர் தோட்டங்களில் பயிராகும் பச்சைக் காய்கறிகள் தினமும் சரவணனின் கைபட்டு.. சரிதா வீட்டு சமையலறையில் குழம்பாகவும்.. பெரியலாகும்.. உருமாறின.. காலை எழுந்தவுடன் காய்கள்.. பின்னர்.. கனிவு கொடுக்கும் சரிதாவின் கண்பார்வை.. மதிய நேரத்திலே ஊரான் வீட்டுத் தோப்பில் பறித்த இளநீ.. அதைக் குடிக்கும் சரிதாவின் கிண்கிணி சிரிப்பு.. மாலை முழுவதும் சரிதாவின் வீட்டில் பேச்சு வார்த்தை என்று வழக்கப் படுத்திக் கொண்டு விட்டான் சரவணன்...

இப்படி சரிதா வீட்டு ஆட்டுக்குட்டியாக சரவணன் மாறிப் போயிருக்கும் காலகட்டத்தில் சாரதா இருக்கும் திசைப்பக்கம் கூட அவன் திரும்பிப் பார்க்காத நிலையில்..



பாரிஜாதமும்.. கயிலைநாதனும் மாறிமாறி அவர்களின் பெண்ணை சரவணனுக்கு திருமணம் பண்ணிக் கொடுக்க மாட்டார்கள் என்பதை அறிவித்தால் சரவணனின் சுயமரியாதை உலைக்களமாய் மாறிக் கொதிக்காதா..?

இந்த ரீதியான பேச்சுக்களை அல்லியூரில் இருந்த பெண்ணைப் பெற்றவர்கள் அவ்வபோது சரவணனை நோக்கி வீசுவது சகஜம்தான் என்றாலும்.. அந்த ரீதியான பேச்சுக்கள் சரிதாவின் செவிகளை எட்டி விட்டால் அவன் வெகு சிரமப்பட்டு.. காலை முதல் இரவு வரை சேவை செய்து உருவாக்கி வைத்திருக்கும் அவனைப் பற்றிய உயர்ந்த மனிதன் எனப்பட்ட பிம்பம் கசங்கி கந்தலாகி விடாதா...?

சரவணனின் இத்தகைய துன்பங்களைப் பற்றி கயிலைநாதனுக்கு எப்படித் தெரியும்..? அதனால்.. அவனுடைய நொந்து போன உள்ளத்தை சாமரம் வீசி ஆற்றிவிட முனையாமல்.. மேலும் நோகடிக்க ஆரம்பித்தார்...

"என் மருமகனே.. நீங்களுமா மாமான்னு கேட்கறியே.. இதுக்கு முதல்லேயே உன் அத்தைகாரி பொண்ணு கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டாளா..?"

அவர் வெந்த புண்ணில் வேலை ஏற்ற.. தசரதன் அதை பிடுங்கி விட உதவிக்கு வராமல் மேலும் அதை அழுத்தமாக அடித்து வைத்தான்...

"அந்தக் கதை உங்களுக்குத் தெரியாதாப்பா..?"

அந்தக்கதை சரவணனின் சொந்தக்கதை.. சோகக்கதை என்பதில் தசரதனுக்கு அப்படியென்ன உற்சாகம் வேண்டிக் கிடக்கிறது என்று பொறுமிப் போனான் சரவணன்..

"ஏன்ப்பா தசரதா.. உனக்கே இது நியாயமாய் இருக்கா..?"

"ஏண்டா மச்சான்... தினமும் பொழுது விடிஞ்சு.. பொழுது சாய்ற வரைக்கும் நீ ஆயிரத்தைஞ்சு நியாயம் கேட்கிறவன்.. இதில நியாயமா இருக்கான்னு கேட்டா... நான் எந்த நியாயத்தைன்னு கண்டேன்...?"

"அதுசரி.. நீயும்.. உன் குடும்பமும் மொத்தமா சேர்ந்து மொத்தற மொத்தில.. இந்த மொத்து.. எந்த மொத்துன்னு உனக்குத் தெரியாதுதான்..."

"அழிச்சாட்டியமா பேசாதேடா சரவணா.. நம்ம மச்சானேச்சேன்கிற உரிமையில நானு ரெண்டு தட்டு தட்டியிருப்பேன்..."



"அடப்பாவி மச்சான்.. அது வெறும் தட்டாடா..?"

"விடுடா.. விடுடா.. மாமன் மச்சான் உறவு முறையில இதெல்லாம் ரொம்ப சகஜம்டா.. அப்புறம்.. எங்க அப்பா அடிக்கடி உன்மேல வெறும் அரிவாளை வீசியிருக்காரு..."

"டேய்.. அது வெறும் அருவா இல்லைடா.. வீச்சருவா..."

"கிடக்குது கழுதை.. விட்டுத்தள்ளு..."

"ஏன் சொல்ல மாட்ட..? வீசினது என் மேல இல்ல.."

"வீசினாலும்.. குறிபார்த்து வீசினாரா..?"

"உனக்கு அது வேற ஒரு குறையாயிருக்காடா..?"

"எதுவா இருந்தாலும் நியாயத்தைச் சொல்லனுமில்ல.. என் அப்பா வைச்ச குறி தப்பாதுன்னு இந்த எட்டுப் பட்டிக்கும் தெரியுமே.. எங்கம்மாவச் சொல்லு.. அதுக்குத்தான் குறிபார்த்து எறியத் தெரியாது.. அப்படியிருந்தும் அது வீசின கரண்டியும்.. கிண்ணமும் எப்படி சரியா உன் நெத்தியில பட்டுச்சு..?"

# 13



கேள்வி கேட்டவனை அழமாட்டாத குறையாக பார்த்தான் சரவணன்...

பாரிஜாதம் என்னவோ.. வேறு திக்கில்தான் கரண்டியை விட்டு எறிந்தாள்.. அந்த எறிதலும் கேலி செய்யும் நோக்கத்தில்தான் வீசப்பட்டது.. சரவணனின் தலைவிதியோ.. இல்லை பாரிஜாதத்தின் தலைவிதியோ.. அது மிகச்சரியாக சரவணின் நெற்றியை பதம் பார்த்து வைத்தால் பாவம்.. பாரிஜாதம்தான் என்ன பண்ணுவாள்..?

"உனக்கு இந்தப் பெருமை வேற இருக்காடா தசரதா..?"

"இது பெருமையா...? சந்தேகம்டா.. எங்கம்மாவுக்கு உன்மேல அப்படியொன்னும் வன்மம் இல்ல..."

"அப்படித்தாண்டா நானும் நினைக்கிறேன்..."

"அப்படியிருந்தும் அது வீசின கரண்டி எப்படிடா குறிபார்த்து உன் நெற்றியில் பட்டுச்சு..?"



"என்னைக் கேட்டா..? போய் உன் அம்மாவைக் கேளு..."

"ம்ஹீம்.. என் வீட்டில இருக்கிறது நாலு பேரு.. நாலில் ஒருத்தன் உனக்கு நண்பனா போயிட்டேன்..."

"அதுக்காக விட்டு வைச்சியாடா..?"

"என்னைச் சொல்லாதே.. கடுப்பேத்தி வாங்கிக் கட்டிக்கிட்டு என்னைச் சொல்ல வர்றியா..."

"இந்தாபாரு... நடுஜாமத்திலே புதுசா எதையும் ஆரம்பிக்காதே.. இப்ப என்னத்துக்கு ஒரு வீட்டிலே நாலு பேருன்னு கதை சொல்ல ஆரம்பிச்ச..?"

"அதில்லடா மச்சான்.. நானோ உன் நண்பன்.."

"இருக்கட்டும்..."

"அப்பாவும்.. அம்மாவும்.. வீச்சருவாளையும் கரண்டியையும் விட்டெறிகிற ஆளுக..."

"நான் மறக்க நினைச்சாலும் நீ விட மாட்டேங்கறியே.."

"மீதியிருக்கிறது சாரதாதான்..."

"இந்தா பாரு.. நான் பேய்க்கு பயந்தவன் தான்.. அதுக்காக உன் வீட்டு பாப்பாவுக்கெல்லாம் பயப்படுகிறவன்னு தப்புக்கணக்கு போடாதே..."

"பாப்பாவா..? எங்க சாரதாவா..? இரு.. எங்க வீட்டுப் பக்கம் நீ வருவேல்ல.. அப்ப என் தங்கச்சிகிட்ட பத்த வைக்கிறேன்.."

"உனக்கு தசரதன்னு பேரு வைச்சது தப்புடா மச்சான்.. வத்திக்குச்சின்னு பேரு வைச்சிருக்கனும்.. ஆமா.. உன் தங்கச்சி என்ன பெரிய பிஸ்தாவா..? பூச்சாண்டி யெல்லாம் காட்டற...?"

"வேணாம்டா சரவணா.. வாயைக் கொடுத்து உடம்பை ரணகளமாக்கிக்காதே.. அவளுக்கு கோபம் வந்தா காத்தில எழும்பி.. பறந்து பறந்து அடிப்பா..."

சரவணனுக்கு நிஜமாகவே பயம் பிடித்துக் கொண்டது.. அந்த மூக்குறுஞ்சி சாரதா 'கன்பைட் காஞ்சனா' வாக இருக்கக் கூடும் என்று அவன் கற்பனை செய்து கூடப் பார்த்ததில்லை... அவளின் காதுபட 'மூக்குறிஞ்சி' என்ற பெயரை உச்சரித்திருக்கிறோமா என்று நினைவின் அலைகளில் அவன் தேடிப் பார்த்தான்..



அதுவரை எப்படியோ.. அடுத்து அவள் காதுபட அந்தப் பட்டப்பெயரை மொழிவதில்லை என்று மனதிற்குள் சங்கல்பமும் செய்து கொண்டான்...

ஊருக்குள் நுழைந்ததும்.. அப்பாடி என்ற நிம்மதி பெருமூச்சு சரவணனுக்கு வந்தது...

'ஒருநாள் இவன்கூடப் போயிட்டு வந்ததுக்கே கண்ணைக் கட்டுதே.. இவன் எப்படித்தான் தினமும் அர்த்த ஜாமத்திலே தண்ணி கட்டப் போயிட்டு திரும்பி வாரானோ...' தசரதனை பிரமிப்புடன் பார்த்தான் சரவணன்...

"என்னைப் பார்க்கிறதை விட்டுப்புட்டு உன் அப்பாவைப் போயி இப்படி 'ஆ'ன்னு பாரு.. அந்த மகராசனும் நடுஜாமத்தில தண்ணி கட்ட வயலுக்கு போயிட்டு வர்றவர்தான்..." அவன் மனதைப் படித்ததைப் போலச் சொன்னான் தசரதன்...

"நானு மனசுக்குள்ள நினைச்சது உனக்கெப்படி மச்சான் தெரிஞ்சது..?" அதற்கும் வாய் பிளந்தான் சரவணன்...

"ஊம்..? சூ மந்திரகாளி மந்திரம் போட்டேன்.. போடா..." வீட்டைப் பார்த்து கயிலைநாதனுடன் நடந்தான் தசரதன்...

வீட்டின் முன் பக்க விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது.. வாசலில் கிடந்த கயிற்றுக் கட்டிலில் ஜமுக்காளம் விரிக்கப்பட்டு தலையணை வைக்கப்பட்டிருந்தது..

"நீ போயி உன் அம்மாகிட்ட தலையைக் காண்பிச்சுட்டு தூங்குப்பா..." அசதியுடன் கண் செருக கட்டிலில் படுத்து விட்டார் கயிலைநாதன்...

மாடியிலிருந்த தசரதனின் அறையில் தான் வெந்நிலா தங்கியிருக்கிறாள் என்ற விவரம் தசரதனுக்குத் தெரியாது...

அவனுக்கு அது தெரியாது என்ற விவரம் கயிலைநாதனுக்கும்.. பாரிஜாதத்திற்கும் தெரியாது...

வீட்டின் ஹாலில் மகனுக்காக பாய் விரித்து.. தலையணையையும்.. போர்வையையும் போட்டு வைத்திருந்தாள் பாரிஜாதம்.. வயலுக்குப் போன கயிலைநாதன் மகனை அழைத்து வந்து படுக்க வைத்து விடுவார் என்ற நினைவுடன் அவள் உள்ளறையில் சாரதாவுடன் படுத்து தூங்கி விட்டாள்...

வீட்டுக் கதவைத் திறந்த தசரதன் விளக்கைப் போடவில்லை.. நடுநிசியில் தூங்கிக் கொண்டிருப்பவர்-



களை வெளிச்சம் தொந்தரவு பண்ணும் என்ற எண்ணத்தோடு கதவை மூடிவிட்டு அவன் எப்போதும் போல சத்தமில்லாமல் மாடிப்படியில் ஏறிவிட்டான்.. அவனுடைய அறைக்கதவைத் திறந்து உள்ளே போனவன்.. அசதியுடன் கட்டிலில் சரிந்து தூங்கிவிட்டான்...

அதே கட்டிலின் மறு கோடியில் படுத்திருந்த வெந்நிலா.. சற்று நேரத்திற்கு முன்னர் வரை தூக்கம் பிடிக்காமல் புரண்டு படுத்துக் கொண்டிருந்தவள் தான்.. அடிக்கடி வெளியே போய் பால்கனியில் நிற்பதும் பின் அறைக்குள் வருவதுமாக இருந்தவளுக்கு.. அறைக் கதவை மூடித் தாழிட வேண்டும் என்ற நினைவு இல்லாமல் போய் விட்டது...

அங்கேயிருந்த அந்த ஐந்து நாள்களில் ஒருநாள் கூட அவள் இரவில் கதவை மூடவில்லை.. அவளுடைய சென்னை வீட்டில் அவளுக்கென்று இருந்த பிரம்மாண்டமான அறையில் பெரிய ஹாலும்.. படுக்கையறையும்.. அதையொட்டிய பால்கனியும் இருக்கும்.. அங்கேயிருந்த நினைவில் இங்கேயும் அவள் மாடி ஹாலையும்.. அதை ஒட்டிய பால்கனியையும்

ஒரே அறை போல நினைத்து விட்டாள் சென்னை வீட்டில் இருந்ததைப் போல.. அல்லியூர் வீட்டில் அறையுடன் சேர்ந்து பால்கனி இல்லை.. அது மாடி ஹாலில் பொதுவாக இருந்தது...

பிடிக்காத இடத்தில் தூக்கம் பிடிக்காமல் உலவிக் கொண்டிருக்க.. மாடி பால்கனிதான் வெந்நிலாவுக்கு தோதான இடமாக அமைந்திருந்தது.. அதனால் அவள் சிறிது நேரம் உலாவுவதும்.. பின்னர்.. அறைக்குள் போய் படுப்பதுமாக இருந்தாள்.. ஒரு கட்டத்தில் பால்கனிக்கு போக மறந்து அயர்ந்து தூங்கி விட்டாள்...

ஒருவரையொருவர் மனதார வெறுக்கும் அந்த இருவரும்.. ஒரே கட்டிலில் படுத்துத் தூங்குவதைப்-பற்றி அறியாதவர்களாக அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள்...

விடிந்தது.. வாசல் தெளித்து கோலம் போட எழுந்த பாரிஜாதம்.. ஹாலில் கிடந்த பாயில் மகன் இல்லாததைக் கண்டாள்.. வாசலில் படுத்திருந்த கயிலைநாதனை உலுக்கி எழுப்பியவள்..

"தசரதன் எங்கேங்க..?" என்று கேட்டாள்..



"ஜாமத்திலயே வந்துட்டானே.. உள்ளாரதான் தூங்க வந்தான்.." கயிலைநாதன் தூக்கக் கலக்கத்துடன் சொன்னார்...

"உள்ளார இல்ல..."

"அப்ப.. குளிக்கிறதுக்கு மோட்டார் ரூமுக்கு போயிருப்பான்.. இது ஒரு கேள்வியா..? தூங்க விடுடி.."

"தூங்கித்தூங்கி என்னத்தைக் கண்டிங்க..?"

"அதான்.. ரெண்டு புள்ளகளை கண்டிருக்கேனில்ல.. அது போதும்டி..."

"அடச்சீ.. வீட்டில வயசுப்பொண்ணு இருக்கு.. நினைப்பில இருக்கட்டும்... விடிஞ்சும் விடியாம இருக்கிறப்ப.. பேச்சப் பாரு பேச்ச.. மகன் கல்யாணம் பண்ணி புள்ள பெத்துக்கிற வயசில நிக்கிறான்.. இவரு இப்பத்தான் புள்ளய பெத்த கதையைச் சொல்றாரு.. ராத்திரி பூராவும் மயலில் தண்ணி கட்டின எம்மகன்.. விடியக் காலையிலேயே வயலைத் தேடிக்கிட்டு போயிருக்கானேன்னு நான் கிடந்து அல்லாடறேன்... இவரு சரசம் பேசறாரு.. சரசம்..?"

பாரிஜாதம் புலம்பியபடியே வாசலைத் தெளித்துப் பெருக்கி.. கோலம் போட்டாள்.. வீட்டுக்குள் வந்து சாரதாவை எழுப்பி விட்டு.. காபி போடப் போனாள்..

வாசலில் படுத்திருந்த கயிலைநாதன்.. பாரிஜாதத்தின் சப்தத்தில் எழுந்து.. பால்சொம்புடன் பால் கறக்கப் போனார்.. அடுக்களைக்குள் பால் பாத்திரத்துடன் அவர் போன போது.. காபியை இறக்கி வைத்துவிட்டு காலைப் பலகாரத்திற்கான ஆயத்த வேலைகளை ஆரம்பித்திருந்தாள் பாரிஜாதம்...

'இனித் தூங்க முடியாது...' ஏக்கப் பெருமூச்சுடன் வாசல் பக்கமிருந்த வேப்பமரத்துக்கு வேப்பங்குச்சியை நாடிச் சென்றார் கயிலைநாதன்...

"தங்கச்சி..." வாசல் பக்கம் சப்தம் கேட்டது...

"ம்ஹீம்.. இந்த வீட்டில காபித்தண்ணியக் கூட நிம்மதியாக் கலக்கிக் குடிக்க முடியல..." எரிச்சலுடன் வாசல் பக்கம் சென்றாள் பாரிஜாதம்...

"உரமூட்டை பத்தலை.. தசரதன்கிட்டக் கேட்டேன்.. காலையில வீட்டுக்கு வாங்க மாமான்னு சொல்லுச்சு.. தசரதன்.. எங்கேம்மா..?" சரவணனின் அப்பாவான சொக்கலிங்கம் நின்று கொண்டிருந்தார்...

"அவன் வயலுப் பக்கம் போயிருக்காண்ணே..." பாரிஜாதம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே.. சைக்கிள் மணியோசை கேட்டது...



"அப்பா நீங்க.. இங்கேயா இருக்கீங்க..." சரவணன் வந்து இறங்கினான்..

"என்னடா..?"

"ஒரு ஐயாயிரம் பணம் வேணும்..."

"எதுக்கு..."

"கடையை விரிவு பண்ணத்தான்..."

"பொறு.. தசரதன் வந்ததும் உரமூட்டையை வாங்கிக்கிட்டு வீட்டுக்குப் போகலாம்.. போனதும் அலமாரியில பணம் இருக்கான்னு பாக்கறேன்..."

"அங்கே இல்ல..."

"அதையும் திறந்து பார்த்திட்டியா...?"

தந்தையும்.. மகனும் பேசியபடி வீட்டுக்குள் சுவாதீனமாக நுழைந்து நாற்காலிகளில் உட்கார்ந்து விட்டார்கள்... காலைக் காப்பிக்கு இரண்டு ஆள்கள் கூடியாகி விட்டதா என்ற எரிச்சலுடன் பாரிஜாதம் சமையலறைக்குள் நுழைந்தாள்...

# 14



சொக்கலிங்கத்துக்கும்.. சரவணனுக்கும் காபித் தம்ளர்களை கொடுத்துக் கொண்டிருக்கும் போதே.. வாசலில்...

"மதனீ.." என்ற சத்தம் கிளம்ப...

'போச்சுடா.. இப்ப யாரு வந்திருக்கது...' என்ற அலுப்புடன் வாசலை எட்டிப் பார்த்தாள் பாரிஜாதம்...

"என்னா மதினி அப்படிப் பாக்கற..? அண்ணன் வீட்டில இல்லையா...?" ரங்கம் கேட்டாள்...

அவள் கயிலைநாதனின் சித்தப்பா மகள்.. அதே ஊரில் அடுத்த தெருவில் வாழ்க்கைப் பட்டிருப்பவள்...

"காத்து வாங்க வேப்ப மரத்துக்கு போயிருக்காரு..." எரிச்சலுடன் பேசினாள் பாரிஜாதம்...

"பல்லுத் தேய்க்கப் போயிருப்பாருன்னு சொல்லு.. உன் வீட்டில காத்துக்கா பஞ்சம்..? அது எப்படித்தான் குத்தால மலையிலே குளுகுளுன்னு இருக்கிறதப் போல உன் வீட்டிலே இருக்கோ..." வயிறெரிந்தாள் ரங்கம்...



"குத்தாலத்தை நான் எங்கே கண்டேன்..? உன் அண்ணனுக்கு வாக்கப்பட்டு வந்த நாள்ல இருந்து.. அல்லியூர்லதான் என் பொழப்புன்னு ஆகிப் போச்சு.. நீயென்ன விடிஞ்சும் விடியாம அண்ணனைத் தேடி வந்திருக்க...?"

"ஒரு யோசனை கேட்கணும்..."

பாரிஜாதத்துடன் பேசியபடி அடுக்களைக்குள் போய் விட்டாள் ரங்கம்.. காலையில் ஓசிக் காப்பி குடிக்க இது ஒரு சாக்கு என்ற நினைவுடன் அவள் கையிலும் காபித் தம்ளரைத் திணித்தாள் பாரிஜாதம்....

"நீ குடிச்சிட்டியா மதனி..."

"குடிக்கனும்னுதான் நினைச்சேன்.. எங்கே முடியுது..? போட்ட காபித் தண்ணியையெல்லாம் வீட்டுக்கு வந்தவகளுக்கு குடுத்தாச்சு.. இனிப் புதுசா போட்டுக் குடிக்க வேண்டியதுதான்..." குத்தலாகப் பதில் சொன்னாள் பாரிஜாதம்...

ரங்கம்.. அந்தக் குத்தலுக்கெல்லாம் அயர்கிற ஆளாகத் தெரியவில்லை.. அவள் காபியை ரசித்துக் குடித்தபடி...

"அது என்ன கணக்கா ரெண்டு டம்ளரு காபித் தண்ணியப் போட்ட..? எங்கண்ணன் வீட்டில அளவா ஆக்கிப் பழக்கமில்ல.. இங்கே எப்பப் பாத்தாலும் அடுப்பு எரிஞ்சுக்கிட்டு இருக்கும்.. வாக்கப்பட்டு வந்து ரெண்டு புள்ளகளயும் பெத்து வளத்துப்புட்ட.. இன்னும் இந்த வீட்டு வளமையைக் கத்துக்கலியாக்கும்..?" என்று கேட்டாள்...

'ஓசிக் காபியைக் குடிச்சுட்டு இவ ஒம்போது வீட்டுக்கு வளமை சொல்லித் தருவா...'

எரிச்சலுடன் அடுப்பிலிருந்த இட்லிக் குண்டானை 'ணங்' கென்ற சப்தத்துடன் இறக்கி வைத்தாள் பாரிஜாதம்...

"என்னா மதினி.. இட்லியா சுடற...?"

ரங்கத்தின் கேள்விக்கு ஆமாம் என்று பாரிஜாதம் பதிலைச் சொல்வதற்குள் காலைக் காப்பிக்காக சமையலறைக்குள் வந்த சாரதா...

"இல்லத்தை.. அம்மா இடியாப்பம் பிழிஞ்சிருக்கு..." என்று சொல்லி விட்டாள்...

'போச்சுடா.. இவ காப்பியோட கழண்டுக்குவான்னு பாத்தா எம்மக.. இடியாப்பம் வரைக்கும் இழுத்து



விட்டுட்டாளே...' மானசீகமாக தலையில் கை வைத்துக் கொண்டாள் பாரிஜாதம்...

ரங்கத்துக்கு இடியாப்பம் படைப்பதில் பாரிஜாதத்திற்கு ஒன்றும் ஆட்சேபமில்லை.. அந்த இடியாப்பத்தை அவளுக்கு மட்டுமில்லாமல்.. அவள் குடும்பத்திற்கே சேர்த்து பெரிய பாத்திரத்தில் போட்டுக் கொடுத்து விட அவள் தயார்தான்.. ஆனால் அதை வாங்கிக் கொண்டு ரங்கம் இடத்தைக் காலி செய்து விடவேண்டும்...

அவள்தான் அப்படிச் செய்ய மாட்டாளே.. அங்கேயே உட்கார்ந்து பாரிஜாதத்தின் வீட்டு விவரங்களை அலசிக் கரைத்துக் குடிக்க வேண்டுமென்று ஆசைப்படுவாளே.. அதற்கு ஒரு வாய்ப்பைத் தேடித்தானே காலைக் காபிக்காக பாரிஜாதத்தின் வீடு புகுந்திருக்கிறாள்...

மற்ற நாள்கள் என்றால் கூட ரங்கத்தை பாரிஜாதம் சகித்துக் கொள்வாள்.. இப்போதோ.. நாராயணமூர்த்தி மகளுடன் விருந்தினராக அவள் வீட்டில் தங்கியிருக்கிறார்.. இந்தச் சமயத்தில் ரங்கம் போன்ற ஆள்களை வீட்டுக்குள் நடமாட விட்டால் அது சரி வருமா..?

அதற்காக மற்றவர்களை வீட்டுக்குள் வரவிடாமல் ஐந்து நாள்கள் காபாந்து பண்ணி விட்டாள்.. இது ஆறாவது நாள்.. இன்னும் இரண்டு நாள்கள் தாண்டி விட்டால் போதும்.. வெற்றிகரமாக நாராயணமூர்த்தியையும்.. வெந்நிலாவையும் சென்னைக்கு அனுப்பி வைத்து.. அவர்களை சீரும்.. சிறப்புமாக பார்த்துக் கொண்ட பெருமையை தக்க வைத்துக் கொண்டு விடுவாள்...

அவளே இப்படியான நெருக்கடியில் சிக்கியிருக்கும் போது.. ரங்கம் இடியாப்பத்தை சாக்கு வைத்து அந்த வீட்டுக்குள் இன்னும் இரண்டு மணி நேரத்தை கழிக்க இடம் கொடுக்கலாமா...?

"இடியாப்பமா..? மதினி கையால செஞ்ச இடியாப்பத்தைச் சாப்பிட்டு எம்புட்டு நாளாச்சு..." அதுவரை நின்றபடி காபியைக் குடித்துக் கொண்டிருந்த ரங்கம் சட்டென்று சமையலறை சுவரில் சாய்ந்து கால்நீட்டி வாகாக அமர்ந்து கொண்டு விட்டாள்...

அவள் உட்கார்ந்த விதத்தைக் கண்ட பாரிஜாதத்திற்கு பற்றிக் கொண்டு வந்தது.. அப்படியே இட்லிக் குண்டானைத் தூக்கி ரங்கத்தின் தலையில் போட்டு விடலாமா என்று கூட ஒர்கணம் யோசித்தாள்..



அதற்குப்பின் ஏற்படக்கூடிய பின் விளைவுகளை நினைத்து அந்த யோசனையை கை விட்டு விட்டாள்...

"இடியாப்பம் எங்கே ஓடிறப் போகுது ரங்கம்..? நீ உன் வீட்டைப் பார்த்துப் போ.. இடியாப்பமும் பின்னாடியே உன் வீட்டைப் பார்த்து வரும்..." அவளைக் கிளப்புவதில் குறியாக இருந்தாள் பாரிஜாதம்...

"உனக்கெதுக்கு மதினி வீண்சிரமம்..? உம்மக பள்ளிக்கூடம் போவாளா...? இல்ல இடியாப்பத்த சுமந்துக்கிட்டு என் வீட்டுக்கு வருவாளா..? நானு இங்னயே இருந்து ரெண்டு இடியாப்பத்த பிய்ச்சு வாய்க்குள்ள போட்டுக்கிட்டு போயிடுறேன்..." ரங்கம் எழுந்திருக்கும் வழியாக இல்லை..

இரண்டு இடியாப்பத்துடன் எழுந்து கொள்கிறவளா இவள் என்ற ஆத்திரக்கனல் பாரிஜாதத்தின் அடிவயிறில் மூண்டது...

"சொன்னாக் கேளு.. ரங்கம்.. இடியாப்பம் பிழிஞ்சு வைச்சுட்டா மட்டும் போதுமா..? அதுக்கு தேங்காய் பாலும்.. குருமாவும் செய்ய வேணாமா..?" எரிச்சலுடன் கேட்டாள் பாரிஜாதம்...

"இன்னுமா நீ அதைச் செய்யலை..?" என்ற ரங்கத்தின் கேள்வியில் பாரிஜாதத்திற்கு கொலைவெறியே வந்துவிட்டது...

"இன்னுமான்னா..? இப்பத்தான் ஜாமக்கோழி கூவி முடிஞ்சிருக்கு.. விடிஞ்சும் விடியாத கருக்கல் பொழுதில வந்து உக்காந்துக்கிட்டு இன்னுமான்னு கேட்டா... என்ன அர்த்தம்..? எனக்கென்ன ஏழு கையா இருக்கு..? தூங்கி எந்திரிச்சவுடனே குறுக்கை சாய்க்க என்வீடுதான் உனக்குக் கிடைச்சுச்சா...?"

"கோவிச்சுக்காதே மதினி.. எதுக்கு நீ சளைச்சுக்கற..? அந்த தேங்காயை என்கிட்டக் குடு..."

"எதுக்கு..? உடைச்சு.. உள்ள இருக்கிற தண்ணியக் குடிச்கிட்டு.. தேங்காயையும் சேத்து காலி பண்றதுக்கா..?"

"அட என்ன மதினி நீ.. குதர்க்கமாவே பேசற.. அதைத் துருவி ஆட்டித் தர்றேன்.. நீ பாதியை இனிப்புப் போட்டு பாலா வைய்யி.. மீதியை குருமாவில ஊத்து..."

"எல்லாம் நாங்க பாத்துக்குவோம்.. நீ இடத்தை காலி பண்ணு.. கொஞ்ச நேரம் கழிச்சு உன் அண்ணன் உன் வீட்டுக்கு இடியாப்பத்த சுமந்துக்கிட்டு வருவாரு..."



"அண்ணனை எதுக்கு வேலை வாங்கற..?"

"உன்ன மாதிரியான தங்கச்சி கூடப் பொறந்திருக்காருல்ல.. அதுக்காகத்தான்.. வேலை வாங்கறேன்.. உன் அண்ணன் மக பள்ளிக்கூடம் போக வேணாமா..?"

"சும்மாயிரு மதினி.. எனக்காக எதுக்கு நம்ம குடும்பத்தில இருக்கிறவங்க சட்டியை சுமக்கனும்..?"

"அப்ப.. வேணாம்கறியா..?"

"அதை நான் சுமக்கறேன்கறேன்..."

"அதானே பார்த்தேன்.. அந்தச் சட்டியை அப்புறமாய் வந்து எடுத்துக்கிட்டு போ ரங்கம்..."

"அது என்ன கழுதைக்கு..? இங்கேயே இருந்து உனக்கு கூடமாட ஒத்தாசை செய்து.. ரெண்டு இடியாப்பத்த பிய்ச்சு வாய்க்குள்ளார போட்டுட்டு அப்புறமா... சட்டியில எடுத்துக்கிட்டுப் போறேன்..."

'கொடுத்துக்கிடுத்து வைச்சிருக்காளா...?' கண் சிவந்தாள் பாரிஜாதம்...

'இவ என்ன மாவரைச்சிட்டு வந்தாளா..? இட்டிலிக் குண்டானை எடுத்து அடுப்பில் வைச்சாளா..? மாவைப்

பிணைஞ்சாளா..? இல்ல.. அதை உலக்கில போட்டு இடியாப்பம்தான் பிழிஞ்சாளா..? இவ எனக்கு.. மாமியா..? அத்தையா..? சுரணை கெட்டவளே...'

வீரபாண்டியன் பேசிய வசனங்களை விட அதிகமான வசனங்களை மனதுக்குள் உச்சரித்துக் கொண்டிருந்தாள் பாரிஜாதம்.. அவள் முகம் ஜிவுஜிவுவென சிவந்திருந்த அந்த வேளையில் காலைக் காபிக்காக வீட்டுக்குள் வந்தார் கயிலைநாதன்...

"அடடே.. சொக்கலிங்கமா..? என்னப்பா சரவணா.. விடிஞ்சும் விடியாம அப்பாவ துணைக்கு கூப்பிட்டுக்கிட்டு உன் சேக்காளிய பாக்க வந்தியா..? இன்னும் பேய் பயம் போகலியா..?" சாரதாவின் முன்னால் சரவணனை வாரினார் கயிலைநாதன்...

"களுக்" கென்று சத்தமாக சாரதா சிரித்து வைத்ததில் சரவணனின் ஆண்மை சிலிர்த்துக் கொண்டது...

அவன் சிநேகிதனைப் பார்க்க வரவில்லை.. அந்தச் சாக்கில் அந்த வீட்டில் தங்கியிருந்த அப்சரஸை பார்க்க வந்தான்.. அது தெரியாமல் கயிலைநாதன் கேலி செய்ததில் அவனுடைய தன்மானம் துயர் கொண்டது...



"இல்ல.. மாமா.. நான் அப்பாவைத் தேடி வந்தேன்.."

"அப்ப.. நீ.. உன் அப்பன்கூட வரலையா...?"

"ஊஹும்.. அப்பாதான் தசரதனைத் தேடி வந்தாரு.. நான் அவரைத் தேடி வந்தேன்..."

"என்னடா இது..? விடிஞ்சும் விடியாம ஒரே தேடல் கதையா இருக்கு..? ஆமா.. தசரதன் இன்னுமா வயக்காட்டில இருந்து வரலை..?"

கயிலைநாதன் சமையலறையைப் பார்த்துக் கேள்விகேட்டார்.. எட்டிப் பார்த்த பாரிஜாதம் வெட்டி விடுவதைப் போல முறைத்தாள்...

## 15



'என்ன.. இப்படிப் பார்த்து வைக்கிறா...?'

கயிலைநாதன் உஷாரானார்.. பாரிஜாதத்தின் அந்த மாதிரியான பார்வைகளின் பின் புலங்களைப் பற்றிய வரலாற்று நிகழ்வுகளை நினைத்துப் பார்த்தவருக்கு.. இன்றைய பார்வையின் பின்புலம் எது என்று கண்டறிய முடியவில்லை..

'ஒருவேளை.. சொக்கலிங்கம் வந்திருக்கிறதுனால முறைக்கிறாளோ...' என்று நினைத்தவர்...

'சீச்சீ.. இருக்காது...' என்று மனம் தெளிந்தார்...

சொக்கலிங்கம் பாரிஜாதத்தின் மரியாதைக்குரிய மனிதர்.. அவர் பெற்ற திருமகனான சரவணன் கொஞ்சம் தத்து பித்தென்று இருக்கிறவன்தான் என்றாலும்... அவனும் பாரிஜாதத்தின் ஆழ்ந்த வெறுப்பிற்கு ஆளாகிறவன் அல்ல...

'வேற என்னவாயிருக்கும்...' என்ற நினைவுடன்...

"காபித் தண்ணி குடிச்சீங்களா..?" என்று வந்திருந்தவர்களிடம் விசாரித்தார்...

"அதெல்லாம் அப்பவே.. எங்க தலையைக் கண்டதும் தங்கச்சி கொடுத்திருச்சு.." பாரிஜாதத்திற்கு நற்சான்றிதழ் வழங்கினார் சொக்கலிங்கம்..

"அப்படியா மச்சான்.. இருங்க.. நானும் கொஞ்சம் காபித்தண்ணிய ஊத்தி தொண்டய நனைச்சுக்கிட்டு வந்துடறேன்.." கயிலைநாதன் மனைவியை நாடிச் சென்றார்...

"அண்ணே..."



சமையலறையில் சட்டமாக கால் நீட்டி அமர்ந்திருந்த ரங்கத்தைக் கண்டதும் தான் அவருக்கு விவரம் புரிந்தது...

"என்னம்மா.. இந்தப் பக்கம்..?"

"உங்களத்தான் பார்க்க வந்தேன் அண்ணே.. அப்படியே மதினி கையாலே காபித்தண்ணிய வாங்கிக் குடிக்கலாம்ன்னு அடுப்பாங்கரைக்குள்ள வந்தேனா.. மதினி இடியாப்பம் பிழிஞ்சுக்கிட்டு இருக்கிறதைப் பாத்துப் புட்டேன்..."

'இதுதானா விசயம்...'

கயிலைநாதனால் பாரிஜாதத்தை கண்கொண்டு பார்க்க முடியவில்லை.. எப்படித்தான் அவர் வீட்டில் விசேச சமையல் நடந்தால் ரங்கத்தின் மூக்கில் வியர்த்து விடுகிறது என்ற மர்மம் அவருக்கு பிடிபடவில்லை...

'இந்த ஐந்து நாளா எப்படி விட்டு வைச்சிருந்தா...'

"ஊருக்குப் போயிருந்தேண்ணே.." ரங்கம் விளக்கம் சொன்னாள்..

'அதானே பாத்தேன்.. அதனாலதான் என்னால ஐஞ்சு நாளும் தப்பிக்க முடிஞ்சுதா...' பல்லைக் கடித்தாள் பாரிஜாதம்...

"நேத்து ராத்திரி.. பத்துமணி க்டைசி பஸ்ஸிலதான் வந்து இறங்கினேன்.. வீட்டுல சொன்னாரு..."

"என்னான்னு..?" கயிலைநாதனுக்கு விளங்க வில்லை..

கடைசிபஸ்ஸீல் வந்து இறங்கியவளிடம் சொன்ன செய்தியில் விடிவதற்குள் ரங்கம் விசாரிக்க வந்திருக்கிறாள் என்றால் அவர் வீட்டில் அப்படி என்ன நிகழ்ந்து விட்டது..?

"பக்கத்து ஊரு அரண்மனை வீட்டுக்காரரு உங்க வீட்டிலதான் தங்கியிருக்காராமே..."

'இதுக்குத்தானா..' வெறுத்துப் போய் விட்டார் கயிலைநாதன்.. அவரால் மனைவி இருக்கும் திசைப்பக்கம் திரும்பக்கூட முடியாமல் போய்விட்டது.. ஏன் இறைவா இந்த ரங்கத்தை எனக்கு சித்தப்பா மகளாக படைத்தாய் என்று இறைவனை அவர் மனதிற்குள் கேட்க ஆரம்பித்தார்..

"அந்தப் பொண்ணு அதான்.. அரண்மனை வீட்டுக்காரரோட மக.. அழகுன்னா அழகு.. அப்படியொரு அழகாமே.. இந்த எட்டுப்பட்டியிலேயே. அப்பேறபட்ட அழகான பொண்ண பாக்க முடியாதாமே..."

"யாரு சொன்னா..?" எரிச்சலுடன் கேட்டார் கயிலைநாதன்...



"இந்த ஊரே சொல்லுதாமே..."

"ஆமாம்மா.. உன் வீட்டுக்காரனை பிடிச்சு வைச்சு இந்த ஊர் சொல்லுச்சு.. அட எம்மா.. விட்ட விடி காலையிலே கடுப்பக் கிளப்பற..? ஐஞ்சு நாளா ஊருக்குப் போயிருந்தவ.. வீட்டில என்னாச்சு.. ஏதாச்சுன்னு பாப்பியா.. அத விட்டுட்டு.. அரண்மனை வீட்டுக் கதய பேசக் கிளம்பிட்ட.. ஏய்.. காபித் தண்ணிய குடுடி.."

ரங்கத்தைத் திட்டியபடி மனைவியிடம் கேட்டார் கயிலைநாதன்...

"ஊம்..? இருந்தாத்தானே குடுக்கிறதுக்கு..." பாரிஜாதம் நெற்றிக் கண்ணைத் திறந்தாள்....

"இல்லாம எங்கே போச்சு...?"

'வந்திருக்கிறவங்க வயித்துக்குள்ள போச்சு...'

கடுப்புடன் அடுப்பில் பாலை வைத்து காய்ச்ச ஆரம்பித்தாள் பாரிஜாதம்.. வக்கணையாக அமர்ந்திருந்த ரங்கம் கயிலைநாதனின் கோபத்தைக் கண்டு வாய்மூடி விடவில்லை..

"ஏன் மதினி.. அவுக காபி சாப்பிட்டாகளா..?"

"எவுக..?"

"அதான் அரண்மனை வீட்டுக்காரக..."

"இல்ல.."

"அதானே.. அவுகள்ளாம் நேரம் கழிச்சுத்தான எழுந்திருப்பாங்க.. ஏன் மதினி..."

"இப்ப என்ன..?"

"நான் கொண்டு போயி கொடுக்கட்டுமா..?"

"எத..?"

"நீ போட்டுக் கொடுக்கிற காபித்தண்ணியத்தான்..."

"அதை உன் வீட்டில போட்டுக் கொண்டாந்து கொடு..."

பாரிஜாதம் கனலைக் கக்கியபடி காபியை கலந்து முடித்தாள்.. இப்படிப்பட்ட இன்னலை சொந்தமாக கொண்டு பிறப்பெடுத்திருக்கும் கணவன் பக்கம் கோபத்துடன் ஒரு தம்ளரை நகர்த்தி வைத்தாள்.. இன்னொரு தம்ளரை சாரதாவிடம் கொடுத்தாள்.. அவள்..

"அண்ணனுக்கு..?" என்று கேட்டபடி குடிக்க ஆரம்பித்தாள்..

"அண்ணன் விடியக்காலமே வயலுப் பக்கம் போயிட்டான்.. இங்கே ஊருக்கே காபித்தண்ணிய



கொடுத்தாகுது.. பெத்த புள்ளைக்கு ஒருவாய் காபித்தண்ணிய குடுக்க முடியல..."

இந்தப் பேச்சுக்கெல்லாம் அசைவேனா என்று ரங்கம் புன்னகை அரசியாக பற்களைக் காட்டிக் கொண்டிருந்தாள்.. சாரதா காபித்தம்ளர்களை தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு மாடிக்கு போன போது...

"நானும் வரேன்.." என்று ஓடிப்போய் ஒட்டிக் கொண்டாள்...

"இவ வரலைன்னு இங்க யார் அழுதது..." நெற்றிக் கண்ணை திறந்தாள் பாரிஜாதம்...

"நானாடி வரச் சொன்னேன்..?" வழக்கமான கேள்வியைக் கேட்டார் கயிலைநாதன்...

"இத ஒன்னச் சொல்லிருங்க.. ம்ஹீம்.. அப்பவே எங்க அம்மா சொன்னதைக் கேட்டிருக்கனும்..."

எப்போது.. பாரிஜாதத்தின் அம்மா என்ன சொன்னாள் என்ற விவரம் கயிலைநாதனுக்குத் தெரியும்...

"மானாமதுரையில இருக்கிற என் மாமன் மகனைக் கட்டிக்கச் சொல்லுச்சு.. பாதகத்தி மக.. நான் கேட்டேனா..?"

இந்தப் பல்லவியைத்தான் திருமணம் ஆகி வந்த நாள்முதலாய்.. கயிலைநாதனிடம் மனத்தாங்கம் வரும் போதெல்லாம் அவள் சொல்லிப் புலம்புகிறாள்...

எது எப்படியிருந்தாலும்.. அவள் 'பாதகத்தி மக..' என்று அவளைச் சொல்லிக் கொள்வதின் மூலம் கயிலைநாதனின் மாமியாரை 'பாதகத்தி' என்பதில் அவருக்குள் ரகசிய சந்தோசம் உண்டு...

'அந்தம்மாவுக்கு என்னைவிட அந்த மானா மதுரைக்காரன் உசத்தியாப் போயிட்டானா..?'

"அப்பக் கேட்காட்டி என்ன.. இப்ப வேணும்னா ஓடிப் போய் உங்க அம்மா சொல்றதக் கேளு.."

"வாயைக் கழுவுங்க.. பேரன் பேத்தி எடுக்கப் போகிற சமயத்தில பேச்சைப் பாரு..."

"நானாடி பேசினேன்..?"

"அழகுத் தங்கச்சி கூடப் பொறந்திட்டு நியாயம் பேச வந்திட்டாரு.."

"அவ என் கூடப் பிறக்கலை.. அவளோட அப்பாதான் எங்கப்பா கூடப் பொறந்திருக்காரு..."



"இதையொண்ண சொல்லிருவீங்களே.. மாடிக்குப் போயிருக்கிற மகராசி வாயை வைச்சுக்கிட்டு சும்மா இருக்கனுமே.. என்ன வினையை இழுத்து வைக்கப் போறாளோ..."

பாரிஜாதம் சொல்லி வாயை மூடும் முன்னால்.. மாடியிலிருந்து..

"அம்மா..." என்ற சாரதாவின் அலறல்சத்தம் கேட்டது...

"சொன்னேனில்ல.." பாரிஜாதம் பதறிப் போனவளாக அடுப்பை மறந்து மாடிக்கு ஓடினாள்...

"என்னப்பா.. கயிலைநாதா.. என்ன ஆச்சு.." என்ற சொக்கலிங்கத்தின் கேள்விக்கு...

"தெரியலையே மச்சான்..." என்றபடி கயிலைநாதனும் மனைவியைப் பின் தொடர்ந்து ஓடினார்...

அவரைப் பின்தொடர்ந்து சொக்கலிங்கமும்.. அந்தச் சாக்கில் மாடியிலிருக்கும் அப்சரஸைப் பார்த்து விடலாமே என்று சரவணனும் ஓடினார்கள்...

மாடியறையில் போய் பார்த்த அனைவரும்..

"ஆ.." வென்று வாய் பொத்தி நின்று விட்டார்கள்...

அங்கே தசரதனின் அறையில்.. பெரிய கட்டிலில்.. தசரதனும்.. வெந்நிலாவும்.. ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து.. கைகளை ஒருவர் மீது ஒருவர் போட்டு.. கால்கள் பின்ன கட்டிப் பிடித்தபடி படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்..

"ஏன் மதினி.. இதுதானே நம்ம தசரதன்..?"

முதலில் வாயைத் திறந்து கேள்வி கேட்டது ரங்கம்தான்.. பாரிஜாதத்தால் பதில் சொல்ல முடியவில்லை...

"மாடிக்கு உன்மகன அனுப்பி வைச்சுட்டுத்தான் அவன் வயலுக்குப் போயிருக்கிறதா வியாக்கினம் சொன்னியாக்கும்..?" அடுத்த கணையைத் தொடுத்தாள்..

"பாரு ரங்கம்.. நானே பதறிப் போயிருக்கேன்.. இதில நீ வேற பேரு கட்டி விடாதே..." பாரிஜாதத்தால் பேசக் கூட முடியவில்லை...

"இதப் பாருடா.. கண்ணுக்கு முன்னால மகனிருக்க கோலத்தப் பார்த்துப்புட்டும் எம்மதினி பேரு கட்டி விடாதேன்னு சொல்கிறத.." ரங்கம் எகத்தாளம் பேசினாள்..



"என்னப்பா கயிலை.. உம்மகன் வயலுக்குப் போயிருக்கிறதாத்தானே நீயும்.. தங்கச்சியும் சொன்னீங்க..?" சொக்கலிங்கம் படுக்கையைப் பார்க்கச் சங்கடப்பட்டுக் கொண்டு முகத்தை திருப்பிக் கொண்டார்...

"அப்படித்தான் நினைச்சுக்கிட்டு இருந்தோம் சொக்கா..." கயிலைநாதனுக்கு பேச்சு வரவில்லை...

"எல்லோரும் கூடிக்கூடிப் பேசறதை நிறுத்தி விட்டு அவங்களை எழுப்பற வழியைப் பாருங்க..." வயிற்றெரிச்சலுடன் சொன்னான் சரவணன்..

அவனும்தான் சரிதா டீச்சருக்கு சம்பளமில்லாத சேவகனாக.. சேவகம் செய்து பார்க்கிறான்.. ஆனாலும் அவளின் நிழலைக் கூடத் தொட முடியவில்லை.. இங்கே என்னவென்றால் அரண்மனை வீட்டின் அப்சரஸின் மீது கை போட்டே தசரதனால் துயில் கொள்ள முடிகின்றது என்றால்... இந்தக் கொடுமையை சரவணன் எங்கே போய் சொல்லுவான்...?

# 16



சரவணன் சொன்ன பின்புதான் அவர்களை எழுப்பியாக வேண்டும் என்ற நினைவே மற்றவர்களுக்கு வந்தது.. கண்முன்னால் பார்த்துக் கொண்டிருப்பது கனவா.. அல்லது பிரமையா என்ற சந்தேகத்துடனிருந்த பாரிஜாதத்திற்கும்.. கயிலைநாதனுக்கும்.. அது நனவாக இருக்கக்கூடும் என்ற நினைவே வரவில்லை...

“இந்த அழகுத் திருக்காட்சிய.. அரண்மனை வீட்டுக்காரரும் பாக்கட்டும்ன்னு மதினி நினைக்குது போல...” ரங்கம் கேலியாகச் சொன்னாள்...

‘கடவுளே.. அண்ணன் மட்டும் இதைப் பார்த்துட்டா..’ பாரிஜாதம் அரண்டு போனாள்...

“ஏங்க.. அவனை எழுப்பி விடுங்க...” கணவனிடம் சொன்னாள்...

“நானா..? எப்புடிடீ..?”

அருகில் வெந்நிலாவும் படுத்திருக்கிறாளே என்ற நினைவில் கயிலைநாதன் தயங்கினார்..



அதையறியாமல் சரவணனின் பக்கமாக பாரிஜாதம் திரும்ப.. சொக்கலிங்கம் மகனைத் தடுத்து விட்டார்...

“நீயிரு சரவணா.. பக்கத்தில அந்தப் பொண்ணும் இருக்கு...”

“எனக்கு தங்கச்சி முறைதானப்பா..?”

“இருக்கட்டும்.. ஆனாலும் நீ எழுப்ப வேணாம்...”

“ஏன் மதினி.. எதுக்காக இம்புட்டு யோசனை யோசிக்கிற..? நான் வேணும்ன்னா.. எழுப்புறதுக்கு ஊருக்குள்ளே போயி நாலு ஆளுகளை கூப்பிட்டுக்கிட்டு வரவா..?” ரங்கத்தின் கேள்வியில் அதைச் செய்து முடித்து விடும் தீவிரம் இருந்தது...

‘நீ அதைத்தானடி செஞ்சு வைப்ப..’ பாரிஜாதம் அக்கினி பறவையானாள்...

“செய்யி ரங்கம்.. அதுக்குத்தானே என் வீட்டில வந்து கோழிக்குழம்பில இருந்து.. வத்தக்குழம்பு வரைக்கும் கொட்டிக்கிட்டு போற.. தின்ன வீட்டுக்கு உன்னால முடிஞ்ச கெட்டதை செய்யலைன்னா உன்னால நிம்மதியா கண்ணுறங்க முடியுமா..?”

ரங்கத்தை அவள் சாடிக் கொண்டிருந்த போது..

"இங்கே என்ன சத்தம்..?" என்ற சத்தம் அவர்களுக்கு பின்னாலிருந்து கேட்டது...

'கடவுளே..! இது அரண்மனை வீட்டு அண்ணனோட சத்தமாச்சே..' பாரிஜாதம் நடுங்கி விட்டாள்...

எது நடக்கக்கூடாது என்று அவள் நினைத்தாளோ.. அது நடந்தே விட்டது..

அவர்கள் பேசின சப்தத்தில் நாராயணமூர்த்தியின் தூக்கம் கலைந்து விட்டது.. எழுந்து அமர்ந்தவர் யார் இந்த அளவுக்கு சப்தமாக பேசுகிறார்கள் என்று எட்டிப் பார்த்தார்.. அங்கே தங்கியிருந்த அந்த ஐந்து நாள்களில் மாடிப்பக்கம் தேவையில்லாமல் யாரும் வந்ததில்லை...

வெளியே பார்த்தவருக்கு வெந்நிலாவின் அறையின் முன்னால் கூடியிருந்தவர்கள் கண்ணில் பட்டுவிட.. மகள் தங்கியிருக்கும் அறையின் முன்னால் நின்று கொண்டு இவர்கள் எதற்காக கூப்பாடு போடுகிறார்கள் என்ற கோபத்துடன் வெளியே வந்துவிட்டார்....

"அண்ணே..." பாரிஜாதம் பதறித் திரும்பினாள்..

அவளுடைய அந்தப் பதட்டத்தைக் கண்டவரின் புருவங்கள் சுருங்கின.. எதுவோ நடந்திருக்கிறது என்று



அவரது அறிவு சொல்லியதில் அவர் அவர்களுக்கு அருகே வந்தார்..

"என்னம்மா பாரிஜாதம்..? என்ன விசயம்..?"

தன்மையாக கேட்டுக் கொண்டிருந்தவரிடம்..

"அத.. நீங்களே திரும்பிப் பாருங்க.." என்று தேங்காயை உடைத்ததைப் போலச் சொல்லிவிட்டாள் ரங்கம்...

எதைத்திரும்பிப் பார்க்கச் சொல்கிறாள் என்று புரியாதவராக திரும்பிப் பார்த்த நாராயணமூர்த்தியின் ரத்த அழுத்தம் எகிறியது...

"என்னது இது.. நிலா.. நிலா..." அவர் அதிர்ச்சியுடன் கட்டிலை அணுகி மகளைத் தட்டி எழுப்ப முனைய...

"உக்கும்.. நிலா.. நிலா ஓடிவாங்கிறதைப் போலக் கொஞ்சினா பொண்ணு எழுந்திருக்குமா மாமா.. ஓங்கி ஒரு போடு போட்டா எழுந்திருக்கும்..." என்று சொன்னாள் ரங்கம்...

அவரிடம் சமதையாய் நின்று முகம் பார்க்கக்கூட அஞ்சுகிறவள் அன்று சரளமாக வாய் விட்டதை நாராயணமூர்த்தியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

சுற்றி நின்று அத்தனை பேரும் குரல் கொடுத்துக் கொண்டிருந்தும்.. அந்தக் குரல் காதில் ஏற வழியில்லாமல் ஆழ்ந்த நித்திரையிலிருந்த மகளை உலுப்பி எழுப்பி உட்கார வைத்தார் அவர்...

"ஹாய் டாட்.. குட்மார்னிங்.." கண்ணைக் கசக்கிய வெந்நிலா.. அவள் மீது கை போட்டு அருகே படுத்துத் துங்கிக் கொண்டிருந்தவனைக் கண்டதும் அதிர்ந்து விட்டாள்.. அவள் உடல் தூக்கிப் போட்டது...

'வாட் இஸ் திஸ்..' மனதில் நினைத்ததை வாய் விட்டுக் கேட்க முடியாமல் அதிர்ச்சியில் உறைந்து போனாள் வெந்நிலா...

அதற்குள் கயிலைநாதன் மகனை எழுப்பிவிட்டார். அவன் கண் விழித்துப் பார்த்து.. வெந்நிலாவைப் போல 'ஹாய்' சொல்லாமல் திரும்பவும் தூங்கப் போனான்..

அந்த நேரம் பார்த்து.. வெந்நிலாவின் மடிமீது கிடந்த அவன் கையை அவள் தள்ளிவிட்டதில் தசரதன் அவள் பக்கம் பார்த்து வைத்தான்.. பார்த்து வைத்தவனுக்கு தூக்கி வாரிப் போட்டது...

'என்னடா இது..! இவ என்கூட ஒரே கட்டிலில் உட்கார்ந்திருக்கா..' அவன் பதறி எழுந்தான்...



எழுந்த பின்னால்தான்ன அவனுக்கு அது உறைத்தது.. அவனும்.. வெந்நிலாவும்.. ஒருவரை ஒருவர் உராய்ந்தபடி அமர்ந்திருந்தனர்.. தசரதன் புரியாமல் விழித்தபடி கட்டிலை விட்டு இறங்கினான்...

"இந்நேரம் வரைக்கும்.. நாங்க.. எழுப்ப.. எழுப்ப.. மாமாமக மேல கை போட்டு படுத்துத் தூங்கிட்டு இப்ப எதுக்காக மருமகனே.. அவசரப்பட்டு இறங்கற..?" ரங்கம் கிண்டலாகக் கேட்டாள்..

'இவ மேல கை போட்டுத் தூங்கினேனா...'

வெந்நிலாவை எரிப்பதை போலப் பார்த்தான் தசரதன்...

'என் ரூமில.. முக்கியமா.. என் கட்டிலில் இவளுக்கென்ன வேலை..?'

பாரிஜாதம் கைகளைப் பிசைந்து கொண்டிருக்க.. கயிலைநாதன் கண்டிப்புடன் மகனை விசாரிக்க ஆரம்பித்தார்...

"தசரதா.. ஜாமத்தில தண்ணி கட்டிட்டு வந்ததும் கீழ் வீட்டிலதான நீ படுத்திருந்த.. இங்கே எப்படி வந்த..?"

"இல்லையேப்பா.. நான் நேரா மாடி ரூமுக்குத்தான் வந்தேன்.. கீழ் வீட்டில படுக்கவே இல்லையே..."

இவ்வளவு சொன்னால் பத்தாதா..? ரங்கத்தின் கண்கள் மின்னின...

"அப்படிப் போடு அருவாளை.." என்றாள் அவள்...

"ரங்கம்.." கயிலை நாதன் அதட்டினார்...

"என்னை எதுக்குண்ணே முறைக்கறிங்க.. அதுக்குப் பதிலா உங்க மகனை முறைங்க.. வளர்த்தாலும்.. கயிலைநாதனைப் போல புள்ளய வளக்கனும்னு ஊருக்குள்ள பேசிக்கிறாங்க.. உள்ள வந்து பாத்தாத்தானே வருணசலம் என்னன்னு தெரியுது.." அஞ்சாமல் பேசினாள் ரங்கம்...

அவள் மீதிருந்த கோபத்தை மகன் பக்கம் திருப்பினவராக ருத்ர அவதாரத்துடன் தசரதனிடம் திரும்பினார் கயிலைநாதன்...

"இப்படிச் சொல்ல உனக்கு வெட்கமாயில்ல..?"

"இதில வெக்கப்பட என்னப்பா இருக்கு..?"

"தசரதா..."

"எதுக்குப்பா கோபப் படறிங்க..? எப்பவும் போல என் ரூமுக்கு படுக்க வந்தேன்.. இதுக்குப் போயி பெரிய பெரிய பேச்சையெல்லாம் பேசறிங்களே..."



"உனக்குத்தான் உங்கம்மா ஜமுக்காளத்தை விரிச்சு வைச்சிருந்தாளே..."

"அப்படியா..? நான் பார்க்கலியே..."

"உன் அம்மா சொல்லலியா..."

"அம்மாவை நான் எழுப்பலப்பா..."

கயிலைநாதனுக்கு கண்களை கட்டிக் கொண்டு வந்தது.. என்ன நடந்திருக்கிறது என்ற விவரம் அவருக்கும் பிடிபட்டு விட்டது... பாரிஜாதத்திற்கும் பிடிபட்டு விட்டது..

தசரதன் மீது தவறில்லை.. ஆனால்.. அதை நாராயணமூர்த்தி ஏற்றுக்கொள்வாரா..?

அவருடைய மகளுடன் ஒரே கட்டிலில் படுத்துத் தூங்கி எழுந்திருத்திருக்கிறான் தசரதன்.. அவர் அதை சும்மா விட்டு விடுவாரா...?

"பாரிஜாதம்.." நாராயணமூர்த்தி கர்ஜித்தார்...

அவர் போட்ட சப்தத்தில் பாரிஜாதம் ஆடிப்போய் விட்டாள்.. என்னதான் பார்த்துப் பார்த்து அவள் செய்திருந்தாலும் கடைசியில் பழிச் சொல் வந்து விட்டதே..

"அண்ணே..."

"என்ன இது..? உன் வீட்டில் ஏன் தங்கினேன்..? நீ தாரதரம் தெரிஞ்ச பொண்ணு.. என் மகளுக்கு இங்கே தங்கறதுதான் பாதுகாப்புன்னு நினைத்துத்தானே தங்கினேன்...?"

"இது தெரியாம நடந்த தப்புண்ணே.. தசரதனுக்கு அவன் ரூமில வெந்நிலா தங்கியிருக்கிற விவரம் தெரியாது..."

"நீ ஏன் சொல்லலை...?"

"சொல்ல அவன் ஊரில் இருந்தாத்தானே அண்ணே..? நீங்க வந்த அன்னைக்கு அவனோட சிநேகிதன் வீட்டுத் திருவிழான்னு பக்கத்து ஊருக்குப் போனவன்.. நேத்துத்தான் வந்தான்...?"

"வந்தவுடனே சொல்லியிருக்கனுமா.. வேணாமா..?"

"அவன்தான் வீடு தங்காம வயலுக்கு தண்ணி பாய்ச்ச போயிட்டானே அண்ணே..."

இது சரியான பதில் அல்ல என்று நினைத்தார் நாராயணமூர்த்தி.. திட்டமிட்டு செய்து முடிக்கப்பட்ட சதியாக அவருக்குத் தோன்றிவிட்டது.. அதற்கேற்றார் போல ரங்கமும்..



"இது என்ன மதினி கதயா இருக்கு..? ஒத்த வீட்டுக்குள்ள சுத்திசுத்தி வர்றீங்க... உம்மகன் ரூமில அரண்மனைக்கார மாமாவோட மக தங்கியிருக்க விசயத்த மட்டும் சொல்லலைன்னு சொல்றிங்க.. நம்ப முடியலியே..", என்று தூண்டி விட்டாள்...

'அடிப்பாவி...' பாரிஜாதத்திற்கு நெஞ்சை அடைத்தது...

'கோழியும்.. மீனுமா வறுத்துப் போட்டேனே.. அத்தனையையும் ஓசியில வாங்கி உக்காந்து தின்ன நினைப்பில்லாம இவ பேசறாளே.. தின்ன நன்றி கூட இல்லாத ஜென்மமா.. இந்த ஜென்மம்..?'

## 17



"இதை நான் சும்மா விட்டு விட மாட்டேன்..."

போர் முரசு கொட்டினார் நாராயண மூர்த்தி.. சொக்கலிங்கத்திற்கு என்ன சொல்வதென்றே தெரிய வில்லை... அவர் யதார்த்தமாக அங்கே வந்தவர்தான்

என்றாலும்.. கயிலைநாதனை அந்த நிலைமையில் பார்த்தவருக்கு மனம் தாளவில்லை...

"சாரதாவும் ரங்கமும் சத்தம் போட்டதில் என்னவோ... ஏதோன்னு ஓடி வந்திட்டோம்.. இப்படின்னு தெரிஞ்சிருந்தா கீழேயே தேங்கி நின்னிருப்போம்..", குற்றம் செய்தவரைப் போல வருத்தம் தெரிவித்தார்..

"என்ன மாமா இது.. காலக் கொடுமையிலயும் பெருங்கொடுமையா இருக்கு.. தப்பு செஞ்சதெல்லாம் இவங்க.. அத பாத்தது ஒரு தப்புங்கிறதப் போல பேசி வைக்கறிங்க.. நல்லா இருக்கு உங்க நாயம்..", ரங்கம் நியாயம் பிளந்தாள்...

"கூறு கெட்டத்தனமா பேசாத ரங்கம்.. தசரதன் தங்கமான புள்ள.. அதுவே எம்மகன் சரவணனைச் சொல்லு.. அவன் வேணும்னே செய்கிற ஆளு.. தசரதன் அப்படியா..? இதுநாள் வரைக்கும் அவனைப் பத்தி தப்பா ஒரு சொல் வந்திருக்கா...?"

சொக்கலிங்கம் வாதாடிக் கொண்டிருந்த போது.. வெந்நிலா நிமிர்ந்து அவரைப் பார்த்தாள்.. அவள் பார்வையில் அவரின் பேச்சு நின்றது...



"ஸோ.. இந்த தசரதன் தப்பான ஆளில்லன்னு நீங்க சர்டிபிகேட் கொடுக்கறிங்க...?"

"அதுக்கில்லைம்மா..."

"ஹலோ.. இவர் என்னிடம் தப்பா நடந்துக்கலைன்னு உங்களுக்குத் தெரியுமா..?" அவள் நிதானமாகக் கேட்டாள்...

"வெந்நிலா..." நாராயணமூர்த்தி அதிர்ச்சியானார்...

"ஏய்..." தசரதன் ரௌத்ரமானான்...

"யாரைப் பார்த்து என்ன வார்த்தை சொல்ற..? என் ரூமில நீயிருக்கன்னு தெரிஞ்சிருந்தா இந்தப் பக்கம் நான் தலைவைத்துக் கூடப் படுத்திருக்க மாட்டேன்.."

தசரதன் சொன்னதைக் கேட்டு முகவாயில் கை வைத்த ரங்கம்...

"இதப் பாருடி என் மருமகன் பேசற பேச்ச.. மருமகனே..! இம்புடு நேரமும்.. நீ இந்தப் பொண்ணு தலைமேல தலை மோதத்தான் படுத்திருந்த.." என்றாள்..

"அத்த.. இது உங்களுக்கு தேவையில்லாத பேச்சு.."

"ஆத்தாடி.. இந்தக் கூத்தக் கேட்டிங்களா.. வயசுப் பொண்ணு கூட ஒரே படுக்கையில படுத்து எழுந்திருச்ச மகராசன் அதக் கையும் களவுமா பிடிச்சவங்க கிட்ட தேவையில்லன்னு சொல்லுதே..."

"என்னது.. கையும்.. களவுமா பிடிச்சீங்களா...?"

"ஆமா.. இத இங்கேயும் சொல்லுவேன்.. பஞ்சாயத்த கூட்டி அவங்க முன்னாடியும் சொல்லுவேன்.. ஆத்தாடி வெந்நிலா.. நீ விசனப்படாதே தாயி.. உனக்குச் சாட்சி சொல்ல நானிருக்கேன்..."

அத்தனை நாளும் அவளைக் கண்டவுடன் முகத்தை தூக்கி வைத்துக் கொண்ட பாரிஜாதத்தை அந்த நொடியில் பழிதீர்த்துக் கொண்டாள் ரங்கம்...

"பஞ்சாயத்தா..?"

நாராயணமூர்த்தி அந்த வார்த்தையையே பிடிக்க வில்லை.. நடந்திருப்பது தெரியாமல் நடந்த தவறு என்றுதான் அவருக்கும் தோன்றியது.. ஏனென்றால்.. அந்த அறையின் கதவு பூட்டப் பட்டிருக்கவில்லை.. எழுந்து கொண்ட இருவருமே இயல்பாக மற்றவர்கள் முகத்தைப் பார்த்து பேசிவிட்டு.. அதன் பின்னால்தான் அருகிலிருந்த மற்றவரைப் பார்த்தார்கள்..



அறியாமல் நடந்த தவறாக இருந்தாலும்.. பாரிஜாதம் அஜாக்கிரதையாக இருந்தது தவறு என்று தான் அவர் கோபம் கொண்டார்.. அவள் தசரதனிடம் அவனது அறையில் வெந்நிலா தங்கியிருப்பதை சொல்லியிருக்க வேண்டும்... அப்படிச் சொல்லாமல் விட்டதன் விளைவுதான் இது...

உண்மை நிலவரம் இதுவாக இருக்கும் போது எதற்காக வெந்நிலா பொய் சொல்கிறாள் என்று அவருக்குப் புரியவில்லை...

"எதையும் யோசித்துப் பேசனும் வெந்நிலா.. நாம வேண்டும்ன்னா.. இன்றைக்கே ஊருக்குக் கிளம்பலாம்.. அதை விட்டுட்டு பட்டுன்னு வாய்க்கு வந்ததைப் பேசி விடக் கூடாது..." மகளைக் கண்டித்தார் அவர்...

"நோ டாட்.. நான் சொல்வது உண்மைதான்..." வெந்நிலா பிடிவாதமாகச் சொன்னாள்...

என்னடா இது புதுவம்பு கிளம்புகிறது என்று கலவரப் பட்டுப் போனார் நாராயணமூர்த்தி..

அரண்மனை வீட்டுக்காரராய் இருந்தாலும்.. பெரிய பணக்காரராக இருந்தாலும்.. அவர் பெண்ணைப் பெற்றவர்.. வெந்நிலா சொல்லும் பழி அவளுக்குத்தான்

பாதகமாக வந்து முடியும்.. அவளுக்கு ஷியாமுடன் திருமணம் நிச்சயமாகியிருந்தது.. அவன் வெளிநாட்டில் வசிப்பவன்.. வெந்நிலாவிற்கு ஏற்றவன்...

இந்தச் சூழலில் இந்தப் பெண் பைத்தியம் போல எதையோ சொல்லி வைக்கிறாளே என்றிருந்தது அவருக்கு...

கட்டுக் கோப்பான ஷியாமின் குடும்பத்திற்கு இந்த விவரம் தெரிய வந்தால்.. வெந்நிலாவின் திருமணம் என்ன ஆகும்..?

"வாயை மூடு வெந்நிலா..."

"நோ டாட்.. இந்த தசரதனால் என் லைஃப் தலைகீழா மாறிப் போயிருச்சு..."

"பினாத்தாதே.. தெரியாமல் நடந்த தப்பு..."

"அதைத்தான் நானும் சொல்கிறேன் டாட்.. தெரியாமல் எங்களுக்குள் தப்பு நடந்து விட்டது..."

அவளை ஓங்கி ஒரு அப்பு அப்பலாமா என்று நாராயணமூர்த்தி யோசித்துக் கொண்டிருக்கும் போதே யோசிக்காமல் ஒரு அப்பு அப்பினான் தசரதன்...



"அம்மா..." கன்னத்தைப் பிடித்தபடி உட்கார்ந்து விட்டாள் வெந்நிலா..

"பொய் சொன்னே.. கொன்னுடுவேண்டி.." ஒற்றை விரலை உயர்த்தி தசரதன் எச்சரித்துக் கொண்டிருக்கும் போதே ரங்கம் வாயில் அடித்து பிலாக்கணம் வைத்தாள்..

"இந்தக் கொடுமைய கேக்கிறதுக்கு ஆளில்லையா..? சொந்தம்ன்னு சொல்லி நம்பிக்கையா தங்க வந்த அரண்மனை வீட்டுப் புள்ளய கெடுத்ததுமில்லாம அந்த பச்சை மண்ணை அடிச்சே கொன்னுருவான் போல இருக்கே..."

அவள் போட்ட சத்தத்தில் ஊர் கூடி விட்டது.. அடுத்ததாக எதைத் தடுக்க வேண்டும் என்று நாராயணமூர்த்தி நினைத்தாரோ.. அந்தப் பஞ்சாயத்தும் கூடிவிட்டது.. தசரதன் பஞ்சாயத்தில் நிறுத்தப்பட்டான்.. வெந்நிலா ஒரேயடியாக அவன் அவளைத் தொட்டு ஆண்டு விட்டான் என்று சாதிப்பாய் சாதித்து விட்டாள்.. அதற்குப் பரிகாரமாக அவளையே அவன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று சொன்னாள்...

தன் மகளுக்கு பைத்தியம்தான் பிடித்திருக்கிறது என்ற முடிவிற்கே வந்து விட்டார் நாராயணமூர்த்தி...

சுயபுத்தி உள்ள பெண் இப்பேற்பட்ட காரியத்தினை செய்து வைக்க மாட்டாள் என்பது அவரின் தீர்மானமாக இருந்தது..

ஷியாமைப் போன்ற ஒருவனுடன் திருமண நிச்சயதார்த்தம் முடிந்த பெண்ணாகப்பட்டவள்.. அதை முறித்துப் போடும் முடிவை எடுப்பாளா..?

"இந்தப் பொண்ணு சொல்றதும் நியாயம்தானே.. தசரதன் இந்தப் பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டறதுதான் நியாயம்.. இதுதான் பஞ்சாயத்தின் தீர்ப்பு..."

தசரதனாலேயே மீற முடியாமல் போய் விட்ட பஞ்சாயத்து தீர்ப்பில் அவனைவிட அதிகமாக மன உளைச்சலுக்கு ஆளானது சரவணன்தான்...

'இவன் பாட்டுக்கு.. படிப்புண்டு.. வயலுண்டுன்னு இருந்தான்.. இவனுக்கு தானா வந்து அரண்மனை வீட்டு அப்சரஸ் மாட்டுது.. நானும்தான் தினமும் லோலோன்னு ரோந்து சுத்தறேன்.. ஒருத்திகூட என்னைத் திரும்பிப் பார்க்க மாட்டேன்கிறாளே...' வயிறெரிந்தவன்...

"உனக்கு மச்சம்டா மச்சான்..." என்று தசரதனின் காதோரமாக முணுமுணுத்தான்..



பதிலுக்கு அவன் கொலைவெறியுடன் பார்த்து வைத்ததில் திகிலாகிப் போனவன் அவசரமாக வாயை மூடிக் கொண்டான்...

பாரிஜாதத்திற்கு வெந்நிலா மருமகளாக வருவதில் விருப்பம்தான் என்றாலும்.. அந்தத் திருமணத்தை.. இரு வீட்டாரும் நிச்சயிக்காமல்.. பஞ்சாயத்தில் நிச்சயித்ததில் கொஞ்சம்கூட உடன்பாடில்லை...

கயிலைநாதனின் முகத்தில் ஈயாடவில்லை.. தன் மகனின் திருமணம் இந்த முறையில் நடைபெறும் என்று கனவிலும் அவர் நினைத்துப் பார்த்ததில்லை...

வெறுப்பைக் கக்கும் விழிகளுடன் வெந்நிலாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான் தசரதன்.. நாராயண மூர்த்திக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை...

அது வெந்நிலாவாக தேடிக் கொண்ட வாழ்வு..!

எதனால் அவள் அப்படியொரு முடிவை எடுத்தாள் என்று அவருக்கு கொஞ்சம் கூட விளங்கவில்லை... அதற்கு மேல் அல்லியூரில் தங்கியிருக்கவும் அவரால் முடியவில்லை.. கிளம்ப முடிவு செய்தவர்.. மகளிடம் தனிமையில் விசாரித்தார்...

"உன் மனதிலே என்னதான் இருக்கு வெந்நிலா..?"

"நத்திங் டாட்..."

"எதற்கு இந்த முடிவு..?"

"அதான் சொன்னேனே.."

"அதை மத்தவங்க நம்பலாம்.. நான் நம்ப மாட்டேன்..."

வெந்நிலா மௌனமாக அவளுடைய துணிகளை சேகரித்து பெட்டியில் அடைத்தாள்..

"என்னம்மா செய்கிற...?"

"பார்த்தாத் தெரியலையா..? துணிகளை பேக் செய்றேன் டாட்..."

"இது எதற்கு..?"

"என்ன டாட் இப்படிக் கேட்கறிங்க..? நாம சென்னைக்கு கிளம்ப வேணாமா..?"

"நாங்கன்னா..?"

"நீங்களும்.. நானும்..."

வெந்நிலா இறுகிய முகத்தோடு சொன்னாள்.. நாராயணமூர்த்தியின் முகம் மாறியது.. அவர் மகளின் முகத்தை கூர்ந்து பார்த்தார்.. அதில் தெரிந்த கடினத்தில் அவர் நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்தன...



## 18



"நீ என்னுடன் வர முடியாது நிலா..."

"டாட்..."

வெந்நிலா அதிர்ந்து நிமிர்ந்தாள்.. நாராயணமூர்த்தி இப்படிச் சொல்லி விடுவாரென்று அவள் கொஞ்சம்கூட எதிர்பார்த்திருக்கவில்லை.. அவருக்கு அவள் ஒரே மகள்.. செல்லமகள்.. அந்த மகளை அவர்கூட வரவேண்டாமென்று அவர் சொல்கிறாரா...?

"உனக்கு கல்யாணம் ஆகி விட்டது நிலா.. இது நீ தேர்ந்தெடுத்த வாழ்க்கைதான்.. இனி இதுதான் உன்வீடு.. என்கூட நீ வரமுடியாது..."

வெந்நிலாவின் முகத்தில் ஆயிரமாயிரம் உணர்வலைகள் வந்து போயின.. அவளின் தந்தை சொன்ன வார்த்தைகளை ஜீரணித்துக் கொள்ள அவள் வெகுவாகச் சிரமப் பட்டாள்...

"என்னால இங்கேயெல்லாம் இருக்க முடியாது டாட்..."

"அதுக்கு என்னம்மா பண்றது..? நானா இந்த மாப்பிளையை செலக்ட் பண்ணினேன்..? நீதானேம்மா செலக்ட் பண்ணின...?"

"அப்படி ஆகி விட்டது டாட்..."

"ஊஹீம்.. எப்படியும் ஆகவில்லை.. நடந்தது அறியாத்தனத்தால் ஏற்பட்ட தவறு.. அதை பேசி சரிபண்ணியிருக்கலாம்.."

"ஒரே கட்டிலில் நாங்க தூங்கினதை இந்த ஊரே பார்த்தது டாடி..."

"டிரெயினில் ஏறுகிறோம்.. அதில் ஒரே பெட்டியில பர்தல ஒருத்தர்.. சீட்டில ஒருத்தர்ன்னு தூங்கிக்கிட்டு வருகிறது இல்லையா..? அது போலத்தான் இதுவும்.. சின்ன விசயம்.. நீ ஊதி பெரிசாக்கிட்ட...."

"நான் இங்கே இருக்க மாட்டேன் டாட்..."

"இங்கேதான் இருந்தாகனும்.. பாரு நிலா.. சென்னை வேற.. அல்லியூர் வேற.. சென்னையில் நான் ஒரு பணக்காரன்.. அவ்வளவுதான்.. என்னை விட பணக்காரங்களா அங்கே ஆயிரமாயிரம் ஆள்கள் இருக்கிறாங்க.. அங்கே என் வீட்டைப் பத்தி யாரும் பேச



மாட்டாங்க.. இங்கே அப்படியில்லை.. இந்த சுத்துப்பட்டிக் கிராமங்களுக்கு நான் அரண்மனை வீட்டுக்காரன்.. என் மகளுக்கு அல்லியூர் குடும்பத்தில் கல்யாணமாகி விட்டது.. அதுக்குப் பின்னால என் மக இங்கேயிருந்து பிழைக்காம சென்னைக்கு ஓடி வந்திட்டா அத்தனை ஜனமும் என்னை தூற்றி விடுவாங்க..."

"டாட்.. என்னைவிட இவங்க பேசறதுதான் உங்களுக்குப் பெரிசா போச்சா..?"

"நிச்சயமா.. என்னைவிட.. உன்னைவிட.. எனக்கு என் குடும்ப கௌரவம்தான் பெரிது.. என் பாட்டன்.. முப்பாட்டன் காலத்தில இருந்து மத்தவங்களாலே கௌரவமா பேசப்பட்டதுதான் என் குடும்பம்.. உன்னால அது மாறக்கூடாது..."

நாராயணமூர்த்தி கிளம்பிவிட்டார்.. போவதற்கு முன்னால் கயிலைநாதனின் முகம் பார்க்காமல் சுவரைப் பார்த்தபடி சொன்னார்..

"அவசரக் கல்யாணம்.. எதையும் முறையாய் செய்ய முடியலை.. ஒரு மாதம் போகட்டும்.. சென்னையில ரிசப்சன் அரேன்ஜ் பண்ணிடறேன்.. நீங்க குடும்பத்தோட

கிளம்பி வாங்க.. அதையே மறுவீட்டு விருந்தாகவும் வைத்துக்கலாம்..."

அவர் கடினமான முகத்துடன் பேசினாலும் அந்தத் திருமணத்தை ஏற்றுக் கொண்டு விட்டார் என்பதில் பாரிஜாதத்தின் முகம் பூவாய் மலர்ந்தது.. கயிலை நாதனின் இடுப்பில் முழங்கையால் இடித்துப் பதில் பேசச் சொன்னாள்.. சங்கடத்துடன் பதில் பேசினார் கயிலைநாதன்...

"அதுக்கென்னங்க.. நீங்க சொன்னதைப் போலவே செய்திடலாம்..."

"வெந்நிலா அதிகமா டிரெஸ் எடுத்துக்கிட்டு வரலை..."

"நாங்க வாங்கிக் கொடுக்கிறோம்..."

"தேவையில்லை.. சென்னைக்குப் போனதும் அவ பெட்டிகளை அனுப்பி வைக்கிறேன்.. மறுவீட்டு விருந்து முடிந்ததும் சீர்வரிசை வந்து சேரும்..."

"நாங்க கேட்கலையே..."

"நான் கொடுத்தாகனுமே..."



வெந்நிலாவின் கோரிக்கையை நிராகரித்து விட்டு நாராயணமூர்த்தி போய் விட்டார்... வெந்நிலாவால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.. அதுவரை அவள் கேட்ட எதையும் மறுக்காத அவளின் தந்தை... முதன் முறையாக அவளது கோரிக்கையை நிராகரித்து விட்டார்...

'ஏன் டாட் இப்படிச் செய்தீங்க...?' மனதுக்குள் கேட்டுக் கேட்டு ஓய்ந்து போனாள் வெந்நிலா.. அவளுக்கு பதில் தான் கிடைக்கவில்லை...

அதுவரை அவள் வாழ்வின் அத்தனை முடிவுகளையும் அவள்தான் எடுத்திருக்கிறாள்.. விவரம் அறிந்த நாள் முதலாய் அவள் சொல்லிய எதையும் நாராயணமூர்த்தி மறுத்ததில்லை...

"டாட்.. நான் விஸீவல் டெக்னாலஜி படிக்கவா..?"

"என்ஜினியரிங் படியேன்ம்மா..."

"நோ டாட்.. எனக்கு இதுதான் பிடித்திருக்கு..."

"ஓகே பேபி.. டன்.."

இது போலத்தான் அவளின் அத்தனை அடையாளங்களையும் அவளுக்கு பிடித்தமானதாக அவள் உருவாக்கிக் கொண்டாள்..

திருமணம் என்று வந்த போது ஷியாம் சுந்தரை அவளுடைய வருங்காலக் கணவனாக தேர்ந்தெடுத்தது அவள்தான் நாராயணமூர்த்திக்கு அதில் அவ்வளவாக விருப்பமில்லை...

"அந்த ஷியாம் இந்தியாவில தங்காத ஆளாச்சே நிலா.."

"அதைத்தான் அவரோட பெஸ்ட் குவாலிபிகேஷனா நான் சூஸ் பண்ணியிருக்கேன் டாட்.. எனக்கு பாரினில் வாழத்தான் பிடிக்கும்..."

ஒற்றை மகளைப் பெற்ற அந்த மனிதர் மௌனமாக தன் துக்கத்தை மனதில் அடக்கிக் கொண்டு அதற்கும் சம்மதம் கொடுத்தார்.. அவருடைய கிராமத்தில் முதன்மையான ஆளாக இருந்தவரை ஷியாம் சுந்தரின் குடும்பத்தினர் பொருட்படுத்தாமல் நடத்திய போது மகளுக்காக அதையும் சகித்துக் கொண்டார்...

அப்படிப்பட்ட நாராயணமூர்த்தி.. இன்று மகள் கெஞ்சக்கெஞ்ச.. அவளுக்கு பிடிக்காத ஊரில்.. பிடிக்காத வீட்டில் இருக்கவிட்டுப் போய் விட்டார்...

வெந்நிலா விக்கித்துப் போனவளாக மாடியறையை விட்டு வெளியே வராமல் அந்த அறைக்குள்ளேயே



தனிமையில் புதைந்திருந்தாள்.. அவளிடம் பேச்சுக் கொடுக்க பாரிஜாதமும்.. சாரதாவும் தயங்கினார்கள்.. கயிலைநாதனோ வாசலில் இருந்த கயிற்றுக் கட்டிலை விட்டு நகராமல் உட்கார்ந்து விட்டார்.. பஞ்சாயத்தில் தாலி கட்டிய தசரதன்.. கட்டின மறு நொடியில் காணாமல் போனவன்தான்.. எங்கே போனான் என்று யாருக்கும் தெரியவில்லை...

வீடே அமைதியில் உறைந்து கிடந்தது.. வெளிவாசலில் இருந்த மரக்கதவைத் திறந்து கொண்டு ரங்கம் சுவாதீனமாக உள்ளே வந்தாள்.. அவள் கையில் சின்ன பாத்திரம் ஒன்று இருந்தது...

"அண்ணே..." பாசத்துடன் அவள் அழைத்ததில் நிமிர்ந்து பார்த்த கயிலைநாதன் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டார்..

'இத்தனையும் இவளால் வந்தது...'

சத்தம் கேட்டு வாசல்பக்கம் வந்த பாரிஜாதமோ யுத்தத்திற்கு தயாரானவளாய்.. வாசலில் கிடந்த விறகுக் கட்டையை ஒருமுறை பார்த்துக் கொண்டாள்...

அவள் பார்வை போனதிக்கில் பார்த்த ரங்கத்திற்கு திக்கென்று ஆகிவிட்டது..

'ஆத்தி.. இவ விறகுக்கட்டயப் பாக்கிறாளே... எடுத்து அடிச்சுருவாளோ...'

இருந்தும் பின்வாங்காமல் சுதாரித்துக் கொண்டவளாக எதற்கும் இருக்கட்டுமென்று பாரிஜாதத்தின் கைக்கு அகப்படாத தூரத்தில் எட்டி நின்று கொண்டே பல்லைக் காட்டினாள் ரங்கம்..

"மதனி..."

"மதனிக்கு என்ன வைச்சிருக்கிற..?"

"என்ன மதினி இப்படிக் கேட்டுப்புட்ட..? காலையில இருந்து நீங்க யாரும் பல்லில பச்சைத்தண்ணியக் கூட ஊத்திலியாமே...?"

"உனக்கு யாரு சொன்னது...?"

"யாரும் சொல்லனுமா..? எனக்காத் தெரியாதா..?"

"அதானே.. ஊருக்கே நீ சொல்லுவ.. உனக்குப் போயி ஒரு ஆளு சொல்லனுமா..? என்ன இந்தப் பக்கம் வந்திருக்க..?"

"என்ன மதினி இப்படிக் கேட்டுப்புட்ட.. இது யாரு வீடு...?"

"என் புருசன் வீடு..."



இந்தப் பதிலில் சூடு.. சுரணை வந்து ரங்கம் போய் விடுவாள் என்ற நினைப்பெல்லாம் பாரிஜாதத்திற்கு இல்லை...

ரங்கத்தைப் போன்ற பிறவிகள் அதை கிலோ என்ன விலை என்று கேட்பார்கள் என்பதை அவள் தெளிவாகவே கணித்து வைத்திருந்தாள்...

அதனால் அத்தனை பேராசையையெல்லாம் அவள் படவில்லை.. அவளுக்கு ரங்கத்தை உண்டு.. இல்லையென்று ஆக்க வேண்டியிருந்தது.. அதனால் தான் பேச்சு வார்த்தையை ஆரம்பித்திருந்தாள்...

"என்ன மதினி இப்படிச் சொல்லிப்புட்ட..? இது எனக்கு அண்ணன் வீடில்லையா..?"

"அதுக்கே இந்த மனுசனுக்கு கஞ்சி ஊத்தாம விரட்டியடிக்கனும்.. அண்ணனாம்.. அண்ணன்... இந்த உறவு மொறையை சொல்லிக்கிட்டு இந்த வீட்டு வாசலை மிதிச்ச... அப்புறம் நான் மனுஷியா இருக்க மாட்டேன்.. போ.. போ.."

பாரிஜாதம் போட்ட சத்தத்தில் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வாசலில் கூடிவிட்டார்கள்.. ரங்கம் அதற்கெல்லாம் அயர்கின்ற ஆள் இல்லையே...

"என்ன ரங்கம்.. எதுக்கு பாரிஜாதம் உன்னச் சத்தம் போடுது...?"

"நீயே கேளுக்கா.. அண்ணன் வீட்டில அன்ன ஆகாரம் இல்லாம கிடக்கிறாங்கன்னு என் புருசன் சொன்னாரு.. எனக்கு மனசு தாங்கல.. அதனால என் வீட்டில இருந்து சாப்பாடு கொண்டு வந்தேன்...."

"எதில..?"

"இதில தான்..."

ரங்கம் கையிலிருந்த சிறு கிண்ணத்தைக் காட்ட.. கேள்வி கேட்டவள் சுற்றிலும் இருந்தவர்களை ஓர்முறை பார்த்தாள்...

"இதில கொண்டு வந்தியா..? யாருக்கு ரங்கம்..? இந்த வீட்டில ஒருவயசு பச்ச புள்ள ஒன்னு கூட இல்லையே.. அட.. பச்சப் புள்ளைக்குக் கூட இந்தச் சோறு பத்தாதே.. இந்தக் கொடுமை பண்ணினா பாரிஜாதம் கட்டையைத் தூக்காம என்ன செய்யும்...?"

ஊடே கேள்வி கேட்டவள் நியாயம் பேசிய விதத்தில் ரங்கம் கலவரப் பட்டுப் போனாள்....



# 19



'அடிப்பாவி.. அவ கட்டையை மறந்தாலும் இவ மறக்க விட மாட்டா போல இருக்கே.. விட்டா விறகுக் கட்டய எடுத்து அவ கையில கொடுத்திருவா போல இருக்கே...'

பாரிஜாதம் ரங்கத்தின் அச்சத்தை அதிகப் படுத்துவதைப் போல விறகுக்கட்டைக்கு அருகே வந்தாள்..

'ஊஹீம்.. இதுக்கு மேல இங்க நிக்கக் கூடாது..' ரங்கம் சிட்டாகப் பறந்து விட்டாள்...

"ஓடறதைப் பாரு.. இவளுக்கு இதே பொழப்பாப் போச்சு.. நீ வேலயப் பாரு பாரிஜாதம்.." அடுத்த வீட்டுக்காரப் பெண் ஆறுதலாகப் பேசிவிட்டு நகர்ந்தாள்...

கூட்டம் அவர்களுக்குள் பேசியபடி கலைந்து விட்டது.. பாரிஜாதம் வாய்க்குள் திட்டியபடி கயிலைநாதனிடம் வந்தாள்...

"இப்படியே உக்காந்திருந்தா எப்படி..?" என்று கேட்டாள்...

"என்னடி செய்யச் சொல்ற..?"

"புள்ளயக் காணோம்.. அந்த நினைப்பு மனசில இருக்கா இல்லையா..?"

"எல்லாம் எனக்கும் இருக்கு.. அவனைத் தேடிக் கூப்பிட்டுக்கிட்டு வர சரவணனை அனுப்பி வைச்சிருக்கேன்..."

"ஏனாம்..? அந்த வேலய நீங்க செய்கிறதுக்கென்ன..?"

"யாருடி இவ.. இளந்தாரிப் பய.. மனசு சோர்ந்தா எங்கே போயி உக்காருவான்னு கூட்டாளிக்குத்தான் தெரியும்.. அப்பன்காரனுக்கு எப்புடிடீ தெரியும்..?"

பாரிஜாதம் பதில் சொல்லாமல் வாசல் படியில் அமர்ந்தாள்.. அவள் முகத்தில் சோகம் அமிழ்ந்திருந்தது.. அதை கயிலைநாதனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. இது கல்யாண வீடா என்று அவர் மனம் கசந்தார்...

புதுமணப்பெண் மாடியறையில் புதைந்திருக்கிறாள்..

மணமகனோ தாலி கட்டியதும் மாயமாகி விட்டான்.. இந்த எங்கேயிருக்கிறான் என்றே தெரியவில்லை..



லட்சணத்தில் இருக்கும் கல்யாண வீடு அவர் வீடாகத்தான் இருக்கும் என்று நெடுமூச்சு விட்டார்...

"அந்தப் பொண்ணு என்ன செய்யுதுடி...?"

"கட்டிலில் குப்புறப் படுத்திருக்காம்.. நம்ம சாரதா பார்த்துட்டு வந்து சொன்னா..."

"சாப்பிட ஏதாச்சும் குடுத்து விட்டியா..?"

"பாலையே குடிக்கலை... திருப்பி அனுப்பிருச்சு.. இதில சாப்பாட்டைக் கொடுத்து விட்டாச் சாப்பிடுவாளா..?"

"எதுவும் தப்பா நடக்கலைடி... தசரதன் தெரியாமத்தான் மாடி ரூமுக்கு போயிருக்கான்... ஜாமத்துக்கு மேலே ஆகிருச்சு.. அசதியில படுத்தவுடன் அப்படியே தூங்கியிருப்பான்..."

"எனக்கு மட்டும் அது தெரியாதா..? இன்னைக்குன்னு பாத்து ரங்கம் வந்து தொலைச்சிட்டா.. பத்தாக் குறைக்கு சரவணனும்... சொக்கலிங்க அண்ணனும் சேந்து வந்து அந்தக் கண்கொள்ளாக் காட்சியை பாத்துத் தொலைச்சிட்டாங்க.."

"சரவணனைப் பத்தியும்.. சொக்கலிங்கத்தைப் பத்தியும் கவலையில்லடி.. இந்த ரங்கம் கொடுமதான்

பெரும் கொடுமையாகப் போச்சு.. இவள யாருடி விட்ட விடிகாலையில நம்ம வீட்டுக்கு வரச்சொன்னது...?"

"ஊம்.. நான்தான் போயி வெத்தலபாக்கை வைச்சு அழைச்சிட்டு வந்திட்டேன்.. தொங்கச்சி.. முறைன்னு உரிமை கொண்டாட விட்டது யாராம்..? இந்தக் கொடுமைக்குத்தான் அவள வீட்டுவாசப்படி ஏற விடாதீங்கன்னு தலைப்பாடாய் அடிச்சுக்கிட்டேன்.. என் பேச்சை யாரு கேட்டது..?"

"இந்தக் கொடுமை பண்ணுவான்னு கனவாடி கண்டேன்..."

"இனிப் புலம்பி என்ன செய்ய..? நடத்தற நாடகத்தை நடத்தி முடிச்சிட்டு அவ ஓடிட்டா.. என் புள்ளதான் எங்கே இருக்கானோ..? என்ன செய்கிறானோ..?"

தசரதன் ஆற்றங்கரை மண்டபத்தில் கைகளை மடித்து தலைக்கு அணைவாகக் கொடுத்து அண்ணாந்து பார்த்தபடி படுத்திருந்தான்.. காலடியோசை கேட்டு லேசாக தலையைத் திருப்பிப் பார்த்தான்.. சரவணன் நின்று கொண்டிருந்தான்...

"நினைச்சேன்டா.. நீ இங்கதான் இருப்பன்னு..." என்றபடி தசரதனின் அருகில் தூணில் சாய்ந்து அமர்ந்து கால்களை நீட்டிக் கொண்டான்...



"எங்க போயி ஒளிஞ்சாலும் நீ என்னை விடவே மாட்டியா..?" சலிப்புடன் கேட்டான் தசரதன்....

"எதுக்குடா ஒளியனும்..? இதான் எனக்குப் புரிய மாட்டேங்குது.. கண்ணா லட்டு திங்க ஆசையான்னு கடவுள் கேட்டு உன் கையில திருப்பதி லட்டையே திணிச்சிருக்கார்... நீயென்னடான்னா.. ஆத்தங்கரை மண்டபத்தில் படுத்து அண்ணாந்து விட்டத்தை வெறிச்சுப் பாத்துக்கிட்டு இருக்க..."

"டேய்.. நானே வெறுப்பில இருக்கேன்.. ஓடிப் போயிரு..."

"அதை என்ன கழுதைக்கு செய்யச் சொல்ற..? இங்கே பாருடா மச்சான்.. அந்தப் பொண்ணு எனக்குத் தங்கச்சி முறைதான் ஆகனும்.. ஆனாலும் என்னால இதைச் சொல்லாம இருக்க முடியல.. அழகுன்னா அழகு.. அப்படியொரு அழகு.. அப்சரஸ்ன்னா இந்தப் பொண்ணுதான்.. நினைச்சுக்கூடப் பார்க்கல மச்சான்.. நீ இந்தப் பொண்ணு கழுத்தில தாலியக் கட்டுவேன்னு.. ஜாக்பாட் அடிச்சிருக்கே.. நீங்களும் வெல்லலாம் ஒரு கோடியில கலந்துக்கிட்டாக்கூட ஒரு கோடிதான் கிடைக்கும்.. இப்பப் பாரு.. எத்தனை கோடி சொத்துக்கு

மருமகனா ஆகியிருக்கே.. வாடா மச்சான்.. இதை இனிப்பைச் சாப்பிட்டுக் கொண்டாடலாம்..."

"கடுப்பைக் கிளப்பாதேடா சரவணா..."

"அட எழுந்திருடா மச்சான்.. இருட்டிக்கிட்டு வருது.. நீ இங்க வந்து படுத்திருக்கே.. அங்கே வீட்டில உன்னைக் காணாம உங்கம்மா மனசு என்ன பாடுபடும்ன்னு நினைச்சாவது பாத்தியா..?"

சரவணனின் முயற்சிக்குப் பலனிருந்தது.. தசரதன் எழுந்து அமர்ந்தான்.. ஆற்றை வெறித்தான்...

'ம்ஹீம்.. இவனெல்லாம் இளவட்டப் பயல்ன்னு சொல்லிக்கிறான்.. இம்புட்டு நேரமும் இவனக் கட்டிக்கிட்டவ அழகப்பத்தி கதைகதையாய் சொன்னேன்.. பயபுள்ள அசையாம படுத்துக்கிடந்தான்.. அம்மாவப் பத்திச் சொன்னதும் எழுந்திருச்சே உக்காந்துட்டான்...'

இரும்பு இளகத் தொடங்குவதைப் புரிந்து கொண்டவனாக தசரதனின் அருகில் நகர்ந்து அமர்ந்தான் சரவணன்...

"பாருடா மாப்பிள்ளை.. காலயில இருந்து உன் பல்லிலயும் பச்சத்தண்ணி படல.. உன் வீட்டாளுக



பல்லிலயும் பச்சத்தண்ணி படல.. என்ன கழுதைக்காக குடும்பமே விரதமிருக்கறிங்க...?"

"அவ போயிட்டாளா...?"

"எவளக் கேக்கற..? ஓ.. அந்த அப்சரஸைக் கேக்கறியா..? அது எப்படிடா போகும்...?"

"அப்ப... அவ போகலையா...? வீட்டிலதான் இருக்காளா...?"

தசரதன் மீண்டும் படுக்கப் போக.. அவனைப் படுக்கவிடாமல் தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான் சரவணன்...

"வேணான்டா மச்சான்.. உன் வீட்டு சினிமாவால நானும் கொலை பட்டினியாக் கிடக்கிறேன்.. உன்னைக் கொண்டு போயி உங்கம்மா முன்னால விட்டாத்தான் என் வீட்டில நானு கை நனைக்க முடியும்.. இல்லன்னா சோறு தண்ணிய எங்கம்மா என் கண்ணுலயே காட்டாது..."

"அவ அப்பன் என்ன ஆனாரு..."

"அவரு ஊரைப் பாத்துக் கிளம்பிப் போயிட்டாரு.."

"என்னது..!.."

"எதுக்கு இத்தாம் பெரிய என்னது போடற..? பொண்ணைக் கட்டிக் கொடுத்த மனுசன் ஊரைப் பார்க்கப் போகாம பொண்ணு கொடுத்த வீட்டிலேயா டேரா போடுவாரு...? என்ன கேள்வியின்னு இதைக் கேட்டு வைக்கிற..?"

"போன மகராசன் மகளைக் கையில பிடிச்சுக்கிட்டுப் போகாம ஏண்டா விட்டுப்புட்டு போனாரு...?"

"இதுக்குப் பதில் ஒன்னே ஒன்னுதாண்டா மச்சான்.. அது என்னன்னா.. உங்கல்யாணத்தை அவரு மனசார ஏத்துக்கிட்டாரு.. அதனாலதான் ஒத்தைப் பொண்ண உன்வீட்டில விட்டுப்புட்டு போயிருக்காரு..."

தசரதனுக்கு தலையை வலித்தது.. காலையிலிருந்து சாப்பிடாத வயிறு பசித்தது... தலையைப் பிடித்துக் கொண்டான்...

"சரவணா.. நான் தப்புப் பண்ணலைடா..." என்றான்..

"எனக்குத் தெரியாதாடா மச்சான்..? நீ தப்புப் பண்ணினேன்னு சொன்னாக்கூட நான் நம்ப மாட்டேனே.." சரவணன் ஆறுதலாகப் பேசினான்...

"அப்புறம் ஏண்டா அவ அப்படிச் சொன்னா..?"



"யாருக்குத் தெரியும்..? நீயே போய் அவளிடம் கேளு..."

சரவணன் சொன்னதைக் கேட்ட தசரதன் அவனை முறைத்தான்...

"அவகிட்ட நான் போய் கேக்கறதா..? என்னை யாருன்னு நினைச்ச...?"

"என் மச்சான்னு நினைச்சேன்... நீ வாடா.. வீட்டுக்குப் போகலாம்..."

"வீட்டில அவ இருப்பாளே..."

'இது என்னடா பெருங்கொடுமையாப் போயிருச்சு..'

நொந்து போனான் சரவணன்.. ஊர் கூடிய பஞ்சாயத்தில் தசரதனின் கையால் தாலி வாங்கிக் கொண்டவள் தசரதனின் வீட்டில் இல்லாமல் எங்கே போவாள்...?

"ஏண்டா மச்சான் இந்தப் பாடுபடுத்தற..? அந்தப் பொண்ணின் கழுத்தைப் பிடிச்சு வெளியிலயா தள்ள முடியும்...? அப்புறம்.. அதுக்கும் ஒரு பஞ்சாயத்தைக் கூட்டிப் புடுவானுங்கடா..."

"அவ இருக்கிற வீட்டுக்கு நான் வரமாட்டேன்..."

"ஐயா..! சாமி..! தசரதா...! உன்னைக் கையெடுத்துக் கும்பிடுறேன்.. கொஞ்சமாவது என் பாவத்தப் பாருடா.. உன்னக் கொண்டு போயி உன் வீட்டுக்குள்ளே சேக்காம என் வீட்டுக்குள்ள நான் நுழைய முடியாதுடா ராசா.. இதப் புரிஞ்சுக்கடா மச்சான்.. உன் வீட்டுக்குள்ள அந்தப் பொண்ணு மட்டும்தான் இருக்குதா..? கூடவே உன் அம்மா இருக்குது.. உன் தங்கச்சி இருக்குது.. அப்பா.. இருக்காரு.. அத நினைச்சுப் பாருடா..."

"அவள மட்டும் நினைக்க மாட்டேன்..."

தசரதன் விடாமல் அந்த ஒன்றிலேயே நிலையாய் நிற்க.. குடித்திருக்கிறானோ என்று சந்தேகப் பட்டுப் போனான் சரவணன்...

'இவன் நல்ல பையனாச்சே.. குடிக்க மாட்டானே...'

குனிந்து முகர்ந்து பார்த்தான்.. தசரதன் குடித்திருக்கவில்லை.. ஆனாலும் பேசியதையே பேசிக் கொண்டிருந்தான்.. அவன் போக்கிலேயே பேசி அவனை இழுத்துக் கொண்டு போய் வீடு சேர்ப்பதற்குள் சரவணன் பாடாய் பட்டு விட்டான்...



## 20



இருளை வெறித்தபடி அமர்ந்திருந்த பாரிஜாதம்.. அதைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்ட சரவணனைக் கண்டதும் அவசரமாக எழுந்து அவனருகே ஓடினாள்...

"என்னப்பா சரவணா.. நீ மட்டும் தனியா வந்திருக்க..? என் புள்ள எங்கே...?"

"அவசரப்படாதே அத்தே.. உன் மகன் இல்லாம இந்த ஊருக்குள்ள நான் காலை வைச்சா.. நீயும் எங்கம்மாவும் என்ன சும்மா விட்டுருவீங்களா..? உலுக்கி எடுத்துப்புட மாட்டிங்க...?"

சரவணன் விலக.. அவனுக்குப் பின்னாலிருந்து தசரதன் தென்பட்டான்.. பாரிஜாதம் ஆனந்தத்துடன் மகனைக் கட்டிக்கொண்டு அழுதாள்...

"என் ராசா.. இந்த ஒரு வாரமாவே என் புள்ள என்கையாலே சாப்பிடலியே.. திருவிழாவுக்கு போனபுள்ள நேத்துத்தான் திரும்பி வந்தான்.. வந்தபுள்ள.. வந்த சுருக்கிலயே தண்ணி கட்டப் போறேன்னு ஓடிட்டானே..

இன்னைக்கு என் கையால இடியாப்பம் செஞ்சு போடனும்னு நினைச்சேனே.. செஞ்சு வைச்ச இடியாப்பம் அப்படியே கிடக்குது.. அதைச் சாப்பிட யாருக்கும் மனசில்லாம போயிருச்சே..."

'இவ புலம்பி அழுகறதை அறியாத மனுசங்க கேட்டு வைச்சா.. என்னன்னு நினைப்பாங்க..?' கயிலைநாதன் கோபத்துடன் தலையில் அடித்துக் கொண்டு எழுந்தார்...

"ஏண்டி உனக்கு அறிவுங்கிறது இருக்கா.. இல்ல.. அத யாருக்காவது கடன் கொடுத்திருக்கயா...?"

அதுவரை அவ்வளவு கோபமாக அவர் பாரிஜாதத்திடம் பேசியதில்லை.. அதனால் அதிசயப் பட்டுப் போன சரவணன் இமை கொட்டி விழித்தான்...

'அட..! என் மாமனுக்கு கூட வீரம் வந்திருச்சே...'

"இப்ப என்னாத்துக்கு இம்புட்டு கோவம் கோவிச்சுக்கறிங்க..." பாரிஜாதம் மூக்கை உறிஞ்சியபடி முந்தானையில் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்...

'குடும்பத்துக்கே மூக்குறிஞ்சும் பழக்கம் இருக்கும் போல...' சரவணன் நினைத்துக் கொண்டாலும் அதை வெளியில் சொல்லவில்லை..



சொல்லிவிட்டு அடிவாங்க அவனென்ன முட்டாளா..? இத்தனை நாளாக தசரதன் மட்டும் தான் மிரட்டிக் கொண்டிருந்தான்.. கயிலைநாதன் பொய்யாகத்தான் மிரட்டிக் கொண்டிருந்தார்.. இப்போது வீரு கொண்டு அவர் மீசையை முறுக்கிக் கொண்டு நிற்கும் வேளையில் தினவெடுத்த அவரின் வீரத்திற்கு தீனி போட அவன் தயாராக இல்லை...

"கல்யாண வயசில மகன் இருக்கிற வீட்டில எந்த கிறுக்கச்சியாவது வயசுப் பொண்ணத் தங்க வைக்க நினைப்பாளாடி..? நீ பாட்டுக்கு அவங்களை வரச் சொல்லிட்ட.. ஒத்த வார்த்தை என்னைக் கேட்டியா..? உன் இஷ்டத்துக்கு ராஜ்ஜியம் கட்டிக்கிட்டு ஆடின... இப்ப என்னாச்சுன்னு பாரு..."

"கல்யாணம்தானே ஆகியிருக்கு மாமா.. இதுக்குப் போயி அத்தகிட்ட கோவிச்சுக்கனுமா மாமா...?"

மனதில் உறுதி வேண்டும் என்று மகாகவி பாரதியாரே சொல்லியிருக்கும் போது சரவணனின் மனதில் உறுதி இருக்க வேண்டுமா.. வேண்டாமா..?

கயிலைநாதனின் வீரத்திற்கு இரையாகக் கூடாது என்று சில மணித்துளிகளுக்கு முன்னால் மனதில்

கொண்ட உறுதியில் நிலைத்து நிற்க வேண்டுமா.. வேண்டாமா..?

அதை மறந்து விட்டு வாய்விட்டு விட்டு கயிலைநாதனின் பலத்த கண்டனப் பார்வைக்கு ஆளானான் அவன்...

"ம்ஹீம்.. சொக்கலிங்கத்துக்கு இப்படியொரு புள்ள..."

'எப்படியொரு புள்ள...?'

"அவன் நியாயவாதி.. மகாபாரதத்து விதுரன்..."

'அது யாரு..? தெரியலையே.. மாமன்கிட்டக் கேட்டா.. போட்டுத் தள்ளிருவாரே...'

"எதைப் பேசினாலும் அவன் நாலையும் யோசிச்சுத் தான் பேசுவான்.. வாயிருக்குங்கிறதுக்காக வாயைத் திறந்துர மாட்டான்..."

'எங்கம்மா அப்படி ஆக்கி வைச்சிருக்கு.. இங்க மட்டும் என்ன வாழுதாம்..? நேத்து வரைக்கும் இந்த வீரத்திருமகன் எங்க அத்தை முன்னாலே வாயைத் திறக்கவே மாட்டாரே...'



"கல்யாணம் நடந்திருச்சு.. நடந்திருச்சுங்கிறயே.. அது எப்படி நடந்துச்சு..? ஊரைக் கூட்டி நடந்துச்சு..."

'நல்லதுதானே.. நாலு பேருக்குத் தெரியாம பண்ணிக்கிட்டா அது ரகசியக்கல்யாணம்.. இப்ப அப்படியா..? ஊரே கூடி தசரதன் கல்யாணத்தை நடத்தி வைச்சுச்சே...'

"என் மகன் தங்கம்டா.. அவன் மேல அந்தப் பொண்ணு ஆசைப்பட்டுச்சோ.. என்ன கழுதையோ தெரியல.. சட்டுன்னு பழியைப் போட்டிருச்சு.. மத்தபடி.. என் மகனாவது தப்புப் பண்றதாவது..."

'குடும்பமே இதைப் பிடிச்சுக்கிட்டுத் தொங்குதே.. தப்பு பண்ணாட்டித்தான் என்ன...? அப்பேற்பட்ட கோடிஸ்வரன் பெத்தமக.. அழகி.. தசரதனுக்கு பெண்டாட்டியா வந்து வாய்ச்சிருக்கா.. அது போதாதா..?'

கயிலைநாதனின் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசாமல் மனதுக்குள்ளேயே பேசியபடி நின்று கொண்டிருந்தவனை உற்றுப் பார்த்தார் கயிலைநாதன்...

'மாமன் என்னத்துக்கு இந்தப் பார்வயப் பாக்குறாரு.. சரவணனுக்கு குலை நடுங்கியது...'

"உன் மனசுக்குள்ள என்ன நினைச்சுக்கிட்டு இருக்கேன்னு எனக்குத் தெரியும்.. அதெல்லாம் உன் புத்தி.. என் மகன் புத்தியில்ல... ஓடியே போயிரு..."

'இவரு மகனை கொண்டு வந்து சேர்த்துட்டேனில்ல.. இனி என்ன ஓடத்தான் சொல்வாரு.. இத முதலிலேயே சொல்லியிருந்தா.. இவனைத் தேடுற வேலையை விட்டுட்டு சரிதா டீச்சர் சினிமாவுக்கு போக டிக்கெட்டை தேடிப் போயிருப்பேனே...'

அதற்குள் கண்ணைத் துடைத்துக் கொண்ட பாரிஜாதம் மகனின் கையைப் பிடித்தபடி.. சரவணனையும் சேர்த்து சாப்பிட அழைத்தாள்.. பாரிஜாதத்தின் சமையல் ருசியை அறிந்திருந்தவனுக்கு ஓடிப் போகும் ஆசை அற்றுப் போய்விட்டது.. அவன் உள்ளே போனான்.. குடும்பத்துக்கான பந்திப் பாய் விரிக்கப்பட்டு இருக்க.. அதில் கயிலைநாதனும் தசரதனும் உட்கார்ந்தார்கள்.. தசரதனின் அருகில் சரவணனும் உட்கார்ந்தான்...

"நீயும் உட்காருடி..." மகளை கயிலைநாதனின் பக்கத்தில் உட்கார வைத்துவிட்டு பரிமாறப் போனாள் பாரிஜாதம்..

"பாரிஜாதம்.."



"என்னங்க..."

"அந்தப் பொண்ணையும் சாப்பிட வரச்சொல்லு..."

கயிலைநாதனின் கட்டளையில் பாரிஜாதம் தயங்கி நின்றாள்...

"அது வராதுங்க..."

"வரலைன்னா நீதான் சொல்லிக் கூப்பிட்டுக்கிட்டு வரனும்.. அந்தப் பொண்ணு பசியில இருக்கிறப்ப நாம மட்டும் சாப்பிட்டா நல்லாயிருக்காது..."

'நினைச்சேன்.. இந்த மாமனாவது என்னை வயிறார சாப்பிட விடறதாவது...' சரவணன் வெறுத்துப் போய்விட்டான்...

இலையின் முன்னால் உட்கார வைத்துவிட்டு சோற்றைப் போடாமல் நியாயம் பேசினால் அவன்தான் பாவம் என்ன பண்ணுவான்..? பசித்த வயிறு சோறு எங்கே என்று கேட்டது.. அவன் அதை பாரிஜாதத்திடம் கேட்க முடியாமல் பரிதாவமாக பார்த்தான்...

"அம்மா.. சோத்தைப் போடு..." தசரதன் கண்டிப்பான குரலில் சொன்னான்...

"தசரதா.. அப்பா சொல்கிறதைக் கேட்டியில்ல.." பாரிஜாதம் மென்று விழுங்கினாள்...

"கேட்டேன்... கேட்டேன்.. அவளுக்கு பசிச்சா வந்து சாப்பிடட்டும்.. யாரும் அழைக்கப் போக வேணாம்..."

"என்னடா தம்பி இப்படிச் சொல்ற...?"

"எப்படிச் சொல்றேன்..? இப்ப நீ சோத்தைப் போடப் போறியா.. இல்ல.. நான் எழுந்திருச்சு போயிரவா..."

பாரிஜாதம் பதறிப் போனவளாக எல்லோருக்கும் மளமளவென்று பரிமாறினாள்.. மகனை வற்புறுத்த மனமில்லாமல் கயிலைநாதனும் சாப்பிட ஆரம்பித்தார்.. அவர்கள் குடும்பத்தோடு சாப்பிடுவதை.. மாடிப்படியில் நின்று கொண்டிருந்த வெந்நிலா மறைந்து நின்று பார்த்தாள்...

அவள் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து சமையலறையை தெளிவாக அவளால் பார்க்க முடிந்தது.. அங்கிருப்பவர்களால்தான் அவளைப் பார்க்க முடியாது.. அந்த அளவுக்கு அவள் மறைவாக நின்றிருந்தாள்...

'என் குடும்பத்தை விட்டு நான் தனியாக நிற்கிறேன்... நீ மட்டும் உன் குடும்பத்தோடு உட்கார்ந்து சாப்பிடுகிறாயா..?' அவள் கண்கள் சிவந்தன...



கோபத்துடன் படியிறங்கியவள்.. வாசலுக்குப் போனாள்.. பரிமாறுவதில் மும்முரமாக இருந்த பாரிஜாதம் அவளைக் கவனிக்கவில்லை.. சாப்பாட்டில் கவனமாக இருந்த மற்றவர்களும் கவனிக்கவில்லை.. வெந்நிலா தெருவில் இறங்கினாள்.. இருளில் கலந்தாள்...

சாப்பிட்டவர்கள் எழுந்து கை கழுவினார்கள்.. சமையலறையை ஒழுங்கு பண்ணிய பாரிஜாதம் வெந்நிலாவை அழைத்து வர மாடிக்கு போக நினைத்தாள்.. சாரதா ஹாலில் அமர்ந்து பாடப் புத்தகத்தை கையில் எடுத்தாள்.. கயிலைநாதன் அவரின் வழக்கமான சிம்மாசனமான கயிற்றுக் கட்டிலில் ஆரோகணிக்க.. தசரதனும்.. சரவணனும் காற்றாட வேப்ப மரத்தின் அடியில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்...

"பாரிஜாதம்.." அழைத்தபடி வந்தாள் செல்வி...

"என்னக்கா..." மாடிக்கு போக நினைத்த பாரிஜாதம் வெளியில் வந்தாள்...

"உன் மருமக கம்மாக்கரைப் பக்கம் தனியாப் போயிக்கிட்டு இருக்கா பாரிஜாதம்.." தகவல் சொல்லி விட்டுப் போய் விட்டாள் செல்வி...

"என்னங்க.." பாரிஜாதம் பதறிப் போய் கத்த...

"உஷ்ஷ்.." என்று வாயில் விரலை வைத்தார் கயிலைநாதன்...

"சத்தம் போட்டு ஊரைக் கூட்டாதேடி.. தசரதா..." அவர் சொல்ல ஆரம்பிக்கும் போதே...

"என்னால முடியாதுப்பா.." என்றான் தசரதன்...

"ஏண்டா.. இன்னும் நான் சொல்லவே ஆரம்பிக்கலியே..."

"நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்குத் தெரியாதா..?"

"ஏய்ய்.. அந்தப் பொண்ணு உனக்குப் பொண்டாட்டிடா..."

"யாரு சொன்னது..?"

"இந்த ஊரும்.. உலகமும் சொல்லுது..."

"அதுக்கு நான் பிணையாக முடியாது..."

தசரதன் இரக்கமில்லாமல் பேச.. தலையில் அடித்துக் கொள்ள ஆரம்பித்தாள் பாரிஜாதம்.. கயிலைநாதன் மகனை முறைத்தார்...



# 21



"பாரிஜாதம்... வாயை மூடப் போறியா இல்லியா..?" கயிலைநாதன் ஏறக்குறைய கர்ஜித்தார்...

பாரிஜாதம் அதை கண்டு கொள்ளாமல் அழுதாள்...

"இவன் போக மாட்டேங்கிறானே.. நீங்களாவது போகக் கூடாதா..? ஏம்பா சரவணா.. பாத்துக்கிட்டு நிக்கறியே..."

"நீ ஏன்த்தை அழுகற.. உன் மருமகன்.. சிங்கக்குட்டி.. நான் இருக்கேன்த்தை.. உன் மருமக ஏழுகடல் ஏழுமலை தாண்டி போயிருந்தாலும் நான் கண்டு பிடிச்சு கூட்டிக்கிட்டு வரேன்த்தை.." என்று உத்திரவாதம் அளித்துவிட்டு கிளம்பத் தயாரானான் சரவணன்...

அவன் அதற்காகத்தானே காத்திருந்தான்...?

"ஏய்ய்.. நில்லுடா..." கயிலைநாதன் அதட்டினார்...

'டா'வா...? என்ன.. மாமன்கிட்டயிருந்து மரியாதை குறையுது...' மிரண்டு போனவனாக தேங்கி நின்றான் சரவணன்..

"நீ எங்கேடா கால்மானம் வைச்சுக்கிட்டுக் கிளம்பற..? அது உன் பெண்டாட்டியா..?" கயிலைநாதன் கேட்டார்...

'ம்ஹீம்.. அந்தக் கொடுப்பினைதான் எனக்கு இல்லையே... அவ என் தொங்கச்சி.. முறையில பிறந்து தொலைச்சிட்டாளே...' மனதுக்குள் நொந்து கொண்டான் சரவணன்...

"அது இவன் பெண்டாட்டி.. இவன்தான் தேடிப் போகனும்.. தசரதா.. போ..."

"முடியாதுப்பா..."

"அந்தப் பொண்ணு ஒன்னு கிடக்க ஒன்னைப் பண்ணி வைச்சிருச்சுன்னா.. நாம என்னத்தைடா பண்றது...?"

"போய் தொலையட்டும்..."

"அப்படியெல்லாம் நீயும்.. நாங்களும் நிம்மதியா இருந்துர முடியாது.. அதைப் பெத்தவரு கோடிஸ்வரு.. சும்மா விடமாட்டாரு.. அவருக்கு முதலில இந்த ஊரு சும்மாயிருக்காது.. இன்னொரு பஞ்சாயத்தைக் கூட்டும்.. அதில நீயும் நாங்களும் போயி நிக்கனும்.. இதெல்லாம் தேவையா...?"



கயிலைநாதன் சொன்னதில் இருந்த உண்மை புலப்பட தசரதன் வேண்டாவெறுப்புடன் செருப்பை மாட்டிக் கொண்டு அவனுடைய புல்லட்டை எடுத்தான்...

"வண்டி வேணாம்டா தசரதா..."

"அவ இந்நேரத்துக்குள்ள எங்கே போய் தொலைஞ்சிருக்காளோ.. நடந்து போனா அவளைக் கண்டு பிடிக்க முடியாதுப்பா..."

"புல்லட் சத்தம் ஊரைக் கூட்டுமேடா..."

"புதுப்பொண்ணும் மாப்பிள்ளையும் ஜோடி போட்டுக்கிட்டு பக்கத்து டவுனுக்கு சினிமாப் பாக்கப் போயிட்டு வந்தாங்கன்னு சொல்லுங்க.."

"நம்புவாங்களாடா..."

"அதப்பத்தி நமக்கென்ன கவலை...?"

தசரதன் வேகமெடுத்து பறந்தான்.. ஊரைவிட்டு வெளியே வந்து கண்மாய் கரையை ஒட்டிய பாதையில் வண்டியைத் திருப்பியபோது... தூரத்தில் வெந்நிலா சென்று கொண்டிருப்பது வண்டியின் விளக்கு வெளிச்ச வட்டத்துக்குள் தெரிந்தது.. பக்கத்தில் போய் வழியை

மறித்து புல்லட்டை நிறுத்தி இறங்கியவன்.. வெந்நிலாவின் அருகில் நிதானமாக வந்து உற்றுப் பார்த்தான்...

"எங்கேடி போற...?"

அவன் கேள்வியில் வெந்நிலா உக்கிரமானாள்.. அவள்யார்.. அவளது உயரம் என்ன என்று தெரியாமல் மரியாதை குறைவாய் அவன் பேசுவதாக அவளுக்குத் தோன்றியது...

"வாடி போடின்னு கூப்பிட்டா நடக்கறதே வேற..."

"என்னடி செய்வ..?" அவன் நிதானமாக கேட்டான்...

என்ன செய்வாள்..? வெந்நிலா செய்வதறியாமல் தவித்தாள்.. எதையெதையோ செய்ய வேண்டும்.. என்று நினைத்திருந்தவளின் நினைப்பில்தான் மண் விழுந்து விட்டதே...

அவளை ஊடுறுவதைப் போல அவன் பார்ப்பதை அந்த இருளிலும் அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது...

"வேணும்ன்னா இதுக்கொரு பஞ்சாயத்தைக் கூட்டுடி.. கூட்டி அவங்ககிட்ட சொல்லிப்பாரு.. இந்த தசரதன் என்னை வாடி.. போடிங்கிறான்னு.. சொன்னா



என்னன்னு கேப்பாங்க..." கேலிக்குரலில் அவன் பேசிக் கொண்டே போனான்...

"வாட்...?"

"வாட்டாவது.. பூட்டாவது.. இது அல்லியூர்டி.. இங்கே உன் இங்கிலிஷை அடக்கியே வைய்யி.. ஏன்னா.. வெள்ளக்காரன் விரட்டியடிச்ச சுதந்திரப் போராட்ட தியாகிக இந்த ஊருக்குள்ள நிறையப் பேரு இருக்காங்க.. உன் இங்கிலிஷ் அவங்க காதில விழுந்ததுன்னு வைய்யி.. கம்பூண்டி நடக்கிறவங்க.. அந்தக் கம்பைத் தூக்கிக் கிட்டே அடிக்க வந்திருவாங்க..."

"பயமுறுத்தறிங்களா..?"

"உண்மையைச் சொன்னேன்..."

"ஹ.. இவர் பெரிய உண்மை விளம்பி.. ஒரு சொல் ஒரு வார்த்தையில நிற்கிறவரு..."

"நீ சொன்னாலும் சொல்லாட்டியும் நான் அப்படித்தான்..."

"அப்ப.. சார் ஏன் இன்னும் காவி வேட்டியக் கட்டிக்கிட்டு சன்யாசம் போகல...?"

வெந்நிலாவின் கேள்வியில் தசரதனின் புருவங்கள் முடிச்சிட்டன...

இதுதானா..? இதனால்தான் அவள் அப்பேற்பட்ட பழியைத் தூக்கி இவன் மேல் போட்டாளா..? ஒரு சொல்..! ஒரு சின்னஞ்சிறு சொல்..! அதற்காகவா அவளின் வாழ்வை பணயம் வைத்து இவனை பஞ்சாயத்தில் நிறுத்தினாள்..?

"பூனைக்குட்டி வெளியில் வந்து விட்டது..." கடினமான குரலில் சொன்னான் தசரதன்...

"யெஸ்.. என்ன செய்வதாக உத்தேசம்..?"

"அதுதான்.. செய்கிறதையெல்லாம் நீ செய்து முடித்து விட்டாயே.. என்னைக் காவி வேட்டி கட்ட வைக்கிறதுக்காகவா இவ்வளவு பெரிய பொய்யைச் சொன்ன...?"

"அதுக்காக மட்டும் இல்லை..."

"இன்னும் என்ன..?"

"புளிய மரத்து வீட்டுக்காரன் கதையைப் பத்தி உங்கம்மா சொன்னாங்க..."

"ஓ..."

சரவணனால் அவன் காதுகளை நம்பமுடியவில்லை. அவள்... அவளுடைய வாழ்வை பணயம் வைத்து



அவனுடைய வாழ்வை கேள்விக்குறியாக்க நினைத்திருக்கிறாள்.. புளிய மரத்து வீட்டுக்காரனைப் போல... தசரதனும் திருமணமாகியும் பிரம்மச்சாரியாக... மனைவியால் கைவிடப் பட்டவனாக... வாழ்க்கையை வாழாமல் தனிமரமாக.. காலம் முழுவதும் கைச்சமையலைச் செய்து சாப்பிட வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறாள்..

அதற்காகத்தான் அந்தப் பழி...!

அதைச் சொல்ல அவளுக்கு நாக்குக் கூசவில்லையா..? அவன் அறையில் அவள் தூங்கிக் கொண்டிருப்பாள் என்று தெரியாமல் போய் தூங்கி விட்டதற்காக எப்பேற்பட்ட கொடுமையை அவனுக்கு இழைத்து விட்டாள்..!

"அப்படி நினைச்சவ உங்க அப்பன் கூடவே ஓடியிருக்கவேண்டியது தானேடி.. எதுக்காக என் வீட்டில இருக்கிற...?"

"நான் கிளம்பினேனே.. டாடிகிட்ட கெஞ்சிப் பார்த்துட்டேனே.. அவர் என்னை கூப்பிட்டுக்கிட்டுப் போக மாட்டேன்னு சொல்லிட்டாரே.. இங்கேதான் இருக்கணும்னு சொல்லி விட்டு விட்டுப் போயிட்டாரே..."

"அவரு மானஸ்தான்..."

அவன் வார்த்தைகளால் அவளைச் சுட்டான்.. அவளுக்குள் ரோசம் பொங்கியது.. தனிமைப் பட்டுவிட்ட துக்கம் அவளுக்குள் குமுறியது...

"உங்களால்தான்.. எல்லாம் உங்களால் தான்.." அவள் சுட்டுவிரலை நீட்டி அவனைக் குற்றம் சாட்டினாள்...

அவன் அசையவில்லை.. பேசட்டும் என்று விட்டு விட்டான்...

'கொட்டட்டும்.. இவ மனசில இருக்கிறதை வெளியில கொட்டட்டும்.. அப்பத்தான் இவ நினைப்பு என்னாங்கிறது எனக்கும் தெரிய வரும்...'

"இந்த ஊருக்கு வந்து உங்களைப் பார்க்கிற வரைக்கும் நான் எவ்வளவு சந்தோசமா இருந்தேன் தெரியுமா..? ஐ வாஸ் ஸோ ஹேப்பி.. வெளிநாட்டில் இருக்கிற ஷியாம் சுந்தர்கூட எனக்கு மேரேஜ் எங்கேஜ் மென்ட் நடந்திருந்தது..."

தசரதன் உதட்டைக் கடித்து தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டான்.. வேறு ஒருவனுக்கு நிச்சயிக்கப் பட்டிருந்த பெண்ணின் கழுத்தில் அவன் தாலியைக் கட்டியிருக்கிறான்...



வேறு ஒருவனின் நினைவுகளுடன் அந்த ஊருக்குள் வந்து இறங்கியிருந்தவளால் ஊர் திரும்ப முடியாமல் போய் விட்டது.. நினைத்துக் கொண்டிருந்தவனை மணக்க இயலாமல் போய் விட்டது...

ஏன்..? இது யாரால் நிகழ்ந்தது...?

அவளே அதை நிகழ்த்திக் கொண்டு விட்டாள் என்றால் இந்தக் கொடுமையை எங்கே போய் சொல்லுவது..?

"ஷியாம் என்னைப் போல பணக்காரன்.. ஆனாலும் என்னை மேரேஜ் பண்ணிக்கப் போறதை அவரோட லக்குன்னு நினைச்சார்.. ஆனா.. நீங்க...?"

தசரதன் இமைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்..

"என் பணத்தை மதிக்கலை.. என் அழகை மதிக்கலை.. என் உயரத்தை மதிக்கலை.. அலட்சியப் படுத்தினிங்க.."

தசரதனின் உதடுகள் துடித்தன...

"என்னைப் போன்ற ஒருத்தியை எட்டிக்காய்ன்னு சொன்னீங்க.. என்னை இன்சல்ட் பண்ணினீங்க..

என்னை மேரேஜ் பண்ணிக்கிறதுக்குப் பதில் சந்நியாசியா போயிருவீங்கன்னு சொன்னீங்க.. என்னால அதையெல்லாம் தாங்கிக்க முடியலை.. எதைச் செய்தாவது பதிலுக்கு உங்களை இன்சல்ட் பண்ணி காயப்படுத்தி விடனும்னு என் மனதுக்குள்ள வெறியாய் இருந்தது..."

இந்த அளவுக்கு அவளின் மனம் பாதிப்படைந்திருக்கக்கூடும் என்று நினைத்துப் பார்த்திராத தசரதன் சிலையாக சமைந்து நின்றான்..

"எனக்கு ஷியாமின் நினைவு மறந்து விட்டது.. எதைச் செய்து உங்களை பழிவாங்கறதுன்னு யோசித்தேன்... இந்த வழி தானாக அமைந்து விட்டது.. நான் கூட இப்படி நடக்கும்ன்னு யோசிக்கவே இல்லை.. உங்களால என் தூக்கம் கெட்டு விடியவிடிய பால்கனியிலே வாக் பண்ணிக்கிட்டு இருந்தேன்.. அசதியில தூக்கம் வந்திருச்சு.. இருந்தாலும் திரும்பவும் பால்கனிக்குப் போய் விடுவேங்கிற நினைவில கதவை லாக் பண்ணாம விட்டுவிட்டேன்.. அது தெரியாம நீங்க உள்ளே வந்து படுத்து தூங்கிட்டிங்க.. நீங்க வந்ததும் எனக்கும் தெரியாது.. நான் உள்ளே இருந்ததும் உங்களுக்குத் தெரியாது.. தெரியாமல்தான் நாம இரண்டு பேரும் ஒரே பெட்டில்



படுத்துத் தூங்கினோம்.. ஆனா பாருங்க... அதை நாம பார்க்கிறதுக்கு முன்னாலே நம்ம பேரண்ட்ஸீம்.. பக்கத்து வீட்டு ஆளுகளும் பார்த்துட்டாங்க.. நிலைமையை நான் எனக்கு சாதகமாக யூஸ் பண்ணிக்கிட்டேன்... மேரேஜ் நடந்துருச்சு.. பட்.. நான் எதிர்பார்த்தது நடக்கலை.. டாடி என்னை விட்டுட்டுப் போயிட்டார்.. ஷியாம் வீட்டில் இதைப்பற்றிச் சொல்லி விட்டார்.. இனி ஷியாமும் என்னை மறந்து விடுவார்.. இத்தனையும் யாராலே..? உங்களாலே.."

## 22



மனதில் உள்ளதையெல்லாம் கொட்டி முடித்து விட்ட வெந்நிலா விரக்தியுடன் வானம் பார்த்து நின்றிருந்தாள்...

"பேசி முடிச்சிட்டயா..?" தசரதன் அமைதியாக கேட்டான்...

"யு..யு.. என் வலியும்.. வேதனையும்.. உங்களுக்கு கேலியாக இருக்கிறதா...?" அவள் குமுறினாள்...

"எதற்கு இந்த வலி...? எதனால் இந்த வேதனை..? நானா பணத்தை மதிக்காதவன்..? பணம் மகாலட்சுமி..! தெய்வம்..! அதை கையெடுத்துக் கும்பிடுவோம்.. பணத்தை நான் மதிக்கிறேன்.. அந்த பணத்தினால் வரும் உன் திமிரை நான் மதிக்கலை.. அழகை நான் ஆராதிக்கிறவன்தான்.. அந்த அழகு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் தெரியுமா..? குத்துவிளக்கின் சுடரைப் போல மென்மையாக.. ஆர்ப்பாட்டமில்லாத நதியாக இருக்கவேண்டும்.. உன்னைப் போல ஆணவத்துடன் இருக்கக்கூடாது.. உன்னை முதலில் பார்த்தப்பவே நீ அழகாய் இருக்கேன்னு நான் நினைச்சேன்.. அதை ரசிக்க விடாம உன் அலட்சியமும் திமிரும் ஊடே வந்து நின்னா நான் என்ன பண்ணுவேன்..? நீ என்னை மதிக்கலை.. நானும் உன்னை மதிக்கலை.. நீ என்னை இன்சல்ட் பண்ணின.. நானும் உன்னை இன்சல்ட் பண்ணினேன்.. பணத்துக்காகவும் அழகுக்காகவும்.. உன்னை பிடிக்கனும்ன்னு ஒன்னும் அவசியமில்லைடி.. அப்புறம் அந்த ஷியாம்..! அவன் கிட்டயிருந்து உன்னை நான் பிரிக்கலை... நீயாத்தான்... பிரிஞ்சு நிக்கிற..



ஒருத்தனுக்கு பெண்டாட்டியாகப் போகிறவளுக்கு இன்னொருத்தன் குடியைக் கெடுக்கனும்கிற நினைப்பு எதுக்காக வருதுடி.. வந்தா இந்தக் கதிதான்.."

"சொல்லிக் காட்டறிங்களா...?"

"சொன்னாத் தப்பில்ல.. கிளம்பு..." தசரதன் அழைத்தான்...

"நான் வர முடியாது..." அவள் மறுத்தாள்...

"வராம...? என்ன செய்யப் போற...?"

"அது உங்களுக்குத் தேவையில்லாதது..."

"அது நேத்து வரைக்கும்.. இன்னைக்கு கதையே வேற.. நீ தான் பஞ்சாயத்தைக் கூட்டி... உனக்கும் எனக்கும் இடையே புதுசா ஒரு உறவை கொண்டு வந்திட்டயே.. நீ எக்கேடோ கெட்டுப் போன்னு நானும் விட முடியாது.. அப்படி விட்டா.. இந்த ஊரும்.. உன் அப்பாவும் என்னைச் சும்மா விடவும் மாட்டாங்க.. அதனால நீ என்கூட வந்து தான் ஆகனும்.. நீ வராம நான் போக முடியாது.. வா.. வா.."

தசரதன் அலட்சியமாக வார்த்தைகளை சிந்தினான்.. வெந்நிலா நொந்து போனாள்.. அவளுக்காக கவலைப்பட்டு

அவன் தேடிவரவில்லையா..? யாருமற்ற அநாதை போல தன்னை உணர்ந்தவளின் மனம் வலித்தது...

அந்த நேரம் பார்த்து அவர்களைக் கடந்து போன சைக்கிள் நின்றது...

"என்னப்பா தசரதா.. புதுப் பொண்டாட்டி கூட கம்மாப் பக்கமா எங்க வந்த..? இது ஒளிஞ்சு மறைஞ்சு காதல் பண்றவங்க தேடற இடம்ப்பா.. உனக்குத்தான் ஊரே பாக்க கல்யாணம் நடந்துருச்சுல்ல..? வீட்டுக்குள்ளே முதராத்திரியைக் கொண்டாடுவியா.. அத விட்டுட்டு கம்மா பக்கம் ஒதுங்க வந்திருக்க..", என்று கேலி பேசினான் சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தவன்..

"அட நீ வேறப்பா.. அதான் முத ராத்திரியை அவன் நேத்தே கொண்டாடி முடிச்சிட்டானில்ல.. இது அவனுக்கு ரெண்டாவது ராத்திரிப்பா.. இல்ல தசரதா..?" பின் சீட்டில் உட்கார்ந்திருந்தவன் பலமாக சிரித்தான்..

தசரதன் பல்லைக் கடித்தான்.. கேலி பேசியவர்களை துவம்சம் பண்ண வேண்டுமென்ற வெறி அவனுக்குள் கிளர்ந்தது..

'நான் முதராத்திரியக் கொண்டாடியத இவன் பார்த்தானா...?'



"எல்லாம் உன்னாலதாண்டி.." அடிக்குரலில் வெந்நிலாவிடம் உறுமியவன்.. அடுத்த நொடியிலேயே புன்னகை மன்னனாகி அவர்களின் பக்கமா திரும்பினான்..

"அது வந்துண்ணே.. என் பொண்டாட்டி டவுனுக்குப் போயி சினிமாப் பாக்கனுமுன்னு சொன்னா.. கூப்பிட்டுக் கிட்டுப் போனேன்.. திரும்பி வரப்ப வண்டி மக்கர் பண்ணிருச்சு.. அதான்.. என்ன ஏதுன்னு பாத்துக்கிட்டு இருக்கேன்..."

"நான் பாக்கவாப்பா..."

"வேணாண்ணே.. சரியாகிருச்சு..."

"சரியானா கிளம்ப வேண்டியதுதானே.. அதுவே பட்டணத்துப் பொண்ணு.. அதைக் கூப்பிட்டுக்கிட்டு வந்து கம்மாக் கரையில காத்து.. கருப்பு.. உலாவற இடத்தில கொண்டு வந்து நிப்பாட்டியிருக்கறியே.. ஒன்னு கிடக்க ஒன்னு ஆகிருச்சுன்னா என்னப்பா செய்யறது...?"

'காத்து.. கருப்பா..' வெந்நிலா பயந்து போனாள்..

தசரதன் கூப்பிட வேண்டிய அவசியமின்றி அவள் சட்டென்று அவன் வண்டியின் பின்னால் ஏறிக் கொள்ள தசரதனுக்கு மனதுக்குள் சிரிப்பு வந்தது...

'இதப்பாருடா.. ராணி ரங்கம்மாவுக்கு காத்து கருப்புன்னா பயம் போல.. இவ மனுசனத்தான் அரட்டுவாளா..? இவளே ஒரு பேயி.. இவ பேயைப் பார்த்து பயப்படறாளா..?'

அவன் புல்லட்டை கிளப்பி.. "வரேண்ணே..." என்று அழைக்காமல் குசலம் விசாரிக்க வந்த அந்த அல்லியூர் நலம் விரும்பிகளிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டை நோக்கிப் பறந்தான்...

கிராமத்து சாலையின் மேடு பள்ளங்களில் வண்டி குழுங்க அவள் விழுந்து விடாமலிருக்க வெகுவாக சிரமப்பட்டாள்.. அவன் முதுகோடு ஒட்டிக் கொண்டவளின் கை அவளையறியாமல் அவன் இடுப்பைச் சுற்றி வளைத்துக் கொண்டது.. அவளும் தான் பாவம் என்ன பண்ணுவாள்..? அவளுக்கு இருசக்கர வாகனங்களில் பயணித்துப் பழக்கமில்லை...

முதன்முதலாக ஒரு பெண்ணின் உடலை உணர்ந்த தசரதனின் உடலில் சூடேறியது.. அவளின் ஸ்பரிசத்தில் அவன் அறியாத பல உணர்வுகள் அவனுக்குள் உற்பத்தியாகி அவனை முற்றுகையிட்டன...

தசரதன் வண்டியின் வேகத்தைக் குறைத்தான்.. எதனால் என்று அனுமானிக்க முடியாமல் அந்த



பிரயாணத்தை நீடிக்க அவன் விரும்பினான்.. சீக்கிரமாக வீட்டுக்குச் செல்ல அவன் விரும்பவில்லை...

"ஒரு கவிதை சொல்லவாடி..." அவளை வம்பிழுத்தான்...

'நீ கவிதை சொல்லிட்டாலும்...' அவள் பதில் சொல்லவில்லை...

"ஒரு பேயே.. பேயை நினைச்சு பயப்படுதே..." அவளின் பதிலை எதிர்பார்க்காமல் கவிதை சொன்னவன்...

"எப்புடீ..?" என்று அவளிடம் கேடக வேறு செய்தான்..

"சகிக்கலை..." வெந்நிலா வெடுவெடுத்தாள்...

ஊருக்குள் வண்டி நுழைந்தது.. வீட்டு வாசலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த ஊர் ஜனங்கள் அவர்கள் இருவரையும் பார்த்து தங்களுக்குள் முணுமுணுப்பாய் பேசிக் கொண்டார்கள்... நெருங்கிய உறவினர்கள்...

"என்னப்பா..?" என்று விசாரித்தார்கள்...

"டவுனுக்கு..." எல்லோருக்கும் ஒரே பதிலை சொல்லியபடி வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான் தசரதன்...

'இந்த ஊருக்குள் பிரைவஸி என்பதே இல்லையா..' வெந்நிலாவுக்குள் எரிச்சல் மண்டியது...

அவள் வீட்டில் அவளுடைய அறைக்குள் வருவதாக இருந்தால் கதவைத் தட்டி விட்டுத்தான் அவளுடைய தந்தையே வருவார்... அவரே அப்படியென்றால் மற்றவர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்...

அப்படிப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்தவளுக்கு அந்த கிராமப்புறத்தின் பழக்க வழக்கங்களை ஜீரணிக்க முடியவில்லை...

வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தினான் தசரதன்... காத்துக் கொண்டிருந்த பாரிஜாதம் ஓடிவந்து வெந்நிலாவைக் கட்டிக் கொண்டாள்...

"அம்மா..." தாழ்ந்த குரலில் சீறினான் தசரதன்...

"வீட்டுக்குள்ளே கூப்பிட்டுக்கிட்டுப் போ.. டவுனுக்கு சினிமாபாக்கப் போயிட்டு வாரதா சொல்லியிருக்கேன்... நீ அழுது ஊரைக் கூட்டிராதே..."

பாரிஜாதத்தின் தேடுதலில் வெந்நிலாவுக்குள் இருந்த அக்கினி கொஞ்சம் தணிந்தது... அவள் தாயில்லாதவள்.. அல்லியூருக்கு வந்த நாள் முதலாய்



பாரிஜாதம் காட்டிய தாய்ப்பாசத்தில் அவள் நெகிழ்ந்திருந்தாள்...

பாரிஜாதம் வெந்நிலாவை வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு போனாள்.. அவள் எங்கே போனாள்..? ஏன் போனாள்..? என்ற கேள்விகளைக் கேட்க வேண்டாமென்று குடும்பத்தாரிடம் தசரதன் சொல்லி விட்டான்... வீட்டுக்கு கிளம்ப மனமில்லாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சரவணனை...

"கிளம்புடா.." என்று அதட்டி அனுப்பி வைத்தான்..

வெந்நிலா சாப்பிட மறுத்து மாடிக்குப் போய் விட்டாள்...

"இங்கே குடும்மா..."

சாப்பாடு தட்டை வாங்கிக் கொண்டு தசரதன் மாடியேற.. கயிலைநாதனும்.. பாரிஜாதமும் ஒருவரையொருவர் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டார்கள்...

கட்டிலில் குப்புறப் படுத்திருந்த வெந்நிலாவின் முதுகை வெறித்தான் தசரதன்.. அவளின் உடல் அழுகையில் குலுங்கிக் கொண்டிருந்தது...

'பாவம்..! அவன் மனதில் கழிவிரக்கம் எழுந்தது...'

அங்கே கிடந்த நாற்காலியை சப்தத்துடன் இழுத்துப் போட்டு அமர்ந்தான்.. அந்த சத்தத்தில் அவள் அவசரமாக கண்களை தலையணையிலேயே முகம் புரட்டி துடைத்து விட்டு எழுந்து அமர்ந்தாள்...

"சாப்பிடு.." தட்டை நீட்டினான் தசரதன்...

"வேண்டாம்..." பிடிவாதமாக அவள் மறுத்தாள்...

"இங்கே பாரு.. பட்டினி கிடக்கறதினால எதுவும் மாறப் போறதில்ல.. ஏன் பட்டினி கிடக்கனும்..? உன் மனசில நீ செஞ்சது நியாயம்ன்னு தோணுச்சுன்னா பட்டினி கிடக்க வேண்டிய அவசியமே இல்லையே... என்னால உன் மனசு இந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கும்ன்னு எனக்குத் தெரியாது.. எல்லாரும் உன்னைக் கொண்டாடனும்னு நீ எதிர்பார்த்திருக்க.. எனக்கு உன்னைக் கொண்டாட மனசில்லாம போயிருச்சு.. அதனால வந்த வினைதான் இது.. சாப்பிடு..."

அவள் மௌனமாக இருந்தாலும் சாப்பாட்டுத் தட்டை வாங்கிக் கொள்ளவில்லை... தசரதன் பிடிவாதமாக அதை அவள் கைகளில் திணித்தான்...



"எதுக்கு பட்டினி கிடக்கிற..? இப்ப என்ன ஆகிப்போச்சு..? வெந்நிலா..! உனக்கு நான் ஒரு உத்திரவாதம் தர்றேன்.. தெரிஞ்சோ.. தெரியாமலோ என்னால் உன் வாழ்க்கை மாறிப் போச்சு.. நான் அதை சரிபண்ணித் தர்றேன்.. நடந்தது என்னன்னு நான் உன் அப்பாவிடம் பேசறேன்.. அப்புறம் யாரோ ஒருத்தனோட பெயரைச் சொன்னயே.. யார் அது..? ம்ம்ம்.. ஷியாம்..! அவனிடமும் பேசறேன்..."

"வாட்..." வெந்நிலா கண்கள் விரிய நிமிர்ந்தாள்...

"ஆமாம்.. நடந்ததை நான் அவங்களுக்கு புரியவைக்கிறேன்.. இந்தக் கல்யாணத்தில இருந்து நான் உனக்கு விடுதலை தர்றேன்.. கவலைப் படாதே.. சாப்பிடு..."

தசரதன் சட்டென்று எழுந்து அறையை விட்டுப் போய் விட்டான்.. வெந்நிலா அசைவில்லாமல் அமர்ந்திருந்தாள்.. தசரதன் காட்டிய இன்னொரு பரிணாமத்தில் அவள் உறைந்திருந்தாள்...

'இவன் இப்படிப்பட்டவனா...' அவளால் நம்ப முடியவில்லை...

திருமணத்தை மதித்துக் கொண்டாடும் குடும்பத்தில் பிறந்தவன்.. கிராமத்து கலாச்சார பழக்க வழக்கங்களில் ஊறியவன்.. அவளுக்கு விவாகரத்து கொடுப்பதாக கூறுகிறான்.. அதுவும் யாருக்காக.. அவளுக்காக..!

## 23



காலைக் கதிரவனின் ஒளிக்கதிர் பட்டு நெல்கதிர் நிமிர்ந்து நின்றது.. வாய்க்காலில் ஓடிய நீரில் பட்ட காற்று.. அந்த ஈரத்தை சுற்றுப்புறத்திற்கு எடுத்துச் சென்றது.. வரப்பிலிருந்த ரேடியோ...

**"ஆறோடும் மண்ணில்...**

**எங்கும் நீரோடும்..."** என்று பாடியது...

பாடலோடு சேர்ந்து பாடியவாறு தண்ணீர் கட்டிக் கொண்டிருந்த தசரதன்...

"அண்ணே.." என்ற அழைப்பில் திரும்பினான்...

வரப்பில் சாரதாவும்.. வெந்நிலாவும் நின்றிருந்தார்கள்..

'இவ எங்கே இங்கே...'



தசரதன் தண்ணீர் கட்டுவதை மறந்தவனாக வரப்பில் ஏறினான்.. அவனின் மடித்துக் கட்டிய லுங்கியும்.. கையில்லாத பனியனும்.. தலையில் கட்டியிருந்த முண்டாசும் வெந்நிலாவிற்கு அன்னியமாகத் தெரிந்தன.. இப்படிப்பட்ட கோலத்தில் இதற்கு முன்னால் அவனை அவள் பார்த்ததில்லை.. அவனின் உருண்டு திரண்ட புஜ அழகில்.. அவள் லேசாக தடுமாறினாள்...

"என்ன சாரதா...?"

வெந்நிலாவிடம் கேட்காமல் அவன் சாரதாவிடம் கேட்டதில் வெந்நிலாவிற்கு என்னவோ போல் இருந்தது...

"அண்ணி உன்கிட்டப் பேசனுமாம்..."

'இதப் பாருடா.. இவளுக்கு என்கிட்டப் பேச என்ன இருக்கு...?'

ஒரு மார்க்கமாக வெந்நிலாவை பார்வையிட்டான் தசரதன்... அவள் முகம் சிவந்தது... அவன் கண்களை சந்திக்காமல் வேறு திக்கில் அவள் பார்த்தாள்...

"வீட்டுக்கு வரும்போது பேச வேண்டியது தானே..." அவன் பொதுவாக கேட்டான்...

"நீ வீட்டுக்கு வாரதை வெளியில் சொல்லிராதே.." வெந்நிலாவிற்குப் பதில் சாரதா சிடுசிடுத்தாள்...

"வெளியில சொன்னா என்ன ஆகுமாம்..?" தலையில் கட்டியிருந்த முண்டாசை அவிழ்ந்து தோளில் போட்டபடி தசரதன் கேட்டான்...

"கடுப்ப கிளப்பாதேண்ணே.. நீ எப்ப வீட்டுக்கு வர்ற.. எப்ப போறேன்னு யாருக்கும் தெரிய மாட்டேங்குது.. இந்த ஒரு வாரமா நீ எங்கண்ணிலயே படல... அப்புறம் அண்ணி கண்ணில எங்க பட்டிருக்கப் போற..?"

"அதுக்காக வயக்காட்டுக்கு வரலாமா...?"

"நான் வந்ததே இல்லையா...?"

"உன்னைச் சொல்லலை..."

"அண்ணியைச் சொன்னயா...?"

"தெரிஞ்சாச் சரி..."

"அவங்க வேற என்ண பண்ணுவாங்க...? நீதான் அவங்க கண்ணில எம்புடாம தப்பி ஓடிக்கிட்டே இருக்கியே..."

"அதுசரி.. உங்க அண்ணி கண்ணில வலை வைச்சிருக்கா.. அதில அகப்படாம நான் தப்பிக்கிட்டு இருக்கேன்..."



வெந்நிலாவின் கண்களைப் பார்த்தபடி சொன்ன தசரதனுக்கு அது வலைதான் என்று தோன்றியது... அவனை நோக்கி வீசப்படும் வலை..! ஆனால்.. அது எதற்காக..?

அவன்தான் அவளுக்கு விடுதலை கொடுப்பதாக கூறியிருக்கிறான்.. அதற்காகத்தானே மறுநாள் சென்னைக்குக் கிளம்புவதாக இருக்கிறான்.. அதற்கு மேலும் எதற்காக அவள் வலை வீசுகிறாள்...?

"குதர்க்கமாவே பேசாதண்ணே..." சாரதா மோட்டரை நோக்கிச் சென்றாள்...

"அங்கே எதுக்குப் போற...?" தசரதன் அவளைக் கூப்பிட்டான்...

தங்கையை முன்னால் வைத்துக் கொண்டு வெந்நிலாவிடம் பேச அவனுக்கு சங்கடமாக இருந்தது...

"நான் துணி துவைக்கனும்..."

"வீட்டில துவைக்கிறதுக்கென்ன...?"

"மோட்டாரில் துவைச்சு நாளாச்சுன்னு அம்மாதான் கொடுத்து விட்டுச்சு..."

அவனுக்கும் வெந்நிலாவுக்குமான தனிமையை சாரதா உருவாக்கிக் கொடுப்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.. அந்தச் சின்னஞ்சிறு பெண்ணின் அறிவுக் கூர்மையில் அவன் வியந்தான்.. அவன் பார்க்க வளர்ந்த குழந்தைக்கா இந்த அளவுக்கு இங்கிதம் இருக்கிறது...?

"என்ன விசயம்...?" வெந்நிலாவைப் பார்க்காமல் வயலைப் பார்த்தபடி கேட்டான்...

"நாளைக்கு சென்னை போகிறிங்களாமே..." கைவிரல் நகங்களைப் பார்த்தபடி வெந்நிலா கேட்டாள்...

"ஆமாம்..." வாய்க்காலைப் பார்த்தான் தசரதன்...

"டாடியைப் பார்க்கத்தானே..?" வெந்நிலா அவன் முகம் பார்த்தாள்...

"ம்ம்ம்..." நெல் கதிரைப் பார்த்தபடி தசரதன் சொன்னான்...

"வேண்டாம்..." வெந்நிலாவின் குரலில் தீர்மானம் இருந்தது...

"ஏன்..?" அவள் விழிகளைப் பார்த்துக் கேட்டான் தசரதன்.. அவன் பார்வை அவளை ஊடுறிவியது...



"நீங்க எனக்கு விடுதலை கொடுத்து விடலாம்.. பட்.. அதனால் எனக்கு எந்தவிதப் பயனும் இல்லை.."

"புரியலை..."

"பஞ்சாயத்தின் முன்னால் நீங்க என் கழுத்தில் தாலி கட்டி பதினைந்து நாளாகுது... இத்தனை நாளும் நான் உங்க வொய்பா உங்க வீட்டில் இருந்திருக்கேன்.. இத்தனைக்கும் மேலா நமக்குள்ளே ஏதோ நடந்ததா பஞ்சாயத்தில் நானே சொல்லியிருக்கேன்.. இதையெல்லாம் ஷ்யாம் ரசிக்க மாட்டார்..."

"நமக்குள்ளே ஒன்னுமேயில்லன்னு நான் அவர்கிட்டச் சொல்றேன்.. உன் அப்பாகிட்டயும் எடுத்துச் சொல்றேன்..."

"நோ யூஸ்.. ஷியாமின் பேமிலியில கல்ச்சர் பார்ப்பாங்க... என்னை அவங்க ஏத்துக்க மாட்டாங்க..."

"முயற்சி செய்யாம எதுவும் பேசக்கூடாது...."

"முயற்சியே வேணாம்கிறேன்..."

"நீ விரக்தியில் பேசற.. உனக்கும்.. எனக்கும் பிடிக்காத கல்யாண வாழ்க்கையில யாருக்கு என்ன சந்தோசம் இருந்து விடப் போகுது...?"

தசரதனின் கேள்வியில் வெந்நிலா அடிபட்ட பார்வையைப் பார்த்தாள்.. அவள் விழிகளில் லேசாக கண்ணீர் அரும்பு கட்டியது.. தூசு படிந்த ஓவியத்தைப் போல அவளைக் கண்ணீருடன் பார்க்க தசரதனால் முடியவில்லை..

"இல்லைதான்..." வெந்நிலா முணுமுணுத்தாள்...

"சந்தோசம் இல்லைதான்.. என்னால உங்க சந்தோசம் கெட்டுப் போச்சுதான்.. உங்களுக்கு தேவைன்னா நான் உங்களுக்கு டைவர்ஸ் தருகிறேன்.. பட்.. எங்க வீட்டுக்கு மட்டும் நான் திரும்பிப் போக மாட்டேன்..."

"உளராதே.." தசரதன் அதட்டினான்...

"நோ அதர் வே... நீ வராதேன்னு டாடி சொன்ன பின்னால் சென்னைக்குப் போக எனக்கு விருப்பமில்லை..."

"ஷ்யாம்..?"

"அது முடிந்து போன கதை..."

"உன் முடிவு இதுவா இருந்தா நான் சென்னைக்குப் போகலை.. ஆனா டைவர்ஸ் அது.. இதுன்னு இனியொரு முறை நீ உளரக் கூடாது..."



"இது உங்களுக்குப் பிடிக்காத மேரேஜ்.."

"உனக்கும்தான்..."

"பட்.. இதுக்குக் காரணம் நான்தானே..."

"ம்ப்ச்.. அது நீ சொன்னதைப் போல முடிந்து போன கதை..."

"உங்க வாழ்க்கையை நீங்க வாழலாமே..."

வெந்நிலாவின் குரல் நடுங்கியது.. அதை துல்லியமாக தசரதனால் உணர்ந்து கொள்ள முடிந்தது... அவளை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை... ஒன்றை மட்டும் மிகத் தெளிவாக அவன் உணர்ந்தான்.. அது.. முதன்முதலாய் அவளைப் பார்த்த போது அவளிடம் தென்பட்ட ஆணவமும்... அகம்பாவமும் இப்போது இருக்கும் இடம் தெரியாமல் மறைந்திருந்தன என்பது தான் அது...

"நீயும் தான் உன் வாழ்க்கையை வாழனும்..."

வெந்நிலா பதில் சொல்லவில்லை.. தசரதனுக்கு அவளைப் பார்க்கும் போது இரக்கம் வந்தது... அவள் அவனால் வெறுக்கப் பட்டவள் என்பது அவனுக்கு மறந்து போய் விட்டது...

"உங்களுக்கு வேலை கிடைச்சிருக்காமே.." வெந்நிலா கேட்டு விட்டாள்...

"ம்ம்.. ரயில்வே ஸ்டேசன் மாஸ்டர்.. சேலத்துப் பக்கம் போஸ்டிங் போட்டிருக்காங்க..."

"எப்ப ஜாயின் பண்ணனும்..?"

"அடுத்த மாசம்..."

அதற்குப் பின்னால் அவர்களுக்குள் பேச பேச்சே இல்லாததைப்போல மௌனம் அவர்களைச் சூழ்ந்தது.. சாரதா துவைத்த துணிகளைக் காயப் போட்டு.. மடித்தே எடுத்து விட்டாள்...

"போகலாமா அண்ணி..." அவள் கேட்ட போது...

"ம்ம்ம்..." என்று தலையசைத்தாள் வெந்நிலா...

சோர்வுடன் சென்றவளைப் பார்த்த வண்ணம் அசையாமல் நின்றிருந்தான் தசரதன்.. அவன் மனதின் ஓர் மூலையில் சிறிதாக வலித்தது...

வெந்நிலா அமைதியாக நத்தை தன் கூட்டுக்குள் ஒடுங்குவதைப் போல ஒடுங்கிக் கொண்டாள்.. சாப்பாடக் கூட அவள் கீழே இறங்கி வரவில்லை.. மாடியறைக்குள்ளேயே புதைந்து கொண்டாள்.. அவளைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று தசரதன் சொல்லி விட்டதால் வேளா வேளைக்கு பாரிஜாதமே வெந்நிலாவற்கான சாப்பாட்டைக் கொண்டு போய் கொடுத்து விடுவாள்.. சாரதா பள்ளி விட்டு வந்ததும் வெந்நிலாவின் அறையை சுத்தம் பண்ணி அழுக்குத் துணிகளை எடுத்துச் சென்று விடுவாள்.. வெந்நிலா தடுக்க முனைந்தாலும் கேட்க மாட்டாள்...



"என் துணியைத் துவைக்கும் போது இதையும் சேத்து துவைச்சிருவேன் அண்ணி..."

அந்த வீட்டினரின் கரிசனத்தில் வெந்நிலாவிற்குள் குற்றஉணர்வுதான் எழுந்து நிற்கும்.. அவள் தனக்குள் மறுகிப் போவாள்...

தசரதன் அந்த வீட்டில் இருக்கிறானா.. இல்லையா என்றுகூட அவளுக்குத் தெரியவில்லை.. அன்றைய தினத்துக்குப் பின்னால் அவன் மாடிப்பக்கம் வருவதில்லை.. ஹாலில் கிடக்கும் கயிற்றுக் கட்டிலில் அவன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்ததை மாடிப்படி மறைவிலிருந்து ஒருநாள் அவள் பார்த்தாள்..

தினமும் அவன் அங்குதான் தூங்குகிறானா என்று அவள் கவனிக்க முயலவில்லை.. அதற்குப் பின்னால் மாடிப்படியின் அருகில்கூட அவள் வரவில்லை...


அந்த வார இறுதியில் தசரதன் வேலையில் சேரக் கிளம்புகிறான் என்று சாரதா வெந்நிலாவிடம் சொன்னாள்.. அது சம்பந்தமாக இரண்டு தினங்களுக்கு முன்னால் தசரதன் சேலத்திற்கு சென்று வந்ததாகவும் அவள் தெரிவித்தாள்.. வெந்நிலாவுக்குத்தான் தசரதன் எப்போது வருவான்.. எப்போது போவான் என்பது தெரியாதே...

தசரதன் கிளம்புவதற்கு முதல் நாள் அவள் மனம் படபடத்து தவித்தது.. என்னவோ.. கடலுக்கு மத்தியில் தனித்தீவாய் அவள் நின்று விட்டதைப் போல ஒர் வெறுமை அவள் மனதைச் சூழ்ந்தது...

அறைவாசலில் காலடிச் சப்தம் கேட்டது.. அவள் நிமிர்ந்தாள்.. தசரதன் அறைவாசலில் நின்றிருந்தான். கூர்மையான பார்வையுடன் அறைக்குள் வந்தான்.. அவள் எழுந்து நின்றாள்...



# 24



"கூ.. தடக்.. தடக்..." என்ற சப்தத்துடன் ரயில் ஓடிக்கொண்டிருந்தது...

ஜன்னலோரமாக சாய்ந்து அமர்ந்து நகர்ந்து ஓடும் மின்சாரக் கம்பங்களையும்.. மரங்களையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள் வெந்நிலா... இரண்டு மாத அறைவாசம் எனப்படும் சிறைவாசத்திற்குப் பின் வெளியுலகை அவள் பார்க்கிறாள்.. அவளருகில் இடைவெளி விட்டு அமர்ந்திருந்த தசரதன் செய்தித்தாளில் ஆழ்ந்திருந்தான்.. அவர்கள் அமர்ந்திருந்த இருக்கைக்கு அடியில் அடுக்கடுக்காக அட்டைப் பெட்டிகள் அடுக்கப் பட்டிருந்தன.. அவற்றில் பாரிஜாதத்தின் அன்பும்.. அக்கறையும் நிறைந்திருந்தன...

வெந்நிலா நினைத்துப் பார்க்கவே இல்லை.. இப்படியொரு மாறுதல் அவள் வாழ்வில் நிகழுமென்று...

அல்லியூருக்கு விருந்தாளியாகச் சென்றவள் அந்த ஊரின் மருமகளாகி அங்கேயே தேங்கி நின்றாள்.. அது

அவள் எடுத்த முடிவு.. இப்போது தசரதனின் மனைவியாக சேலத்திற்கு அருகிலிருக்கும் நகரமும் இல்லாத கிராமமும் இல்லாத ஊர் ஒன்றுக்கு பயணமாகிறாள்.. இது தசரதன் எடுத்த முடிவு....

"நாளைக்கு நாம ஊருக்குக் கிளம்பனும்..."

தசரதன் சென்னபோது அவள் விழிவிரித்தாள்.. அவன்தானே ஊருக்குப் போகப் போகிறான்..? அப்படியிருக்கும் போது அவன் நான் ஊருக்குப் போக வேண்டும் என்று சொல்லாமல் நாம் போக வேண்டும் என்று ஏன் சொல்கிறான்..?

"நீங்.. நீங்கதானே போகிறிங்க..?" வெந்நிலா தடுமாறினாள்..

"இல்லை.. நாம போகிறோம்..." அவன் தெளிவாக அழுத்தம் திருத்தமாகச் சொன்னான்...

"நாமா..?" அவள் விழிகள் அகன்றன...

"ம்ம்ம்.." ஆழமாக அவளைப் பார்த்தான் அவன்...

"ஆனா.. இது ஏன்..?" வெந்நிலாவினால் கேட்க நினைத்ததை கேட்க முடியவில்லை.. அவளால் அதை மட்டும்தான் கேட்க முடிந்தது...



"ஏன்னு கேட்டா என்ன அர்த்தம்..? இத்தனை நாளும் நான் இந்த ஊரில் இருந்தேன்.. நீயும் இருந்த.. இப்ப நான் வேலைக்காக வெளியூர் போயாகனும்.. அப்ப நீயும் என்கூட வந்துதானே ஆகனும்..?" தசரதனின் பார்வை அவளை ஊடுறிவியது..

வெந்நிலாவினால் அவனின் அந்தப் பார்வையை எதிர்கொள்ள முடியவில்லை.. அவனுக்கு அவள் இழைத்திருக்கும் அநீதியை மறந்து அவன் நீதி பேசுகிறானே.. எப்படி அவனால் இப்படிப் பேச முடிகிறது..? மன்னித்து மறக்கக் கூடிய தவறையா அவள் செய்தாள்..? குற்றமற்ற அவனை குற்றவாளியாக்கி பஞ்சாயத்தில் நிறுத்தினாள்.. அவன் கையால் தாலிவாங்கிய பின்னால் பிரிந்து போகும் முடிவுடன்தான் அவள் இருந்தாள்.. அதன் மூலம் அவனைத் தண்டிக்க உத்தேசித்திருந்தாள்.. அதை அவள் வாயால் அவளே சொல்ல அவன் கேட்டுக் கொண்டான்.. அப்படியிருந்துமா அவளையும் உடன் அழைத்துச் செல்லும் முடிவை அவன் எடுத்தான்...?

வெந்நிலாவின் கண்கள் கலங்கின.. பேச்சு வராமல் அவள்தடுமாறினாள்.. அவள் தலை கவிழ்ந்திருந்தது..

"ஏன்..?"

ஒற்றைச் சொல் ஓராயிரம் கேள்விகளைத் தாங்கி வெளிவந்தது..

"திரும்பவும் ஏன்னு கேட்கிற.. நான் இருக்கிற இடத்திலதான் நீ இருக்கனும்.. இதுக்கும் ஏன்னு கேட்டு வைக்காதே.. நீ என் பெண்டாட்டி.. உன் கழுத்தில் நான் கட்டிய தாலி இருக்கு.. என்னால உன்னை விட்டுட்டு போக முடியாது..."

வெந்நிலா சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள்.. அவள் கண்களில் அரும்பு கட்டியிருந்த கண்ணீர் இமைதாண்டி கன்னத்தில் வழிந்து தாரையாய் கீழே விழுந்து தரை நனைத்தது...

"நான் உங்களை விட்டுப் போக நினைச்சேனே..."

"நீதானே நினைச்ச...? நான் நினைக்கலியே..."

"மன்னிப்பை விட பெரிய தண்டனை எதுவுமில்லைன்னு நினைத்துட்டிங்களா..?" வெந்நிலா விம்மினாள்...

அவளை அணைத்து தோள் சாய்த்து கண்ணீரைத் துடைத்துவிட வேண்டுமென்று தசரதனின் மனம் துடித்தது.. கை முஷ்டியை மடக்கி தன்னைக் கட்டுக்குள் கொண்டு வந்தான் அவன்...



"நீதான் என்னைத் தண்டிக்கனும்னு நினைச்சே.. நான் உன்னைத் தண்டிக்கனும்னு என்னைக்குமே நினைச்சதில்ல.. உன்னைப் பிடிக்காது.. அதனால நீயிருக்க இடத்தில நான நிக்கல.. மத்தபடி உன்னைப் பாதிக்கிறதைப் போல எதையும் செய்யனும்னு நான் நினைச்சதில்ல..."

"நான் நினைச்சேனே..."

"அதையே நினைச்சு எத்தனை நாள்தான் மறுகிக்கிட்டு இருப்ப..? நடந்ததையெல்லாம் அவ்வளவு சீக்கிரமாய் மறக்க முடியாதுதான்.. ஆனா அதை ஓரம்கட்டிட்டு கிளம்பற வழியைப் பாரு..."

"அதுதான் ஏன்..?"

"நீ இந்த ஏனை விடவே மாட்டியா..? சீதைக்கு ராமன் இருக்குமிடம்தான் அயோத்தி.. புரிஞ்சதா..? நீ சீதையில்லன்னு சொல்லாதே.. அந்த சீதைக்கும் ராமன் வில்லை முறிக்கிற வரைக்கும் அவன்தான் அவளுக்கு புருசனா வரப் போகிறான்னு தெரியாது.. அண்ணலும் நோக்கியிருப்பார்.. அவளும் நோக்கியிருப்பாள்.. உடனே காதல் லிகிதம் எழுதி தோழிகிட்ட அவ கொடுத்தனுப்பிச்சாளா..? இல்ல.. ராமன்தான்

குதிரை மேலே ஏறி அவ இருந்த அரண்மனை வீதியிலே இந்தப் பக்கமும்.. அந்தப் பக்கமும் போய் வந்தாரா..? அவங்களுக்கு நடுவில வில் இருந்துச்சு.. உனக்கும் எனக்கும் நடுவில சொல் இருந்துச்சு.. ராமன் வில்லை உடைச்சான்.. நான் நீ சொன்ன சொல்லை உடைச்சேன்.. எதுன்னு கேட்கறியா..? ஷியாமைப் பத்திச் சொன்னயே.. அதைத்தான் சொல்றேன்.. நீ எனக்கு சீதைதான்.. நானும் பெயரிலதான் தசரதன்.. மனசில ராமன்.. அந்த தசரதனுக்குத்தான் ஆயிரக்கணக்கில் பெண்டாட்டிக இருந்தாங்களாம்.. இந்த தசரதனுக்கு வாழ்க்கையில் பெண்டாட்டிங்கிறது ஒருத்திதான்.. அது நீ மட்டும்தான். மனசைப் போட்டுக் குழப்பிக்காம கிளம்பு..."

தசரதன் சொல்லி விட்டுச் சென்ற சொற்கள் அந்த இரவு முழுவதும் வெந்நிலாவின் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தன.. அவள் இப்படியெல்லாம் யோசித்துப் பார்த்ததில்லை.. அவனின் பேச்சுக்கள் அவனது தெளிந்த சிந்தனையை பிரதிபலித்ததாய் இருந்ததில் அவளுக்கு பிரமிப்பாக இருந்தது..

சென்னையில் பிறந்து வளர்ந்து நுனி நாக்கில் ஆங்கிலம் பேசியதால் அவளைப் பெரிய அறிவாளியாக



நினைத்துக் கொண்டாளே.. அவனின் இந்த தெளிவான சிந்தனைக்கும்.. அறிவுக்கும் முன்னால் அவள் தூசி அல்லவா...?

பாரிஜாதம் குடித்தனம் நடத்தத் தேவையான பாத்திரங்களையும்.. அரிசி.. பாருப்பு.. மளிகை சாமான்களையும் அட்டைப் பெட்டியில் அடுக்கிக் கொடுக்க.. கயிலைநாதன்.. இறுக்கமாகவும்.. நேர்த்தியாகவும் அவற்றைக் கட்டி வைத்தார்.. வெந்நிலாவின் பெட்டிகளை சாரதா எடுத்துக் கொண்டு போக.. தயக்கத்துடன் வெந்நிலா மாடியை விட்டு இறங்கிவந்தாள்...

"நீங்க வரவில்லையா..?" அவளால் பாரிஜாதத்தின் முகத்தைப் பார்க்க முடியவில்லை.. அதை கண்டு கொள்ளாமல் இயல்பான சிரிப்புடன் அவளுக்கு பதில் சொன்னாள் பாரிஜாதம்...

"இங்கே தோட்டத்தையும்.. வயலையும் விட்டுப்புட்டு இந்தப் பக்கம்.. அந்தப் பக்கம் நாங்க நகர முடியாதும்மா.. நீங்க கிளம்பிப்போய் நல்லபடியா குடித்தனத்தை ஆரம்பிங்க.. அறுவடை முடிஞ்சதும் நாங்க ஒரு எட்டு வந்துட்டு வர்றோம்..."

“சாரதாவையாவது அனுப்பலாமில்லையா..?”

“அவ பள்ளிக்கூடம் போகனுமேம்மா.. இந்த வருசம் பனிரெண்டாம் வகுப்பாச்சே.. கவர்ண்மென்டு பரிச்சை எழுதனுமே...”

வெந்நிலாவின் எல்லாக் கேள்விகளுக்கும் பாரிஜாதத்திடம் பதில் தயாராக இருந்தது.. அவர்களின் வீட்டிலிருந்த கூட்டு வண்டியில் கட்டப்பட்டிருந்த அட்டைப் பெட்டிகளையும்... பெட்டிகளையும் ஏற்றிவிட்டு பாரிஜாதம் மகனைப் பார்த்தாள்.. அதுவரை அடக்கி வைத்திருந்த கண்ணீர் பெருக.. லேசாகத் தேம்பினாள்...

“அழுகாதேம்மா.. நான் என்ன தனியாவா போறேன்..? உன் மருமகளும் கூடத்தான் வர்றா..” தசரதன் சமாதானப் படுத்தினான்..

‘அதுதாண்டா தம்பி.. எனக்கும் உன் அப்பாவுக்கும் இருக்கிற ஒரே நிம்மதி...’ கண்ணைத் துடைத்துக் கொண்டாள் பாரிஜாதம்...

“இங்கே இருக்கிறவரைக்கும் இவங்க ரெண்டு பேரும் தாமரையிலைத் தண்ணிதான் பாரிஜாதம்.. அந்த மட்டுக்கும் அந்தப் பொண்ணு கட்டின தாலிக்கு மதிப்புக்



கொடுத்து நம்ம வீட்டிலயே தங்கிருச்சு.. உன் மகனும் வேலை பார்க்கப் போற ஊருக்கு பொண்டாட்டியோட போறேங்கிறான்.. இங்கதான் அவனையும்.. அந்தப் பொண்ணையும் தனித்தனியா கவனிச்சுக்க நாம இருந்தோம்.. அங்கே என்ன செய்வாங்க..? அவனுக்கு ஏதாவது ஒன்னுன்னா இந்தப் பொண்ணுதான் பாக்கனும்.. இந்தப்பொண்ணுக்கு தேவையானைத நம்ம மகன்தான் பாக்கனும்.. தப்பிச்சு ஓட முடியாதில்ல..?”

## 25



வாழ்க்கையைப் பற்றிய தெளிவான கண்ணோட்டத்தை வாழ்ந்து பார்த்தவர்களிடம்தான் நாம் கேட்டு அறிந்து கொள்ள முடியும்...

கயிலைநாதனும்.. பாரிஜாதமும் வாழ்ந்து பார்த்தவர்கள்... அவர் சொல்வதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. அவளுக்கு என்ன வேண்டும்..? அவளுடைய மகன் பெண்டாட்டியுடன் சீரும்.. சிறப்புமாக வாழ வேண்டும்.. அதைத்தானே அந்தத் தாயின் மனம் வேண்டிக் கொண்டிருக்கிறது...?

கயிலைநாதன் மாட்டு வண்டியாகப்பட்ட அந்த கூட்டு வண்டியினை ஓட்ட.. பாரிஜாதத்திடமும்.. சாரதாவிடமும் விடைபெற்றுக் கொண்ட தசரதனும்.. வெந்நிலாவும் வண்டியில் ஏறி அமர்ந்தார்கள்.. அதில் எல்லாம் ஏறிப் பழக்கமில்லாத வெந்நிலா ஏற முடியாமல் சிரமப்பட்டாள்...

"இப்படி ஏறனும்..."

தசரதன் தாங்கிப் பிடித்து ஏற்றி விட்டான்.. கயிலைநாதனும் பாரிஜாதமும் அர்த்தத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.. வெந்நிலா உள்ளே நகர்ந்து அமர.. தசரதன் பின்னால் அமர்ந்து கம்பியைப் பூட்டினான்...

"அண்ணி.." சாரதா தெருமுனைவரை வண்டியுடன் ஓடிவந்து கையாட்டினாள்...

"சாரதா..." வெந்நிலாவிற்கு தொண்டையை அடைத்தது.. அல்லியூரை விட்டுப் பிரியும் துக்கம் அவளுக்குள் எழுந்தது...

இந்த அளவுக்கா அந்த ஊரையும்.. அந்த வீட்டு மனிதர்களையும் அவள் நேசித்திருக்கிறாள்..?



அவளால் நம்பவே முடியவில்லை.. எதனால் இந்த அளவுக்கு அவர்களின் மீது அவள் பற்றுக் கொண்டாள்..?

அவளிடம் கோடிகோடியாய் பணம் இருந்தது.. ஆனால் மூழ்கித் திளைக்க பாசம் இருந்ததா..?

நாராயணமூர்த்தி பணத்தைத் துரத்திக் கொண்டு அதன் பின்னால் ஓடிக் கொண்டிருந்தார்.. வேலைக்காரர்களின் கவனிப்பில் வெந்நிலா வளர்ந்தாள்.. சம்பளத்துக்கு வேலை செய்பவர்களிடம் உண்மையான பாசத்தை அவள் பெற்றுவிட முடியுமா...?

கூட விளையாட சகோதரனோ.. சகோதரியோ இல்லாமல்.. பேணி வளர்க்க தாயில்லாமல்.. வளர்ந்த வெந்நிலாவைச் சுற்றி தனிமைதான் சூழ்ந்திருந்தது.. அதை உடைக்க நாராயணமூர்த்திக்கு நேரமில்லை...

அப்படி வளர்ந்தவளுக்கு தசரதனின் வீட்டிலிருந்த உயிர்ப்பு ஓர் விதமான சக்தியைக் கொடுத்தது.. அவள் மாடியறையில் தனியாகத்தான் இருந்தாள்.. ஆனால்.. தனிமையாக அவளை உணரவிடாமல் அந்தக் குடும்பத்தினர் அவளையும் அந்த வீட்டின் ஒரு அங்கமாக உணர்த்திக் கொண்டேயிருந்தார்கள்..

கடைசியில் எவனைப் பழிவாங்க அவள் பஞ்சாயத்தில் நிறுத்தினாளோ.. அந்தத் தசரதனே அவளைத் தனிமைப் படுத்தாமல்

'எங்கே நானோ...

அங்கே நீயும்.. என்னோடு...'

என்று சொல்லிக் கையோடு அழைத்துக் கொண்டு போகிறான்..

அசைந்தாடிய கூட்டு வண்டியில் அசைந்தாடிய போது அவளின் அலைபாய்ந்த மனம் அமைதியடைந்து சமனப்பட்டு விட்டதை உணர்ந்தாள் வெந்நிலா.. அவர்கள் கயிலைநாதனிடம் சொல்லிக் கொண்டு ராயிலில் ஏறி.. பயணப்பட்டார்கள்...

தசரதனுக்காக கொடுக்கப்பட்டிருந்த குவார்ட்டர்ஸ் வீடு.. சிறியதாக.. அழகாக இருந்தது.. ஆட்டோவில் அடுக்கப்பட்டிருந்த பெட்டிகளை இறக்கி வைத்து ஆட்டோவை அனுப்பி விட்டுவந்த தசரதன்..

"உன் வீட்டைப் போல இது மாளிகையில்லை..." என்றான்...

'என் வீடா..?' அவளின் மனம் சுணங்கியது...



"ஆனா.. இது நம்மவீடு.." அவள் மனதைப் படித்தவனைப் போல அவன் சொன்னதும் அவளின் முகம் மலர்ந்தது...

அவள் முகத்திலேயே ஆழப் பதிந்திருந்தது அவன் பார்வை.. அவனுக்கு அவளின் சென்னை வீட்டைப் பற்றித் தெரியாது.. பக்கத்து ஊரிலிருக்கும் அரண்மனை போன்ற அவளின் பூர்விக வீட்டை அவன் பார்த்திருக்கிறான்... அதன் சுற்றுப்புறமும்.. பிரம்மாண்டமும் அவன் மனதில் எழுந்தன..

அவள் அவனுடைய இந்த வீட்டில் இவ்வளவு மகிழ்ச்சியைக் காட்டுகிறாளே.. ஏன்..?

இந்தக் கேள்வி மயிலிறகாய் அவன் மனம் வருடியது..

வீட்டைச் சுத்தம் பண்ணினான்.. உதவிக்கு வந்த வெந்நிலாவினால் துடைப்பத்தைக் கூடச் சரியாகப் பிடிக்கத் தெரியவில்லை...

"ஒரே நாளில் எல்லாம் பழகிருமா.. விலகு.." என்று அவளை விலக்கி விட்டு வீட்டைப் பெருக்கிக் கழுவினான்.. காய்ந்த தரையில் பெட்டிகளைக் கொண்டு வந்து அடுக்கினான்.. கட்டப்பட்டிருந்த ஜமுக்காளம் தலையணையை விரித்து விட்டு...

"நீ படு.. நான் குளிச்சுட்டு.. பக்கத்திலே ஏதாவது ஹோட்டல் இருக்கான்னு பாத்து நமக்கு டிபன் வாங்கிட்டு வரேன்.." என்று சொல்லி விட்டுப் போனான்...

வெந்நிலா படுக்கவில்லை.. சுற்றிலும் பார்த்தாள்.. ஜன்னல் வழியாக அருகிலிருந்த வீடுகள் தெரிந்தன.. சுற்றுத் தொலைவில் ரயில் நிலையம்..

வீடு கச்சிதமாக இருந்தது.. சின்னதாக ஒரு ஹால்... அதையொட்டிய படுக்கையறை.. ஹாலின் முடிவில் சமையலறை.. அதன் பின்னால் சிறிய முற்றத்துடன் கூடிய குளியலறை.. வாசல் பக்கமாக சிறிய நடைவராண்டா என்று அளவில் சிறியதாக இருந்தாலும்.. அனைத்து அம்சங்களுடன் இருந்தது...

தசரதன் கூட்டிக் கழுவிய தரை காய்ந்திருந்தது.. அவன் மட்டும் தனியனாக வேலைகளைச் செய்ய அவள் மட்டும் படுத்து உறங்குவதா என்ற குற்ற உணர்வு அவள் நெஞ்சில் எழுந்தது.. அவளால் முடிந்ததாக அவர்களின் பெட்டியைத் திறந்து.. துணிகளை எடுத்து படுக்கையறையின் அலமாரியில் அடுக்க ஆரம்பித்தாள்..

"நீ தூங்கலையா..?" என்றபடி தசரதன் உள்ளே வந்தான்...



"தூக்கம் வரலை..." அலமாரியை மூடியபடி அவள் சொன்னாள்..

தசரதன் நேர்த்தியாக அடுக்கப்பட்டிருந்த உடைகளைப் பார்த்தான்.. அவன் மனதில் மெலிதான தென்றலடித்தது...

"வா சாப்பிடலாம்..." இருவரும் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தார்கள்..

சமையலறையில் அடுக்கப்பட்டிருந்த அட்டைப் பெட்டியை பிரித்து அவன் கொடுக்கக் கொடுக்க... வெந்நிலா புடவைத் தலைப்பை இழுத்துச் செருகிக் கொண்டு சமையலறை அலமாரிகளில் அவற்றை அடுக்கி வைத்தாள்....

"இப்போதைக்கு இன்டெக்சன் ஸ்டவ்தான்.. சீக்கிரமாய் கேஸ் கனெக்சனை வாங்கிடலாம்..." என்று அவன் சொன்னபோது எல்லாம் தெரிந்தவளைப் போல தலையை அசைத்து வைத்தாள்...

உனக்குச் சமைக்கத் தெரியுமா என்று தசரதன் அவளிடம் கேட்கவில்லை.. இன்டெக்சன் ஸ்டவ்சில் சமைக்கக்கூடிய எளிய உணவுகளை அவனே தயாரித்து வைத்துவிட்டு வேலைக்கு செல்ல ஆரம்பித்தான்..

வெந்நிலா மற்ற வகைகளில் அவனுக்கு உதவியாக இருந்தாள் வீட்டைச் சுத்தம் செய்யவும்.. துணி துவைக்கவும் கற்றுக்கொண்டாள்... மெல்ல மெல்ல சமையலையும் செய்ய ஆரம்பித்தாள்...

வாழ்க்கை இனிமையாக ஓடிக் கொண்டிருந்தது.. அந்த வாழ்விற்கு தசரதனும்.. வெந்நிலாவும் பழகிக் கொண்டார்கள்.. இரவினில் வெந்நிலாவின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தனித்தனி படுக்கைகளை விரித்துப் படுத்தாலும்.. அதனால் அவளிடமிருந்து விலகி நிற்காமல் அவளிடம் இயல்பாக பேசிப்பழகினான் தசரதன்...

வேலைநேரம் போக மற்ற ஓய்வு நேரங்களில் அவளை வெளியே அழைத்துப் போனான்.. கோவில்.. சினிமா.. பூங்கா என்று எங்கே சென்றாலும்.. அவர்கள் நடந்துதான் சென்றார்கள்... நடந்து பழக்கமில்லாத வெந்நிலா சோர்வடையும் போது. அவளின் மனதை உற்சாகப் படுத்துவதைப் போல தனது கல்லூரிகால கலாட்டாக்களை விவரிப்பான் தசரதன்.. அதைக் கேட்டபடி நடையின் வலி தெரியாமல் நடந்து விடுவாள் வெந்நிலா.. சரவணனையும்.. அவனை தசரதன் கிண்டல்



செய்வதையும் அவன் சொல்ல ஆரம்பித்தால் வெந்நிலா வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்து விடுவாள்...

“அவரைப் பார்த்தால் இன்னொஸென்ட் லுக் தெரியுது...”

“இன்னொஸென்டா..? அவனா..? ஏமாந்து விடாதே.. பயசெம விவரம்.. கணக்கு டீச்சரையே கணக்கு பண்ண நினைக்கிற ஆளு அவன்...”

“ரியலி..?”

“உண்மையாத்தான் சொல்றேன்ங்கறேனில்ல...”

தசரதன் அதட்டுவான்.. அவனின் பேச்சில் தெரியும் ஆளுமையை வெந்நிலா ரசிக்க ஆரம்பித்தாள்.. விடுமுறை நாள்களில் தசரதன் தோட்ட வேலை செய்வான்... வீட்டுக்கு முன்னாலிருந்த இடத்தை மூங்கில் வேலியால் அடைத்து.. அதற்கு மூங்கில் கதவையும் போட்டுவிட்டு... ஊடே நடைபாதை அமைத்து.. அதன் இருபக்கமும் காய்கறிகளையும்.. கீரையையும் விதைத்து விட்டான்.. அவை பச்சைப்பசேலென்று கண்ணுக்கு குளிர்ச்சியாக வளர்ந்து நின்றன...

“இங்கே வந்தும் விவசாயம்தானா..?” வெந்நிலா விளையாட்டாகக் கேட்டாள்...

“எங்கே போனாலும் என்னால விவசாயத்தை விடமுடியாது வெந்நிலா.. விதையை விதைச்சு.. அது பயிராகி.. விளைச்சல் தரும்போது அதை அனுபவிக்கும் சுகமே தனி.. அது உனக்குப் புரியாது...”

தசரதன் சொன்னது புரிந்ததோ இல்லையோ.. அவனுடனான அந்த வாழ்க்கையை வெந்நிலாவிற்கு பிடித்திருந்தது...

# 26



அது போன்றதொரு வாழ்க்கையினை அதற்கு முன்னால் அவள் வாழ்ந்ததில்லை.. கோடிக் கணக்கில் அவளிடம் பணம் கொட்டிக் கிடந்தது.. நாராயண மூர்த்தியின் அனைத்து சொத்துக்களுக்கும் அவள்தான் வாரிசு.. அரண்மனை வீட்டுக்காரரின் செல்ல மகள்...

இத்தனை அடையாளங்கள் இருந்தாலும் அவளிடம் இல்லாத ஏதோ ஒன்று.. அதுவரை அவள் உணராத ஏதோ



ஓர் உணர்வு.. தசரதனுடானான அவளது வாழ்வில் இருப்பதைப் போல அவள் உணர்ந்தாள்...

“நிலா...”

அவள் பெயரைச் சுருக்கி அவன் அழைத்தால் கை வேலையை அப்படியே போட்டுவிட்டு... ஓடி வந்து என்னவென்று கேட்பாள்.. அவன் அப்படி சுருக்கமாக அழைப்பதை அந்த அளவுக்கு அவள் விரும்பினாள்.. ஆனாலும் அதை அவனிடம் சொல்ல மாட்டாள்...

“இந்தா...”

அவன் நீட்டும் மல்லிகைப் பூவை வாங்கித் தலையில் வைத்துக் கொள்ளும்போது அந்தப் பூவிற்கான வாசம் அதிகரித்து விடுவதைப் போல உணர்வாள்.. அவளறிந்த பூவாசத்தை விட அதிகமான வாசத்தினை அந்தப் பூ அவளுக்கு அளிக்கும்...

காலை வேளைகளில் தசரதன் வெற்றுடம்போடு உடற்பயிற்சி செய்வான்.. அந்தச் சமயங்களில் அவனைப் பார்க்க நேரிட்டு விட்டால் வெந்நிலாவின் இதயம் படபடவென்று அடித்துக் கொள்ளும்.. அவன் முகம் பார்க்க முடியாமல் உள்ளே விரைந்து விடுவாள்...

அதையறியாத தசரதன் ஓர்நாள்.. அவளை அழைத்து விட்டான்.. என்னவென்று கேட்க வந்தவள்.. அவன் முகத்தைப் பார்க்காமல் வேறு திசையில் பார்த்தபடி... முகம் சிவந்தாள்..

"என் சட்டைப் பையில ஒரு கவரிருக்கும்.. அதை எடுத்து..." சொல்லிக் கொண்டே வந்தவன்.. அவள் முகம் பார்த்ததும் பேச்சை நிறுத்தி விட்டு புருவங்களை உயர்த்தினான்...

'இவருக்கு என்ன ஆச்சு..?'

அவளுக்கு ஏதேதோ ஆகிக் கொண்டிருந்தது.. அதை அவன் புரிந்து கொள்ளவில்லை என்று அவள் நினைக்க. அவளைக் கண்டவுடன் மனதில் பொங்கும் ஆசை வெள்ளத்தை கட்டுப் படுத்தும் வகையறியாமல் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தான் தசரதன்...

'பாவி... இத்தனை அழகாய் இருந்து தொலைக்கிறாளே...'

கைக்கு எட்டியும்.. வாய்க்கு எட்டாத கதையாக.. கண்முன்னால் அவன் கட்டிய தாலியுடன் அவன் மனைவியாக அவனுடன் சேர்ந்து குடும்பம் நடத்துபவளை தொட்டு அணைக்கமுடியாத தாபத்தில் மனம் வெந்தான் தசரதன்...



"என்னங்க.. ஏதோ போல இருக்கீங்க..."

"ஒன்னுமில்ல..."

"இல்லையே.. முகம் சுணங்கியிருக்கு.. ஃபீவரா..?"

அவன் நெற்றியில் கவலையுடன் படியும் அவள் கரங்களின் ஸ்பரிசத்தில் அவனுக்குள் இருக்கும் கணவன் விழித்துக் கொண்டான்.. தளிர் போன்ற அவள் விரல்களைப் பற்றி அதில் முத்தமிடத் துடித்த மனதைக் கட்டுப் படுத்தும் மாயவித்தையை கற்றுக் கொள்ள அரும்பாடு பட்டான்..

"சுடலையே.. அப்புறம் எதுக்காக என்னவோ போல இருக்கீங்க..."

அக்கறையுடன் கேட்டவளின் கன்னத்தில் நான்கு அப்பு அப்பினால் என்ன என்ற ஆவேசம் அவனுக்குள் கிளர்ந்தது...

'சண்டாளி.. புருசன்காரன் நெத்தியைத் தொட்டுப் பாத்துட்டு... ஒன்னுமே இல்லைன்னு சொல்றாளே.. இவளுக்கு ஒன்னுமே புரியலையா..? புரிஞ்சும் புரியாததைப் போல நடிக்கிறாளா...?'

இரவில் விடிவிளக்கின் மெல்லிய ஒளியில் பக்கத்து கட்டிலில் கண்மூடி ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பவளைப் பார்க்கும் போது.. ஒரு தேவதையைப் பார்ப்பதைப் போல அவனுக்கு இருந்தது..

மெலிதான நைட்டி அவள் உடலோடு ஒட்டிக் கொள்ள.. அதில் தெரிந்த அவளின் உடல் வளைவுகள் அவனை அடித்துப் போட்டன.. விலகியிருந்த நைட்டியில் தெரிந்த கணுக்காலின் வெளுப்பு அவனை சுண்டியிழுத்தது.. அவளது மூச்சுக் காற்று அவன் முகத்தில் படிந்தபோது அவன் மூச்சுத் திணறினான்.. அவள் புரண்டு படுத்து... விழித்து... அவன் முகத்தைப் பார்த்து.. கேள்விக்குறியை கண்களில் காட்டிய போது... எதுவும் இல்லையென்ற பாவனையில் தலையை அசைத்து விட்டு.. அவளுக்கு முதுகு காட்டிப் படுத்துக் கொண்டான்...

அந்தப் பரந்த முதுகில் முகத்தைப் பதித்துக் கொள்ளும் ஆவல் அவள் கண்களில் மின்னியதை அவன் கவனிக்கவில்லை...

'நடுராத்திரியில ஒரு புருசன்காரன் எதுக்காக முழிச்சுக்கிட்டு பொண்டாட்டிய முறைச்சுப் பாத்துக்கிட்டு இருப்பான்..? இதக்கூடப் புரிஞ்சுக்காத மக்குச் சாம்பிராணியா இருந்துக்கிட்டு என்னப் பாத்து ஏன்னு கண்ணை விரிக்கிறா...' அவன் மனதுக்குள் அவளைத் திட்டித் தீர்த்தான்...

'கைக்கெட்டற தூரத்தில வொய்ஃப் இருக்கா.. அவ கண்ணில ஏக்கமிருக்கு.. உனக்கு என்ன வேணும்ன்னு கண்ணால கேட்டா... நீதாண்டி வேணும்ன்னு சொல்லாம



முதுகைக் காட்டிக்கிட்டு திரும்பிப் படுத்துக்கிறானே.. இவனை என்ன செய்தால் தேவலாம்..' அவள் மனதுக்குள் அவனை தாளித்துக் கொண்டிருந்தாள்...

மறுநாள் காலையில் குளித்து முடித்து.. ஈரத்தலையை துண்டால் இறுக்கிக் கட்டி மங்கலகரமாக அவனைத் தொட்டு எழுப்பி.. காபி தம்ளரை அவள் நீட்டியபோது...

"இதுக்கொன்னு குறைச்சலில்ல.." என்று முணுமுணுத்தபடி அவன் காபியை வாங்கிக் கொண்டான்...

"என்ன..? என்ன சொன்னீங்க..? எது குறைச்சல்..?"

அவன் முணுமுணுப்பை அரையும் குறையுமாக கேட்டவள் அவனிடம் விளக்கம் கேட்டபோது..

"காபியில் சீனி குறைச்சலோன்னு தோணுச்சு.." என்று சமாளித்தான்...

"இதை மட்டும் கண்டுபிடிச்சிருங்க..." அவள் பதிலுக்கு முணுமுணுத்தாள்...

இப்போது... என்னவென்று கேட்பது அவன் முறையாகிவிட்டது...

"ஒன்னுமில்லை.. சுகர் வேணும்னா ஒரு ஸ்பூன் போட்டுக் கொண்டு வரவா...?"

அவளும் அழகாக சமாளித்துக் கொண்டு காபித் தம்ளரை வாங்கக் கை நீட்டினாள்...

"தோணுச்சுன்னுதான் சொன்னேன்.. குறைச்சலா இருக்குன்னா சொன்னேன்..?" அவன் சுள்ளென்று பேசினான்...

'இதை மட்டும் உணக்கையா கேட்டிருவா.. என்னடா புருசன்காரன் ஒன்னுகிடக்க ஒன்னைப் புலம்பரானே.. அவன் மனசில என்ன இருக்கோ.. ஏது இருக்கோன்னு கவலைப்படாம காபியில சீனி குறைச்சலாயிருக்குன்னு கவலைப்படறா.. தத்தி...' அவனுக்கு எரிச்சல்.. எரிச்சலாக இருந்தது...

"அதுவும் எதுக்காக தோணனும்..? சுகர் போட்டா அந்தக் குறையும் போயிருமில்ல.. எதுக்காக அரைகுறை இனிப்போட காபியைக் குடிக்கனும்..? சுகர் இல்லாமலா இருக்கு..? ஒரு ஸ்பூன் போட்டா சரியாகி இருக்கும்ல்ல..?" அவளும் அதே கோபத்துடன் பதில் கொடுத்தாள்...

'பொண்டாட்டி மனசில என்ன இருக்குங்கறதையே புரிஞ்சுக்காதவரு.. காபியில முழு இனிப்பு வேனும்ங்கிறத மட்டும் எப்படிப் புரிஞ்சுக்குவாராம்..?' அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"எல்லாம் போதும்..."



அவன் முகத்தைத் கடுமையாக வைத்துக் கொண்டு குளிக்கப் போனான்.. போனவன் அவள்மீது இருந்த கோபத்தில் துண்டை எடுத்துச் செல்ல மறந்திருந்தான்..

குளித்து முடித்து ஈர உடலைத் துடைத்துக் கொள்ள துண்டைத் தேடியவனுக்கு அது அகப்படவில்லை...

'ஆஹா.. அவ மேல இருந்த கடுப்பில துண்டை எடுத்துக்கலியே...'

குளியலறையின் கதவைத் திறந்தவன் குரல் கொடுத்தான்..

"நிலா..."

மொண மொணவென்று வாய்க்குள் அவனைத் திட்டியபடி.. சமையலறையில் வேலையாக இருந்தவள்.. சந்தோசத்துடன் நிமிர்ந்தாள்...

'நிலான்னு கூப்பிடறான்...'

படுக்கையறைக்குள் ஓடியவள் அவனைக் காணாமல் திகைத்து சுற்று முற்றும் பார்த்தாள்...

"நான் இங்கே இருக்கேன்..." தசரதன் குரல் கொடுத்தான்...

திரும்பிப் பார்த்தவள்.. கதவுக்கு பின்னாலிருந்து முகத்தை மட்டும் நீட்டியவனின் முகத்தில் படிந்திருந்த ஈரத்திவலைகளில் முகம் சிவந்து...

"என்ன..?" என்று கேட்டாள்...

"துண்டை மறந்துட்டேன்.. எடுத்துக் கொடு..."

வெந்நிலாவின் கண்களில் மின்னல் வந்தது.. அவன் அது நாள்வரை அது போன்ற ஓர் கேளிக்கையினை அவளிடம் கேட்டதில்லை...

"இதோ..."

வேகமாக அலமாரியைத் திறந்து துண்டை எடுத்தவள் அவன் பக்கம் திரும்பாமல் மனதுக்குள் ஓர் எதிர்பார்ப்புடன் வேறு பக்கம் திரும்பி நின்று கொண்டு துண்டை மட்டும் நீட்டினாள்...

டிவியில் அவள் பார்த்த திரைப்படம் ஒன்றில் இது போன்றதொரு காட்சிதான் வந்தது.. துண்டைக் கேட்கும் கதாநாயகனிடம் திரும்பி நின்று கொண்டு கதாநாயகி துண்டை நீட்டுவாள்.. அவன் துண்டிற்குப் பதிலாக.. அதைப் பிடித்திருக்கும் கையை இறுக்கிப் பிடித்து குளியலறைக்குள் இழுத்துக் கொள்வான்...



'இவன் அந்த நினைப்பில் கேட்பானோ...' அவள்மனம் குறுகுறுத்தது...

அதிகமாக திரைப்படங்களை பார்த்திருக்காத அவளுக்கே இது தெரிந்திருக்கும்போது.. சிநேகிதர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு சினிமா பார்த்து வந்த அவனுக்கு அது தெரியாமல் இருக்குமா..?

அவனுக்குத் தெரிந்திருந்ததுதான்.. ஆனால்.. அவன் பார்த்த சினிமாவில் கதாநாயகி.. முகம் முழுவதும் வெட்கத்துடனும்.. கண்களில் எதிர்பார்ப்புடனும்...

'டேய்.. கள்ளா..! நீ என்ன செய்ய நினைக்கிறன்னு எனக்குத் தெரியும்டா...' என்ற முகக் குறிப்புடனும்... அவன் கைகளுக்குள் அகப்பட்டுக் கொள்ள வாகாக ஈஷிக் கொண்டு துண்டை நீட்டுவாள்...

'இவ எதிரிக்கரியப் போல.. வேற திசையில முறைச்சுக்கிட்டு துண்டை நீட்டறாளே.. தசரதா.. இவ உன்னச் சோதிக்கிறாடா.. மனசில கொஞ்சம் கூட ஈவு இரக்கமில்லாம.. திரும்பி நின்னுக்கிட்டு துண்டை நீட்டறாடா...'

அவன் கொதித்துப் போய் துண்டைப் பிடுங்கிக் கொண்டு.. அவள் கிடைக்காத கோபத்தை ஓங்கி கதவை அறைந்து சாத்துவதன் மூலம் வெளிப்படுத்தினான்...

'இதோ.. அவன் என் கையை பிடிக்கப் போகிறான்.. இதோ.. அவன் என்னை பாத்ரூமுக்குள் இழுக்கப் போகிறான்..'

தடதடக்கும் மனத்துடன் உடல் நடுங்க நின்று கொண்டிருந்தவள் 'தட்'டென்று சாத்தப்பட்ட கதவின் ஒலியில் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்...

மூடப்பட்ட அறைக்கதவு அவளை கேலி செய்வதைப் போலத் தோன்ற.. அவளுக்குள் ஒர் அதிர்வு வந்தது...

'இவன் மாறவே மாட்டானா...'

கண்களில் நீர் துளிர்க்க.. அவள் சமையலறைக்குச் சென்று விட்டாள்.. மனதில் பொங்கியிருந்த உணர்வுகள் தண்ணீர்பட்ட பால் போல அடங்கி விட்டிருந்தன...

உடைமாற்றிக் கொண்டு சாப்பிட வந்த தசரதனின் முகம் பார்க்காமல் அவள் சூடான இட்லிகளை பரிமாற ஆரம்பித்தாள்...

அவள் முகத்தை உன்னிப்பாக பார்த்த தசரதனின் புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது...

'பகையாளிக்கு போடறதைப்போல பலகாரத்தை போட்டு வைச்சா மனுசன் சாப்பிடுவானா..?'

அவன் சட்டென்று எழுந்து சாப்பிடாமலே வேலைக்கு போய் விட்டான்...



# 27



**வெந்நிலாவுக்கு** சாப்பிடப் பிடிக்கவில்லை... அவன் கோபத்துடன் சாப்பிடாமல் போனது அவள் மனதை பாதித்திருந்தது.. அவள் என்னவோ குற்றம் செய்து விட்டவளைப் போல அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டு போனதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

'என்மேல என்ன தப்பாம்..?' அவள் மனம் சிணுங்கியது...

வெறும் வயிற்றுடன் வேலைக்கு வந்து விட்ட தசரதனுக்கு பசி வயிற்றைக் கிள்ளியது.. செல்போன் ஒலிக்கும் போதெல்லாம்.. அவள்தான் அழைக்கிறாளோ என்று ஆவலுடன் அதை எடுத்துப் பார்த்தான்...

'என்னடா.. நம்ம புருசன்காரன் கோவிச்சுக்கிட்டு சாப்பிடாம போயிட்டானே... அதை என்னன்னு கேப்போம்ங்கிற நினைப்பு அவ மனசில இருக்கா..?' மனம் புழுங்கினான்...

வெந்நிலாவும் அதைத்தான் செய்து கொண்டிருந்தாள்.. அவளின் செல்போனை உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்...

'திரும்பிப் பார்க்காம இருந்தாலும்.. அவ அதை நினைச்சுப் பார்க்காம நம்மகூட குடும்பம் நடத்தறாளே.. அவளிடம் என்ன ஏதுன்னு காரணம் சொல்லாம முகத்தைத் தூக்கிக்கிட்டு வந்துட்டோமே.. போன் பண்ணியாவது சமாதானப் படுத்தலாம்ன்னு நினைக்கிறானா..' அவளுக்கு அழுகையே வந்து விடும்போல இருந்தது...

'இவன் பேச மாட்டான்...'

ஆற்றாமையுடன் அவள் மதிய சமையல் வேலையில் ஈடுபடப் போனபோது.. செல்போன் ஒலித்தது...

'எவன் எப்படிப் போனா எனக்கென்னன்னு வீட்டில உக்காந்திருக்காளா..? அவள என்னன்னு கேட்டாத்தான் எனக்கு வேலையே ஓடும்...'

கோபத்துடன் அவளை ஒரு பிடி பிடிக்க எண்ணி தசரதன்தான் அவளுக்கு போன் செய்திருந்தான்...

'ரிங் போய்கிட்டே இருக்குது.. இவ போனை எடுக்கிறாளான்னு பாரு.. ராணி ரங்கம்மாவுக்கு திமிர் இன்னும் குறையல... யாரு இவ..? அரண்மனைக்கார வீட்டு பொண்ணில்ல.. அந்தத் திமிர் அடங்குமா...'



அவன் கொந்தளித்துக் கொண்டிருக்கையில் அவள் போனை எடுத்து விட்டாள்...

"ஹலோ..."

அவள் குரல் தேனாக காதில் பாய்ந்ததும் அவனுக்கு அவளைத் திட்டித் தீர்க்க வேண்டுமென்று எடுத்திருந்த சபதங்கள் எல்லாம் மறந்து போய் விட்டன...

இருந்தாலும்.. அவற்றை நினைவு படுத்திக் கொள்ள முயன்றவனாக..

"அதான் கூப்பிடறது நான்னு தெரியுதில்ல.. அப்புறமும் எதுக்காக ஹலோ.. ஹலோன்னு ஏலம் போடறவ..?" என்று சிடுசிடுத்தான்..

அவன் அழைத்து விட்டதில் உண்டான ஆனந்தத்தை அவனது அந்த சிடுசிடுப்பு விரட்டியடிக்க..

'சிடுமூஞ்சி...' என்று வெகுண்டாள் வெந்நிலா...

"இதுக்குத்தான் கூப்பிட்டிங்களா..?" என்று கேட்கவும் செய்தாள்...

"இதுக்குத்தான்னா என்ன அர்த்தம்..?" அவனும் வாய் வளர்த்தான்...

"வீட்டில திட்டறது பத்தாதுன்னு போன் போட்டுத் திட்டக் கூப்பிட்டிங்களான்னு அர்த்தம்..."

“ஓ.. நிதமும் உன்ன கொடும படுத்தறேனோ...”

“பின்னே..? இல்லையா..?”

“அப்படி என்னடி பண்ணிட்டேன்..? உன்னை அடிச்சேனா..? மிதிச்சேனா..? உங்க அப்பா வீட்டுக்கு பத்தி விட்டேனா..?”

“ஆக.. இத்தனையையும் செய்யனும்கிற ஆசை உங்க மனதில் இருக்குது..”

“வீணாய் சண்டைக்கு வராதே வெந்நிலா..”

“ஆமாங்க... நான்தான் உங்ககூட சண்டைக்கு வந்தேன்... சமையல்ன்னா என்னன்னே தெரியாது.. ஆனாலும்.. சமைக்கக் கத்துக்கிட்டேன்.. கஷ்டப்பட்டு காலை டிபனை செஞ்சு வைத்தா அதை வாயில் வைக்காம நீங்க கிளம்பிப் போவீங்க... அதனால நானும் சாப்பிட முடியாம பட்டினி கிடக்கிறவ உங்ககூட சண்டைக்கு வந்தேனா..?”


“ஏய்.. ஏய்.. நீ இன்னும் சாப்பிடலியா..?”

“நீங்க சாப்பிடலையே...”

அந்த வார்த்தைகள் தசரதனின் மனப் புழுக்கத்தை ஓடு.. ஓடென்று விரட்டி விட்டன.. அவன் உடனடியாக வீட்டுக்குக் கிளம்பி விட்டான்.. அன்றைய சண்டை அத்துடன் முடிவடைந்து விட்டது...



# 28



மழைமேகம் சூழ்ந்திருந்தது.. கடைக்குப் போய் விட்டு வரலாம் என்று பக்கத்து வீட்டு சீதா அழைத்தவுடன் மறுக்காமல் ஒப்புக் கொண்டது பிசகோ என்று சஞ்சலத்தில் ஆழ்ந்தாள் வெந்நிலா.. அவள் கடைக்கு கிளம்பியதைப் பற்றி தசரதனுக்கு சொல்லியிருக்கவில்லை...

“போன சுருக்கில் வந்துரலாம் வெந்நிலா...”

அவள் சொன்னதை நம்பித்தான் வெந்நிலா அவளுடன் சென்றாள்.. ஆனால் போன சுருக்கு என்பது.. சீதாவின் அகராதியில்.. சில.. பல.. மணி நேரங்கள் என்பதைப் பற்றி வெந்நிலா பாவம் அறிந்திருக்கவில்லை..

அந்தத் துணிக்கடையின் வாசலை மிதித்த போது வெந்நிலா கேட்டு விட்டாள்..

“என்னக்கா வாங்கனும்...”

“குட்டிப் பாப்பாவுக்கு.. குட்டி கவுன் வாங்கனும் வெந்நிலா...”

‘சரிதான்.. குட்டி கவுன்தானே...’ என்று யதார்த்தமாகத் தான் வெந்நிலாவும் கூடப் போனாள்...

ஆனால்.. அந்தக் குட்டிப் பாப்பாவின் குட்டி கவுனுக்காக.. சீதா.. இருபது கடைகளில் ஏறி இறங்குவாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை...

"என்னாச்சுக்கா..?"

"இந்தக் கடையில வெரைட்டீஸ் இல்ல வெந்நிலா.."

"இங்கேக்கா..?"

"இத்தனை வெரைட்டீஸ் வைச்சிருந்து என்ன பிரயோசனம் கலர் சரியில்லையே..."

"இந்தக் கடையில என்னக்கா..?"

"வெரைட்டீஸ் இருக்கு.. கலர் இருக்கு.. பிடிச்ச டிசைன் இருக்கனுமே.. அது இல்லையே..."

"இப்ப என்னக்கா..."

"எல்லாமும் இருக்கு.. ஆனா.. யானை விலை.. குதிரை விலையாய் இருக்கு வெந்நிலா..."

சீதாவிடம் எல்லாக் கேள்விகளுக்குமான பதில்கள் தயார் நிலையில் இருந்தன.. பேச்சு பேச்சாக இருந்தாலும்.. வெந்நிலாவின் மனம் முழுதும் வீட்டில் இருந்தது.. தசரதன் வேலை முடிந்து வீட்டுக்கு வரும் நேரமாயிற்றே என்று மனதுக்குள் பரபரத்தாள்...

"இன்னும் எவ்வளவு நேரமாகும் அக்கா.."



"தெரியல வெந்நிலா.. குட்டிக்கு தோதான குட்டிகவுன் கிடைக்கிற வரைக்கும் நான் வீட்டுக்குத் திரும்பறதாயில்ல.."

சீதா அடுத்த கடையின் வாசல்படியில் கால் வைத்தபடி சொல்ல.. வெந்நிலாவிற்கு 'திக்'கென்று ஆகிவிட்டது..

'இவ இன்னைக்குள்ள திரும்ப மாட்டா போல இருக்கே...'

"என்ன வெந்நிலா.. மலைச்சுப் போய் நின்னுட்ட..?"

"ஹி.. ஹி.. உங்களோட பெர்பெக்சனை நினைச்சு புல்லரிச்சுப் போய் நிற்கறேன்க்கா..."

"ஊரே சொல்லுது.. உனக்கு இப்பத்தான் தெரியுது.." சீதா பெருமையுடன் சொன்னாள்..

"தெரிஞ்சிருந்தா உன்கூட வந்திருப்பேனா..." வெந்நிலா முணுமுணுத்தாள்...

"இப்ப என்ன சொன்ன..?"

"ஹி.. ஹி.. இப்பத் தெரிஞ்சுருச்சில்லையா..? இனிமேல் நீங்க கடைக்கு கூப்பிட்டா அலர்ட்டா ஆகிடுவேன்னு சொன்னேன்.."

"என்னவோ போ வெந்நிலா.. உங்க எல்லோருக்கும் என் அருமை தெரியுது.. என் வீட்டுக்காரருக்கு மட்டும் அது சுத்தமாகத் தெரியல.. ஊர் சுத்தின்னு என்னைக் கரிச்சுக் கொட்டிக்கிட்டே இருக்காரு..."

"கரிச்சுக் கொட்டாம கோவிலா கட்டுவாரு..?"

"என்ன சொல்ற..? முணுமுணுன்னு பேசற.. காதிலேயே விழுக மாட்டேங்குது..."

"ஹி.. ஹி.. அவருக்கென்ன தெரியும்ன்னு சொன்னேன்.. உங்க அருமை.. பெருமைகளைப் பத்தித் தெரிஞ்சுக்க எனக்கே இத்தனை நாள் ஆகியிருக்குன்னா.. அவளுக்கு எத்தனை காலம் ஆகுமோ..?"

"அதைச்சொல்லு..." என்றபடி சீதா படிகளில் ஏற ஆரம்பித்தாள்..

"அக்கா..."

வெந்நிலா கூடப் போகாமல் கீழே நின்று விட்டாள்..

"வா வெந்நிலா..." என்று உரத்தகுரலில் சீதா அழைக்க...

"உன்னைத்தானே வானம் தேடுது.." என்று பாடியபடி ஒருவன் வெந்நிலாவை உற்றுப் பார்த்தான்..

'இந்நேரம் அவன் இருந்திருக்கனும்.. உன் முகத்தைப் பெயர்த்திருப்பான்..' தசரதனின் நினைவில் பல்லைக் கடித்தாள் வெந்நிலா..

'எல்லாம் இந்த சீதா அக்காவால் வந்தது... பப்ளிக் பிளேசில இப்படியா பெயர் சொல்லிச் சத்தமா



கூப்பிடுவாங்க...' சீதாவை மனதுக்குள் அர்ச்சித்தபடி பாட்டுப் பாடியவனைப் பார்த்து...

"போடா.." என்று கை காட்டினாள்...

"போகலைன்னா...?" அவன் உதார் விடவும் வெந்நிலாவுக்கு மண்டையிடியாய் போய் விட்டது...

'இருக்கிறது போதாதுன்னு இவன் கூட மல்லுக் கட்டனுமா..?' வெறுத்துப் போய் விட்டாள் அவள்...

அப்போது பாட்டுப் பாடியவனின் பின் தலையில் ஓங்கி ஒரு அடி விழுந்தது...

"போகலைன்னா.. போக வைப்பேண்டா.." கை முஷ்டியை மடக்கியபடி தசரதன் உறுமினான்...

'வந்துட்டானா...' வெந்நிலாவின் கண்கள் மின்னின..

"நான் இங்கே இருக்கேன்னு எப்படித் தெரியும்..?" ஆவலுடன் வினவினாள்..

"ஊம்..? நீ போன் பண்ணிச் சொன்ன பாரு... அதில தெரியும்.. பக்கத்து வீட்டில விவரம் சொல்லி சாவி குடுத்துட்டு வந்த பாரு.. அதில தெரியும்.. வீட்டுப் பூட்டில துண்டுச் சீட்டில கடிதம் எழுதி சொறுகி வைச்சுட்டு வந்திருக்கிற பாரு.. அதில தெரியும்.." தசரதன் பல்லிடுக்கில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்...

அவன் சொன்ன அத்தனையையும் செய்யாத குற்ற உணர்வுடன் தலை கவிழ்ந்தாள் வெந்நிலா...

"படிச்சவதான நீ.. வீட்டை விட்டு வெளியே கிளம்பினா நீ எங்கே போகிறன்னு ஒரு வார்த்தை... உன் கூட குடும்பம் நடத்தறவன்கிட்டச் சொல்லிட்டுப் போகனும்னு உனக்குத் தோணாதா...?"

"இல்லைங்க.. சீதா அக்காதான் சொன்னாங்க.."

"என்னன்னு..? உன் புருசன்காரன்கிட்ட ஒரு விவரமும் சொல்லாம கூடவா.. ஊரைச் சுத்தலாம்ன்னு சொன்னாங்களா..?" அடிக்குரலில் சீதாவுக்கு கேட்டு விடாதபடி.. சீறினான் தசரதன்..

"இவங்க இப்படிச் செய்வாங்கன்னு எனக்கென்னங்க தெரியும்.. போன சுருக்கிலே திரும்பி வந்திரலாம்ன்னு கூப்பிட்டாங்க.. நம்பி வந்திட்டேன்..."

அழமாட்டாத குறையாக அவள் பேசுவதைக் கண்டவனின் கோபம் மெல்லத் தணிந்தது...

"கட்டினவனை விட்டுட்டு மத்தவங்களை நம்பினா இந்தக் கதிதான்.. இந்தக்கா சொல்ற சுருக்கு என்னான்னு உனக்குத் தெரியுமா..? இந்தக்கா கழுத்தில தாலி கட்டின மனுசன்கிட்டக் கேட்டுப் பாரு.. கதை கதையாய் சொல்வாரு.."

"காலெல்லாம் வலிக்குதுங்க.." வெந்நிலா முகம் கோனினாள்..



"எத்தனை கடை ஏறி இறங்கினீங்க..?" தசரதன் கேட்டான்...

"எண்ணலை.. தோராயமா இந்தக் கடைத் தெருவில இருக்கிற கடைகள்ல முக்கால்வாசிக் கடைகளில் ஏறி இறங்கியிருப்போம்.." விட்டால் வெந்நிலா அந்த இடத்திலேயே உட்கார்ந்து விடுபவளைப் போல கால் மாற்றி நின்றாள்..

"அப்புறம்..? கால் வலிக்காம என்ன பண்ணுமாம்..? உனக்கென்ன தலை விதியாடி.. நீ வீட்டு வேலை செஞ்சாலே எனக்கு மனசு தாங்காது.. இதில ஊரைச் சுத்திக்கிட்டு கால்வலின்னு நிக்கிறா.. உனக்கு இது தேவையாடி..?" அதட்டினான் தசரதன்...

"பக்கத்து வீட்டு அக்காவாச்சேன்னு பார்த்தேங்க..." வலியால் முணுமுணுத்தாள் வெந்நிலா...

"புருசன்காரனைப் பாருடி.. அது போதும்.. அப்படி எந்தக் கல்யாணத்துக்கு ஜவுளி எடுக்க உன்ன இந்த ஊரு பூராவும் இவங்க இழுத்தடிச்சாங்களாம்..?"

"அவங்க குட்டிப் பாப்பாவுக்கு குட்டி கவுன் வாங்கனுமாம்..."

"என்னது..?..?..!..!"

தசரதன் கொலைவெறியுடன் சீதாவை பார்த்த பார்வையில் வெந்நிலா நடுங்கி விட்டாள்..

"பாருங்க... நான்தான் உங்க வொய்ஃப்... அவங்க பக்கத்து வீட்டுக்காரரோட வொய்ஃப்.." எடுத்துச் சொன்னாள்...

"இப்ப என்ன கழுதைக்கு இதைச் சொல்றவ..?" அவன் எரிந்து விழுந்தான்..

"நீங்க பாட்டுக்கு கோபத்திலே பேசி, வைத்திராதீங்க...?"

"அந்தக் கருமத்தை நான் எதுக்கு செய்யப் போறேன்..? நீ கிளம்பு.."

தசரதன் மோட்டார் சைக்கிளை ஓங்கி உதைத்த உதையில் அது அலறிக் கொண்டு கிளம்பியது.. அவன் வெந்நிலாவை முறைத்தபடி


"ஏறுடி..." என்றான்...

"அக்கா..?" அவள் தயங்கினாள்...

"அறைதாண்டி வாங்கப்போற.. உனக்கு நான் புருசனா..? இல்ல.. அந்த அக்கா புருசனா..?" அவன் போட்ட சத்தத்தில் அவள் சட்டென்று அவன் பின்னால் உட்கார்ந்து விட்டாள்.. வண்டி கிளம்பி ஓடியது..



# 29



"ஸ்ஆ.. அம்மா.. ஆ..."

வெந்நிலா கால்வலி தாங்காமல் புலம்பிக் கொண்டிருந்தாள்.. அவளருகே கட்டிலில் பக்கமாக அமர்ந்து.. வெந்நீர் பாக்கெட்டினால் இதமாக ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்த தசரதன் திட்டிக் கொண்டிருந்தான்...

"அறிவிருக்கிறவ இந்த வேலையைச் செய்வாளா..? உனக்கே நாலு எட்டு நடந்தாலே கால் வலிச்சுத் தொலைக்கும்.. இந்த அழகு காலை வைச்சுக்கிட்டு.. கடைத்தெருவில இருக்கிற அத்தனை ஜவுளிக் கடையிலயும் ஏறி இறங்கியிருக்க.. உன்னை என்ன செய்தால் தேவலாம்டி.."

"வலிக்குதுங்க..."

"வலிக்காம என்ன செய்யும்..? குட்டிப் பாப்பாவுக்கு குட்டிகவுன் எடுக்க உன்னத்தான் அந்த அக்கா ஜோடி சேர்க்கணுமா..?"

"அடுத்த வீட்டு அக்காவை திட்டக் கூடாது.."

"அந்த அடுத்த வீட்டு அக்கா.. என் வீட்டுக்காரியக் கூப்பிட்டுக்கிட்டு ஊர்கோலம் போயிருக்கக் கூடாது.. இந்த லட்சணத்தில வா.. வெந்நிலான்னு ராகம் வேற போடறாங்க.. அதைக் கேட்கிறவன் சும்மா இருப்பானா..? அடுத்த வரியைப் பாடித் தொலைக்க மாட்டானா..?" தசரதன் தலையில் அடித்துக் கொண்டான்..

"நிஜமாவே அப்படியொரு பாட்டு இருக்கா..?" வெந்நிலா ஆச்சரியத்துடன் கேட்க...

"உனக்கு அது தெரியாதா..?" என்று அவளைவிட அதிகமாக ஆச்சரியப் பட்டான் அவன்...

"தெரியாதுங்க.. எனக்கு பாட்டு கேட்க நேரம் இருந்ததில்ல..." அவள் என்னவோ இயல்பாகத்தான் கூறினாள்...

"உனக்கு நிக்கக்கூட நேரமில்லாம வேலை வெட்டி இருந்திருக்கு.. நான்தான் வெட்டிப்பயலா சினிமாப் பாட்டைக் கேட்டுக்கிட்டு இருந்தேன்னு சொல்றயா..?" ஒரு மாதிரியான குரலில் வினவினான் தசரதன்...

வெந்நிலாவின் மனம் வலித்தது.. அவன் எந்த நேரம் எதற்காக கோபித்துக் கொள்கிறான் என்று அவளால் கணிக்க முடியவில்லை என்பதை துயரத்துடன் அவள் உணர்ந்தாள்.. கால் வலியின் வேதனையை விட மன வலியின் வேதனை அதிகமாக இருந்ததில் அவள் முகம் சுணங்கி விட்டது...



"நான் அப்படியா சொன்னேன்..?" நலிந்த குரலுடன் அவள் கேட்டாள்..

"இல்லேங்கறியா..?" அவள் முகத்தை உற்றுப் பார்த்தபடி அவன் கேட்டான்..

"இல்லை.." வெந்நிலா கண்களை மூடிக் கொண்டாள்..

மூடிய அவளின் குடைபோன்ற அடர்ந்த இமைகளில் முத்தமிட வேண்டும்போல அவனுக்குள் வேட்கை கிளர்ந்தது..

"தசரதன்.." வாசலில் சப்தம் கேட்டது...

"யாரு..?" வெந்நிலா எழுந்துகொள்ள முயன்றாள்..

"நான் பார்த்துக்க மாட்டேனா..? உன்னை யாரு இப்ப எழுந்துக்கச் சொன்னது..?" தசரதன் முறைத்தான்...

"நான் எது செய்தாலும் குற்றமா..?" வெந்நிலாவுக்கு மனம் தாங்கவில்லை..

"அப்படித்தான்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?" தசரதன் சண்டைக்கு கிளம்பினான்..

"ஒன்னும் சொல்லலை.. ஊரில் அத்தை அடிக்கடி ஒரு புராவெர்பை சொல்வாங்க.." வெந்நிலா முறைப்பாக பேசினாள்...

"என்னன்னு எங்க அம்மா சொல்லுச்சு...?"

"வேண்டாத பெண்டாட்டி கை பட்டாலும் குற்றமாம்.. கால் பட்டாலும் குற்றமாம்.." வெந்நிலா அவன் முகம் பார்க்காமல் சொல்லிவிட...

"என்னது..?..!.." என்று ஆச்சரியமானான் தசரதன்...

'இவ எனக்கு வேண்டாத பொண்டாட்டியா..? அடியேய்.. நீ வேணும்னுதாண்டி என் மனசும்.. உடம்பும் கிடந்து தவிக்குது....'

அவளை ஒரு மார்க்கமாக பார்த்த தசரதன்..

"நீ வேண்டாத பொண்டாட்டியோ... இல்ல வேண்டப்பட்ட பொண்டாட்டியோ.. எனக்கு அது தெரியாது.. நீதான் ஒத்த ரூமுக்குள்ள இருந்தாலும் எட்டடி தள்ளியே நிக்கிறயே.. கட்டில் கூட காத தூரத்துக்கு அப்பாலே கிடக்குது.. இதுல என்மேல உன் கை எப்ப பட்டுச்சு..? கால் எப்ப பட்டுச்சு..?" என்று புருவங்களை உயர்த்தியபடி கேட்டு வைத்ததில் வெந்நிலாவிற்கு வெட்கமாகி விட்டது..

குங்குமமாக சிவந்து விட்ட முகத்தை திருப்பிக் கொண்ட அவளும்.. அதை ரசனையாகப் பார்த்த அவனும்.. மனதுக்குள் மழைச்சாரலை உணர்ந்தார்கள்....

அன்றைய சண்டை அத்துடன் தீர... தசரதன் வாசலில் அழைத்தது யார் என்ற விவரம் அறிய வாசலுக்குப் போனான்.. அங்கே பக்கத்து வீட்டு சீதாவின் கணவனான ரகுநாதன் நின்றிருந்தான்..

"என்ன சார்.. உங்க வீட்டம்மா குட்டிப் பாப்பாவுக்கு குட்டிக் கவுனை வாங்கிட்டு வீடு வந்து சேர்ந்திட்டாங்களா..?" இடக்காக விசாரித்தான் தசரதன்..



"அப்பவே வந்துட்டா.. பாவம்.. அவளாலே உங்க வொய்ஃபுக்கு கால்வலி வந்துருச்சாமில்ல.. ஐ ஆம் சாரி தசரதன்.." அந்த மனிதர் வருத்தம் தெரிவித்தார்...

## 30



'யாருக்கு வேண்டும் உன் வருத்தம்..?' என்றுதான் அவன் சொல்ல நினைத்தான்.. ஆனால்.. சங்கடத்துடன் நின்றிருந்த அந்த ரகுராமனின் முகத்தாட்சணைக்காக எதுவும் பேசாமல் விட்டு விட்டான்...

ரகுநாதனுக்கு சமாதானம் சொல்லி அனுப்பி விட்டு வீட்டுக்குள் வந்தவன் கதவை அடைத்துவிட்டு சமையலறைக்குப் போனான்.. அங்கே.. காலை நொண்டிக் கொண்டு கேஸ் ஸ்டவ்வை பற்ற வைக்க முயன்று கொண்டிருந்தாள் வெந்நிலா...

"சொன்னாக் கேட்க மாட்டியாடி..? என் சொல் பேச்சுக் கேட்கக் கூடாதுன்னு சபதம்.. கிபதம் செய்திருக்கயா..?"

மனைவியை கடிந்து கொண்ட தசரதன்.. சமையலறைக்குள் ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போட்டான்.. அவன் என்ன செய்யப் போகிறான் என்று வெந்நிலா யூகித்து முடிவதற்குள் அவள்

இடுப்பில் கை வைத்து அலேக்காக தூக்கி நாற்காலியில் அமர வைத்தான்..

"யாருகிட்ட..?" கையைத் தட்டியபடி கேட்டவனின் மீது அவள் மனதில் மையல் ஏற்பட்டது...

"என் ஹஸ்பெண்ட்கிட்ட.." அவள் தலை சாய்த்துச் சொன்ன விதத்தில் அவள்மீது அவனுக்குள் ஈர்ப்பு ஏற்பட்டது...

தசரதன் அவளைப் பார்த்தபடியே அடுப்பை பற்ற வைத்தான்.. தோசை சுடும் பாத்திரத்தை வைத்தான்.. பிரிட்ஜைத் திறந்து தோசை மாவு இருந்த பாத்திரத்தை எடுத்தான்.. தோசை வார்க்க ஆரம்பித்தான்..

"நான் செய்கிறேன்னா கேட்கறிங்களா..?" அசையப் போன வெந்நிலா வலியால் முகம் சுளித்தாள்...

"அசையாதே..." தசரதன் ஒரு முக்காலியைக் கொண்டு வந்து போட்டு.. அவள் காலைத் தூக்கி அதில் வைத்தான்...

அவளைப் பார்த்து சன்னமாக விசிலடித்தபடி.. மிக்சியில் சட்னியை அரைத்தெடுத்தான்.. தோசைகளையும் சட்னியையும் டைனிங் டேபிளுக்கு கொண்டு போனவன் அவள் இடுப்பில் கை கொடுத்து அவளைத் தூக்கிக் கொண்டான்...



அவளுக்கு அது பிடித்திருந்தது.. வலிமையான அவள் கணவனின் கரங்களில் பூமாலையாய் கிடந்தபடி.. அவன் கழுத்தைச்சுற்றி கைபோட்டு வளைத்துக் கொண்டாள்..

தசரதனுக்கு சொர்க்கம் தெரிந்தது.. சமையலறையிலிருந்து டைனிங் டேபிளுக்கு... அடிமேல் அடியெடுத்து வைத்து அடிபிரதட்சணம் செய்து அரைமணி நேரம் கழித்துப் போய் சேர்ந்தான் அவன்..

வேறு வழியில்லை.. அவளை இறக்கிவிட்டுத்தான் ஆக வேண்டும் என்று சூழ்நிலையால் வேறு வழியில்லாமல் அவளை இறக்கி உட்கார வைத்துவிட்டு.. தோசையை பரிமாறி.. அதைப்பிட்டு.. சட்னியில் தோய்த்து அவளுக்கு ஊட்டி விட்டான்.. மறுப்புச் சொல்லாமல் வாங்கிக் கொண்டவள்.. தலையை லேசாக சாய்த்துச் சிரித்து...

"வலி காலில்தான்.. கையில் இல்லை.." என்று சொன்னாள்...

"மறந்துருச்சு..." தசரதன் அவளை விட்டு விலக மனமில்லாமல் விலகி அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தான்..

இருவரின் பார்வைகளும் கலந்து கலந்து பிரிந்தன.. சாப்பிட்டு முடித்ததும் அவளைத் திரும்பவும் கைகளில் ஏந்திக் கட்டிலை அடைந்தான் அவன்.. குனிந்த அவளைக் கிடத்தும் போது.. அவன் தோளை வளைத்திருந்த அவள் கை விலகவில்லை..

அவன் கழுத்தை வளைத்துப் பிடித்த கைகளுடன் அவளும்... குனிந்து அவள் முகத்திற்கு வெகு அருகாமையில் முகம் வைத்து அவனும்.. ஒருவரை ஒருவர் பார்வையாலேயே சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்...

அப்படியே அவன் கழுத்தை வளைத்து இழுத்து தன்மேல் சரித்துக் கொள்ள அவள் ஆசைப்பட்டாள்.. அதை தெரியாதவனாக.. அவள் மேல் சரிந்து விட்டாலென்ன என்று அவன் ஆசைப்பட்டான்...

இருவரின் மனதிலும் உறைந்திருந்த ஆசைகளை ஒளித்து வைத்தபடி மற்றவரின் அனுமதிக்காக அவர்கள் காத்திருந்தார்கள்...

அவள் கண்களில் அழைப்பு இருக்கிறதா என்று அவன் அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்.. அந்தப் பார்வையின் வேகத்தைத் தாங்க முடியாமல் அவள் முகம் திருப்பிக் கொண்டாள்...

அழைக்காதவளிடம் எப்படி நெருங்குவது என்ற மனப் போராட்டத்துடன் அவன் விலக முனைந்தான்... விலக முனைகிறவனை எப்படி இழுத்துப் பிடிப்பது என்ற மனப் போராட்டத்துடன் அவளும் கைகளை விலக்கிக் கொண்டாள்...

ஒருவரையொருவர் நாடிய உடலையும்.. மனதையும் கட்டுப் படுத்தும் வகையறியாமல் அவர்கள் இருவரும் தூங்குவதைப் போன்ற பாவனையுடன் கண்களை மூடிக் கொண்டார்கள்...



# 31



“வா வெந்நிலா...
உன்னைத் தானே..
வானம் தேடுது...
மேலாடை மூடியே..
ஊர்வலமாய் போவதேன்..?”

தசரதன் வாய் விட்டுப் பாடியபடி சட்டை பொத்தான்களைப் போட்டுக் கொண்டிருந்தான்.. அதை ரசித்துக் கேட்டபடி.. அறைக்குள் வந்தாள் வெந்நிலா.. அவள் தலையில் சூடியிருந்த ஜாதி மல்லியின் மணம் அவனை இழுத்தது... அதை அருகில் முகர ஆசை கொண்டவனின் மனம் ஒரு யுக்தியைக் கண்டுபிடித்தது...

வெந்நிலாவின் பார்வையில் படாமல் ஒரு பொத்தானை பிய்த்து எறிந்தான் அவன்.. தரையில் விழுந்த பொத்தான் மிகச் சமர்த்தாக வெந்நிலாவின் பாதத்தில் விழுந்து வைக்க..

‘சபாஷ்..’ என்று மனதுக்குள் பொத்தானை பாராட்ட வேறு செய்தான்...

"அட்டா.. பட்டன் பிய்ந்துருச்சே..." வெந்நிலா குனிந்து அதை எடுத்தாள்...

"ம்ப்ச்.. நேரமாகிருச்சு..." தசரதன் பரபரப்பாக கைக்கடிகாரத்தை பார்த்து வைத்தான்...

"வேற சட்டையை எடுத்துத் தரவா..?"

அக்கறையுடன் வெந்நிலா கேட்க... அவனுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. அதற்காகவா அவன் வேலை மெனக்கெட்டு பொத்தானைப் பிய்த்துப் போட்டான்...

"சட்டையை மாத்தினா பேண்டையும் சேத்து மாத்தனும்.. டியுட்டின்னா பரவாயில்லை.. யூனிஃபார்மில் போயிரலாம்.. இன்னைக்கு டியுட்டியில்ல.. வேற முக்கியமான வேலையிருக்கு.. அங்கே ஒழுங்கா உடுத்திக்கிட்டுப் போயாகனும்.. இது அதிர்ஷ்டக்கார சட்டைன்னுதான் எடுத்துப் போட்டேன்.. ம்ஹீம்.. இப்படி ஆகிருச்சே.." தசரதன் சட்டையை அவிழ்க்கப் போவதைப் போல பாவனை செய்ய....

"பொறுங்க..." என்று அதைத்தடுத்தாள் வெந்நிலா..

"ஏன்..?" புரியாதவனைப் போல நடித்தான் தசரதன்..

"நான் பட்டனை தைச்சு விடறேன்..."

வெந்நிலா ஊசி நூலுடன் அவனை நெருங்கினாள்.. பட்டனை வைத்துத் தைக்க ஆரம்பித்தாள்.. அவளின்



அந்த அதீத நெருக்கத்தில் அவன் ஆசைப்பட்டபடி அவள் தலையில் சூடியிருந்த ஜாதி மல்லியின் வாசனையை ஆசைதீர முகர்ந்து கொண்டான் தசரதன்...

அவனை நெருங்கி நின்ற வெந்நிலாவோ.. அவன் மார்பில் தலை உராயும் இதமான இன்ப அவஸ்தையை அனுபவித்துக் குளிர் காய்ந்தாள்.. அவன் மீது இருந்த அந்த பிரத்யேக நறுமணத்தை முகர்ந்தவளுக்கு.. அப்படியே அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டால் என்ன என்று தோன்றியது...

அவன் கிறங்கினான்.. பூவாசத்துடன் நெருங்கி நின்றவளின் தோள் பற்றி இழுத்து அணைத்துக் கொள்ளத் தூண்டும் வேட்கைத்தீ அவனுக்குள் பற்றி எரிந்தது...

அவனின் வலிமையான மார்பின் அண்மையில் அவள் கிளர்ச்சியுற்றாள்.. அவன் தோள் பற்றி அதில் தலை சாய்க்கும் மோகம் அவளுக்குள் துளிர்த்து எழுந்தது...

ஒருசிறு உராய்வு போதும்.. அவர்கள் ஒருவரிடம் ஒருவர் அடைக்கலமாகியிருப்பார்கள்.. அது நடந்திருக்கும் தான்.. விலக விரும்பாமல் அவளும்.. விலக்க விரும்பாமல் அவனும்.. உறைந்து போய் நின்ற அந்த மனித்துளிகளில் மோகத்தீ அவர்களைச் சுற்றி வளைத்திருக்கும்தான்...

அதை நடக்க விடாமல் அடுத்த வீட்டு மலர்கொடி.. கரடியாக வந்து தொலைத்தாள்...

"வெந்நிலா..."

அவளின் அழைப்புக் குரலில் மோனம் கலைந்தவர்கள் பிரிய மனமில்லாமல் பிரிந்தார்கள்...

"என்னக்கா..?" பல்லை நறநறத்தபடி வெந்நிலா கேட்டாள்...

"கொஞ்சம் உரை மோரு இருந்தாக் குடும்மா..." மலர்கொடி அங்கே சட்டமாக உட்கார்ந்து கதை பேச ஆயத்தமாக... வெந்நிலா தசரதனை ஏக்கத்துடன் பார்த்தபடி அவளிடம் போனாள்...

மலர்கொடியை.. சரவெடியைப் பார்ப்பதைப் போல காட்டமாக பார்த்தபடி தசரதன் கிளம்ப மனமில்லாமல் கிளம்பி விட்டான்...

அவர்கள் இருவர் மனதிலும் மௌனராகம் இசைத்துக் கொண்டிருந்தது..

அன்று இரவு வீடு திரும்பும் போது.. என்றைக்கும் இல்லாத வண்ணமாக அவளை ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி உள்ளே வந்தான் தசரதன்...

அவன் பார்வையில் தெரிந்த வேட்கையில் அவளுக்குள் மின்சாரம் பாய.. உதட்டைக் கடித்தபடி கதவைத் தாழிட்டு விட்டு அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்...



"உன் மலர்கொடியக்கா எப்ப போனாங்க..?" கைலிக்கு மாறியபடி அவன் கேட்டான்...

"கொஞ்ச நேரத்திலேயே போயிட்டாங்க.." அவனுக்காக துண்டை எடுத்து நீட்டியபடி சொன்னாள் வெந்நிலா..

"உனக்குன்னு வந்து வாய்ச்சிருக்காங்க பாரு.. பக்கத்து வீட்டு அக்கா உன்ன ஊர்சுத்தக் கூப்பிட்டுக்கிட்டு போகுது.. அடுத்த வீட்டு அக்கா உன்ன ஊர் வம்பு கேட்க வைக்குது.. என்னவோ போ வெந்நிலா.. இவங்களுக்கு மத்தியிலே உனக்கு புருசனைப் பத்தின நினப்பு வராதுதான்.."

அவன் வார்த்தைகளில் தெரிந்த கோபத்தில் சட்டென்று நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள் வெந்நிலா.. அவனின் கூர்மையான பார்வை.. அவள் உடல் மீது மேய்ச்சல் நிலத்தைக் கண்ட காளைபோல படிந்து பரவியதில் சிலிர்த்துப் போனவளாக தலை தாழ்த்திக் கொண்டாள்...

அவள் மேனி நடுங்கியது...

"அவங்களுக்கு என்னடி.. கட்டிக்கிட்டவங்களுக்கு ஆணொன்னு.. பொண்ணொன்னு ரெண்டு புள்ளைகளை பெத்துக் குடுத்திட்டு அடுத்த வீட்டுக்கு வம்பு பேசவும்.. ஊர்சுத்தக் கூப்பிடவும் வர்றாங்க.. நீ அப்படியா..?"

அவனது நேரடிக் கேள்வியில் அவள் வயிற்றுக்குள் பட்டாம்பூச்சிகள் பறந்தன.. அந்த இனிய உணர்வுகளின் ஆளுமை ஆக்டோபஸைப் போல அவளை வளைத்துத் தள்ள.. பேச முடியாமல் மௌனமாகிப் போனாள் அவள்....

"அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாம நீ குடித்தனம்... பண்ணிக்கிட்டு இருக்கிற.. உன்னை ஏன்னு கேக்காத கேணயனா நான் உனக்கு கிடைச்சிருக்கேன்.."

காலையில் நடக்க இருந்தது நடக்காமல் போன கோபத்தை அவள்மீது கொட்டிக் கொண்டிருந்தான் தசரதன்.. அதில் தவித்துப் போனாள் வெந்நிலா...

"உனக்கென்னடி.. நீ கொடுத்து வைச்சவ.. தாலியைக் கட்ட வைக்கனும்னு நினைச்ச.. என்னைக் கட்ட வைச்ச.. அதை நினைச்சவ.. மத்த எதையும் ஏண்டி நினைக்க மாட்டேங்கிற..?"

அவன் வெளிப்படையாகவே அவனின் மனதைச் சொல்லிவிட... அதில் அவனை உணர முடியாமல் அவளைக் குறைசொல்வதாக நினைத்துக் கொண்டு மனதுக்குள் திட்டித் தீர்த்தாள் வெந்நிலா...

'நீ மட்டும் நினைக்கிறயா..? சும்மா இருக்கிறவளை கிட்ட வான்னு கூப்பிட்டு கட்டிப் பிடிக்காத குறையாக நிற்க வேண்டியது.. என்னடா.. இவ உடம்பும்..



மனசும்.. இரும்பில செஞ்சதில்லையேன்னு நினைச்சுப் பார்க்கறதில்ல.. அது இளகற சமயம் பார்த்து விலகி ஓட வேண்டியது.. இதுதானே உங்க பிழைப்பு...'

"என்னடி மனசுக்குள்ள என்னத் தாளிக்கிறயா..?"

"ஆமான்னு சொன்னா என்ன செய்வீங்க..? என் அப்பா வீட்டுக்கு துரத்தி விட்டிருவீங்களோ...?"

"அப்படிப் போடு அருவாள.. ஆக அம்மனிக்கு அரண்மனை வீட்டு மேல நோக்கமெடுத்திருச்சு.. இந்தச் சின்னக் குவார்ட்டர்சில இருக்கப் பிடிக்கல.. அதைச் சொல்லித் தொலைக்க வேண்டியதுதானே..."

"எப்படி என்னைத் துரத்தி விடலாம்னு நீங்க காத்துக்கிடக்கிறங்க.. அதான் காரணமும் தேடி அலைகிறிங்க..."

அவன் ஒன்றைச் சொல்ல.. அவள் ஒன்றைச் சொல்ல.. இருவரும் விடியவிடிய சண்டைபோட்டு முடித்தார்கள்.. உறக்கமில்லாத அந்த இரவில் அவள் புருசனின் உணர்வுகளை மதிக்கவில்லை என்று அவன் தீர்ப்பளித்தான்.. அவன் பெண்டாட்டியின் உணர்வுகளை பொருட்படுத்தவில்லை என்று அவள் குற்றப் பத்திரிக்கை வாசித்து முடித்தாள்...

# 32



மழை கொட்டிக் கொண்டிருந்தது.. அந்தக் கட்டிடத்தின் ஓரமாக நின்றிருந்த வெந்நிலா கைகளைப் பிசைந்தாள்...

'அவன் வருகிற நேரம் பார்த்துத்தான் எனக்கு சோதனை வருது...'

அவளும்தான் என்ன செய்வாள்..? தீபாவளிக்கு என்று தசரதன் அவளுக்குப் புதுச் சேலைகளை வாங்கிக் கொடுத்திருந்தான்.. அதற்கான ரவிக்கைகளை தைக்கக் கொடுத்திருந்ததை வாங்கி வரத்தான் அவள் வீட்டை விட்டுக் கிளம்பி வந்தாள்.. மறுநாள் அவளும் அவனும்.. அல்லியூருக்குக் கிளம்ப வேண்டும்.. அந்த அவசரத்தில் வந்தவள்.. தைத்த ரவிக்கைகளை வாங்கிக் கொண்டு திரும்பியபோது மழை வந்து விட்டது...

தூறலாக ஆரம்பித்த மழை வலுத்து பொழிவதைக் கண்டவளின் மனம் சோர்ந்தது...

'இதுக்கு என்னவெல்லாம் பேசப் போகிறானோ...'



பேசாமல் மழையில் நனைந்தபடி வீட்டுக்குப் போய் விடலாம் என்று அவள் தீர்மானித்தாள்... புது ரவிக்கைகள் பாலிதீன் கவருக்குள் பத்திரமாக இருந்தன.. அது நனையாது என்ற தைரியத்துடன் மழையில் நனைந்தபடி விரைந்தவளுக்கு எதிராக குடையுடன் வந்து கொண்டிருந்தான் தசரதன்...

'மாட்டிக்கிட்டேனே...'

மழையின் குளிருக்கு நடுங்காத அவளின் உடல் அவனின் துளைக்கும் பார்வையில் நடுங்கியது...

எதுவும் பேசாமல் அவளுக்கு குடை பிடித்தான்.. வழியில் ஏதும் பேசாமலிருந்தால் அதுவே போதும் என்ற எண்ணத்துடன் குடைக்குள் ஒன்றிக் கொண்டாள் வெந்நிலா...

வீட்டுக்கு வந்தவுடன் ஹாலில் கிடந்த நாற்காலிகளில் ஒன்றின் மீது கையிலிருந்த புது ரவிக்கைகள் அடங்கிய பாலிதின் கவரை எறிந்து விட்டு.. குளியலறையை நோக்கி ஓடினாள்.. உலர்ந்த உடைக்கு மாறி... ஈரத் தலைமுடியை விரித்து விட்டபடி.. படுக்கையறையை விட்டு வெளியே வந்தவளை நிமிர்ந்து பார்த்தவனின் கண்கள் அவளுடன் கலந்தன.. அவன் கையில் அவள் விட்டெறிந்த பாலிதின் கவர் இருந்தது..

பனியில் குளித்த மலரைப் போல.. புத்துணர்வுடன் நின்றவளைப் பருகுவதைப் போல பார்த்தவன்...

'இவள் தேவதைதான்...' என்று நினைத்துக் கொண்டான்..

அவன் பார்வையை முறைப்பாக நினைத்துக் கொண்டு அவள் கைகளை பிசைந்தாள்.. அவள் கைகள் மீது அவன் பார்வை போனது..

"இது என்னடி..?" நிதானமாக கேட்டான்...

'விசாரணையை ஆரம்பிச்சுட்டான்..' அவள் உதட்டைக் கடித்தபடி..

"புது ஜாக்கெட்.." என்றாள்...

"இதை வாங்கப் போய்த்தான் மழையில நனைஞ்சியா..?"

"ம்ம்ம்.."

"இதை என்கிட்டச் சொன்னா நான் வாங்கிக்கிட்டு வர மாட்டேனா..?"

"இதை உங்ககிட்ட எப்படிச் சொல்றது..?"

அவள் தயக்கத்துடன் கேட்டாள்.. அவனுக்குச் சுள்ளென்று கோபம் வந்து விட்டது...

"என்கிட்டச் சொல்லாம வேற யார்கிட்டச் சொல்லுவ..?"

அவனது அந்தக் கேள்வியில் அவளுக்கும் கோபம் வந்துவிட்டது...



"தேவையில்லாம பேசக் கூடாது..."

"அதை நீ சொல்லாதே.. கட்டின பொண்டாட்டி-யோட துணிமணிகளை அவ புருசன்காரன் வாங்கிக்கிட்டு வர மாட்டானா..? நீ நினைச்சுப் பாக்கனும்டி.. அதைத்தான் செய்ய மாட்டியே..."

"எனக்கென்ன தெரியும்..? இங்கேதான் நான் எதைச் சொன்னாலும் குற்றமாயிருக்கே..."

"குத்தம் கண்டு பிடிக்க முடியாம நடந்துக்கிறதுக் கென்ன..?"

"எனக்கு அது தெரியலை.. நீங்க தான் சொல்லிக் கொடுங்களேன்.."

அவள் விசுக்கென்று சமையலறைக்குள் போய் விட்டாள்.. கொதித்த பாலை இறக்கிக் காபியை கலந்து கொண்டிருந்தவளின் காதுகளில்...

"சொல்லிக் கொடுக்கனும்னுதான் நினைக்கறேன்.. எங்கே..? அதுக்குத்தான் இங்க வழி கிடைக்கலியே.." என்ற அவனின் குரல் காதில் விழுந்தது...

நிமிர்ந்து பார்த்தாள்.. சமையலறை வாசலில்.. சுவரில் ஒரு கையை ஊன்றியபடி கம்பீரமாக அவன் நின்றிருந்தான்..

அவனது அந்தக் கம்பீரம் அவளை வசீகரித்தது.. அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.. அவளின் பார்வையில் அவன் கண்களில் மின்னல் வந்தது...

"என்ன ஆச்சு..?" கண் சிமிட்டினான்...

"என்மேல் காதலாகி கசிந்துருகிட்டியா..?"

'ஆமாம்..' என்று சொல்லத் துடித்த மனத்துடன் அவள் வெட்கி முகம் திருப்ப...

"இதுக்கு மட்டும் பதில் சொல்ல மாட்டியே..." என்று அலுத்துக் கொண்டான் அவன்..

சூடான காபி கொட்டிக் கொண்டிருந்த மழையின் குளிருக்கு இதமானதாக இருந்தது..

அதை ரசித்து உறிஞ்சியபடி அவளைப் பார்த்தவன்..

"இதுக்கு இப்ப என்ன அவசரம்..? என்னிடம் சொல்லி என் துணையோட போய் வந்தா ஆகாதா..?" என்று விடாமல் கேட்டான்...

"பக்கத்தில்தானேன்னு போயிட்டேன்.. போகும் போது மழையில்லை.. அதோடு.. நாம நாளைக்கு ஊருக்குப் போகனுமே.." என்றாள் அவள்..

அவளை யோசனையுடன் பார்த்த தசரதன்...

"ஊருக்குப் போகிறது உண்மைதான் வெந்நிலா.. ஆனா அல்லியூருக்குப் போகலை..." என்று சொன்னான்..

"ஏன்..?" அவள் விழிவிரித்தாள்...



"இது நமக்கு தலைதீபாவளி.. உன் அப்பாவீட்டில தான் இதை நாம கொண்டாடியாகனும்.." அவன் மேலே சொல்ல முடியாமல் நிறுத்திக் கொண்டான்...

அவள் முகம் மாறிவிட்டது.. நாராயணமூர்த்தி அவங்களை அழைக்கவில்லை.. அதை அவன் சொல்லிக் காண்பிக்கவில்லை என்பதை நன்றியுடன் நினைத்துக் கொண்டாள் வெந்நிலா..

அவன் மட்டும்தானா..? அவன் குடும்பமே அதை பொருட்படுத்தவில்லையே.. அதை நினைத்தவளின் மனம் நெகிழ்ந்தது...

"ஊருக்குப் போனா தேவையில்லாத பேச்சு வரும்.. ரங்கத்தை ஒன்னு போதும்.. ஊரு பூராவும் இதை பரப்பி விட்டிரும்.. அதனால நாம உங்க அப்பாவீட்டுக்கு தலை தீபாவளி கொண்டாடப் போயிருக்கிறதா அம்மாப்பா சொல்லிக்குவாங்க.. இங்கேயிருக்கவங்களும் அப்படியே நினைக்கட்டும்.. நாம வெளியூருக்குப் போய் வரலாம்..."

"அப்பா ஏன் இப்படி நடந்துக்கிறாரு.. நான் கேட்கவா..?" தாளமாட்டாமல் அவள் கேட்டபோது...

"அந்தக் காரியத்தை மட்டும் செய்து விடாதே.." உறுதியுடன் அவளைக் கண்டித்தான் தசரதன்..

"இல்லைங்க.. ஊர் வழக்கம்ன்னு ஒன்னு இருக்கில்ல..?"

"அது அவருக்கும் தெரிந்திருக்கும்தானே.. தெரிஞ்சும் மௌனமா இருக்கார்ன்னா அவர் மனசில ஏதோ இருக்கு.. எப்பவுமே மரியாதையையும்.. அன்பையும் கேட்டு வாங்கக் கூடாது வெந்நிலா.. தானா அது கிடைக்கனும்.. அவரை அவர் போக்கில விட்டிரு.. இது நம்ம வாழ்க்கை.. நாம வாழ்ந்துக்கலாம்..."

அவன் அவளை அழைத்துக் கொண்டு.. திருச்சிக்கு போய் வந்தான்.. சேலத்துக்கு அருகிலேயே ஏற்காடு இருந்தது.. ஆனாலும் மழை நேரத்தின் குளிரில் அவன் அங்கே போக விரும்பவில்லை..

திருச்சியில் ஹோட்டல் அறையில் தங்கினார்கள்.. உச்சிப்பிள்ளையார் கோவிலுக்கு போய் வந்தார்கள்.. காவேரிக் கரையின் இந்தப் பக்கத்திலிருந்த உச்சிப் பிள்ளையாரை சேவித்தகையுடன் காவேரிக்கு அந்தப் பக்கத்திலிருந்த ஸ்ரீரங்கத்திற்கு போய் அனந்த சயனனாக பள்ளி கொண்டிருந்த அந்த ரங்கநாதனை சேவித்தார்கள்.. ஹோட்டல் அறையில் தீபாவளியை கொண்டாடினார்கள்..

மனம் கலங்கியிருந்த வெந்நிலாவிடம் தன் தேவையைக்கூற அவன் முனையவில்லை..





# 33

வீட்டு வாசல் படியில் அமர்ந்து தசரதனின் வரவுக்காக காத்திருந்தாள் வெந்நிலா.. அவன் வருகின்ற நேரம் கடந்து விட்டிருந்தது.. ஏனோ அவளின் மனத்துக்குள் கலக்கமாக இருந்தது...

அது என்னவோ... அவன் வரத் தாமதமாகி விட்டால் அவள் மனதில் கலவரம் சூழ்ந்து கொள்கிறது.. இனம் விளங்காத அந்தக் கலவரத்திற்கான காரணம் என்னவாக இருக்கக் கூடும் என்று அவளுக்குப் பிடிபடவே இல்லை..

வீட்டுக்குள் பார்த்தாள்.. அவளுக்காக அவன் வாங்கிப் போட்டிருந்த சோபாக்கள் பார்வையில் பட்டன.. அவளுக்கென்று அவன் வாங்கிப் போட்ட பொருள்களை ஒவ்வொன்றாக வாங்கிக் கொடுத்திருந்தான்...

எல்லாவற்றையும் சிறுகச் சிறுக பணம் சேர்த்து வாங்கினான் தசரதன்.. வெந்நிலாவிற்கு இது புதிது.. கிரெடிட் கார்டில் ஒரே நாளிலேயே பல லட்சங்களுக்கு ஷாப்பிங் செய்கிறவள் அவள்.. இப்படி கணக்குப் பார்த்து செலவளித்து.. சேர்த்து வைத்து சிறிய பொருள்களை வாங்கும் வாழ்க்கை அவளுக்குப் புரிது...

என் அப்பாவிடம் கேட்டு வாங்கித்தருகிறேன் என்று அவளும் சொல்லவில்லை.. உன் வீட்டில் சீர் செய்யவில்லை என்று அவனும் சொல்லவில்லை...

இன்று புதிதாய் பிறந்தோம் என்பதைப் போல.. வெந்நிலாவின் பணக்கார வாழ்வை மறந்த ஒரு வாழ்வை அவர்கள் வாழத் தொடங்கியிருந்தார்கள்...

அறுவடை முடிந்த பின்னால் கயிலைநாதனும்.. பாரிஜாதமும் சாரதாவை அழைத்துக் கொண்டு வந்து ஒரு வாரம் தங்கிவிட்டுப் போனார்கள்.. சாரதா முழு ஆண்டு விடுமுறையை தசரதனின் வீட்டில் கழிக்கவென்று திரும்பவும் வந்தாள்.. அவளின் தேர்வு முடிவு வந்ததும்.. அவளும் கல்லூரியில் சேர்ந்து படிக்கப் போகிறேன் என்று அல்லியூருக்குத் திரும்பி விட்டாள்..

"பக்கத்து டவுனில் காலேஜ் இருக்கு.. ஊருக்குள் தினமும் டவுன்பஸ் வந்து போகுது.. நானும் இப்படித்தான் படிச்சேன்..." என்றான் தசரதன்..

"ஸ்கூட்டி வாங்கிக் கொடுக்கலாமே..." கரிசனத்துடன் சொன்னாள் வெந்நிலா...

"அதைவிட பஸ்ல போறதுதான் பாதுகாப்பு.." என்று சொல்லிவிட்டான் தசரதன்..

நாராயணமூர்த்தி காரில் வந்திருந்தார்.. மகள் நடத்தும் எளிய வாழ்வை யாரோ போல பார்வையிட்டு விட்டு...

"என்ன வேணுமோ கேளும்மா..." என்று சொன்னார்..



"எனக்கு எதுவும் வேணாம் டாட்.." என்றாள் வெந்நிலா...

ஒரு கணம் மகளின் முகத்தைக் கூர்ந்துபார்த்தவர்...

"அப்படின்னா சரி.." என்று சொல்லிவிட்டு போய்விட்டார்..

அவர் எதற்காக வந்தார்..? ஏன் அந்தக் கேள்வியினைக் கேட்டார்..? வெந்நிலா மறுத்ததும் வற்புறுத்தி எதையும் கொடுக்காமல் ஏன் போய் விட்டார் என்று யாருக்குமே புரியவில்லை.. அவரின் கோடிக் கணக்கான சொத்துக்களின் வாரிசு வெந்நிலாதான்.. அவளை எளிய வாழ்க்கை வாழ விட்டுவிட்டு அந்தச் சொத்துக்களை யாருக்காக அவர் காபந்து பண்ணுகிறார்..?

"ஒருவேளை உன் மாமனாரு இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாம்ங்கிற ஐடியாவில இருக்காரோ...?"

குசலம் விசாரிக்கிறேன் பேர்வழியென்று செல்போனில் ரம்பம் போடும் சரவணன் ஒருநாள் இதைச் சொன்னான்..

"பல்லை உடைப்பேன்..." என்றான் தசரதன்...

"கோவிச்சுக்காதேடா மச்சான்.. அரண்மனை வீட்டுக்காரரு என்ன காரணத்துக்காக அடக்கி வாசிக்கிறாருன்னு ஒரு மண்ணும் புரிய மாட்டேங்குதே.. அதனால இப்படியிருக்குமோன்னு கேட்டேன்..."

"கேப்ப.. கேப்ப.. கேட்கிறதுக்கு பல்லிருந்தாத்தானே கேப்ப...?"

"பல்லை விடுடா மச்சான். நீயேன் அதிலயே தொட்டிலைக் கட்டி தூளி விளையாடிக்கிட்டு நிக்கிற..? உனக்கும் கல்யாணமாகி ஆறுமாசமாகப் போகுது.. இன்னும் அரண்மனை அசையலையே..."

"அது என்கவலை.. உன் கவலையா..?"

"நீதான் கவலைப்பட மாட்டேங்கறியே..."

தசரதன் கவலைப்படவில்லை.. எதையும் கேட்டுக் கொள்ளவில்லை.. நாராயணமூர்த்தி வந்தபோது வாயாற வரவேற்றான்.. அவர் கிளம்பியபோது முகமலர்ச்சியுடன் வழியனுப்பி வைத்தான்.. வேறு எதையும் பேசவில்லை.. கேட்கவும் இல்லை...

"என்ன வெந்நிலா.. தம்பி இன்னும் வரலையா..?"

பக்கத்து வீட்டிலிருந்த மலர்கொடி கேட்டாள்.. சிந்தனை கலைந்த வெந்நிலா...

"ஆமாம்க்கா.." என்று சொன்னாள்...

"எங்க வீட்டில வந்துட்டாரே.. இந்நேரம் தசரதன் தம்பியும் வந்திருக்கனுமே..."

"அதான் தெரியலை..."

வெந்நிலாவிற்கு கவலையாக இருந்தது.. இதுவரை ஒருநாள்கூட தசரதன் தாமதமாக வீடு திரும்பியதில்லை...

'இன்னைக்கு என்ன ஆச்சு...?'



அவள் செல்போனை எடுத்தபோது.. மலர்கொடி பதட்டமானமுகத்துடன் வேலிப்படலைத் திறந்து கொண்டு வந்தாள்.. வெந்நிலாவிற்கு இதயம் படபடத்தது.. எதுவோ நடந்திருக்கிறது என்று அவளின் உள்ளுணர்வு கூறியது...

"என்னக்கா..?"

"உன் வீட்டுக்காரரு ஸ்டேசனில் இல்லயாம்.. தெக்க போற ரயிலில் ஏறிப் போனாராம்...?"

"எதுக்கு..?"

"தண்டவாளத்தில விரிசல் விழுந்திருக்குன்னு தகவல் வந்ததாம்.. செக் பண்ணப் போனாராம்.. போன ரயிலு..." மலர்கொடி முடிக்காமல் பாதியில் நிறுத்த.. வெந்நிலா கலவரமானாள்...

"போன ரயிலு..?" மலர்கொடியை பிடித்து உலுக்கினாள்..

"கவுந்துருச்சுன்னு சொல்றாங்க வெந்நிலா..."

மலர்கொடி சொல்லிக் கொண்டிருக்கையிலேயே வெந்நிலா மயங்கிச் சரிந்தாள்.. அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்து மடியில் தாங்கிக் கொண்டாள் மலர்கொடி.. அக்கம் பக்க குவார்ட்டர்ஸில் இருந்தவர்கள் எல்லோரும் கூடிவிட்டார்கள்.. மயக்கம் தெளிந்து எழுந்து அமர்ந்த வெந்நிலா...

"எனக்கு அவரைப் பார்க்கனும்..." என்றாள்...

"இரு வெந்நிலா.. என் வீட்டுக்காரர் தகவல் கேட்கப் போயிருக்கார்.. அவர் வந்து விவரம் சொன்னதும் போகலாம்.." மலர்கொடி தடுத்தாள்..

"இல்லேக்கா.. நான் போகனும்.. அவரைப் பார்க்கனும்.."

வெந்நிலா உன்மத்தம் பிடித்தவளைப் போல ரயில் நிலையத்தை நோக்கி ஓட ஆரம்பிக்க.. அவளைத் தனியே விட மனமில்லாமல் மலர்கொடியும் கூட ஓடினாள்...

ரயில் நிலையத்தில் கூட்டமிருந்தது.. யாரிடம் விசாரிப்பது என்று புரியாமல் அலுவலக அறையில் உட்கார்ந்திருந்த ஒருவரிடம் வெந்நிலா கதற ஆரம்பித்தாள்.. அந்த நேரம் பார்த்து அவள் முதுகுக்குப் பின்னால் அந்த குரல் கேட்டது...

"வெந்நிலா..! நீ எங்கே.. இங்கே..?"

ஆனந்த அதிர்ச்சியுடன் வேகமாகத் திரும்பினாள் வெந்நிலா..

அங்கே தசரதன் கண்களில் ஆச்சரியத்துடன் நின்று கொண்டிருந்தான்.. வெந்நிலா பாய்ந்து அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.. அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது..

தசரதனால் நடந்து கொண்டிருந்த நிகழ்வை நம்ப முடியவில்லை.. அது ரயில் நிலையம்.. சுற்றிலும் ஜனங்கள் இருக்கிறார்கள் என்ற நினைவின்றி.. ஆவேசத்துடன் அவன்



முகத்தில் முத்தங்களைப் பதித்துக் கொண்டிருந்தாள் வெந்நிலா...

'இவளுக்கு என்மேல இம்புட்டுக் காதலா...'

தசரதனின் உடல் சிலிர்த்தது.. மனைவியைக் கட்டி.. முதுகில் தட்டிக் கொடுத்து சமாதானப் படுத்தினான் அவன்..

"ஏன் தம்பி.. நீங்க போன ரயில் கவுந்துருச்சுன்னு என் வீட்டுக்காரர் சொன்னாரே..." மலர்கொடி சந்தேகம் கேட்டாள்..

"அது கூட்ஸ் வண்டிக்கா.. யாருக்கும் சேதமில்லை.."

"உங்க பெண்டாட்டி ரொம்ப பயந்திருச்சு.."

"அதான் தெரியுதே..."

பெருமையுடன் மனைவியைப் பார்த்துக் கொண்டான் தசரதன்.. மலர்கொடியின் கணவரும் வந்துவிட.. அவர்கள் நால்வரும் நடந்துபோன விபத்தைப் பற்றிப் பேசியபடி வீட்டைநோக்கி நடந்தார்கள்.. அவரவரின் வீடுகளுக்குள் நுழைந்தார்கள்..

வீட்டுக்குள் நுழைந்ததும் கதவைச் சாத்தித் தாழிட்ட தசரதன் வெந்நிலாவைப் பார்த்தான்.. அவன் பார்வை புதிதாக இருந்ததில் அவள் கன்னம் சிவந்தாள். அவனையே பார்த்தபடி அவன் அவளை நெருங்கினான்.. அவள் விலகவில்லை.. மாறாக அவன் தொட்டவுடன் அவன் கைகளுக்குள் அடங்கினாள்..

தசரதனின் உடலில் அடக்கி வைக்கப் பட்டிருந்த ஆசைத்தீ கொழுந்து விட்டு எழுந்தது.. மோக வெள்ளத்தில் மூழ்கியவன் அவளை எலும்புகள் நொறுங்கும்படி இறுக்கமாக அணைத்தான்.. வெந்நிலா இன்பமான வலியை உணர்ந்தாள்.. உடையைக் கூட மாற்றாமல் மனைவியுடன் கட்டிலில் சரிந்தான் தசரதன்..

அவனுடைய வேட்கையில் புதியதொரு உலகை அறிமுகம் செய்து கொண்டாள் வெந்நிலா.. முன்னேறிய அவனது கைகள் அவளுக்குத் தெரியாத பல ரகசியங்களைத் தெரிய வைக்க ஆரம்பித்தன... அவன் எல்லைகளைக் கடக்க ஆரம்பிக்க.. வெந்நிலா.. அவனுக்குள் புதைந்தாள்.. உலகை மறந்தாள்..

களைத்து விலகியவர்களுக்குப் பசித்தது.. வெந்நிலா அவனுக்கு தட்டை எடுத்து வைத்தாள்.. பரிமாறினாள்.. அவன் அவளையே பார்த்தான்.. அவளால் அவனைப் பார்க்க முடியவில்லை.. சற்றுமுன் நிகழ்ந்த நிகழ்வில் அவன் முகம் பார்க்க முடியாமல் அவள் வெட்கத்துடன் நிலம் பார்த்தாள்...

"ஏண்டி.. அப்படி அழுத..?"

அவனின் கேள்வியில் அவள் நிமிர்ந்தாள்.. அவளின் உதடுகள் துடித்தன.. கண்கள் கலங்கின...

"என்ன கேள்வி இது..? உங்களுக்கு ஏதாவது ஆகியிருந்தா..?"



"உனக்கு அது விடுதலையில்லையா...?"

வெந்நிலா உடைந்து போய் அழுதாள்.. தசரதன் அவளை இழுத்து மடியில் போட்டுக் கொண்டபோது அவன் மார்பில் குத்தினாள்.. திமிறினாள்.. அவன் விடவில்லை.. அவள் முகம் நோக்கிக் குனிந்து அவள் உதடுகளில் முத்தமிட்டான்.. மெல்ல அவள் அமைதியானாள்.. அவளின் முடியை வருடிக் கொடுத்தபடி அவன் பேசினான்..

"நம்ப முடியலைடி.. உன் மனசில் இந்த அளவுக்கு நான் பதிஞ்சிருக்கேனா..? வேற வழியில்லாம என்கூட வந்திருக்கன்னு நினைச்சேன்.. என் மனசில நீ வந்திட்ட.. உன் மனசில நான் வந்திட்டேனான்னு தெரியாம பித்துப் பிடிச்சவனப்போல இருந்தேன்..."

"நிஜமாகவா...?"

"ம்ம்ம்.. பக்கத்திலதான் படுத்திருப்ப.. தொடணும்னு மனசும் உடம்பும் சேர்ந்து துடிக்கும்.. ம்ப்ச்.. முடியாது.. அது எப்போறப்பட்ட கொடுமை தெரியுமா..?"

அவன் கண்களில் தாபத்தைப் பார்த்தவள்...

"ஸாரி.." என்று தழைந்த குரலில் சொன்னாள்...

"உன் ஸாரி யாருக்கு வேணும்..? எனக்கு நீதான் வேணும்.. கழிஞ்சு போன காலத்த.. வட்டியும்.. முதலுமா.. மீட்கப் போறேன்..."

அவன் சொன்னதைச் செய்தான்.. அவனின் வேகத்தில் அவள் மூச்சுத் திணறினாள்.. அன்றைய இரவு உறங்காத இரவாக அவர்கள் இருவருக்கும் மாறியது...

அல்லியூரில் வீடு விழாக் கோலம் பூண்டிருந்தது..

தசரதனின் மகன் ஸ்ரீராமனுக்கு ஓராண்டு நிறைந்திருந்தது.. அவனுடைய பிறந்தநாளையும்.. காதணிவிழாவையும் சேர்த்துக் கொண்டாட முடிவெடுத்து விசேசத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள்..

"ஏம்ப்பா தசரதா.. உன் மாமனாருக்கு பத்திரிக்கை வைச்சியா...?" அபத்தமாக கேள்வி கேட்டான் சரவணன்..

"உன்னை அடிச்சாலும் குத்தமில்லைடா.. ஏண்டா.. முதப்பத்திரிக்கையை அவருக்குத்தானே வைக்கனும்..?" கடுகடுத்தான் தசரதன்..

"இல்லப்பா.. இன்னும் ஆளைக் காணோமே.. அதான் கேட்டேன்..."

"அவரு எனக்கு மாமனாரா.. இல்ல.. உனக்கு மாமனாரா...?"

"அந்தக் கொடுமைய என் வாயால வேற சொல்லனுமா..? உனக்குத்தான் மாமனாரு.. எனக்கு பெரியப்பன் முறையாகனுமே..."

சரவணன் ஏக்கப் பெருமூச்சு விட்டபோது கொட்டகை போடப் பட்டிருந்த வீட்டு வாசலில் கார் வந்து



நின்றது.. நாராயணமூர்த்தி இறங்கினார்.. பாரிஜாதமும்.. கயிலைநாதனும் அவரை மரியாதையுடன் வரவேற்று வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்கள்.. அவர் மடியில் பேரனை உட்கார வைத்து காது குத்திய போது அவரின் கண்நிறைந்து விட்டது...

தசரதனை வாஞ்சையுடன் பார்த்தபடி...

"ஜெயித்துட்டிங்க மாப்பிள்ளை.." என்றார் நாராயணமூர்த்தி..

"மாமா..?" அவனுக்குப் புரியவில்லை...

"என் மக மனசை மட்டுமில்ல.. என் மனசையும் ஜெயிச்சுட்டிங்க.. மத்தவங்களைப் போல நீங்களும் பணத்துமேல ஆசைப்படுவீங்களோன்னு சந்தேகப்பட்டேன்.. இல்லேன்னு நிருபிச்சிட்டிங்க.. பேரன் பொறந்துட்டான்.. காதுகுத்தும் நடந்திருச்சு.. இதுவரைக்கும் சீர் கொண்டு வான்னு என் மகளை நீங்களும் கேட்கலை.. உங்க குடும்பமும் கேட்கலை.. எனக்கு இது போதும்.. இந்தாங்க..."

நாராயணமூர்த்தி சொத்து பத்திரங்களை தசரதனிடம் நீட்டினார்.. அவன் அதை அவரிடமே திருப்பிக் கொடுத்தான்...

"இது உங்களுடையது மாமா.. எனக்கு இதில் உரிமையில்லை..."

"ஆனா.. இத்தனை சொத்தும் யாருக்காக...? வெந்நிலாவுக்காக மாப்பிள்ளை.. அவ நிர்வாகம் பண்ணிக்கிட்டு இருந்தவ..."

நாராயணமூர்த்தியின் கெஞ்சுதலான வார்த்தைகள் தசரதனை யோசிக்க வைத்தன...

"நீ என்னடி படிச்சிருக்க..?" ஒருநாள் வெந்நிலாவிடம் கேட்டான்..

"எம்.பி.ஏ.." என்றாள் அவள்..

"உன் கம்பெனியை நீதான் பார்த்துக்கிட்டியா...?"

"ம்ம்ம்..."

"எனக்காக அதையெல்லாம் மறந்து இருக்கிறயா..?"

"விடுங்க.. அது பெரிய விசயமா..?"

"பெரிய விசயம்தான் வெந்நிலா.. என்னால் விவசாயத்தை எப்படி மறக்க முடியாதோ.. அதைப்போல உன்னாலயும் உன் கம்பெனியை மறக்க முடியாது..."

"அதுக்கு என்ன பண்ண முடியும்..? நீங்க இங்கே.. நான் அங்கேன்னு இருக்க முடியுமா..? அப்பா கம்பெனிகளில் ஒன்னுல நீங்க பொறுப்பேத்துக்கலாம்.. ஆனா நீங்க அதைச் செய்ய மாடிங்க.. ஸோ.. இந்தப் பேச்சு வேணாம்.. விட்டு விடுவோம்..."



அவளின் அந்த முடிவில் அவன் மனம் நெகிழ்ந்தது.. இயல்பாக வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தவளை வாத்சல்யத்துடன் பார்த்தான் அவன்..

அவள் நிர்வாகப் படிப்பை படித்தவள்.. மிகப்பெரிய கம்பெனியின் நிர்வாகி.. அதை மறந்து வீட்டு வேலைகளில் தன்னைப் பிணைத்துக் கொண்டிருக்கிறாள்...

யாருக்காக..? அவனுக்காக..!

அவனை சென்னைக்கு வரச்சொல்லி அவள் கேட்கவில்லை.. அவளுக்கே அவன் அவளைப் பின் தொடர்ந்து வரமாட்டான் என்று தெரியும்.. அதனால் அந்தக் கேள்வியைக் கேட்காமல் மனம் விரும்பி அவனுடன் எளிய வாழ்வை அவள் வாழ்கிறாள்..

அவனுக்காக அவள் மாறியிருக்கும் போது.. அவளுக்காக அவன் மாறினால்தான் என்ன..?

அவள் விண்ணிலிருந்த நிலவுக்கு ஒப்பானவள் அவனால் மண்ணில் கால் பதித்தாள்.. அவனுடைய உதாசீனப் பேச்சினாலும்.. பார்வையினாலும் அவளின் வாழ்வே தடம் மாறியது.. ஏதோ ஒரு வேகத்திலும்.. கோபத்திலும் அவனுக்கு மனைவியானாள்.. அவனைப் பிரிய நினைத்து அது முடியாததில் மீண்டும் தோல்வி கண்டாள்.. அதற்குப் பின்னால் அவள் எடுத்து வைத்த அடியெல்லாம் தசரதனின் பாதம் பின்பற்றிய அடிகளாக ஆகிப்போனது...

அவன்மேல் காதலாகி கசிந்துருகினாளே.. அவளுக்கு அவன் என்ன தந்தான்..?

தசரதன் ஓர் முடிவெடுத்தான்...

"வெந்நிலா.. நாம சென்னைக்குப் போகலாம்..."

"ஆர் யு ஷ்யூர்..?" வெந்நிலாவின் விழிகள் விரிந்தன..

ஆம்..! யாருக்கும் கட்டுப்படாத தசரதன் அவளின் காதலுக்கு கட்டுப்பட்டான்.. ராமன் இருக்குமிடம் தான் சீதைக்கு அயோத்தி என்று சொன்னவன்.. சீதையை பின் பற்றி அவளுக்காக அவளுடைய அடையாளத்திற்காக சென்னையை நோக்கிச் சென்றான்..

இன்று தசரதன் வெந்நிலா குருப்ஸ் ஆப் கம்பெனிகளில் ஒன்றின் எம்.டி..!

இதை பணத்துக்காக அவன் செய்யவில்லை.. அவனின் மனைவிக்காக செய்தான்..

காதல் எதையும் சாதிக்க வல்லது.. அது நிலவை பூமிக்கும் வரவழைக்கும்.. சுட்டெரிக்கும் சூரியனை நிலவுக்கு குடை பிடிக்கவும் வைக்கும்..

வெந்நிலா பூமிக்கு வந்த நிலவு..! தசரதனோ அவளுக்கு நிழல் கொடுக்க குடைபிடிக்கும் சூரியன்..!

- முற்றும் -

அவன்மேல் காதலாகி கசிந்துருகினாளே.. அவளுக்கு அவன் என்ன தந்தான்..?

தசரதன் ஓர் முடிவெடுத்தான்...

"வெந்நிலா.. நாம சென்னைக்குப் போகலாம்..."

"ஆர் யு ஷ்யூர்..?" வெந்நிலாவின் விழிகள் விரிந்தன..

ஆம்..! யாருக்கும் கட்டுப்படாத தசரதன் அவளின் காதலுக்கு கட்டுப்பட்டான்.. ராமன் இருக்குமிடம் தான் சீதைக்கு அயோத்தி என்று சொன்னவன்.. சீதையை பின் பற்றி அவளுக்காக அவளுடைய அடையாளத்திற்காக சென்னையை நோக்கிச் சென்றான்..

இன்று தசரதன் வெந்நிலா குருப்ஸ் ஆப் கம்பெனிகளில் ஒன்றின் எம்.டி..!

இதை பணத்துக்காக அவன் செய்யவில்லை.. அவனின் மனைவிக்காக செய்தான்..

காதல் எதையும் சாதிக்க வல்லது.. அது நிலவை பூமிக்கும் வரவழைக்கும்.. சுட்டெரிக்கும் சூரியனை நிலவுக்கு குடை பிடிக்கவும் வைக்கும்..

வெந்நிலா பூமிக்கு வந்த நிலவு..! தசரதனோ அவளுக்கு நிழல் கொடுக்க குடைபிடிக்கும் சூரியன்..!

- முற்றும் -